

நவராத்திரி
சிறப்பிதழ் 2016

ආයධනම්

# ஆயதனம்

## Aayadhanam

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம

Department of Religions and Value Education
National Institute of Education, Maharagama

ආගම් හා සාරධර්ම අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
ජාතික අධ්‍යාපන ආයතනය, මහරගම

# ஆயதனத்தின் உள்ளே......


1. சைவத் திருமுறைகளில் சமூக நல்லிணக்கமும் சைவப்பண்பாடும் 11
2. பகவத்கீதை பகரும் ஆன்மா பற்றிய சிந்தனைகள் 14
3. மாணவர் மையக்கற்றலில் குவிசிந்தனையின் செல்வாக்கு 16
4. திருமந்திரம் புலப்படுத்தும் மனித நேயச் சிந்தனைகள் 18
5. இந்துநாகரிக ஆய்வுப்புலத்தில் மேலைத்தேசத்தவரின் ஆய்வுமுனைப்புகள் 23
6. ஆசிரியர்களுக்கான கற்பித்தல் மாதிரிகள் 27
7. திருமந்திரம் கூறும் வாழ்வியல் சிந்தனைகள் - ஓர் ஆய்வு 30
8. ஆன்மீகச் சிந்தனைகளின் வளர்ச்சிப் போக்கில் மின் ஊடகங்களின் (இணையத்தளம்) வகிபங்கு 38
9. திருநாவுக்கரசர் திருப்பாடல்களில் வாழ்வியற் சிந்தனைகள் 42
10. ஆசிரிய வாண்மை விருத்திச் செயலமர்வும் களப்பயணமும் 47
11. Understanding the Saiva – Jaina Conflict During the Bakti Movement and the Attempt by the Nayanmars to Resolve it 61
12. திருமந்திரம் கூறும் கர்ப்பக்கிரியை 63
13. இலங்கையில் ஆரம்பக் கல்வி எதிர்பார்க்கும் மாற்றங்கள் 71
14. சமூக வாழ்விற்கு வழிபாட்டின் தேவை அப்பர் தேவாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 74
15. உள்ளகப்பயிற்சி (Internship) மாணவ ஆசிரியர்களிடம் விருத்தியாக்கப்பட வேண்டிய மிருதுநிலைத் திறன்கள் பற்றிய சில குறிப்புக்கள் 79
16. திருமந்திரம் புலப்படுத்தும் சமூக நல்லிணக்க, நல்லொழுக்க சிந்தனைகளும் சமகால சமுதாய போக்குகளும் ஓர் ஒப்பீட்டாய்வு 83
17. பாடசாலை ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாப்பதில் இலங்கையின் கல்விச் சட்டங்கள் - ஒரு நோக்கு 88
18. எதிர்கால மனிதவள அபிவிருத்தியை நோக்கி நேரான வகுப்பறை முகாமைத்துவமும் ஆசிரியரும் 91
19. அனுபவ வழிக்கற்றல் 94
20. பாத்தொன்பதாம் நூற்றாண்டு காலத் தமிழ் நாட்டில் தேவரடியார் சமூக மறுமலர்ச்சியில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியாரின் பங்கு 96

## பஞ்சபுராணம்

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே.

திருச்சிற்றம்பலம்

### திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி அறியாதமூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச்சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

திருச்சிற்றம்பலம்

### திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

அன்ன நடையார் அமுத
மொழியார்அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும்
கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த
தலத்துப்புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள்
காண விகிர்தன் ஆடுமே.

திருச்சிற்றம்பலம்

### திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலிஎங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வும்சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
ஆளாய்மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கேபல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

### பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

திருச்சிற்றம்பலம்

## முன்னுரை



மனிதனை உள் நின்று செலுத்துபவன் இறைவன் என்பதை மனச்சாட்சி என்று தற்கால உளவியலாளர் கூறுகின்றனர். மனச்சாட்சியின் படி நின்று செயல்களைச் செய்யும்போது மனிதன் தன்னியற்கையாகவே ஒழுக்கத்தின்பால் நிற்பான் என்பதும் இழுக்கம் அவனைவிட்டு அகன்றுவிடும் என்பதும் தெளிவாகப் புலப்படும். இழுக்கத்தின் வழி நின்ற மனிதன் அறவழியில் திரும்பும் போது அவ்வழி இனிமையாகவும் எளிதாகவும் ஆரம்பத்தில் தெரியாது. உதாரணமாக

*"தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடும்நாப்*
*பித்தத்தின்தான் தவிர்ந்த பின்"*

எனக்கூறுகிறது. பால் இயற்கையிலேயே தித்திப்பானது. ஆனால் பித்தம் இருக்கும்போது நாக்கில் பால் தித்திப்பைத் தராது. கசப்பதுபோலவே தெரியும். பித்தம் நீங்கியகாலத்துபால் உண்மையிலேயே தித்திப்பானது என்பதுபுரியும். அதுபோல ஆணவமலத்தில் மூழ்கி உலக இன்பங்களில் மகிழ்ந்த ஒருவன் இறைவன்பால் நின்று அதன் அருளொளியைப் பார்க்கும் பொழுது முதலில் ஆணவமலத்தின் இன்பமே பெரிது என்றும், மற்றது துன்பத்தைத் தருவது என்றும் நினைப்பான். பித்தநோய் நீங்கியதும் நாக்கு பாலின் இனிமையை உணர்ந்து பித்தச் சுவையை வெறுக்க ஆரம்பிக்கும். அதுபோல ஆணவம் நீங்கியபொழுது மனிதன் ஒழுக்கத்தின் இனிமையையும் அதனால் வருகின்ற மகிழ்ச்சியையும் அனுபவிக்க ஆரம்பிப்பான்.

தற்காலத்தில் மனிதர்கள் நல்லவர்கள் போல் நடிக்கிறார்கள் சமூகத் தலைவர்கள் போல் தோன்றுகின்றார்கள் சமய வழிகாட்டிகள் போல் வேடம் தாங்குகிறார்கள் இந்த உலகம் என்னும் நாடக அரங்கில் ஏமாற்றங்கள், மயக்கங்கள் என்பன ஏற்படுவதெல்லாம் இந்த நடிப்புக்களினால்தான். தற்காலத்தில் மனிதர்கள் நடிகர்களாக வருவதுடன் அமையாது ஒவ்வொருவரும் மிகச் சிறந்த நடிகர்களாகப் பரிணமிக்க வேண்டுமென்ற இலட்சியத்துடன் முயற்சிக்கிறார்கள். இதன் விளைவு விழுமியங்கள் மறைகின்றன. எங்கும் நம்பிக்கை யீனங்கள் ஏமாற்றங்கள், குழப்பங்கள் தலைவிரித்தாடுகின்றன. சந்தோசமான வாழ்வு மறைந்து விடுகின்றது.

*"தாமின் புறுவது உலகு இன்புறக் கண்டு*
*காமுறுவர் கற்றறிந்தார்"*

என்பது தாம் இன்புறுவதற்குக் கல்வி துணையாக உள்ளது. அது இயல்பு. பிறர் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டு பொறாமை கொள்ளாது, தாமும் இன்புறுவதற்குக் கற்ற கல்வி துணை புரியுமானால் அதுவே சிறந்த கல்வி அக்கல்வியைக் கற்றுத் தேர்ந்தவர்களே கற்றறிந்தார் ஆவர். கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற அத்தகைய கல்வியைக் கற்றறிந்தாராக நாம் விளங்க வேண்டும். அத்தகைய கற்றறிந்தார் சமுதாயம் மலர வேண்டுதல் செய்வோமாக. உலகில் காணப்படும் சமயங்கள் அனைத்தும் மனித குல மேம்பாடு எனும் ஒரு இலக்கினையே அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகின்றன, அவை அனைத்தும் நிறைவான வாழ்வினை வாழ்ந்து இறுதியில் வீட்டு நெறிக்கு வழிவகை செய்கின்றன. மானுட அறமும் மனிதப் பெறுமானங்களும் தலைகீழாகப் புரட்டப்பட்டு விதேசிய விருப்புக்களும் நுகர்வுப் பண்பாடும் ஊட்டம் பெற்று சமூக வாழ்வியல் விழுமிங்களும், சமூக நல்லிணக்கமும் சீர்குலைந்துள்ள இந்த விஷச் சூழலில் இந்துசமயத்தில் பெருவாரியாக முன்வைக்கப்பட்டுள்ள சமூக நல்லிணக்கம் பற்றிய சிந்தனைகளை கொண்டு சமகாலத் தேவைகருதி வெளிவரும் இச் சஞ்சிகை அனைவருக்கும் பயனுடையதாக அமையவும், இந்நிகழ்வு சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கிய நல் உள்ளம் கொண்ட உறவுகளுக்கும் இறைவன் அருள் உண்டாகட்டும்.

**பொன் ஜெயரூபன்**
உதவிவிரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.



உ
சிவமயம்
குருபாதம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

23.09.2016

## என்றும் இறைசக்தி பெருக



தேசிய கல்வி நிறுவகத்திலே நவராத்திரிவிழா தேசிய ரீதியில் எல்லா இனத்தவர்களும் சேர்ந்து கொண்டாடுவதையிட்டு பேருவகை அடைகின்றேன். அதற்கு இறையாசியுரையை வழங்குவதை எண்ணி மகிழ்கின்றேன். நீங்கள் சிறப்பாகக் கொண்டாடும் நவராத்திரி விழா முப்பெரும் தேவிகளுக்காக எடுக்கப்படுகின்றது. கல்வி, செல்வம், வீரம் மனித குலத்திற்குக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கோடு இவ்விழா கொண்டாடப்படுகின்றது.

இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டங்களை உருவாக்குதல், ஆசிரியர்களுக்கான வாண்மைப் பயிற்சி, ஆசிரிய வழிகாட்டிகளை உருவாக்குதல் என்று கல்வியின் அனைத்துப் பரிமாணங்களையும் சீராக தேசியகல்வி நிறுவகம் மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக சமய விழுமியப்பிரிவில் சைவசமயத்துறைக்குப் பொறுப்பான திரு. பொன் ஜெயரூபன் அவர்கள் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றார். அவருடைய சேவையும் சிறப்பாக அமைய இறையாசி கிடைப்பதாக. மேலும் தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம் அவர்களும், ஊழியர்களும் நல்வாழ்வு வாழவும் சிறப்பான சேவைகளை எமது தேசத்திற்கு வழங்கவும் இறையாசியை வழங்குகின்றேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குரு மஹாசந்நிதானம்**

**RAMAKRISHNA MISSION**

(Ceylon Branch)

40, Ramakrishna Road, Colombo 6.

Email - rkmcey@gmail.com

Phone - 2588253

5013805

Fax-2361438

## ஆசியுரை



தேசிய கல்வி நிறுவகத்தின் சமயக்கல்வித் துறையால் நவராத்திரி விழா கொண்டாட இருப்பதையும், அதனை முன்னிட்டு "ஆயுதனம்" என்னும் சிறப்பு மலரும், மாணவர்களுக்கான திருமுறைப்பாடல் இறுவட்டும் வெளியிட இருப்பதையும் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். மேற்படி மூன்று நிகழ்வுகளும் சீரும் சிறப்புடன் நடைபெற முப்பெருந் தேவியர்களான துர்கா, சரஸ்வதி, லக்ஷ்மி ஆகியோரின் அருளையும், ஆசிகளையும் வேண்டுவதோடு என் அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

- உலகில் இருக்கும் எல்லாத் தீமைகளும், துன்பங்களுக்கும் கல்வி ஒன்றின் மூலம் தான் தீர்வைக் கொடுக்க முடியும்.
- மனிதனில் ஏற்கனவே புதைந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதான் கல்வி.
- மனிதனில் ஏற்கனவே மறைந்திருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவதான் மதம்.

என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

தேசிய கல்வி நிறுவகமானது சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்கிணங்க, தாங்கள் வழங்கும் கல்வியால் மாணவர்களை விழிப்புறச் செய்யவும், மாணவர்களிடத்து இருக்கும் திறமைகளை வெளிக்கொணரவும் அயராது உழைத்து வருகிறது. அமைதியாகவும், ஆனந்தமாகவும் இவ்வுலகில் வாழவேண்டுமாயின், உடல், மனம், உள்ளம் ஆகிய மூன்றும் நல்ல நிலையில் இருக்கவேண்டும். அதன் அடிப்படையில் இந்த நவராத்திரி விழா ஒரு உந்துகோலாக பயன்படுகிறது.

முதல் மூன்று நாட்களில் துர்க்கையை வழிபடுவதனால் நல்ல ஆரோக்கியமான உடல், சரஸ்வதியை வழிபடுவதனால் உலக அறிவும், ஆன்ம ஞானமும் வளரவும் லக்ஷ்மி வழிபடுவதனால் மேற்கண்ட இரண்டையும் பெறுவதற்கு உறுதுணையாக இருக்கும் பொருளாதாரத்தை பெறவும் இந்த மூன்று தெய்வ வழிபாடுகளும் அமைகின்றன.

இந்த நிகழ்வுகளுக்கு ஆதாரமாக இருக்கும் பணிப்பாளர், இவருக்கு உறுதுணையாக இருக்கும் ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இந்த முப்பெரும் தெய்வங்களின் ஆசிகளும், அருளும் என்றும் இருக்க மனதார வேண்டுவதோடு, என் அன்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறை பணியில்

**சுவாமி சர்வரூபானந்த**

தலைவர்

கொழும்பு

21.09.2016

වී. එස්. රාධාක්‍රිෂ්ණන් (පා.ම)
வி.எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ)
V. S. Radhakrishnan (M.P)

අධ්‍යාපන රාජ්‍ය අමාත්‍ය
கல்வி இராஜாங்க அமைச்சர்
State Minister of Education

# வாழ்த்துச் செய்தி



"பாமரனை பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம் எனப்படும். மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்."

"விதை தரையில் ஊன்றப்பட்டு, மண்ணும் காற்றும் நீரும் அதைச் சுற்றி போடப்படுகின்றன. விதை மண்ணாகவோ, நீராகவோ ஆகிறதா? இல்லை. அது செடியாகிறது. தனது வளர்ச்சி நியதிக்கு ஏற்ப அது வளர்கிறது. காற்றையும் மண்ணையும் நீரையும் தனதாக்கிக் கொண்டு. தனக்கு வேண்டிய சத்துப் பொருளாக மாற்றி ஒரு செடியாக வளர்கிறது" என்று சுவாமி விவேகானந்தர் சொன்னார்.

எடுத்த கருமத்தை. எமது திறமைகளையெல்லலாம் வெளிப்படுத்தி, செவ்வையாகவும் இனிதாகவும் செய்து முடிப்பதே மனித தர்மம். "செய்யும் தொழிலே தெய்வம்" என்பார்கள். அத் தொழிலில் நாம் காட்டும் திறமை தான், செம்மையாக மிளிர்கின்றது. மனிதன் திறமை மிக்கவன். ஆற்றல் மிகுந்தவன். தமது முழுத்திறமைகளையும், ஆற்றல்களையும் செயல்களில் வெளிப்படுத்துதல் மனித விழுமியம். செம்மை, உண்மையைப் போன்று ஒரு மனித விழுமியம். உண்மை, செம்மை, அழகு ஆகிய இம்மூன்று பண்புகளும். எமது செயல்கள், செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் பரிணமிக்க வேண்டும். இம் மூன்றும் எம் வாழ்க்கையில் இடம்பெறச் செய்தலே மனித குறிக்கோள். அந்தக் குறிக்கோள்களை அடைந்த கொள்வதற்கு இவ்வாறான விழாக்கள் வழிகாட்டுகின்றன.

ஒவ்வொருவருக்கும் குடும்பக் கடமைகள், சமூகக் கடமைகள். அரச கடமைகள். தொழிற்கடமைகள், இறைக் கடமைகள் உண்டு. அவற்றைக் குறைவில்லாமல் ஆற்றிவரும்போதுதான் மக்கள் வளமாகவும் சுபிட்சத்தோடும் எவ்வித குறைகள், கிலேசங்கள் இன்றிறும் வாழமுடியும். இவற்றைச் சரிவர அறிந்தும் உணர்ந்தும் தேசிய கல்வி நிறுவகத்தின் சமயத்துறையின் இந்துசமயப் பிரிவின் திரு.பொன் ஜெயரூபன் அவர்களின் முயற்சியால் ஆண்டுதோறும் நவராத்திரி விழா சிறப்பா நடாத்தப்பட்டு வருவதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். நவராத்திரி விழாவை முன்னிட்டு விழாவின் சிறப்பு வெளியீடாக வெளியிடப்படும் "ஆயதனம்" எனும் மலர் ஆண்டுதோறும் தொடர்ச்சியாக வெளியிடப்படவேண்டியதோடு இம்மலர் அனைவருக்கும் பயனுடையதாய் அமைய உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

*"நன்முறையில் தனிமனிதன் வாழக்கற்றால்*
*நாட்டினிலும் வீட்டினிலும் அமைதி ஓங்கும்*
*இன்பமயமே எங்கும் இந்த உண்மை*
*எளிதன்றோ கற்பதற்கும் வாழ்வதற்கும்"*

V. S. RADHAKRISHNAN M.P (J.P.U.M.)
State Minister of Education
State Ministry of Education
4th Floor,
"Isurupaya", Battaramulla.

கௌரவ வி.எஸ். இராதாகிருஷ்ணன் பா.உ
கல்வி இராஜாங்க அமைச்சர்,
கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல.

# பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி

## අධ්‍යක්ෂ ජනරාල්ගේ පණිවිඩය



ජාතික අධ්‍යාපන ආයතනය එහි සියලු කාර්යයන්හි දී ජාතික සමගිය හා සංහිඳියාව ඇතිවන පරිදි කටයුතු කරන අතර සාරධර්ම ප්‍රවර්ධනය කිරීම සඳහා ඉහළ ම ප්‍රමුඛත්වයක් ලබා දී ඇති බව ද සතුටින් ප්‍රකාශ කරමි. මේ පිළිබඳ ව ප්‍රමුඛත්වය ගෙන කටයුතු කරනුයේ ජාතික අධ්‍යාපන ආයතනයේ, ආගම් හා සාරධර්ම අධ්‍යාපන දෙපාර්තමේන්තුවයි.

සෑම ආගමකින් ම සහජීවනය ගොඩනැගෙන අතර ඒ ඒ ආගම්වලට ආවේණික වූ සංස්කෘතික උරුමයන් ඇති බව ද පැහැදිලි ය. හින්දු ආගමට උරුම වූ තම සංස්කෘතිය විදහා දක්වන ආගමික උත්සව අතර නවරාත්‍රී පූජාවට ලැබෙනුයේ සුවිශේෂ තැනකි. ජාතික අධ්‍යාපන ආයතනය මෙම නවරාත්‍රී පූජාව උත්සවාකාරයෙන් සැමරීමට කටයුතු සංවිධානය කිරීම සහ ඒ වෙනුවෙන් ''ආයධනම්'' ශාස්ත්‍රීය සමරු සංග්‍රහය එළිදැක්වීමට කටයුතු කිරීම පිළිබඳ ව මගේ ප්‍රශංසාව හිමිවේ.

2016 වසරේ නවරාත්‍රී පූජාව සාර්ථකව ඉටුකිරීම සඳහා කැපවීමෙන් කටයුතු කරන, ආගම් හා සාරධර්ම අධ්‍යාපන දෙපාර්තමේන්තුවටත් එහි හින්දු ආගමික අංශයටත් සහභාගිවන සියලුම දෙනාටත් මාගේ සුභාසිංසන ස්තුතිය පුද කරමි.

**ආචාර්ය ටී.ඒ.ආර්.ජේ. ගුණසේකර**
අධ්‍යක්ෂ ජනරාල්,
ජාතික අධ්‍යාපන ආයතනය,
මහරගම

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director: 2552643
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 2552825
ඊමේල් / மின் அஞ்சல் / E-Mail: hindudir@yahoo.com
පොදු / பொது / General: 2552641
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.hindudept.gov.lk


# வாழ்த்துச் செய்தி



தேசிய கல்வி நிறுவகம் நவராத்திரி விழாவினையொட்டி ஐந்தாவது முறையாக வெளிக்கொண்டுவரும் 'ஆயதனம்' என்னும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். ஆயகலைகளுக்கும் அதிபதியாக விளங்கும் அன்னை ஆதிபராசக்தியின் அருட்திரு நாட்களாக துதிக்கப்பெறும் நவராத்திரி காலங்களிலே கல்வி நிலையங்கள் தோறும் வழிபாடாற்றுவது இந்துப்பாரம்பரியமாகும். அந்த வகையில் அகில இலங்கை ரீதியாக ஆசிரியர்களது திறனை விருத்தி செய்துவரும் தேசிய கல்வி நிறுவகம் நவராத்திரி விழாவினைக் கொண்டாடுவது போற்றுதற்குரிய விடயமாகும்.

இன்றைய சமூகத்திலே உள்ள புத்தி ஜீவிகளைத் தனது வளவாளர்களாகக் கொண்டு ஆசிரியர்களையும் மாணவர்களையும் வழிநடத்திவரும் இந்நிறுவகத்தின் சமயக்கல்வித்துறை அளப்பரிய பணியாற்றிவருவது அனைவரும் அறிந்ததே. சமயக் கல்வித்துறையின் "ஆயதனம்" எனும் சிறப்பு மலர் இந்துமதம், இலக்கியம், கலைகள், பண்பாடு ஆகிய துறைகள் சார்ந்த கட்டுரைகளைத்தாங்கி வெளிவருவது பாராட்டிற்குரிய விடயமாகும். பலரது கருத்துக்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்கும் 'ஆயதனம்' அறிஞர்களிடத்தும் மாணவர்களிடத்தும் பெருமதிப்பைப் பெற்றுள்ளது.

இத்தகைய நிறுவனங்கள் தங்கள் கடமைப்பட்டியலுக்கு அமைய சேவையாற்றுவதுடன் மட்டும் நின்றுவிடாது சமயவிழாக்கள் பண்டிகைகளைக் கொண்டாடுவதன் மூலம் அவர்களுக்கு ஆன்மீக மேம்பாடும் அதனூடான மக்கள் சேவையும் உணரவைக்கப்படுகின்றன.

இந் நந்நாளில் ஆயதனத்தையும் வெளியிடும் மலர்க்குழுவினரை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். இத்தகைய நல்ல கைங்கரியத்தைச் செய்யும் தேசிய கல்வி நிறுவகத்தின் சமயக்கல்வித்துறையினரையும் வாழ்த்துகின்றேன்.

**அ. உமாமகேஸ்வரன்,**
**பணிப்பாளர்**

அ. உமாமகேஸ்வரன்

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி

## නියෝජ්‍ය අධ්‍යක්ෂ ජනරාල් ගරු ස්වාමීන් වහන්සේගේ පණිවිඩය



எல்லா சமயங்களும் ஒவ்வொரு சமயத்தினதும் உலகத்தினதும் ஆரம்பம் பற்றி எடுத்துரைப்பதில் பிராயத்தனங்களை எடுத்துரைக்கின்றது. ஆனால் தற்போதுள்ள சமயங்கள் பற்றி அறிய முயலுகையில் அதனது தோற்றம் பற்றியும் தற்போதைய கட்டமைப்பு பற்றியும் செல்நெறிகள் பற்றியும் அறிந்து கொள்வதற்கும் பல நூற்றாண்டுகள் நீண்டு விரிந்திருக்கும். இதிலிருந்து தெளிவாவது என்னவெனில் சமயங்கள் யாவும் மனிதனது தோற்றத்திற்கு முன்பதாகவே சுழன்று சென்றிருக்கின்றது. மனிதன் சமயத்தினை முந்தி சென்றிருக்கின்றனரா? மனிதன் ஏனைய உயிரினங்களைவிட உயர்வான சிந்தனை திறனையும் புத்திகூர்மையுள்ளவனாகவும் திகழ்கின்றான். எனவே மனிதனது ஏனைய மனிதர்களுடனான அன்னியோன்னியம், ஆன்மீக அடையாளங்கள் யாவும் மனிதபிமானத்தினாலாகும். நாம் ஒழுக்கம் மிக்கவர்களாக திகழ்கின்றோம். தாயின் கருவில் இருக்கும் பத்து மாதங்களும் இத்தகைய தன்மையினையே கொண்டிருக்கின்றது. எல்லா வாழ்க்கையும் ஓரியல்பான இயற்கை தன்மை வாய்ந்தது. அதிலிருந்து எங்களது மனப்பாங்கு எவ்வளவு குறுகியதாயிருக்கின்ற தன்மையைப் பொருத்து வித்தியாசம் தோன்றுகின்றது. இது பூகோள சமத்துவத்தை நோக்கியதான அபிலாஷைகளிலிருந்தும் வேறுபட்டதாக அமைய உதவுகின்றது. அவ்வாறே மரணம் மனிதனை இயற்கையின் சமத்துவமிக்க ஒருவனாக மாற்றி அமைக்கின்றது.

எவ்வாறாயினும் சமயங்கள் தனிப்பட்ட ஒன்றாக நிலைத்திருக்கின்றது. ஆன்மீகம் மனிதனை ஒருவனாக்குகின்றது. பக்தகோடிகளின் இறை வழிபாடானது முடிவினை ஏற்படுத்தாது இறுதியான பரிசுத்தத்தை நோக்கிய நகர்வாகவே அமைகின்றது.

உன்னதமிக்க நவராத்திரி பெருவிழா மக்களுக்கு பூகோள ஒளியினை நோக்கிய பிரவேசத்திற்கானது! தேசிய கல்வி நிறுவகம் போன்ற பொது நிறுவனத்தினால் இடம்பெறும் நவராத்திரி பூஜை அனைவரையும் ஒன்றிணைத்து, நல்லெண்ணத்தை கட்டியெழுப்ப உதவுகின்றது. பணிப்பாளர் நாயகம், கலாநிதி ஜயந்தி குணசேகர அவர்களின் அனுமதியுடன் சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறையின் இந்து சமயப் பாடப் பொறுப்பாளரான திரு. பீ. ஜெயரூபன் அவர்களின் முழுமையான ஒழுங்கமைப்புடன் இப் பூஜை நிகழ்வுகளுக்கு பீடாதிபதி என்ற வகையில் எனது ஆசிகளை நல்குகின்றேன்.

සියලු ආගම් දර්ශන විසින්, මිනිසාගේ සහ ලෝකයේ ආරම්භයත්, විකාශයත් ගෙන හැර දැක්වීමට යම් උත්සාහයක් දරා ඇත. එහෙත් දැනට පවත්නා ආගම් පිළිබඳ අධ්‍යයනය කිරීමේ දී ඒවායේ ප්‍රභවය සහ නූතන සැකැස්ම වසර දහස් ගණනින් ගණනය කිරීම් සීමාවට යටත්වීමට සිදු ව ඇත. එමගින් පැහැදිලි වන කරුණ වන්නේ ආගම් විසින් මිනිසාගේ ආරම්භය පිළිබඳ උරුමය අයත් කර ගැනීමට උත්සාහ කළ ද ආගම් බිහිවීමට පෙර මිනිසා පහළ වූ බව ය. ඒ මිනිසා, අප දකින සත්වයන් අතර සාපේක්ෂව අනෙකුත් සත්වයන්ට වඩා ඉහළ චින්තන හැකියාවක්, ප්‍රඥා මහිමයක් උරුම කරගෙන සිටී. එසේ නම් සියලු මිනිසුන්ගේ සුවඳ, රසය, ආත්මීය අනන්‍යතාව විය යුතු වන්නේ මිනිස්කම ය. අපගේ

පිළිසිඳ ගැනීම එක හා සමාන ය. මව් කුස තුළ දසමසක් හෝ ආසන්න කාලයක් ගතවන ජීවන චක්‍රය එක හා සමාන ය. ලොවට බිහිවන ක්‍රමය ස්වාභාවික එකකි. එතැන් සිට අප වෙනස්වීමට උත්සාහ දරණ කොටුවීම්, ආකල්ප කොතරම් පටුවී ද? එතුළ ගොඩනැගෙන ආක්‍රමණකාරීත්වය, බෙදා වෙන් කර ගැනීම ඉහත දැක් වූ විශ්විය සමානත්වයේ මිනිස් සුවඳ, මානව සමාජයට අහිමි වීමකි. ස්වාභාවික මරණය මිනිසා යළි එකම විදියට පත් කරයි.

ආගම් වෙන් ව තිබුණ ද ඒවායේ භාවිත උත්තම සාරය (spirits) මිනිසා ඒකාත්මික කරයි. ඒ දේවත්ව මට්ටම සාධනය කර ගැනීමට පුද පූජාවන් ප්‍රවේශයක් කර ගත යුතු මිස අවසානය නොවන බව සියලු ආගමිකයන් ප්‍රත්‍යක්ෂ කිරීම අවශ්‍ය වේ.

සුන්දර වූ නවරාත්‍රී පූජාව මුළු මහත් මිනිස් වර්ගයාට ම විශ්විය ආලෝකයේ ප්‍රවේශයක් වේවා. ජාතික අධ්‍යාපන ආයතනය වැනි පොදු ආයතනයක මේ "නවරාත්‍රී පූජාව" සියලුදෙනාගේ එකමුතු ව, හොඳකම තුළ ගොඩනැගෙන්නකි. අධ්‍යක්ෂ ජනරාල් ආචාර්ය ජයන්ති ගුණසේකර මැතිණියගේ අනුමැතියෙන් ආගම් හා සාරධර්ම අධ්‍යාපන දෙපාර්තමේන්තුවේ හින්දු (ශෛවනරි) ආගම් විෂය භාර පී. ජෙයරූබන් මහතාගේ පූර්ණ ප්‍රධාන සංවිධායකත්වයෙන් සිදු කෙරෙන මෙම පූජා උත්සවයට පීඨාධිපති වශයෙන් මම ආශිර්වාද කරමි.

All religious philosophies have made some effort to indicate the beginning of man and the world. But when studying the prevalent religions it becomes clear that the origins and the current structure have come under the limitation of a calculation of those by thousands of years. This shows that though the religions try to take over the origin of man under their orbit, man has in fact preceded religion. That man, among those animals we see, has inherited a higher thinking ability and the wisdom incomparision to all other animals. If so the inherent identity man must be humanity related to odour and taste. We are conceived in a like manner. The life cycle of tenth months within the womb is the same. All living beings come out to the world in the same natural way. From them on, how narrow is our attitude in trying to be different? The desire to be invasive, divide and be separate is a denial of the fragrance of a universal equity to the human society. Death brings a natural equality to man again in the same manner.

Even though religions exist separately, their spirits make man one. Followers of all religions must consider the rites of worship not as an end in it self but as a means of reaching that divine end.

May the beautiful Navarathri be a universal beacon which lights up the path of old man kind. The Navarathri pooja celebrated in a common place like the National Institute of Education helps to instil unity and goodness amongst all. I as the Head of the Faculty of Languages, Humanities and Social Sciences give my blessings to the celebration of Navarathri organized by P. Jayarooban of the Department of Religion Value Education who is incharge of the (Shaiva) Hindusim with the approval of the Director General Dr. Mrs. Jayanthi Goonesekera.

**வண. கலாநிதி மாம்புல்கொட சுமனர்தன தேரர்**
பிரதிப்பணிப்பாளர் நாயகம்
மொழிகள் மானிடவியல் சமூகவிஞ்ஞானபீடம்

**පූජ්‍ය ආචාර්ය මාඹුල්ගොඩ සුමනරත්න හිමි**
නියෝජ්‍ය අධ්‍යක්ෂ ජනරාල්,
භාෂා, මානව ශාස්ත්‍ර හා සමාජීය විද්‍යා පීඨය

Rev.Dr. Mambulgoda Sumanarathna
Deputy Director General
Faculty of Languages, Humanities and Social Sciences

## திணைக்களத் தலைவரின்

# வாழ்த்துச்செய்தி

## දෙපාර්තමේන්තු ප්‍රධාන ගරු ස්වාමීන් වහන්සේගේ පණිවිඩය



ජාතික අධ්‍යාපන ආයතනයේ, ආගම් හා සාරධර්ම අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව බෞද්ධ, ක්‍රිස්තියානි, කතෝලික, හින්දු හා ඉස්ලාම් යන සියලු ආගම්වල එකමුතුවකින් තම ආගමික අනන්‍යතාව රැකෙන පරිදි ආගමික සංහිඳියාවකින් යුතුව කටයුතු කරන දෙපාර්තමේන්තුවක් බව සතුටින් ප්‍රකාශ කරමි. වාර්ෂික ව සංවිධානය කරනු ලබන නවරාත්‍රි පූජා උත්සවය මෙවර ද හින්දු ආගමික පුද පූජා විධි රැකෙන පරිදි උත්සවශ්‍රීයෙන් යුතුව සංවිධානය කිරීමට හැකියාව ලැබීම ප්‍රශංසනීය වේ.

මේ වන විට එකිනෙක ආගම් අතර ආගමික සංහිඳියාවකින් යුතුව කටයුතු කරන ශ්‍රී ලාංකික ජනතාව තුළ ආගමික හා ජාතික සහජීවනය තවදුරටත් වැඩිදියුණු කිරීමට නවරාත්‍රි පූජා උත්සවය මහඟු අත්වැලක් වනු ඇත.

මෙම උත්සවය සංවිධානයෙහිලා කටයුතු කරන සැමට "ආයධනම්" ශාස්ත්‍රීය සමරු සංග්‍රහය එළිදැක්වීමට ද කටයුතු කිරීම ගෞරවනීය වේ.

මේ පිළිබඳ කටයුතු කරන සැමට මාගේ ගෞරවනීය ආශිර්වාදය පුද කරමි.

**පූජ්‍ය උඩුගම සුදස්සී හිමි**
**දෙපාර්තමේන්තු ප්‍රධානි**
**ආගම් හා සාරධර්ම අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව**
**ජාතික අධ්‍යාපන ආයතනය**
**මහරගම.**

## கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றருநாள், அது வேறருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமாகும்

**பகவான் ஸ்ரீகிருஷ்ணர்**



# சைவத் திருமுறைகளில் சமூக நல்லிணக்கமும் சைவப்பண்பாடும்

## சைவத் திருமுறைகள்: தேவாரங்களை அடிப்படையாகக் கொண்டது

கந்தையா ஸ்ரீகணேசன்
ஆங்கில மொழிக்கற்பித்தல் மையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கி.பி 6ம் நூற்றாண்டில் உருவாகிய பக்தி இயக்கம் சகல மக்களையும் இணைத்து சைவம் சார்ந்த விழுமியங்களைப் பரப்பி புலமைத்துவம் கொண்ட இலக்கியப் பனுவல்கள் ஊடாக ஒரு புதிய பண்பாட்டை உருவாக்கி மனிதநேயம் மிக்க சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப முயன்றமை வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. இத்தகைய எழுச்சிக்கு வித்திட்டவர்களாக சமய குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனார் ஆகியோரை முன்னிலைப்படுத்துவர் ஆய்வாளர். சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் சைவப் பண்பாட்டை நிலைநிறுத்தவும் நால்வர் வழங்கிய திருமுறைகள் எவ்வண்ணம் திகழ்ந்தன என்பதை இந்த ஆய்வுக் கட்டுரை ஆராய முயல்கிறது. சமயகுரவர் இயற்றிய திருமுறைகள் தமிழ் சைவச் சமூகத்துக்கு விடுத்த அறைகூவல்களாக விளங்குகின்றன. 'சிவம்' எனும் குறியீட்டு அம்சத்தினூடாக சமூகப்பற்றையும் வாழ்வின் பற்றுதலையும் பிடிப்பையும் ஏற்படுத்தும் திருமுறைகள் சாற்றும் கவித்துவ ஆற்றலையும், புலமைத்துவத்தையும் இக்கட்டுரை பதிவு செய்ய முயல்கிறது. வரலாற்று மற்றும் சமூகவியல் பார்வை யோடும் இலக்கிய விமர்சனப் பார்வையோடும் இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகிறது.

*திறவுச்சொற்கள்: மனிதநேயம், சமூகநல்லிணக்கம், பண்பாட்டு பகைப்புலம்.*

### அறிமுகம்

அகில உலகத்திலும் நின்று நிலைத்திருக்கும் சனாதன தர்மம் எனப்போற்றப்படும் இந்து மதத்தின் அறு பெருங் கிளைகளில் சைவமும் வைஷ்ணவமும் கி.பி. 600க்குப் பின் மேலெழுந்த பக்திப் பேரியக்கத்தினால் புடம் போடப்பட்டவை. மக்கள் எழுச்சிக்குப் பின்னணியில் பண்பாட்டு செயற்பாட்டாளர்களின் பணி வரலாற்றில் பதிவு பெற்றுள்ளது. சைவத்தை வளர்த்தெடுத்த நாயன்மார்களும் வைஷ்ணவத்தை போற்றி எடுத்த ஆழ்வார்களும் உலகில் உள்ள வரை போற்றப்படுவார்கள் என்பது திண்ணம். இந்தக் கட்டுரையில் சைவ நாயன்மார் களில் மூவர் தமிழ் எனப் போற்றப்படும் தேவாரத் திருமுறைகளில் சமகால வாழ்வுக்கான நெறிமுறைகள் எவ்வண்ணம் விரவிக் கிடப்பதைக் காணலாம்.

சங்ககாலத்து காதலும் போரும் வாழ்வின் ஒழுக்கங் களாக மிளிர ஓயாத போரினாலும் கட்டுப்பாடற்ற காதல் களவொழுங்கங்களாலும் சிதைந்து போயிருந்த சமூக ஒழுங்குகளை நிலைநிறுத்த கி.பி 3 முதல் 6 வரையான காலப்பகுதியில் பௌத்தமும் தொடர்ந்து சமணமும் வாழ்க்கையைத் துன்பியலாக நோக்கிக் கடும் நோன்பு நோற்று பற்றறுத்து நிர்வாணநிலை அடைதல் ஆகிய நெறிமுறைகளுடன் கோலோச்சிய வேளையில் அவை காலக்கிரமத்தில் மக்களால் வெறுத்தொதுக்கப்பட்டன. மணிமேகலை, சிலப்பதிகாரம், நாலடியார், ஏலாதி, சிறுபஞ்சமூலம் முதலிய நூல்களில் காணப்படும் பௌத்த சமண நெறி முறைகளிடமிருந்து மக்கள் தூர ஒதுங்கினர்.

### சமூக நல்லிணக்கமும் சைவப்பண்பாடும்

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்ற சம்பந்தரின் வாக்கை நிதர்சனமாகக் கொண்ட சைவத்தின் பால் மக்கள் ஈர்ப்புக்கொள்ள பக்திப் பேரியக்கம் காரணமாகியது. அன்பு செய்தல், ஐந்தெழுத்து ஓதுதல், மலரிட்டு பூசனை புரிதல் எனும் வழிபாட்டு முறைகள் சைவத்தின் பகுதிகள் ஆகியன.[1] நாயன்மார்களின் சிறப்புப் பற்றி பெரிய பெரியபுராணம் எடுத்துக்கூறுகிறது. இப்பேரியக்கத்தை தொடக்கி வைத்து அற்புதத்திருவந்தாதி திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் போன்றவை கொண்டு பதிகப்பனுவலை ஆரம்பித்து வைத்தார் காரைக்கால் அம்மையார். சமணம் பௌத்தம் பெற்றிருந்த அரசியல் ஆதிக்கம், தர்க்கவியல் மதிப்பு என்பவை தாண்டி சாதாரண மக்களின் வாழ்வியலை முன்னிறுத்தி, இறைமீது பக்தி, அதற்கான செயல் முறைகள், தொண்டுகள், தியாகம் ஊழ்வினையை பக்தி கொண்டும் முயற்சி கொண்டும் மாற்ற முடியும் எனும் நம்பிக்கை, மக்களிடையே பேதமின்மை சிவபக்தர் எனும் நிலைப்பாடு போன்ற கருத்துக்களை தமது பாடல்கள் மூலமும் செயல்கள் மூலமும் ஊர் ஊராய் தேடித்தேடி ஆலயங்களை உருவாக்கியும் உயிர்ப்பித்தும் உழவாரத் தொண்டுகள், தண்ணீர்ப்பந்தல்கள், அன்ன தான நடைமுறைகள் எனப் பல்வேறு கைங்கரியங்கள் ஊடாகவும் மக்கள் மத்தியில் ஒரு புதுப்பொலிவை, எழுச்சியை உண்டுபண்ணி இருந்த நிலைமை இன்று தேவாரங்கள் தரும் செய்தியாகி என்றும் எம்மவரை நம்பிக்கையோடு வாழவைத்து நிற்கின்றன.[2]

பக்தி இயக்கத்தின் செயற்பாட்டு முன்னவராகக் கருதப்படுபவர் திருநாவுக்கரசர் (கி.பி 580-680). திருப் பதிகம் பாடும் முன்னோடியாக காரைக்காலம்மையாரும், தொண்டுகள் புரிதல் அடிப்படையில் திருவிளக்கிட்ட நமிநந்தி அடிகள், திருக்குளம் புதுப்பித்த தண்டி அடிகள், சந்தனம் அரைத்துக் கொடுத்த மூர்த்தி நாயனார் ஆகியோரும் அப்பருக்கு முன் வழிகாட்டியோர். அப்பரைத்

தொடர்ந்து பிராமண குலத்தில் தோன்றிய சம்பந்தர் (கி.பி 640-656) இணைந்து கொண்டமை சகல சமூக மட்டத்திலும் சைவ சமயக் கருத்துக்கள் தொற்றியமையை காட்டும். பிள்ளைப்பராயத்திலேயே கோபுரத்தைச் சுட்டிக் காட்டி, சிவன் அம்மை தரிசனம் பற்றி "தோடுடைய செவியன்..." என்று பாடும் போது அது வெறுமனே ஓர் அற்புதச் செயல் அல்ல. அந்தக் குழந்தை தன் தமிழில் தான் வாழ்ந்த சூழல் பண்பாட்டையே பாடலூடாக தன் கருத்தாக சொல்லி நின்றது. ஒரு காத்திரமான சிவ வழிபாட்டுப் பகைப்புலத்தில் தான் இது சாத்தியமாகின்றது. சீர்காழியிலிருந்து அப்பருடன் இணைந்து தமிழகத்தின் இதர பகுதிகளுக்கு அந்த பக்திப் பேரியக்கம் சகல தரப்பு மக்களையும் அழைத்து சென்ற கதையைத்தான் பெரியபுராணம் கூறுகிறது.

பண்கனிந்த பாடல்கள் ஊடாக சிவன் புகழை ஏத்துதலும், மன்னருடன் மக்களையும் நல்லிணக்கம் செய்து சைவத்தின் விழுமியங்களினூடு சிவத்தொண்டுக் கருமங்களான கோயிற் புனருத்தாரணம் முதல் அன்னதானம், தண்ணீர்ப்பந்தல் முதலிய கருமங்களில் மக்களை ஆற்றுப்படுத்தல் ஈறாக பக்தி இயக்கம் விரிந்து தொண்டாற்றியது[3]. 8/9 ஆம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி நாயனார், அப்பரைத் தொடர்ந்து சம்பந்தர் ஆற்றுப்படுத்திய வழியிலே ஊர்ஊராக நடைபயணம் மேற்கொண்டு சிவன் புகழ் பாடியதோடு சிவனடியார் புகழும் பாடத்தலைப் பட்டமை - திருத்தொண்டர்தொகை பாடியமை குறிப்பிடப் படவேண்டியது.[4] சைவத்தின் எழுச்சிக்குக் காரணமான விவசாய பண்பாட்டில் எழுந்த பல்லவ, பாண்டிய, சோழ அரசுகளின் மீது சைவப்பண்பாடு செலுத்திய செல்வாக் கினை பக்தி இயக்கத்தின் மூலமாக நாம் அறிந்து கொள்ளலாம் என்கிறார் பேராசிரியர் கைலாசபதி.[5] எல்லா சமூகங்களிலும் கால தேச இட வர்த்தமானங் களுக்கமைய ஏற்படும் பிரச்சனைகள் ஆராயப்பட்டு தீர்வுகள் காணப்படுகின்றன.[6]

வாழ்க்கை முரண்பாடுகளாலும், சமூக முரண்பாடு களாலும் சிக்கித்தவிக்கும் மக்களுக்கு சமயம் ஆதரவுக் கரம் நீட்டுகிறது. சுயபரிசோதனை செய்யவும் தன் நிலையில் சாந்தி சமாதானம் பெறவும் இந்த திருமுறைகள் உதவுகின்றன. கூட்டுக்குடும்ப வாழ்விலிருந்து விடுபட்டு தொழில்நுட்ப யுகத்தில் தத்தளிக்கும் தனிக்குடும்பங்களுக்கு உதவும் சாரமரமாக சைவசமயம் விளங்குவதை தேவாரங்கள் சுட்டிநிற்கின்றன.

**தேவாரப் பாடல்களில் சமூக நல்லிணக்கம்**

துறவு நெறியை வலியுறுத்திய இதர சமயங்களிலிருந்து வேறுபட்டு இல்வாழ்வின் சிறப்பை சம்பந்தரின் பாடல் சமூக நல்லிணக்கத்துக்கு எவ்வகைகளில் முட்டுக்கட்டைபோட இயலும்.

*"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்*
*எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை*
*கண்ணினால் ல/துறும் கழுமலர் வளநகர்*
*பெண்ணினல் லாளொடும் பெருந்தகையிருந்ததே"*[7]

சமூகத்தில் உயர்வு தாழ்வு என்பது தொழில் அடிப் படையில் எதுவும் கிடையாது. "ஆவுரித்து தின்னும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு கன்பராகில், அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்று கூறிய அப்பர் இன்னொரு இடத்தில்

*"சாத்திரம்பல பேசும் சழுக்கர்காள்*
*கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்?"*[8]

எனும் கேள்வி எழுப்பியுள்ளார். வர்ணாச்சிரமதர்மம் மீது குறிவைத்து கல்லெறிவோர் அப்பரின் இத்தகைய கொள்கை உறுதிக்கு முன் காணமாலே போய்விடுவர். இங்கு உயரிய மனித நேயமும் ஒப்பற்ற சமூக நல்லுறவும் வெளிப்படையாகவே உணர்த்தப்படுகிறன. அத்தோடு தமது பாடல் இயக்கத்துக்கு இசை அமைக்க அரிசனர் குல திருநீலகண்ட யாழ்ப்பாணரை இணைத்தமை எத்துணை நல்லிணக்கம் என்பதைக் காட்டுகிறது.

மூவர் தேவாரங்களில் சைவசித்தாந்த கோட்பாடுகள் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன நாவுக்கரசரின் "நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீ வா..."[9] எனும் பாடல் சரியை நெறிக்கு எடுத்துக்காட்டு.

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்,
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்.."[10] எனும் பாடலும் இந்த வழிபாட்டு முறையை ஏற்றிப் போற்றுகின்றது.

"தூவிய நீர் மலர் ஏந்தி வையத்தவர்கள் தொழுது ஏத்தக் காவியனேர் விழிமாதர் என்னும் கவினார் கலிக்காமூர் மேவிய ஈசனை எம்பிரானை விரும்பி வழிபட்டால்"[11] என சம்பந்தர் பூசை வழிபாட்டைப் பாடியுள்ளார்.

சம்பந்தரின் பாடலில்:

"புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி
யறிவழிந்திட்டைம் மேலுந்தி,
அலமந்த போதாக அஞ்சேலென்றருள் செய்வான்
மருங்கோயில்
வலம் வந்த மடவார்கள் நடமாட, முழவதிர
மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில் பார்க்கும்
திருவையாறே....."[12]

எனும் இன்னுமொரு காட்சி விரிகிறது.

அப்பரின் வாக்கு மூலமாக வரும் பாடலில் "திருக் கோயிலில்லாத திருவிலூரும் திருவெண்ணீறணியாத திருவிலூரும்"[12] எனக் கோயில்களின் முக்கியத்துவம் சுட்டப்படுகிறது.

திருவைந்தெழுத்தை எப்போதும் உச்சரிக்கும் அடி யார் கூட்டம் பற்றிய குறிப்புகள் விரவிக் காணப்படுகின்றன. ஐந்தெழுத்தைப் போற்றுதல் சைவப் பண்பாடாக குறிப் பிடப்படுகிறது.

"நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லு நா நமச்சிவாயவே"[14] என்று சுந்தரரும்

"கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே"[15] என அப்பரும் கூறிச் சென்றனர்

நல்வாழ்வும் நல்லெண்ணம் சித்திக்கவும் பிரார்த் தனைகள் அவசியமானவை இறை தியானத்துக்குள் அடியார் மனங்களை ஈடுபடுத்துவதன் மூலம்

நல்லெண்ணம் கொண்ட சமூகத்தை உருவாக்குதல் முடியும். இதற்கான சிறப்புகளை மூவர் தமிழில் பல பாடல்கள் மூலமாக நாம் அறியமுடியும்.

சுந்தரர் பாடலில்:

"எங்கேனும் இருந்து உன் அடியேன் உனை நினைத்தால்
அங்கே வந்து என்னோடும் உடனாகி நின்றருளி"[16]

சம்பந்தர் பாடலில்:

"அன்புறு சிந்தையராகி அடியார்
நன்புறு நல்லூர்ப் பெருமாணம் மேவி நின்று
இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்
துன்புறுவார் அல்லர் தொண்டு செய்வரோ"[17]

எனவும் கருத்துக்கள் எடுத்தியம்பப்படுகின்றன. மேலும் இன்னொரு பாடலில் சம்பந்தர் பின்வருமாறு கூறுகிறார்.

"நெஞ்சாத நீடு நினைவாரை மூடு
வினை தேய நின்ற நிமலன்
அஞ்சாடு சென்னி அரவாடு கையன்,
அனலாடு மேனி அரன் ஊர்"[18] என சம்பந்தரும்

"நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்"[19] என சுந்தரரும் பாடினர்.

"ஊன் நோக்கும் இன்பம் வேண்டி உழலாதே
வான் நோக்கும் வழியாவது நினைமினோ"[20] என அப்பரும்

"கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழுகின்ற பரஞ்சோதிபயிலும் இடம்"[21] என சம்பந்தரும்

"சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினும் சிவமுமாகி
வந்ததன் பயனுமாகி வாணுதல் பாகமாகி"[22] என அப்பரும் கூறி நின்றார்கள்.

### முடிவுரை

எமது சமகால சமூகம் பல்வேறு நெருக்கடிக்குள் வாழ்ந்து வருகிறது. அரசியல், பொருளாதார நெருக்கடிகள் மனித வாழ்வில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்றன. அவை பண்பாட்டு நடவடிக்கைகளிலும் தாக்கம் செலுத்துகின்றன. சைவத்தின் எழுச்சிக்குக் காரணமான விவசாய பண்பாட்டில் எழுந்த பல்லவ, பாண்டிய, சோழ அரசுகளின் மீது சைவப்பண்பாடு செலுத்திய செல்வாக்கினை பக்தி இயக்கத்தின் மூலமாக நாம் அறிந்து கொள்கிறோம். இச் சைவப்பண்பாட்டு எழுச்சியில் சமூக நல்லிணக்கமும் மனித நேயமும் அன்பின் குரலாக ஒலிக்கும் சைவத்தை அடையாளப்படுத்தி உள்ளது என்றால் மிகையாகாது.

எல்லா சமூகங்களிலும் கால தேச இட வர்த்தமானங் களுக்கமைய ஏற்படும் பிரச்சனைகள் ஆராயப்பட்டு தீர்வுகள் காணப்படுகின்றன. இன்றைய சமூகம் கைத் தொழில் புரட்சியினால் விளைந்த மாற்றங்களை உள்வாங்கி முன்னேற்றமடைந்த போதும் பண்பாட்டு மாற்றங்களைப் பெற்றுக்கொள்ளவில்லை. இன்றைய தொழில் நுட்பக்காலத்தின் மேல் எழுச்சியுடன் புதிய பிரச்சனைகளை மனித சமூகம் முகம் கொடுக்கிறது. இப்பிரச்சனைகள் முதலாளித்துவ மற்றும் சோசலிச நாடுகளையும் ஒரு சேரத் தாக்குகின்றன. தொழில் நுட்ப யுகம் மக்கள் மத்தியில் சர்வதேச ரீதியில் தொடர் பாடல்களை ஏற்படுத்திய போதிலும் புரிந்துணர்வுக்கு வழி கோலவில்லை.

அங்கு வாழ்வின் இலட்சியங்களாகிய அன்பு, பக்தி போன்ற சிந்தனைகளை மனித குலம் பின்பற்றத் தவறி விடுகிறது. இந்த இடைவெளியை பக்தி இயக்க காலத்தின் சைவத்தின் எழுச்சி நிரப்பியதென்பதை தேவாரங்கள் நிதர்சனப்படுத்தி உள்ளன.

### அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணியன், கலாநிதி நா. கௌசல்யா சுப்பிரமணியன்., 1993, இந்தியச்சிந்தனை மரபு, ப.93.
2. வேலுப்பிள்ளை, ஆ., 1985, தமிழர் சமய வரலாறு, ப. 82-83.
3. சுப்பிரமணியன் நா. (2002). நால்வர் வாழ்வும் வாக்கும், ப. 97-98)
4. ஞானசம்பந்தன் பேராசிரியர் அ. ச, பெரியபுராணம் - ஓர் ஆய்வு, 1999: ப. 175.
5. கைலாசபதி, க. (1961/1991). பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 101.
6. Gulliver, P.H. (1979). Disputes and negotiations: A cross-cultural perspective, p 3.
7. திருஞானசம்பந்தர், 3:25:1. 8. திருநாவுக்கரசர், 5:60:3.
9. திருநாவுக்கரசர், 6:31:3. 10. திருநாவுக்கரசர், 4:1:6.
11. திருநாவுக்கரசர், 4:1:6. 12. திருஞானசம்பந்தர், 1:130:1.
13. திருநாவுக்கரசர், 6:95:5. 14. சுந்தரமூர்த்திநாயனார், 7:48:1.
15. திருநாவுக்கரசர், 4:11:1. 16. சுந்தரமூர்த்திநாயனார், 7:23:2.
17. திருஞானசம்பந்தர், 3:125:3. 18. திருஞானசம்பந்தர், 2:88:7.
19. சுந்தரமூர்த்திநாயனார், 7:20:1. 20. திருநாவுக்கரசர், 5:49:3.
21. திருஞானசம்பந்தர், 2:43:5. 22. திருநாவுக்கரசர், 4:48:5.

### துணை நூற்பட்டியல்


1. Gulliver, P.H. (1979). Disputes and negotiations: A cross-cultural perspective. Academic press, Inc., London.
2. இளமுருகனார் மயிலைகிழார், (1953), தேவாரம் அடங்கன் முறை, சென்னை: திருவருளகம்.
3. கைலாசபதி, க. (1961/1991), பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், நியு செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை.
4. வேலுப்பிள்ளை, பேராசிரியர் ஆ. (1969/2010). தமிழ் இலக்கியத்தின் காலமும் கருத்தும், மீள் பதிப்பு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
5. வேலுப்பிள்ளை, டாக்டர்.ஆ, (1985) தமிழர் சமய வரலாறு, பாரி புத்தகப் பண்ணை சென்னை.
6. ஞானசம்பந்தன் பேராசிரியர் அ.ச. பெரியபுராணம் - ஓர் ஆய்வு, கங்கை புத்தக நிலையம், சென்னை.
7. சுப்பிரமணியன், கலாநிதி நா. கௌசல்யா சுப்பிரமணியன் (1993), இந்தியச்சிந்தனை மரபு, சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை.
8. சுப்பிரமணியன் நா. (2002). நால்வர் வாழ்வும் வாக்கும், கலைஞன் பதிப்பகம்: சென்னை.

# பகவத்கீதை பகரும் ஆன்மா பற்றிய சிந்தனைகள்

ந. சுபராஜ்
விரிவுரையாளர், இந்துநாகரிகப் பிரிவு
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

ஆன்மா பற்றிய சிந்தனைகளை இந்து தத்துவங்கள் ஒவ்வொன்றும் சிறப்பாக விபரித்து நிற்கின்றன. இவ்வரிசையில் பகவத்கீதை கூறும் ஆன்மா பற்றிய சிந்தனைகள் ஆழமான, தனித்துவம் வாய்ந்தனவாக உள்ளன. குருஷேத்திர போரின் போது போர் புரிவதற்கு கலங்கி நின்ற பார்த்தனுக்கு பகவான் கிருஷ்ணர் உபதேசிக்கும் வகையில் அமைந்தது பகவத்கீதை. பிரம்ம சூத்திரம், உபநிஷத்துகள் ஆகியவற்றோடு பகவத் கீதையும் இணைந்து மூன்று அஸ்திவாரங்கள் என்று பொருள்படி பிரஸ்தானத்திரயம் என்று அழைக்கப்படுகிறது.

இதில் கிருஷ்ணர் சொல்வதாக 620 ஸ்லோகங்களும், அர்ஜுனனின் சொல்வதாக 57, சஞ்சயன் சொல்வதாக 67, திருதராஷ்டிரன் சொல்வதாக ஒரு ஸ்லோகம் என மொத்தமாக 700 ஸ்லோகங்களும் 18 அத்தியாயங்களும் உள்ளன. ஆன்மா பற்றிய சிந்தனையில் முதலில் ஆத்மாவின் உண்மைத் தன்மையையும், அது போர்த்தி யுள்ள உடல் எனும் நிலையற்ற ஆடையையும் பற்றிக் குறிப்பிடும் பகவான், ஆத்மா மீண்டும் பிறப்பது பற்றி உரைக்கின்றார். இவ்வாறு ஆன்மா பற்றி சீரான ஓர் ஒழுங்கமைப்பில் பகவத்கீதை விபரித்துள்ளது.

### ஆன்மாவின் தோற்றம்

பிரம்மத்திடமிருந்தே ஆன்மாக்கள் தோற்றம் பெற்றன என பகவத்கீதை கூறுகின்றது. பிரம்மாவின் பகல் தோன்றும் போது எண்ணற்ற ஜீவாத்மாக்கள் தோன்றுகின்றன. அவரது இரவு வந்தவுடன் அவையெல்லாம் மறைகின்றன (8.18) எனக் கூறுகின்றது. மீண்டும், மீண்டும் பகல் வரும் போது இந்து ஜீவாத்மாக்கள் இயங்குகின்றன. மீண்டும் இரவு வரும் போது, அநாதரவாக இவர்கள் மறைக்கப்படுகின்றனர். (8.19) என பகவத்கீதை கூறுகின்றது.

> *"அவன் அவள் அது எனும் தோற்றிய*
> *திதியே ஒடுங்கி அந்தம் ஆதி*
> *எனமனார் புலவர்"* (சிவஞானபோதம், சூத்.1)

என்னும் சைவசித்தாந்த சிந்தனைக்கு ஒன்றிச் செல்கின்றது பகவத்கீதை. அதாவது, ஆன்மாக்கள் இறைவன் மூலமே படைக்கப்பட்டு, காத்து, அழிக்கப்பட்டு மீண்டும் படைக்கப்படுகின்றது எனும் சைவசித்தாந்த சிந்தனை பகவத்கீதையிலும் தொனிக்கின்றது. இறைவனிடமிருந்து இவ்வாறு இவவான்மாக்கள் படைக்கப்பட்டதால் அவ்வான் மாக்களில் பிரம்மம் நிலைபெற்றுள்ளது. படைத்த எல்லா ஜீவன்களிலும் நான் இருக்கின்றேன், ஆனால் அவர்களில் நான் இல்லை. (9.4) என்ற பகவத்கீதை கூற்று இதற்கு சான்றாகின்றது.

ஏழு பெரு முனிவர்களும், அவர்கட்கு முற்பட்ட நான்கு பிற முனிவர்களும், மனித சமுதாயத்தை தோற்று வித்தவர்களான மனுக்களும் எனது மனத்தினின்றும் பிறந்தவர்களே. இவ்வுலகங்களிலே உள்ள உயிரினங்கள் எல்லாம் அவர்களினின்றும் தோன்றியவையே என்றார் பகவான். (10.6) எல்லா உடல்களிலும் நானே அறிப வனாக இருக்கின்றேன். (13.3) என பகவத்கீதையில் பகவான் உரைப்பதிலிருந்து இவ்வான்மாக்களினதும் பிரபஞ்சத்தினதும் படைப்பிற்கு பிரம்மமே காரணமாகின்றது என்பதை அறிய முடிகின்றது.

### ஆன்மாவின் இலக்கணங்கள் - ஆன்மா அழியாதது

இறைவனால் ஆக்கப்பட்ட ஆன்மா அழிவற்றது என்கிறது பகவத்கீதை. நானோ, நீயோ, இம்மன்னர்களோ இல்லாமலிருந்த ஒரு காலமொன்று இருக்கவில்லை. எதிர்காலத்தில் நம்மிலெவரும் இல்லாமலிருக்கவும் போவதில்லை. (2.12) உடல்முழுவதும் பரவியிருப்பது அழிவற்றதென அறிவாய், அழிவற்றதான ஆன்மாவை கொல்லக் கூடியவர் எவரும் இல்லை. (2.17) வாழும் ஜீவாத்மா நித்தியமானது. அளவிட இயலாதது, அழி வற்றது. (2.18) என்கிறார் பகவான்.

ஜீவாத்மா கொலை புரிகின்றதென்றோ, கொல்கின்ற தென்றோ கருதுபவன் புரிந்து கொள்ளாதவனே, அறிவுள்ளோர் ஆத்மா அழிவதோ, அழிப்பதோ இல்லை என்பதை அறிகின்றார்கள். (2.19) ஆத்மாவுக்கு பிறப்போ இறப்போ கிடையாது. ஒருமுறை இறந்து பிறகு அவன் இல்லாமல் போவதுமில்லை என பகவத்கீதை உரைக் கின்றது. அவன் பற்றற்ற நித்தியமான, என்றும் நிலைத்திருக்கும், மரணமற்ற, மிகப்பழையவனாவான்.

பிறந்தவன் எவனுக்கும் மரணமும், மரணப்பட்ட வனுக்குப் பிறப்பும் நிச்சயமே. (2.27) படைக்கப்பட்டவை எல்லாமே முதலில் தோன்றாதிருந்து இடைநிலையில் தோன்றி, இறுதியில் மீண்டும் மறைகின்றன. (2.28) உடலில் உறையும் ஆன்மா நித்தியனாதலால் என்றும் அழிக்கப்பட முடியாதவனாக இருக்கிறான். எனவே பிறப்புடைய எந்த ஆத்மாவுக்காகவும் அது அழிகின்ற தெண்ணி வருந்த வேண்டியதில்லை. (2.30)

### உடல் அழியக் கூடியது

ஜட உடல் மட்டுமே அழியக்கூடியது. உடல் அழிக்கப் படுவதால் அவன் அழிக்கப்படுவதில்லை. (2.20) ஆத்மா அழிவற்றது, பிறப்பற்றது, மாற்றமில்லாததென்றறிந்த ஒருவன் யாரையாகிலும் கொல்வதோ, கொலை செய்யப்படக் காரணமாவதோ எப்படி? (2.21) எனக் கேட்கிறார் பகவான்.

### ஆத்மா எதனாலும் பாதிப்புறாது

ஆத்மா கண்ணுக்கு புலப்படாதது, அது எதனாலும் பாதிப்படைய மாட்டாது என்கிறது கீதை. ஆத்மா எந்த ஆயுதத்தாலும் துண்டிக்க முடியாததும், நீரால் நனைக்கப்பட முடியாததும், காற்றால் உலர்த்தப்பட முடியாததுமாகும். (2.23) தனி ஆத்மா பிளக்க முடியாதது, கரைக்க முடியாதது, எரிக்கவோ, உலர்த்தவோ முடியாதது. என்றுமிருப்பது, எங்கும் நிறைந்த, அசையாதது, என்றும் மாறாமலிருப்பது. (2.24) ஆத்மா கண்ணுக்கெட்டாததும், சிந்தனைக்கப்பாற்பட்டதும், மாற்றமுடியாததுமாகும். இதை நன்கறிந்தால் உடலுக்காக வருந்த வேண்டியதில்லை (2.25) என்கிறது பகவத்கீதை.

### ஆத்மாவின் அறிவு

கர்ம இந்திரியங்கள் ஜடப்பொருளை விட உயர்ந்தவை, மனம் புலன்களை விடவும், அறிவு மனத்தை விடவும் உயர்ந்தவை, ஆத்மாவோ அறிவை விடவும் உயர்ந்தவனாவான். (3.42)

### செயலுக்கு ஆன்மா காரணமில்லை

உடல் கொண்ட, தனது உடல் நகரத்தின் நாயகனான ஆத்மா செயல்களை உண்டாக்குவதுமில்லை, எவரையும் செயற்படத் தூண்டுவதுமில்லை, செயல்களின் பலன்களையும் உண்டாக்குவதில்லை. இவையெல்லாம் ஜட இயற்கை குணங்களால் நடிக்கப்படுபவையே. (5.14) தங்களது உண்மை ஞானத்தை மறைக்கும் அஞ்ஞானத்தாலேயே ஆத்மாக்கள் மயங்குகின்றன. (5.15) எல்லா ஆன்மாக்களும் விருப்பு, வெறுப்பு எனும் இருமைகளால் ஆட்கொள்ளப்பட்டு, மயக்கத்திலேயே பிறந்துள்ளனர். (7.27)

### பிரம்மமே ஆன்மா, ஆனால் அதன் கருவிகள் பிரம்மம் அல்ல

எல்லா இடங்களிலும் அவரது கரங்களும், கால்களும், கண்களும், முகங்களும் இருக்கின்றன. அவர் எல்லா வற்றையும் கேட்கின்றார், இவ்வாறு பரமாத்மா இருக்கின்றார். (13.14) என்கிறது பகவத்கீதை. இதிலிருந்து ஆத்மாவின் முழு இயக்கத்திற்கும் காரண கர்த்தா பிரம்மம் என்பது வெளிப்படுகின்றது. அவரே எல்லாப் புலன்களினதும் மூலகாரணமாக இருந்தாலும் கூட அவர் புலன்கள் இல்லாதிருக்கின்றார் என்கிறது பகவத்கீதை. அதாவது எல்லா இயக்கத்திற்கும் பிரம்மம் காரணமாகின்ற போதிலும் ஆன்மாவிற்கு வழங்கப்பட்டிருக்கும் புலன் களுடன் அவரது தொடர்பு இருக்காது. ஆனால் இந்த புலன்களோடு ஆன்மாக்களுக்கு தொடர்பு இருக்கின்றது. அந்த தொடர்பு நீக்கப்படும் போது ஆன்மாவும் பிரம்மமும் ஒன்றாகின்றது. பகவத்கீதையின் இத்தகைய சிந்தனைகளே பிற்காலத்தில் அத்வைத சிந்தனைகளுக்கு பிரமாணங்களாக அமைந்தன.

ஆன்மாவும் பிரம்மமும் ஒன்று எனக் கூறுகின்ற அதேவேளை பிரம்மத்தின் அங்கங்களாகவும் ஆன்மாக்கள் உள்ளன என்பதனையும் சுட்டிக்காட்ட தவறவில்லை. இச்சிந்தனை இராமானுஜரின் விசிட்டாத்வைத கோட்பாட்டிற்கு உதவியது. எல்லா உயிரினங்களும் எனது அங்கமே. அவை என்னுடையவே, என்னில் இருப்பவையே. (4.35) என்ற பகவத்கீதை வசனம் இதற்கு தகுந்த சான்றாக அமைகின்றது.

### மறுபிறப்பு

ஆன்மாக்களுக்கு மறுபிறப்பு உண்டு என்பதை பகவத்கீதை ஏற்றுக்கொள்கின்றது. உடல் பெற்ற ஆன்மா, சிறுவயதிலிருந்த இளமைக்கும் இளமையிலிருந்து முதுமைக்கும் மாறுவது போலவே மரணத்தின் போது வேறு உடலுக்கு மாறுகின்றது. தன்னை உணர்ந்த ஆத்மா, இது போன்ற மாற்றத்தால் திகைப்பதில்லை. (2.13) பழையவற்றை களைந்து புதிய ஆடைகளை ஒருவன் அணிவது போன்றே, பழைய உபயோகமற்ற உடல்களை நீக்கி, புதிய உடல்களை ஆத்மா ஏற்கிறது. (2.22) என மறுபிறப்பு பற்றி பகவத்கீதை விபரிக்கின்றது.

### முத்தி

உடல் கொண்ட ஆன்மா தன் இயற்கையை கட்டுப்படுத்தி மனதால் எல்லாச் செயல்களையும் துறந்து விடும் போது, ஒன்பது கதவுகளைக் கொண்ட நகரில், செய்யாமலும் செயற்காரணமாகாமலும் இன்பமாய் வசிக்கின்றான். (5.13) என பகவத்கீதை ஆத்மாவின் முத்திநிலை பற்றி எடுத்துரைக்கின்றது. அதாவது செயல்களைத் துறக்கும் போது நல்வினை, தீவினை என்கின்ற இரு வினைகளையும் கடந்து பேரின்ப நிலையாகிய முத்திப்பேற்றை ஆன்மா பெறுகின்றது.

### பிரம்மத்தை அடையும் ஆன்மாக்கள் பிறப்பதில்லை

ஜட உலகின் மிகவுயர்ந்த கிரகத்திலிருந்து மிகத்தாழ்ந்தது வரை எல்லாம் பிறப்பும், இறப்பும் தொடரும் துன்பக் கோட்டங்களே. என்னிடத்தில் அடைபவனோ பிறப்பதேயில்லை (8.16) என பகவான் உரைப்பதிலிருந்து முத்தி நிலையே ஆன்மாக்களின் இறுதி இலட்சியம் என்பதனை பகவத்கீதையும் அறுதியிடுகின்றது எனலாம்.

### உசாத்துணைகள்


1. கிசாரி மோகன் கங்குலி, (மொழி பெயர்ப்பு), மகாபாரதம்,
2. ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் (உரை), ஸ்ரீமத் பகவத்கீதை
3. Davis, Richard H. (2014), The "Bhagavad Gita": A Biography, Princeton University Press
4. Deutsch, Eliot; Dalvi, Rohit (2004), The Essential Vedānta: A New Source Book of Advaita Vedānta, World Wisdom, Inc,
5. Easwaran, Eknath (2007), The Bhagavad Gita, Nilgiri Press
6. Swami Shivananda. Srimad Bhagavad Gita. 1967. Divine Life Society, Shivanandanagar, Aurobindo. Essays on the Gita. 1922. Aurobindo Ashram. Pondicherry.
7. Subba Row. Notes on the Bhagavad Gita. 1978. Theosophical Society Press. Pasadena, California.

# மாணவர் மையக்கற்றலில் குவிசிந்தனையின் செல்வாக்கு

திரு.பி.பேரின்பராசா
மட்/களுதாவளை மத்திய மகா வித்தியாலயம்
(கோப்பாய் சிவம்)

அண்மைக்கால கற்றல் போக்குகளில் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டகற்றல், மேலெழுகை பெறுகின்றது. கற்றல் நிலையானது இருவகைப்படும். ஆவை

அ. திட்மிட்டுக் கற்றலைஏற்படுத்துதல்

ஆ. திட்டமிடாதுகற்றலைஏற்படுத்துதல்

என்பனவாகும். திட்டமிடாது ஏற்படுத்தப்படும் கற்றலே, ஒருவனுடைய மனதில் சிறந்த உபாயமாக எழுச்சிபெறும். திட்டமிடாது கற்கும்போது கற்றல் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுவதுகுறைவாகும். ஆனால் திட்டமிட்டமுறையில் கற்றல் நிகழும் போது பல்வேறு பிரச்சினைகள் எழுச்சி பெறுகின்றன. பாடமையமான கற்றலானதுதிட்டமிட்டுக் கற்கும் ஒருமுறைமையாகும். அவ்வேளையில் தோன்றக் கூடிய பன்முகபட்டபிரச்சினைகள் இன்றைய மாணவரிடையே கூடுதலாகத் தாக்கத்தை ஏற்படுத்துகிறன. இத்தகையகற்றல் தொடர்பான பிரச்சினையைதீர்க்கும் உபாயம் ஒன்றாகவே குவிசிந்தனை அமைகிறது.

பாடமையமான கற்றல் முறையில் ஒருவழித் தொடர்பாடலான கற்பித்தல் முறையால் மாணவர்களிடையே குவிசிந்தனையை ஏற்படுத்துவது கடினமாகும். ஒருவழித் தொடர்பாடல் கற்பித்தல் முறைமையானது வழங்கல் செய்முறையாக அமைகிறது. அதாவது கடத்தல் வகிபாகமாகும். மாணவர்கள் கற்கும் வேளையில் கற்றல் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் போது

- ★ படங்களைகளைக் காட்டி விளக்குதல்
- ★ உதாரணம் காட்டி விளக்குதல்
- ★ மாணவர்களை ஈடுபடவைத்தல்
- ★ செயன்முறைகயைப் பின்பற்றுதல்

மூலம் பொதுவான சிந்தனையொன்றை மாணவரிடையே ஏற்படுத்தமுடியும்.

குறிப்பிட்ட பாடமொன்றை மனப்பாடரீதியாக மீட்டல் செய்யும்போது கற்றல் தொடர்பான பிரச்சினைகள் உருக்கொள்ளுகின்றன. ஆனால் குவிசிந்தனையானது மனப்பாடம் செய்யும் முறையைத் தவிர்த்து, கற்கும் விடயத்தில் ஒருபொதுவிளக்கத்தைப் பெறும் சிந்தனை வடிவமாக அமைகிறது. குவிசிந்தனையானது கற்றல் மூலம் அறிதலைப் பெறும்போது நியாயித்தலுடன் தொடர்புபட்ட தொகுத்தறிமுறையாக அமைகிறது.

தொகுத்தறிமுறை என்பது அவதானிக்கப்பட்ட பல கூற்றுக்களிலிருந்து பொதுவான ஒருமுடிவைப் பெறும் முறையாகச் சுட்டிக்காட்டப்படபெறுகிறது. இதன் முன்னோடியான சிந்தனையாளராகபிரான்சிஸ் பேக்கன் குறிப்பிடப்படுகிறார். குவிசிந்தனையை தொகுத்தறிமுறை அனுமானமென்று அவர் குறிப்பிடுகிறார். இயற்கையான கூற்றுக்களையும், அதனுடன் தொடர்பான பொருட்களையும் உற்றுநோக்கி பொதுமுடிவொன்றுக்கான சிந்தனையாகவே கவிசிந்தனை அமைகிறது. தொகுத்தறிமுறையென்பது நிறைவான கூற்றுக்களை அடைந்துகொள்ளுதலாகும். தொகுத்தறிமுறையானது கற்றல் மூலமான அறிகையில் நிறைவான கூற்றுகளை உருவாக்கவும், அதனை அடைவதற்கும் அக்கூற்றுக்களை உறுதிப்படுத்துவதற்கும் ஆதாரமாக அமைகிறது. ஆத்கையற்றுக்களையே ஒன்றிணைந்ததொடர்புகளும் காணப்படும். அத்தோடு புதிதுபுதிதாக பெறப்படும் அறிவினை மீளாய்வு செய்வதற்கும், குவிசிந்தனையும் தொகுத்தறிமுறையும் உதவுகின்றன.

குவிசிந்தனையின் தோற்றம் கற்றல் தொடர்பான பிரச்சினைகளாலேயே எழுச்சி பெறுகிறது. அதேவேளை போதியவிளக்கத்தைத் தருகின்றன. நிறைவான கூற்றுக்களை உருவாக்கவும் இக்குவிசிந்தனைமுறை உதவியாக அமையும். தொகுத்தறிமுறை மூலமாக குவிசிந்தனை முதன்மைப்படுத்தப்படுகிறது. கற்றலின் போது விதிகளை வருவிக்கும் முறையாக குவிசிந்தனை அமைகிறது. குவிசிந்தனைச் செயற்பாட்டில் முதலாவது படி முறையாக விதிவருவித்தல் முறை அமைகிறது. நிறைவான வதிகளை உருவாக்கும் முயற்சியாக தொகுத்தறிமுறையும் குவிசிந்தனையும் அமைகின்றன. எடுகோள்களையும் கூற்றுக்களையும் கற்றலின்போது ஏற்படுத்துவதற்கான உபாயமாக குவிசிந்தனை விளங்குகிறது. மாணவர்களிடையே கற்பனைச் சிந்தனை, நியாயித்தல் முதலிய அறிவுசார் செயற்பாடுகளை ஏற்படுத்தவும் குவிசிந்தனை உதவுகின்றது.

அண்மைக் காலத்தில் தரமான அறிவு, தரமான கற்பித்தல், தரமானகற்றல், தரமான ஆசிரியர், தரமான பாடசாலை முதலான எண்ணக்கருக்கள் இடம்பெறுகின்றன. கற்றலின் தரத்தை அறியச் செய்தலில் குவிசிந்தனை பிரதான இடத்தைப் பெகுறிது. குற்றலின் தரம் என்றால் யாது? குற்றலின் தரத்தைநிருணயம் செய்வது எது?

எனும் ஏழுவினாக்கள் தற்காலத்தில் முதன்மைபெறுகின்றன. கற்கும் விடயப் பொருளும் கற்கும் முறையும் கற்றலின் தரத்தைநிருணயப்பவை.உருவகப்படுத்துதல், ஒப்பிடுதல், இணைத்துப் பார்த்தல்,ஒத்தன்மைபார்த்தல் என்பன கற்றலின் தரத்தைநிருணயிக்கின்றன. இவையனைத்தும் குவிசிந்தனைத் தொழிற்பாட்டில் இணைந்திருப்பதைக் காணலாம்.

கற்றலின் போது குறிப்பிட்ட விடயம் ஒன்றுக்கு வரைவிலக்கணம் செய்வதில் கூடுதல் ஆதிக்கம் செலுத்துவது குவிசிந்தனையா? அல்லது விரிசிந்தனையா? ஏனம் வினாஎழுகின்றது. குவிசிந்தனையானது கூடுதலாக அறிதல் ஆட்சியைஆதாரமாகக் கொள்கிறது. வரைவிலக் கணப்படுத்தல் ஒழுங்குமுறைப்படுத்தல், முன்னுரிமைப் படுத்தல் என்பவை குவிசிந்தனையின் அடிப்படை விடயங்களாக அமைகின்றன. குவிசிந்தனையாது உளவியல் சார்ந்த ஒரு செயற்பாடாக அமைகிறது. குற்றலின் போது இயல்பாகத் தோன்றக்கூடிய பிரச்சினை களுக்கு தீர்வுகாணும் நிலை குவிசிந்தனையாளர் களுக்குண்டு. அத்தகை யோருக்குகற்கும் விடயத்திற்கு வரைவிலக்கணப்படுதல் நிலையில் கற்பித்தலை அறிமுகம் செய்தல் அவசியம்.

ஆசிரியரின் கற்பித்தலின் தரத்தை, மாணவர்களின் கற்றலின் தரத்தையும் மதிப்பீடுசெய்யும் போது குவி சிந்தனை மாணவர்ளிடம் எத்தகைய சிந்தனையை ஏற்பத்தியுள்ளது என்பதை அணுகமுடியும். எனவே குவிசிந்தனை என்பது சிந்தனை மூலமான ஒரு நடத்தைக் கோலமாக அமைகிறது. குவிசிந்தனை ஒரு உளமுக சிந்தனை வடிவமாகும். பிரச்சினை விடுவித்தலுக்கான பல்வகை நடவடிக்கைகளில் குவிசிந்தனையானது அடிப்படை மட்டத்தையே பிரதிபலிக்கும் அதனால் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கும், விஷேட தேவையுடைய மாணவர்களுக்குமுரிய மிகஎளிய சிந்தனைக் கோலமாக குவிசிந்தனை அமைகிறது. மாணர்கள் கற்கும்போது ஒரு குறிப்பிட்ட விடயத்தை நோக்கி அவர்களது சிந்தனையை திசைதிருப்புவதும் வழிப்படுத்துவதும் குவிசிந்தனையின் இயல்பாகும். அதனாலேயே குவிசிந்தனையானது. ஒரு செயற்பாடாக விளங்குகிறது. கற்றலின் அடிப்படைதரம் மட்டுமன்றி ஆளமான கற்றலுக்கும் குவிசிந்தனை வழிகாட்டுவதாக அமையும். இந்தசந்தர்பங்களில் மாணவர்களின் சாதாதணமானசிந்தனையை குவி மையப்படுத்தும் உத்திகளையும்,நுட்பங்களையும் ஆசிரியர்கள் பின்பற்றதல் வேண்டும். விசாரணைமுறைக் கற்பித்தல் இதன் முக்கிய உபாயமாக விளங்குகிறது. மாணவமையக் கற்றலில் பிரதான அம்சமாகவும் குவிசிந்தனை அமைகிறது. கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர்கள் கற்பித்தலைவிட மாணவர் சிந்தனைகளை மேம்படுத்துதல் குவிசிந்தனையின் மையப்பொருளாக அமைகிறது.

குவிசிந்தனை என்பது சிந்தனை மூலமான நடத்தை என்று கூறப்படுகிறது. இது அகமுகசிந்தனையாகும். சிந்தனைகளில எளிமையான சிந்தனைக் கோலமாக குவிசிந்தனை அமைகிறது. மேல்லக் கற்கும் மாணவர் களுக்கான கற்றல் உபாயமாக இது விளங்குகின்றது. அதேவேளை சிக்கலான எண்ணக்கருக்களைக் கற்பதற்கான ஒருபடிமுறையாகவும் விளங்குகின்றது. விசாரணைமுறைக் கற்பித்தல் இதன் முக்கிய வழிமுறை யாகும். மாணவமையகற்றலில் ஒருவழிமுறையாகவும் குவிசிந்தனைவிளங்குகின்றது.

குவிசிந்தனையடன் தொடர்புடையது தொகுத்தறி முறை அறிவாகும். நேர்வுகள் பலவற்றை அவதானித்து நேர்வுகள் தொடர்பானபொதுமையாக்கம் மேற் கொள்ளப் படுவதே தொகுத்தறி முறையாகும். உதாரணமாக ஒவ்வொரு காகமும் கருமை நிறமானவை. எனவே எல்லாக் காகமும் கருநிறமானவ என்னும் பொதுமுடிவை எடுப்பர். இவ்வாறான எல்லாப் பொதுமையாக்கமும் குவிசிந்தனையால் பெமுடியாதவை.

தொகுத்தறிமுறையென்பது எதிர்கால நிகழ்வுகளை முன்னறிப்பு செய்வதற்குரிய வழிமுறையாகும். அதேவேளை தொகுத்தறிமுறையானது நம்பிக்கை, ஊகம் என்பவற்றோடுதொடர்பானவாதங்கள் என்றுடே விட் கியூன் குறிப்பிடுகறார். இந்நிலையில் இந்துசமயம் சார்பானஎண்ணக்கருக்களைக் கற்பதற்கும் குவிசிந்தனை யும் தொகுத்தமுறையும் உதவும் எனலாம்.

ஊண்மையான கற்றல் நிலையானது தனியாள் சார்ந்ததாக விளங்குகின்றது. தகவல்களைத் தேடுதல், பகுத்தாராய்தல் என்பன குழுநிலையாக நடைபெற்றாலும் தகவலைக் கற்றலும், கற்றவிடயத்தை உள்வாங்கலும் தனியாள் தொடர்பான செயற்பாடாகவே அமையும். துற்காலத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ள 5E கற்றல் முறையானது. தனியாள் ஒருவனுடைய நிலைமாறு வகிபாகத்தினை எடுத்துக்காட்டுகிறது. அதாவதுதனியாள் ஒருவனின் வகிபாகம்ஒன்றினதுமாற்றத்தினை இது குறிக்கின்றது. இத்தகைய நிலைமாற்று வகிபாகக் கற்றலுக்கு குவிசிந்தனை செயற்பாடு பிரதான பங்களிப்பைச் செய்கிறது. ஆரம்பத்தில் பொதுவிடயம் பற்றிய கற்றலாகவும், பின்புசிறப்புவிடயம் நோக்கிய நகர்வாகவும் இக்கொள்கைகாணப்படுகிறது. கற்றல் கற்பித்தில் செயற்பாட்டின்போது இலகுவான எண்ணக் கருவில் இருந்து சிக்கலான எண்ணக்கருவை நோக்கி நகரவும், அதேவேளை சிக்கலான எண்ணக்கருவிலிருந்து இலகுவான எண்ணக்கருவை நோக்கிநகரவும் உரிய ஒரு உபாயமாக கவிசிந்தனையும், தொகுத்தறிமுறையும் அமைகின்றன.

# திருமந்திரம் புலப்படுத்தும் மனித நேயச் சிந்தனைகள்

பேராசிரியர் டாக்டர். மா. வேதநாதன்,
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் ஆகமம் என்று கூறப்படும் பத்தாமட திருமுறையாக விளங்கும் திருமூலரின் திருமந்திரம் சைவ வாழ்வியலுக்கு ஓர் அடிப்படையான நூலாக விளங்குகின்றது. இந்நூலில் சைவப் பண்பாட்டுக் கூறுகள் பல காணப்படுவதுடன் சமூக நல்லிணக்கத்திற்கு அடிப்படையான மனிதநேயச் சிந்தனைகளும் இடம் பெற்றுள்ளதாகக் கருதமுடிகின்றது. 'மனிதநேயம்' என்பதற்கு 'அன்பு' என்பது பொருளாகும். இவ்வகையில் நோக்கும் போது ஒருமனிதன் இன்னொரு மனிதனிடம் செலுத்தும் உண்மையான அன்பே மனிதநேயம் என்று கொள்ளப்படும். மனிதனிடம் மட்டுமன்றி ஏனை உயிர்களிடம் காட்டும் அன்பும் பரிவும் மனிதநேயமாகவே கருதப்படும். சமுதாய நல்லிணக்கத்திற்கு திருமந்திரம் கூறும் மனிதநேயச் சிந்தனைகளை விபரண ஆய்வுமுறையில் ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

*திறவுச்சொற்கள்: திருமந்திரம், மனிதநேயம், நல்லிணக்கம், அன்பு, அறம்*

**அறிமுகம்**

மனிதநேயச் சிந்தனைகளைப் புலப்படுத்தும் சைவத் திருமுறைகளுள் தனிச்சிறப்புடைய திருநூலாக விளங்குவது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு இறுதியில் அல்லது ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த திருமூலர் இயற்றிய திருமந்திரமாகும்.[1] இந்நூலில் இடம்பெற்றுள்ள மூவாயிரம் பனுவல்களும் ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக விளங்கும் திருமந்திரமானது சைவ சமயத்தின் தோத்திர நூலாகவும், சாத்திர நூலாகவும், சைவ வாழ்வியல் நூலாகவும் திகழ்கின்றது. சமுதாய மேம்பாட்டிற்கும், சமூக நல்லிணக்கத்திற்கும் திருமந்திரம் கூறும் மனிதநேயச் சிந்தனைகளை விபரணஆய்வு முறையில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மனிதநேயம்**

மனித நேயம் என்பது மனிதனோடு தொடர்புடைய ஒரு தத்துவக் கோட்பாடாகும். மனிதநேயக் கோட்பாட்டினை மனித இன நலக் கோட்பாடு என்றும், மக்கள் நலக் கொள்கை என்றும் வழங்குவர்.[2] மனிதநேயம் என்பது ஆங்கிலத்தில் "ஹியுமானிஸம்" (Humanism) என அழைக்கப்படும். இதனை மானுடம், மானிடம், மானுஷிகம் எனவும் வழங்குவர். தெறென்ஸ் (Terence) என்னும் இலத்தீன் புலவர், "நான் மனிதன். மனிதனுக்கு இயல்பான எதனையும் நான் வெறுப்பதில்லை" எனக்கூறிய கூற்று மனிதநேயக் குறிக்கோளை சுட்டி நிற்பதாக மேல்நாட்டார் போற்றுவர். மனிதனை அல்லது மக்கள் நலத்தைப் பேணவேண்டும் என்பதை மையமாகக் கொண்ட எந்தநோக்கினையும் மனிதநேயம் (ஹியுமானிஸம்) எனக் கொள்வது மேனாட்டுமரபாக இன்று விளங்குகின்றது.[3] "மனிதனுக்கு மேலொரு தெய்வமும் இல்லை - இந்த மானுடமும் போலொரு மெய்மையும் இல்லை" என்ற உலோகாயுத சித்தரின் பாடல் வரிகள் மனிதநேயத்தின் மாண்பினைப் புலப்படுத்துகின்றன. மனிதநேய வாழ்வு என்பது முழுக்க முழுக்க மனிதனை மையமாகக் கொண்ட வாழ்வியல் தத்துவம் என்பர். "கடவுளை மற. மனிதனை நினை" என்ற மனிதநேயக்கோட்பாடு கடவுள் மறுப்பை அடிப்படையாகக் கொண்டது என்றும் சிலர் குறிப்பிடுவர். சைவத்தின் மனிதநேயம் கடவுட் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இந்த வகையில் திருமந்திரம் கூறும் மனிதநேயம் "கடவுளை நினை. மனிதனை நினை" என்ற மாண்பிகைக் கொண்டு விளங்குகின்றது."

ஒருவர் மற்றவருக்கு சமமானவர் என எண்ணும் உயரிய மனப்பாண்மையே மனிதநேயத்தின் உன்னத வெளிப்பாடாகும். ஒரு மனிதன் மற்ற மனிதனுக்கு மதிப்பளிப்பதும், உதவுவதும் மனிதநேய நேயத்தின் புலப்பாடெனலாம். இவ்வகையில் மனித நலமேம்பாட்டிற்கு உதவக்கூடிய அறக்கருத்துக்களையும் மனிதநேயச் சிந்தனையாக கருதலாம். பரந்த நோக்கில் நோக்கும் போது மனிதநேயத்தின் உன்னத வெளிப்பாடு ஆன்மநேயத்தில் மிளிர்வதைக் காணமுடியும். திருமந்திரம் மனிதநேயத்தை மட்டுமன்றி ஆன்மநேயத்தையும் சிறப்பாகச் சித்தரிக்கும் சைவத்தமிழ் இலக்கியமாக விளங்குகின்றது. மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் முதலில் மற்றவர்கள் பால் அன்பு செலுத்த வேண்டும். அன்பின் அடிப்படையில் தோன்றிய இக் கோட்பாட்டினை, ∴பிரோலோவ் (Frolov) "மனிதநேயம் என்பது மனிதனது பெருமையையும், உரிமையையும்

மதிக்கும் வகையில் அமைந்ததொரு கோட்பாடு. மனிதனின் ஆளுமைப் பண்புகளை மதிக்கவும் அவனது மனங்களைப் பேணிவரவும், சமூக வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் மனிதன் முழுமையான வளர்ச்சியைப் பெறவும் துணைபுரிவது இக்கோட்பாடு. சமயம் மற்றும் இன வெறிக் கொடுமை, சமயக் காழ்ப்பு, மாற்றுக் கோட்பாடடை வெறுத்தல் ஆகிய அனைத்து இயல்பு களையும் களைவது இதன் நோக்கம்." என்று குறிப்பிடுவர்.[4]

**சமூக சமத்துவம்**

உலகில் தோன்றிய அனைவரையும் சாதி, சமய, மொழி வேறுபாடின்றி சமமாகக் கருதுவது மனிதநேயக் கோட்பாட்டின் அடிப்படை அம்சமாகும். புறநானூற்றில் காணப்படும் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற வரி மனிதநேயத்தின் அடிவேராகும். இச்சமூக சமத்துவ நோக்கு சைவத்தின் சிறப்பம்சமாகும். இதனையே திருமூலர், "ஒன்றே குலம்"[5] என மொழிந்துள்ளார். சைவநெறியில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனற குல வேறுபாடு இல்லையென்பதனை "குலமில்லை"[6] என்ற திருமந்திரக் குறிப்பு மேலும் சுட்டி நிற்கின்றது. இம்மரபு சைவ சித்தாந்தத்திலும் இடம் பெற்றிருப்பதை சிவஞான சித்தியார் "குலமில்லை" என்று குறிப்பிடுகின்றது. மறைஞானசம்பந்தர் நெசவாளர் வீட்டில் கஞ்சி பெற்று குடித்ததாகவும், அது அவரது முழங்கை வழியாக ஒழுகிய போது அதனைத் தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவராகிய உமாபதி சிவாச்சாரியார் பருகியதாகவும், பெத்தான்சாம்பனுக்கும், முள்ளிச்செடிக்கும் உமாபதி சிவச்சாரியார் முத்தி கொடுத்ததாகவும் கூறப்படும் செய்தியானது சைவ சித்தாந்த வாழ்வியற் தத்துவத்தில் திருமந்திரன் சமூக சமத்துவம் ஏற்கப்பட்டதை எடுத்தக் காட்டுவதாகவுள்ளது. மேலும் திருமந்திரம் கூறும் "ஒன்றே குலம்" என்ற மனிதநேயச் சிந்தனையை விளக்க எழுந்ததே சேக்கிழாரின் பெரிய புராணம் என்றும் கூறலாம். "குலம் ஒன்று" என்ற மனிதநேயச் சிந்தனை திருமூலர் வழிவந்த சித்தர் பாடல்களில் நன்கு வற்புறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலதாகும்.

**உலகிற்கு ஒரு தெய்வக்கொள்கை**

"சமூக சமத்துவம்" என்ற மனிதநேய உணர்வின் வெளிப்பாடாகவே சைவ நெறியில் "உலகுக்கு ஒரு தெய்வம்" என்ற ஓர் இறைக்கொள்கை தோன்றிற்றெனலாம். இந்திய கடவுட் சிந்தனை வரலாற்றில் "மெய்யறிவாளர் பல பெயரிட்டழைத்தாலும் "மெய்ப்பொருள் ஒன்றே"[7] என்ற கடவுட்கொள்கை காணப்படுகின்ற மரபில் திருமூலரும் சகலருக்கும் ஒரு தெய்வம் இருந்தால் போதும் என்ற நோக்கில், "உலகுக்கொரு தெய்வம்" என்ற கடவுட் கோட்பாட்டினைக் குறிப்பிடுகின்றமை மனிதநேயத்தின் சமூக நல்லிணக்க வெளிப்பாடாகும். இதனைத் திருமந்திரம், "ஒன்று கண்டீர் உலகுக் கொரு தெய்வம்"[8] எனக் குறிப்பிடுவதாலறியலாம். உலகம் தழுவிய ஒரு கடவுட் கோட்பாட்டினைக் கூறுவதன் மூலம் கடவுட் கோட்பாட்டினூடாகவும் திருமூலர் மனிதநேயத்தையே வற்புறுத்துவது குறிப்பிடற்பாலதாகும். "தெய்வம் ஒன்று" என்ற மனித நேயஉணர்வின் வெளிப்பாட்டினை "ஒருவனே தேவன்"[9], "ஒன்றெனக் கண்டே எம் ஈசன் ஒருவனை"[10] என்ற திருமந்திர வரிகளும் விளக்கி நிக்கின்றன் 'உலகுக்கொரு தெய்வம்' என்ற திருமூலரின் மனித நேயச் சிந்தனையை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது இன்று கேள்விகுரிய ஒன்றாகும். இறை வழிபாடு முறைகளிலும் கூடத் திருமந்திரம் மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றது. எந்த மனிதனும் இலை அல்லது மலர் அல்லது தண்ணீர் கொடுத்து இறைவனை வழிபட முடியும். இவ் எளிய வழிபாட்டு மனிதநேயத்தையே திருமந்திரம், "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை"[11] என்றும், "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு"[12] என்றும் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

**அன்புடைமை**

மனிதநேய உணர்வுகள் அனைத்திற்கும் அன்பு நெறியே அடிப்படையாகும். நாம் கடவுளிடத்தில் காட்டும் பக்திக்கு மட்டுமன்றி ஏழைகள் மேல் செலுத்துகின்ற இரக்கத்திற்கும், உயிரினங்களிடத்துக் காட்டும் ஜீவகாருண்யத்திற்கும் அன்பே ஆதாரமாக விளங்குகின்றது. சைவத்தமிழ் நூல் களுள் திருமந்திரமே கடவுளை முதன்முதலில் அன்பு வடிவமாக வர்ணிக்கின்றது. இதனை "அன்பே சிவம்"[13] எனற திருமூலர் வாக்காலறியலாம். சிவனை மட்டுமன்றி சீவனையும் அன்பு வடிவமாக் கண்டு சிவனைப் போன்று சீவனும் அன்புக்குரியதெனக் காட்டுவதே திருமந்திரத்தின் உட்கிடை எனலாம். இதன் காரணமாக "அன்பே சிவம்" எனக்கூறும் திருமந்திரம் "சீவன் சிவன்" எனவும், "சீவன் சிவலிங்கம்" எனவும் குறிப்பிடுகின்றது. சீவனையும் சிவனையும் ஒன்றாக காணும் நோக்கு மனித நேயத்தின் சிறந்த வெளிப்பாடாகும். இந்த நோக்கில் நோக்கும்போது சிவனிடத்து மட்டுமன்றி சீவனிடத்து அன்பு செய்தவரைச் சிவன் அறிவன் என்பதையே திருமந்திரம்,

> *"கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு*
> *மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே"[14]*

என மொழிந்து நிற்கின்றதெனலாம். இவ்வாறு "அன்பே கடவுள். கடவுளே அன்பு" என்று சைவசமயம் கூறும் மனிதநேய மாண்பினை திருமந்திரத்தில் காணமுடிகின்றது.

**அனைவருக்கும் இன்பமான வாழ்வு**

உலகில் உள்ள அனைவருக்கும் இன்ப வாழ்வு கிடைக்க வேண்டுமென்ற எண்ணம் ஓர் உன்னத மனிதநேயக் கருத்தாகும். தன்னைப் போன்று மற்றவர்களையும் மதிக்கும் இம் மனிதநேய உணர்வின் வெளிப்பாடாகவே திருமந்திரம், "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"[15] எனக் குறிப்பிடுகின்றது. இச்சிந்தனையும் உலக

நோக்குடையதாகக் கூறப்பட்டிருப்பது திருமந்திரம் கூறும் மனிதநேயத்தின் தனிச்சிறப்பாகும்.

**மனிதரைத் தெய்வமாக மதித்தல்**

மனிதரைத் தெய்வமாக மதிக்கும் மனிதநேயத்தின் உன்னத வெளிப்பாடாகவே அடியவர்களுக்கு கொடுப்பதே ஆண்டவனுக்குச் சேரும் என்று திருமந்திரம் குறிப்பிடுகின்றது. இதன் காரணமாகவே ஆண்டவனுக்குக் கொடுப்பது ஆண்டவனுக்குப் போய்ச் சேராதென்றும், அடியவர்களுக்குக் கொடுப்பதே ஆண்டவனுக்குச் சேருமென்றும் திருமந்திரம் மொழிகின்றது. இதனை,

*"படமாடக் கோயிற் பகவற் கொன் றீயில்*
*நடமாடக் கோயில் நம்பர்க்கங்காக*
*நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்*
*படமாடக் கோயிற் பகவற்கதாமே"*[16]

என்ற திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்கி நிற்கின்றது. மனிதனுக்கு மேலெரு தெய்வமும் இல்லை என்ற மனிதநேயச் சிந்தனையின் உட்பொருளை மேற்படி திருமந்திரப் பாடல் நன்கு புலப்படுத்துகின்றது. கடவுட் கோட்பாட்டினையும், திருக்கோயில் வழிபாட்டையும் சிறப்பாக சித்தரிக்கும் திருமந்திரத்தில் கோயிற் தெய்வத்தைவிட மனிதன் என்ற தெய்வமே மேலானவர் என்ற மனிதநேயச் சிந்தனை வற்புறுத்தப்பெற்றிருப்பது, சைவசமயத்திற்கே உரிய தனிச்சிறப்பாகும்.

**அனைவருக்கும் அன்னமிடுல்**

அனைவருக்கும் அன்னமளிக்க வேண்டுமென்ற எண்ண மானது திருமூலரின் மனிதநேய உணர்வினை நன்கு பிரதிபலிக்கின்றது. சாதி, சமயம், இனம் என்ற வேறுபாடோ அல்லது உயர்ந்தவர்,தாழ்ந்தவர், பணக்காரர், ஏழை என்ற வேற்றுமையோ பாராது அனைவருக்கும் உணவளிப்பது மனிதநேய உணர்வின் மிகவுயர் சமூக நல்லிணக்க வெளிப்பாடாகும். அதனைத் திருமந்திரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

*"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்*
*பார்த்திருந் துண்மின்பழம் பொருள் போற்றன்மின்*
*வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்*
*காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே"*[17]

காகமானது தனக்குக் கிடைத்த உணவைத் தான் மட்டும் உண்ணாது தன் இனத்தவரையும் அழைத்து பகிர்ந்து உண்பது போல, மனிதனும் தன் குலத்திற்கும் பகிர்ந்து கொடுத்துண்ண வேண்டுமென்பது திருமந்திரம் காட்டும் சிறந்த மனித நேயமாகும். இச்சிந்தனை பின்வரும் திருக்குறள் பாக்களிலும் எதிரொலிக்கின்றது.

*"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
*அன்னநீ ரார்க்கே உள"*[18]

*"பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"*[19]

"வயிற்றுக்கு சோறிடல் வேண்டும். இங்கு வாழும் மனிதருக்கொல்லாம்" என்ற பாரதியாரின் மனிதநேயச் சிந்தனையும் இங்கு ஒப்புநோக்கற்பாலாதாகும். மேலும், நாம் உண்ணும் போது அதில் ஒரு கைப்பிடியளவு உணவினை அல்லது ஓர் அகப்பை அன்னத்தை ஏழைகளுக்கும் கொடுத்துண்ணுதல் எல்லோராலும் முடிந்த ஒன்றாகும். இம்மனிதநேய உணர்வினை, "யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி"[20] என்றும், "உண்ணும்போதொரு தவ்விக் கொடுண்மின்"[21] எனவும் திருமந்திரம் குறிக்கப்படுகின்றது. ஞானி ஒருவருக்கு ஒருவேளை பகலுணவு கொடுப்பதனால் கிடைக்கும் பலன் நிகரற்றது என்பது திருமந்திரத்தில், "பகரு ஞானி பகலூண் நிகரில்லை என்பது நிச்சயந்தானே"[22] என வரும். அத்துடன் மனிதர்களுக்கு மட்டுமல்லாது உயிரினங்களுக்கும் எல்லோராலும் இயலக்கூடிய உணவளிக்கும் உயிரிரக்க ஜீவகாருண்ணியத்தை திருமந்திரம் "யாவர்க்குமாம் பசுவுக்கொருவாயுறை"[23] எனக் கூறுவது குறிப்பிடற்பாலதாகும். இவ்வகையில் மனிதநேயமும் ஆன்மநேயமும் ஒன்றென உணர்த்துவதே திருமந்திரத்தின் உட்கிடை எனலாம்.

**இன்சொல் உரைத்தல்**

எல்லோரிடத்திலும் இனிமையாய் பேசுதல் மனிதநேயத்தின் உயரிய வெளிபாடாகும். இது சமூக நல்லிணக்கத்திற்கும் பெரிதும் உதவும். இதுவே திருமந்திரத்தில்,

"யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"[24]

என்று வருகின்றது.

**சமய சமரசம்**

மனிதநேயத்தின் ஒரு வெளிப்பாடாகவே சமய சமரச உணர்வு ஏற்படுகின்றது. இறைவனை எவ்வண்ணம் ஏத்தினாலும் அவ்வண்ணத்தில் அவன் அருள்புரிவான் என்ற சைவத்தின் சமயசமரச மனிதநேயத்தைத் திருமந்திரம்.

"எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
ஆப்பரிசீசன் அருள் பெற லாமே"[25]

எனக் குறிப்பிடுவதாலறியலாம். இம்மனிதநேயம் சைவ சித்தாந்தத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடற்பாலதாகும்.

**தருமம் செய்தல்**

மனிதநேய உணர்வின் ஓர் உன்னதமான வெளிப்பாடு தருமம் செய்தலாகும். தருமம் செய்வதால் ஏற்படுகின்ற இன்பத்தையும், தருமம் செய்யாதவருக்கு ஏற்படுகின்ற துன்பத்தையும் திருமந்திரம் சிறப்பாகச் சித்தரிக்கின்றது. இதனை,

"இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ் செய்யாதவர் தம்பாலதாகும்
உருமிடி நாகமு ரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகிலாவே"[26]

என்ற திருமந்திரப் பாடல் நன்கு விளக்கி நிற்கின்றது. திருமந்திரம் கூறும் மனிதநேயச் சிந்தனைகளை மென்மேலும் வளர்த்தெடுப்பதற்கு ஏதுவாக சமய ஸ்தாபனங்களிலும், கல்விநிலையங்களிலும் அறநிலையங் களை ஏற்படுத்துவது காலத்தின் தேவை எனலாம்.

**நடுவுநிலை நிற்றல்**

ஒரு தலைச் சார்பின்றி எல்லோரிடத்திலும் நடுநிலை நிற்றல் மனிதநேய உணர்வின் வெளிப்பாடாகும். மனித நேயத்தை நேசிப்பவர்கள் எப்போழுதும் நடுவுநிலை நிற்பவராக விளங்குவர். இம்மனித நேய உணர்வினைத் திருமந்திரம்.

*"நடுவுநின்றார் நல்ல தேவருமாவர்*
*நடுநின்றார்வழி யானும் நின்றேனே"*[27]

எனவும்,

*"நடுவுநின்றார் சிலர் நம்பனு மாவர்*
*நடுவுநின் றாரொடு யானும் நின்றேனே"*[28]

எனவும் மொழிதலாலறியலாம். நடுநிலை நிற்றலாகிய மனிதநேயக் கோட்பாட்டில் எல்லோரும் நமக்குச் சம நிலையிலுள்ளவர்களென்ற சம நீதிக் கோட்பாடும் சமூக நல்லிணக்கமும் உள்ளுறையாக மிளிர்வது குறிப்பிடற்பாலதாகும். இம்மனிதநேயச் சிந்தனையைத் திருக்குறள்,

*"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந் தியார்மாட்டும்*
*தேர்ந்து செய்வஃதே முறை"*[29]

எனக் குறிப்பிடுவது ஒப்புநோக்கற்பாலதாகும்.

**பெரியோரைப் பிழையாமை**

பெரியோரைப் பேணுவது மனிதநேய உணர்வின் வெளிப்பாடாகும். பெரியோர்களது மனம் கலங்குவதைக் கூட மனிதநேய உணர்வுடைய எவரும் அனுமதிப்பதில்லை. பெரியோர்களின் மனம் கலங்கினால் பொருளும், உயிரும் போவது மட்டுமல்லாது, தேசமும் நாடும், அரசும் அல்லற்படும் என்பதைத் திருமூலர்,

*"பத்தினி பக்தர்கள் தத்துவ ஞானிகள்*
*சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்*
*ஆத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடுஞ்*
*சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே"*[30]

*"ஈச னடியார் இதயங் கலங்கிடத்*
*தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்*
*வாசவன் பீடமும் மாமன்னர்பீடமும்*
*நாசம தாகுமே நம்நந்தி யாணையே"*[31]

எனக் குறிப்பிடுகின்றார்.

**குருவைத் தெய்வமாகப் போற்றுதல்**

மாதா, பிதா, குரு என்போரைத் தெய்வமாகப் போற்றுவது சைவம் கூறும் மனிதநேயத்தின் தனிச் சிறப்பாகும். திருமூலர் குருவைத் தெய்வமாகப் போற்றும் மனிதநேய உணர்வினரென்பதை "குருவே சிவம்"[32] என்ற திருமந்திரக் குறிப்பால் அறியலாம். குருவினுடைய திருமேனியைக் காண்பதும், அவருடைய பெயரைக் கூறுவதும், அவரது வார்த்தைகளைக் கேட்பதும், அவருருவத்தைச் சிந்திப்பதும் சிறப்பளிக்குமென்பது திருமூலர் கருத்தாகும். இதனை,

*"தெளிவு குருவின் திருமேனி காண்டல்*
*தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்*
*தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்*
*தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே."*[33]

என்ற திருமந்திரத்தாலறியலாம். நமக்குப் போதித்த குருவை நிந்தை செய்வோர் பூமியில் மிகவும் துன்பப்படுவார் என்பதை பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்கி நிற்கின்றது.

*"ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய*
*சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்*
*ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்*
*வாரிடைக் கிருமியாய் மாய்வர் மண்ணிலே"*[34]

எனவே, "மனிதரில் மனிதனாக" நாம் வருவதற்கு காரணமாக விளங்கும், குருவுக்கு மதிப்பளிக்கின்ற மனிதநேயப்பண்பாட்டை வளர்த்தெடுப்பது சமூகநல ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லதெனலாம்.

**பெற்றோரைப் பேணுதல்**

பெற்றோரைப் பேணுதல் எம் எல்லோரதும் தலையாய கடனாகும். சமுதாயத்தில் மனிதநேயத்தை வளர்த் தெடுப்பதற்கு இது உதவும். இது எல்லோரிடத்திலும் இருக்க வேண்டிய மனித நேயப் பண்பாகும். தம்மைப் பெற்ற தாய் தந்தையரைப் பேணாதவர்களைக் "கயவர்கள்" எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். இதனை,

*"பெற்றிருந்தாரையும் பேணார் கயவர்கள்"*[35]

என்ற திருமந்திரவரி சுட்டி நிற்கிறது. திருமூலர் காலத்தில் இப்பண்பு குறைந்து காணப்பட்டதாலேயே பெற்றோரைப் பேணாதவர்கள் கயவர்கள் என்று குறிப்பிடுகின்றார் எனலாம்.

**பிறன்மனை நோக்காத பேராண்மை**

இல்வாழ்வுக்குரிய மனிதநேயம் பிறன்மனை நயவாமை யாகும். சைவ வாழ்வியலில் பிறன்மனை நோக்காப் பேராண்மை. உயர்ந்ததோர் மனிதநேயப் பண்பாகக் கருதப்படுகின்றது. "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற சைவ ஒழுக்க நெறியினை மறந்து பிறன்மனை நயக்கின்றவர் களைத் திருமூலர் மிகவும் குறைவாக இழித்துரைக்கின்றார். இதனை,

*"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே*
*காத்த மனை யாளைக் காமுறுங் காளையர்*
*காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாதமல்*
*ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே"*[36]

என்ற திருமந்திரப் பாடல் விளக்கி நிற்கின்றது. பிறன்மனை நோக்கப் பேராண்மையினைத் திருக்குறளும்,

*"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு*
*அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு"*[37]

என்று குறிப்பிடுவது ஒப்புநோக்கப் பாலதாகும்.

எனவே பிறன்மனை நயத்தல் என்பது அவளுடைய கணவனுக்கு மட்டுமன்றி, அவன் வாழ்கின்ற சமுதாயத்தின் மனித நேயத்தையே மாசுபடுத்தும் ஒரு சமூகக் குற்றச் செயல் எனக் கொள்ளலாம்.

### பஞ்சமா பாதகங்களைப் புரியாமை

பஞ்சமா பாதகங்களான கொலை செய்தல், களவெடுத்தல், கள்குடித்தல், காமத்தில் ஈடுபடுதல், பொய்யுரைத்தல் என்ற ஐந்தும் குறிப்பிடப்படுகின்றன. இப்பஞ்சமா பாதகங்கள் மனிதநேயத்தை மாசுபடுத்தும் என்பது சைவத்தின் நிலைப்பாடாகும். இதைத் திருமந்திரம்,

*"கொலையே களவுகட்காமம் பொய்கூறல்*
*மலைவான பாதகமாம்"*[38]

என விளக்கி நிற்கின்றது. மனித நேயத்தை வளர்த்தெடுக்க விரும்புகின்றவர்கள் "உன்னைத்திருத்து உலகம் திருந்தும்" என்பதற்கேற்ப இப் பஞ்சமாபாதகங்களை புரியாதிருத்தல் இன்றியமையாததாகும்.

### முடிவுரை

மனிதநேயச் சிந்தனைகளைக் கூறும் சைவத் தமிழ் இலக்கியங்களுள் திருமந்திரம் தொன்மைச் சிறப் புடையதாக விளங்குகின்றது. மனிதனுக்கு மேலொரு தெய்வமுமில்லை என்ற மனிதநேயக் கோட்பாட்டினைத் திருமந்திரம் சிறப்பாகச் சித்திரிக்கின்றது. மனித நேயத் தின் உயிர்நாடி அன்பே என்பது திருமூலரின் கருதாகும். எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற மனிதநேயம் திருமந்திரத்தின் உட்பொருளாக காணப்படுகின்றது. திருமந்திரம் காட்டும் மனிதநேயச் சிந்தனைகள் உலக நோக்குடையதாகவிருப்பது குறிப்பிடற்பாலதாகவுள்ளது. மேலும் திருமூலர்கூறும் சமய சமரசம், தருமம் செய்வதன் அவசியம், நடுநிலை நிற்கும் மனநிலை, மாதா, பிதா, குரு, பெரியோர் முதலானவர்களைப் போற்றுதல், எல்லோரிடத்திலும் இனிமையாகப் பேசுதல், பிறன்மனை நோக்காமை, பஞ்சமாபாதகங்களைப் புரியாமை போன்ற மனிதநேய விழுமியச் சிந்தனைகளும் மனித நேயத்தை வளர்த்தெடுப்பதற்குப் பெரிதும் உதவுமெனக் கொள் ளலாம். ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, மனிதநேயச் சிந்தனைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் வெளிப்படுத்தும் தொன்மையான சைவத் தமிழ் நூல் திருமந்திரம் என்பதும் அந்நூல் கூறும் மனிதநேயச் சிந்தனைகளை வளர்த்தெடுப்பதன் மூலம் சமூக மேம்பாட்டையும், சமூக நல்லிணக்கத்தையும், உலக சகோதரத்துவத்தையும் உருவாக்க முடியுமென்றும் உறுதியாகக் கூறலாம்.

### அடிக்குறிப்புகள்

1. வெள்ளைவாரணன, க., 1962, பன்னிருதிருமுறை வரலாறு பகுதி 2, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணா மலை நகர், பக்.17-18
2. இராகுலன்.வே, 2006, மனிதநேயம், வான்முகில் வெளியீடு, சென்னை, ப.53
3. மேலது, ப.26
4. Frilov.I, (Ed.), 1984, The Dictionary of Philoshophy, Progres Pubishers, Mosco, p.178
5. குமரகுருபரன் பிள்ளை, டி.எம்., (ப.ஆ.), 1968, திருமூல நாயனார் அருளிய திருமந்திரமாலை எனப் பெயர் பெற்ற திருமந்திரம், ஸ்ரீகுமரகுருபரன் சங்கம், சென்னை, திருமந்திரம், பா.2104
6. மேலது,2957
7. இருக்குவேதம், 1:164:46
8. மேலது, பா.2962
9. மேலது, பா.2104
10. மேலது, பா.1775
11. மேலது, பா.252
12. மேலது, பா.1828
13. மேலது, பா.270
14. மேலது, பா.280
15. மேலது, பா.85
16. மேலது, பா.1857
17. மேலது, பா.250
18. திருக்குறள், 527
19. திருமந்திரம், 322
20. மேலது, பா.252
21. மேலது, பா.196
22. மேலது, பா.1824
23. மேலது, பா.252
24. மேலது, பா.252
25. மேலது, பா.36
26. மேலது, பா.263
27. மேலது, பா.320
28. மேலது, பா.322
29. திருக்குறள், 541
30. திருமந்திரம், பா.532
31. மேலது, பா.534
32. மேலது, பா.1581
33. மேலது, பா.139
34. மேலது, பா.531
35. மேலது, பா.530
36. மேலது, பா.201
37. திருக்குறள், 148
38. திருமந்திரம், பா.200

# இந்துநாகரிக ஆய்வுப்புலத்தில் மேலைத்தேசத்தவரின் ஆய்வுமுனைப்புகள்

## H.T. கோல்புறூக்கை மையப்படுத்திய நோக்கு

ஆங்கிலேயரின் வருகையும் காலணித்துவத்தின் இயங்குவிசைகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய துணைக் கண்டத்தில் நிலவிய இந்து நாகரிகத்தின் செல்நெறிகளில் புதிய மடைமாற்றத்தினை ஏற்படுத்தின.

அந்தவகையில் நிகழ்ந்த சில சாதகமான விளைவு களில் பிரதானமாகக் குறிப்பிடத்தக்கது இந்தியவியல் (Ideology) மற்றும் கீழைத்தேசவியல் (Oriental Studies) சார்ந்த ஆய்வுக்குச் செயற்பாடுகளில் ஐரோப்பிய அறிஞர்கள் முனைப்புக் கொண்டமையாகும்.

வேதங்கள், புராணங்கள், புரான இதிகாசங்கள், தர்மசாத்திரங்கள் உள்ளிட்ட இந்துசமய இலக்கிய மூலங்கள் பல இவர்களின் செயற்பாடுகளால் அச்சுருவாகின. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. விரிவுரை செய்யப்பட்டன. ஆய்வுக் கட்டுரைகளுக்குக் கருப்பொருளாயின. இந்துநாகரிக மூலங்கள் குறித்த தொல்லியல் ஆய்வுகள், கால ஆராய்ச்சிகள், பண்பாட்டிடை ஆய்வுகள், சமய ஒப்பாய்வுகள் என்பன நடந்தேறின. அகராதிகள் உருவாகின, சொற்பியல் ஆய்வுகள் கால்கோளாயின. மொத்தத்தில் உலகின் தொல்சீர் நாகரிகங்கள் என மேலைத்தேச அறிவுலகத்தால் அதுவரைகாலமும் நம்பப்பட்டுவந்த கிரேக்க, ரோம பாராசீகப் பண்பாடுகளுக்கு நிகராக இன்னும் ஒருபடி உயர்வாக இந்து நாகரிகம் வேரூன்றி விழுத்தெறிந்துள்ளது. என்பதனை ஆய்வறியல் ரீதியாக உலகம் அறிந்து கொள்ளத் தலைப்பட்டது. இதற்குத் துணை செய்தவர் களில் மக்ஸ்முல்லர், சேர் வில்லியம்ஸ் ஜோன்ஸ், கீத் மொனியர் வில்லியம்ஸ், H.T. கோல்புறூக், H.H. வில்சன், வின்றநிட்ஸ், சேர் ஜோன் வூட்றொவ், யு.யு.மக்டொனால்ட் போன்ற மேலைத்தேச இந்தியவியல் ஆய்வாளர்களின் வகிபங்கு அளப்பெரியதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் “இந்தியவியல்” (Indology) தொடர்பான ஆய்வுகளில் அனேக மேலைத்தேச அறிஞர்கள் முனைப்போடு ஈடுபட்டிருந்தனர். இவர்களிற் பலர் புராதன இந்தியப் பண்பாட்டினைச் சமயவியல் நோக்கிலும் மொழியியல் நோக்கிலும், கலை-அழகியல் நோக்கிலும் தத்துவார்த்த நோக்கிலும் தரிசிக்க முனைந்துகொண்டிருந்தனர். ஆனால் கோல்புறூக் அவர்களோ இவர்கள் யாவரிடமிருந்தும் சற்று வேறுபட்ட கோணத்தில் சிந்தித்தார்.

இவர் புராதன இந்தியப் பண்பாட்டினை அறிவியல் நோக்கிலும் அரசியல் மற்றும் நீதிபரிபாலனவியற் தளத்திலிருந்தும் ஆராய முற்பட்டார். இதன் விளைவாக இந்துக்களின் புராதன பனுவல்களும் அவற்றின் சிந்தனை மரபுகளும் சமய - மெய்யியல் மற்றும் ஆன்மீகத் தளங்களுக்கு மட்டுமே பொருத்தமுடையவை. நவீன உலகியல் நடைமுறைகளுக்குப் பொருத்தமான அறிவியல் அணுகுமுறைகளினை அவற்றில் எதிர்பார்க்க இயலாது என்கிற மேலைத்தேசத்தவரின் தவறான எண்ணக்கருவாக்கத்தினை நிர்மூலமாக்கிய பெருமை H.T.கோல்புறூக் அவர்களையே சாரும்.

**வரலாற்றுக் குறிப்புக்கள்**

பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியில் மிகுந்த செல்வாக்குள்ள பெற்றோருக்கு 1765 இல் H.T. கோல்புறூக் மகனாகப் பிறந்தார். இவருடைய தந்தையாரான சேர் ஜோர்ஜ் கோல்புறூக் அவர்கள் 1769ஆம் ஆண்டில் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் தலைமை நிர்வாக சபையின் பிரதம அதிகாரியாக விளங்கியமையும் குறிப்பிடற்பாலது. மிக இளவயதிலிருந்தே கல்வி பற்றியும் ஆர்வமும் தீவிர முயற்சியும் H.T. கோல்புறூக்கிடம் நிறைந்திருந்தது.

தந்தையாருடைய வேலைகளின் நிமித்தம் கோல்புறூகதின் இடைநிலைக் கல்வியானது பாடசாலையூடானதாக அன்றி பிரத்தியேகமான கல்விப்போதனை மூலமே மேற்கொள்ளப்பட்டது. இவ்விதத்தில் குறிப்பாகத் தொல் சீர்மொழிகள் (Classical Languages), பிரெஞ்ச், ஜேர்மன், மொழிகள் மற்றும் கணிதம் ஆகியவற்றில் கோல்புறூக் மிகுந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார்.

இவர் பற்றி ஹெய்மன் என்ற அறிஞர் குறிப்பிடும்போது “Colebrook at the age of 17 possessed as much of a knowledge as might be expected of a graduate of a University எனக் குறிப்பிடுவது நோக்கற்பாலது. அந்தவகையில் பதினேழு வயதிலேயே ஒரு பல்கலைக்கழகப் பட்டதாரிக்கு இருக்க வேண்டிய அறிவுப்புலமை வாய்க்கப்பெற்றிருந்த கோல்புறூக் இளவயதில் சமயப்பற்று மிகுந்தவராயிருந்தார். ஆத்மீக ஈடுபாட்டின் மிகுதியால் உலகியல் நாட்டமற்ற வராயிருந்த இவரை இவருடைய தந்தையார் திசைமாற்ற எண்ணி இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார்.

ஆரம்பத்தில் வங்காளத்தில் பிரித்தானிய அரசின் குடியியற்சேவையில் (Civil service) எழுதுனராகப் பதவி வகித்த கோல்புறூக் சற்று தர்மசங்கடமான மனோபாவத்தில் இருந்தார். கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் உயர்நிலைப் பிரமுகராக விளங்கிய இவர் அரச குடியியற் சேவையில் இடைநிலைப்பதவியொன்றினை வகிக்க வேண்டி ஏற்பட்ட நிர்ப்பந்தமே இதற்குக் காரணமாகும்.

எவ்வாறாயினும் மிக விரைவில் "திர்ஹத்" (Tirhat) என்ற இடத்திற்கு உதவி வருமான வரிசேகரிப்பாளராக (Assistant Collector of Revenue) நியமனம் பெற்றுக்கொண்ட கோல்புறூக் அங்கே ஒன்பது வருடங்கள் பணியாற்றினார்.

இக்காலகட்டங்களில் H.T.கோல்புறூக் இந்தியவியல் ஆய்வுகள் பற்றி எதுவித சிரத்தையும் கொள்ளவில்லை மாறாக சாள்ஸ் வில்கின்ஸன் போன்ற இந்தியவியலாய்வாளர்களை சம்ஸ்கிருதப் பைத்தியங்கள் (Sanskrit mad's) என்றும் "Asiatic Miscellany" என்ற ஆசியக்கழகத்தின் புகழ்பெற்ற ஆய்வுக் கட்டுரைத் திரட்டை அபத்தக் களஞ்சியம் (Repository of non-sense) எள்ளிநகையாடியிருந்தார்.

**கருத்தியல் மாற்றமும் மனமாற்றமும்**

இந்தியர்கள் மீதும் இந்தியப் பண்பாட்டின் மீதும் கோல்புறூக்கின் கவனம் திரும்புவதற்கான தருணம் 1789இல் வாய்த்தது. "புனேஷயில் வருமான வரிசேகரிப்பாளராக 1789இல் இவர் நியமிக்கப்பட்டார். அதன் தொடர்ச்சியாக வங்காள மக்கள் எதிர்நோக்கும் "நிரந்தரக் குடியேற்றம்" தொடர்பிலான பிரச்சினை தொடர்பில் ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. தனது அவதானிப்புக்களையும் விசாரணை செய்து பெறப்பட்ட விடயங்களையும் வெறுமனே அறிக்கை அளிப்பதோடு மட்டுப்படுத்திக் கொள்ளாத கோல்புறூக் இவற்றினைத் தொகுத்து வங்காளத்தின் விவசாயம் (Agriculture of Bengal) என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். இந்தியர்கள் மீதும் இந்தியப் பண்பாட்டின் மீதும் கோல்புறூக்கிற்கு பேரபிமானம் வளர்வதற்கு இதுவே அடிப்படையாயிற்று. பிரித்தானியக் காலனித்துவக் கொள்கைகளால் இந்தியச் சுதேசப் பொருளாதாரம் எவ்வாறு சுரண்டப்படுகின்றது என்பதனை குறித்த நூலில் மிகத்துணிச்சலாகக் கோல்புறூக் வெளிக்கொணர்ந்திருந்தார். பிரித்தானிய ரெசின் ஊழியனாக இருந்தபோதிலும் வங்காளத்தின்அனேக குடிசைக் கைத்தொழில்கள் நலிவடைந்து போவதற்கும் மக்கள் பட்டினியால் வாடுவதற்கும் பிரித்தானியக் காலனித்துவக் கொள்கைகளே காரணம் என்பதனைத் துணிந்து கூறிய கோல்புறூக் "பருத்தி நெசவு" தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் தற்கால இந்தியப் பொருளாதார வல்லுனர்களாலும் பெரிதும் பாராட்டப்படுகின்றவையாக உள்ளன.

இந்திய ஏழை விவசாயிகளிடத்தில் கோல்புறூக் கொண்டிருந்த அனுதாபம் இந்தியர்களை நிர்வகிப்பதற்கு உகந்த பொறிமுறையொன்றினை இந்தியப் பண்பாட்டு மரபுகளுக்குள்ளிருந்தே வெளிக்கொணர்வதன் அவசியம் பற்றிச் சிந்திப்பதற்குத் தூண்டியது.

புராதன இந்து அரசியற் பனுவல்களையும் இந்துச் சட்டம் மற்றும் நீதிபரிபாலன நடைமுறைகளையும் பற்றிக் கேள்வியுற்ற கோல்புறூக் அவற்றை ஆழமாகக் கற்பதில் நாட்டங்கொண்டார். இதற்குச் சம்ஸ்கிருதமொழியை தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்பதனை உணர்ந்துகொண்டார். ஏற்கனவே இரண்டு தடவைகள் சம்ஸ்கிருதத்தைக் கற்க முற்பட்டு அம்முயற்சியினைக் கைவிட்டிருந்த கோல்புறூக் தற்பொழுது குறித்த நோக்கத்தினை எய்தும் உந்துதலோடு மூன்றாவது முறையாகக் கற்கத்தொடங்கி அதில் பெரும் வெற்றி பெற்றார்.

**இந்து சட்டக்கோவை தயாரிப்பு**

இந்திய அரசியல் மற்றும் நீதிபரிபாலன முறைமையின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மடைமாற்றமாக அமைந்தது 'A Digest of Hindu Law on contracts and Successions' என்ற புகழ்பெற்ற இந்துச் சொத்துரிமைச் சட்டம் தொடர்பிலான பனுவலாகும். இது 1798இல் மூன்று பாகங்களாகக் கோல்புறூக்கினால் எழுதப்பட்டது. புராதன இந்துநாகரிக மரபின் தர்மசாஸ்திரங்களையும் அர்த்தசாஸ்திரம், சுக்கிரநீதி, காமாண்டக நீதிசாரம் முதலிய பிற நீதிப் பனுவல்களையும் உள்வாங்கி பொருத்தமான சந்தர்ப்பங்களில் அவற்றின் மூலபாடங்களை (சம்ஸ்கிருத மொழியில்) ஆங்கில மொழிபெயர்ப்புக்களுடன் பிரேரித்துக் கட்டமைக்கப்பட்ட இப்பனுவற்றிரட்டு இந்துநாகரிகத்துக்குக் கோல்புறூக் கினால் செய்யப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பாகும். சம்ஸ்கிருதத்தில் தேர்ந்த புலமைத்துவம் கொண்ட பண்டிதர்களின் துணையுடன் கோல்புறூக் இப்பெரு முயற்சியில் வெற்றிபெற்றிருந்தார். புராதன இந்துக்களிடம் நிபுணத்துவம் வாய்ந்த ராஜ்ய நிர்வாகப் பொறிமுறையும் சட்டப் பனுவல்களும் இருந்தமை பற்றி மேலைத்தேச அறிவுலகம் அறிந்துகொள்வதற்கான முதல் எத்தனமும் இதுவேயாகும்.

**சம்ஸ்கிருதப் பாண்டித்தியமும் பதிப்பு முயற்சிகளும்**

1801ஆம் ஆண்டில் கோல்புறூக் கல்கத்தாவிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். ஆக்காலப் பகுதியில் பிரதம நீதியரசர் பதவி என்பது தற்காலத்திலும் பார்க்க ஓய்வுநேரம் சற்று அதிகம் கிடைக்கக்கூடிய பதவியாக இருந்தது. இவ்வோய்வு நேரத்தினைக் கோல்புறூக் இந்தியக் குடியியல் சேவை ஊழியர்களுக்காக Fort William (வில்லியம் கோட்டை) எனும் இடத்தில் நிறுவப்பட்டிருந்த கல்லூரியில் சம்ஸ்கிருத பேராசிரியராக ஊதியமின்றிக் கடமையாற்றினார். இந்திய மக்களை நிர்வகிககும் பதவிகளிலுள்ளவர்களுக்கு புராதன இந்தியர்களின் நிர்வாகக்கலை பற்றிய அறிவு அவசியமானதாகும். இந்த அறிவைப் பெறுவதற்கு சம்ஸ்கிருதமொழி ஒரு

கருவியாகும் என்கிற அடிப்படையில் கோல்புறூக் இம்மொழியைக் கற்பிப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டார்.

இம்முயற்சியின் தொடர்ச்சியாகச் சுவடிகளில் இருந்த அரிய சம்ஸ்கிருதப் பனுவல்கள் சிலவற்றைப் பதிப்பிக்கும் முயற்சியிலும் கோல்புறூக் ஆர்வங்காட்டினார். ஆந்தவகையில் 1804இல் ஹிதோபதேசத்தினைப் பதிப்பித்தார். 1808இல் அமரகோசம் எனும் புகழ்பெற்ற சம்ஸ்கிருத நிகண்டைப் பதிப்பித்து வெளியிட்டார்.

### இந்து சொத்துரிமைச் சட்டத்தின் விரிவாக்கம்

கோல்புறூக் 1805இல் "Supreme Council" அங்கத்தவராகப் பதவியுயர்வு பெற்றார். தமது பிரதம நீதியரசர் பதவியினை அழக்காமலே ஐந்து ஆண்டுகள் இவ்வங்கத்துவத்தினைப் பெற்றிருந்த கோல்புறூக் 1810இல் "Supreme Council" அங்கத்துவத்திலிருந்து விலகித் தனது மேலதிகமான ஓய்வு நேரத்தினை நூலாய்வு முயற்சிகளில் செலவிட்டார். குறிப்பாக ஜீமுதவாகனர் என்பவரால் கி.பி.12ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தாயபாகம், வியவகார மாத்ருகா ஆகிய இரண்டு சட்டப்பனுவல்கள் வங்காள இந்து சமுதாயத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவை யாகத் திகழ்ந்தன. குறிப்பாகத் தாயபாகம் சொத்துரிமை பற்றிய ஆழமாக விவாதிக்கிறது. பரம்பரையுரிமை, பிரிவுபங்கீடு, சீதனம், பெண்கள் சொத்துரிமை தொடர்பில் இப்பனுவலில் எடுத்தாளப்பட்டுள்ள விடயங்கள் வங்காள இந்து சமுதாயத்தில் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தன. மேலும் கோல்புறூக் வங்காள சமுதாயத்தினிடையே வழங்கும் குடியியல் சட்ட நடைமுறைகள் தொடர்பில் தனது ஆய்வினை விரிவுபடுத்தினார்.

Hindu Law of In heritance என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட பனுவலில் கோல்புறூக் வங்காள மக்களிடையே சொத்துரிமை தொடர்பிலான வழக்ககளில் அதிக செல்வாக்குச் செலுத்திய தாயபாகத்தையும், மிதாச்சாரத்தையும் பகுப்பாய்வு செய்து விளக்கியுள்ளமை நோக்கற்பாலது.

Rocher & Ludo, 2011: 25

### இந்து அறிவியல்

இந்து சாஸ்திரங்களில் வழிபாட்டுச் சடங்குகளும் தத்து வார்த்த விடயங்களும் மட்டுமன்றி அட்சரபணிதம், எண்கணிதம், வானியல் என அறிவியல் சார்ந்த கருத்தியல்களும் துலங்கியிருந்தன என்பதனை முதன்முதலில் அதிகாரபூர்வமான புலமையோடு மேலைத் தேசப் புத்திஜீவிகளுக்கு எடுத்துரைத்த பெருமையும் கோல்புறூக்கையே சாரும்.

"Colebrook was the first European writer who thoroughly inquired in to the subject of Hindu algebra, Arithmetic and Astronomy with the confidence and authority of an erudite Sanskrit Scholar"

Eminent Orientalists, 1991: 57.

கோல்புறூக் 1817இல் எழுதிய Algebra with Arithmetic and Mensuration from the Sanskrit of Brahmegupta and Bhascara என்ற ஆய்வுக்கட்டுரையானது 19ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இந்துக்களின் கணிதவியல் தொடர்பிலான முதல்நிலை ஆய்வாகக் கருதப்படுகிறது. இந்நூலில் கோல்புறூக் இந்துக்களின் அட்சரகணிதம் எண்கணிதம் வானியல் சார்ந்த பனுவல்களான முதலாம் ஆரியப்பட்டரின் ஆரியப்பட்டீயம், வராஹமிஹிரரின் பிருஹத்சம்ஹிதை, பஞ்சசித்தாந்தம், பிரம்மருப்தரின் ஸ்புடசித்தாந்தம் மற்றும் பிற்காலத்தில் தோன்றிய (கி.பி.12) சித்தாந்த சிரோமணி மற்றும் லீலாவதி (இவை பாஸ்கராச்சாரியாரின் ஆக்கங்கள்) ஆகியவற்றின் கருத்துக்களை உள்வாங்கி எழுதப்பட்ட மிகச்சிறந்த ஆய்வுக்கட்டுரையாக வெளிவந்தது. மேலும் கோல் புறூக் பாஸ்கராச்சாரியாரின் பீஜகணிதம் மற்றும் லீலாவதி ஆகிய கணிதப்பனுவல்களை நேரடியாகவே மொழி பெயர்த்திருந்தமையும் இந்து அறிவியல் பற்றி ஆய்வு செய்த பிற்கால ஆய்வாளர்க்குப் பெரிதும் வழித்துணை யாயிற்று. இவ்விரு பனுவல்களும் முறையே அட்சரகணிதம் மற்றும் எண்கணிதம் ஆகியவற்றின் விடயப்பரப்புக்களை கொண்டவை.

உலக அறிவியல் வரலாற்றில் கிரேக்கர்களை விடவும் இந்துக்களே புகழ்பூத்த வரலாற்றுத் தொன் மைக்கும் சீர்மைக்கும் உரித்துடையவர்கள் என்பதனைத் தயங்காது எடுத்துரைத்த முதல் மேலைநாட்டு ஆய்வாளரும் கோல்புறூக்கேயாவார்.

"The Hindus had certainly made distinguished progress in the Science so early as the century immediately following that in which the Grecians taught the rudiments of it. The Hindus had the benefit of a good arithmetical notation, the Greeks, the dis-advantage of a bad one. Nearly allied as algebraic calculus was more easy and natural where arithmetic was best handled. No such marked identity of the Hindu and dio phative systems is observed as to demonstrate communication. They are sufficiently distinct to justify the Presumption that both might be invented independently of each other…."

Higgenbothom, J.J., 1874: 32

அதாவது கிரேக்கர்கள் கணிதத்தின் அடிப்படைகளைப் பயிற்றுவிக்கத் தொடங்கிய அடுத்த நூற்றாண்டிலேயே இந்துக்கள் கணித அறிவியலில் அவர்களை விஞ்சிய முன்னேற்றத்தினை அடைந்துவிட்டார்கள். இந்துக் களுக்கான இலக்கப் பயன்பாட்டு முறை (எண்கணிதக் குறியீடுகள்) கிரேக்கர்களை விடவும் முன்னேற்ற கரமானதாக இருந்தமையால் அட்சரகணிதத்திலும் கணிப்பீடுகளைப் புகுத்துவதில் இந்துக்களிற்கு இலகு வாயிற்று. (ஏனெனில் அட்சரகணிதமும் எண் கணிதத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகையால்) கிரேக்கர்களால் கண்டறியப்பட்டதாகப் பலர் கருதும் டயோபன்ரைன் எனப்படும் அட்சரகணிதத்தின் தீர்வுதராச் சமன்பாடுகள் குறித்தும் அவற்றைத் தீர்க்கின்ற வழிமுறைகள் குறித்தும் கிரேக்கர்களைப் போன்று இந்துக்களும் அறிவு பெற்றவர் களாக விளங்கியிருந்தனர். இந்தியப் பண்பாடும்

தத்தமக்கேயுரிய சுயாதீனத்தன்மையுடன் கணித அறிவியலில் வளம்பெற்றிருந்தனவேயன்றிக் கிரேக்கர் களாலும் அலக்சான்டரின் படையெடுப்பினாலுமே இந்தியர்கள் கணிதவியலின் செழுமைகளை அறிந்திருந்தனர் என்ற விவாதம் தவறானதாகும். இதனைகோல்புறூக் தனது குறித்த ஆய்வுக்கட்டுரையில் தெளிவாக விளக்கியிருந்தார்.

இந்திய அறிவியற் புலங்களில் வானியல் (Astronomy) தொடர்பிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த கோல் புறூக் இந்தியாவில் சுழலய யுளவசழழெஅஉைடயட Society (வானியற் கழகம்) இன் ஸ்தாபன உறுப்பினர்களில் ஒருவராக விளங்குகிறார். 1824 இக்கழகத்தின் தலைவர் பதவியையும் அலங்கரித்தார். மேலும் Asiatic Researches சஞ்சிகைக்கு இவர் சமர்ப்பித்த "Indian and Arabian division of Zodiac and Hindu Astronomy" இந்திய மற்றும் அரேபிய இராசிமண்டலப் பகுப்புக்கள் மற்றும் இந்து வானியல் என்ற தலைப்பிலமைந்த ஆய்வுக்கட்டுரையி னூடாக வானியல் சார்ந்த பண்பாட்டிடை ஆய்வுகளில் (Cross Cultural Researches) தனக்கிருந்த புலமைத்து வத்தினை நிருபித்துள்ளார்.

**சமயப் பிரிவுகள் பற்றிய ஆய்வுகள்**

இந்தியவியல் மற்றும் கீழைத்தேசவியல் தொடர்பிலான ஆய்வாளர்களை புதிய பரிமாணங்களை நோக்கி ஆற்றுப்படுத்தியனவாக அமைந்தவை கோல் புறூக்கால் மேற்கொள்ளப்பட்ட சிறுசமயப்பிரிவுகள் தொடர்பிலான ஆய்வுக்கட்டுரைகளாகும். சார்வாகர்கள், பாசுபதர்கள், மகேஸ்வரர்கள், பஞ்சராத்திரர்கள் ஆகிய சிறு சமயப்பிரிவினர்கள் பற்றிய கோல்புறூக்கின் ஆய்வுக்கட்டுரைகள் இவ்வகையில் குறிப்பிடற்பாலன. இவற்றுள் சார்வாகர்கள் அவைதீக பிரிவினராகும் பாஞ்சராத்திரர்கள் வைணவத்தின் கிளை நெறியாகும். ஏனைய இரண்டும் சைவத்தின் உட்பிரிவு நெறிகளாகும்.

கோல்புறூக்கின் இவ்வாய்வுகள் கீழைத்தேயவியல் ஆர்வலர்களை இந்திய மக்களின் சமய வரலாற்றின் ஒரு புதிய ஆய்வுப்புலத்தினை நோக்கி இட்டுச் சென்றதாக Buckland என்பவர் கருத்துரைத்துள்ளமை நோக்கற்பாலது.

"Colebrooke's account of the minor sects the carvakas and locayaticas, Maheswaras and Pasupatas, the Pancharaoros or Bhagavatas led oriental Scholars to a new branch of research in the religious history of the Indian people".

Buckland , C.E.,1952:24

இந்தியவியல் (Indology) மற்றும் கீழைத்தேசவியல் (Oriential studies) சார்ந்த ஆய்வுகளில் கோல்புறூக்கின் வகிபங்கு அளப்பரியது. குறிப்பாக புராதன இந்துக் கணிதவியல், வானியல் சார்ந்த ஆய்வுகளுக்கும் புராதன இந்து அரசியல் சட்டம் நீதிபதிபாலனம் தொடர்பிலான ஆய்வுகளுக்கும் இவரே பிதாமகனாவார். குறித்த துறைசார்ந்த மூலபாடங்களுக்கான இவருடைய மொழி பெயர்ப்புக்களும் ஆய்வுலகில் மிகுந்த கவனத் தையீர்ப்பவையாகத் திகழ்கின்றன. Miscellaneous Eassays (நானாவிதக் கட்டுரைகள்) என்ற தலைப்பில் இரண்டு பகுதிகளாக வெளிவந்த தொகுப்பில் இவரெழுதிய ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் இடம்பெறும் ஆய்வுக்கட்டுரைகளிற் பெரும்பாலானவை Asiatic Society எனப்படும் ஆசியக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் அளிக்கை செய்யப்பட்டவையாகும். 1784இல் சேர் வில்லியம்ஸ் ஜோன்ஸினால் வங்காளத்தில் ஸ்தாபிக்கப்பட்ட Asiatic Society எனப்படும் ஆசியக் கழகத்தின் ஸ்தாபிதமானது கீழைத்தேசவியல் மற்றும் இந்தியவியல் சார்ந்த அறிவுப் பரம்பலுக்கான முக்கிய மடைமாற்றமாகக் கருதப்படுகிறது. இங்கு நடைபெற்ற கருத்தாடல்களினால் இந்தியர்களின் தொன்மைப் பண்பாட்டின் செழுமை துலக்கமானது. ஆங்கிலங்கற்ற படித்த இந்தியச் சுதேசிகளுக்கு தமது பாரம்பரிய பொற்காலங்களின் பெருமையினை உணர்வதற்கான நல்லறிவுச்சுடர் கொளுத்தலாகவும் இக்கழகத்தில் நிகழ்ந்த கருத்தாடல்களும் அறிவோர் ஆய்வுரைகளும் அமைந்தன. இத்தகைய சிறப்புமிக்க ஆசியக்கழகத்தின் தலைவராகவும் H.T.கோல்புறூக் அவர்கள் பணியாற்றி யுள்ளார் என்பதும் இங்கே குறிப்பிடற்பாலதாகும். 1823இல் Royal Asiatic Society எனப் பெயர்மாற்றப்பட்டிருந்த ஆசியக் கழகத்தின் தலைவர் பதவியினை H.T. கோல் புறூக் வகித்திருந்தார். இந்தியவியல் சார்ந்த ஆய்வுகளில் அரசியல் சட்டம் மற்றும் அறிவியல் சார்ந்த பொருண்மை களைத் துலக்கி மேலைத்தேசப் புத்திஜீவிகளை ஆச்சரியத்திலாழ்த்திய பாங்குகோல்புறூக்கின் தனிச் சிறப்பாகும். இவருடைய ஆய்வுமுயற்சிகள் மட்டும் அற்றுப்போயிருப்பின் இந்துநாகரிக வரலாறு வெறுமனே புரிந்து சமய - சடங்கியலின் வரலாறாகவே உலக அரங்கில் கொள்ளப்பட்டிருக்கும்.

**References**


1. Rocher&Ludo,(2011)The Making of Western Indology,p. 25
2. Eminent Orientalists, 1991: 57.
3. Higgenbothom,J.J.,(1874)Biographies of Eminent Indian Characters, p.32
4. Buckland ,C.E.,(1952 ),Indian Orientalists, p.24

# ஆசிரியர்களுக்கான கற்பித்தல் மாதிரிகள்

பேராசிரியர் மா. செல்வராஜா
கல்லியியற்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

ஆண்டுதோறும் இடம்பெறும் நவராத்திரிவிழாவை முன்னிட்டு தேசியகல்வி நிறுவகத்தின் இந்து சமயத் துறை வெளியிட்டுவரும் 'ஆயதனம்' சஞ்சிகை சமயத்துறைக்குக் காத்திரமான பங்களித்துவருவது பாராட்டுக்குரியது. துர்க்கை, லஷ்மி, சரஸ்வதி ஆகிய சக்திகளுக்கு எடுக்கப்படும் விழாவில் கல்வித்தெய்வம் சரஸ்வதிக்கும் மூன்று தினங்கள் வழிபாடு இடம் பெறுவதுவழமை. கல்வித்தெய்வம் கலைவாணியாகிய சரஸ்வதி ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் கல்வியலாளர்களுள் உறைந்து கல்வி வளர்ச்சிக்காக அருள்பாலிப்பவள். இக்கட்டுரை ஆசிரியர்கள் தமதுவகுப்புக்களில் கற்பித்தலுக்காகப் பிரயோகிக்கக்கூடிய மாதிரிகள் சிலவற்றைத் தாங்கிவெளிவருகின்றது. ஆசிரியர்கள் தமது கற்பித்தலில் இவற்றைப் பிரயோகிப்பார்கள் என்பது கட்டுரையாளரின் எதிர்பார்ப்பாகும்.

## 01. அறிமுகம்

மாதிரி என்னும் பதமானது எமது தினசரி வாழ்க்கையில் பல்வேறு பொருள்களைத் தருகின்றது. நாம் தாஜ்மகாலின் மாதிரியைப் பார்க்கின்றோம். அது உண்மையான தாஜ்மகாலின் உருவத்தைச் சரியாகத் தருகின்றது. இதன் காரணமாகவே மாதிரிகள் வகுப்பறைச் சூழலில் வினைத்திறன் வாய்ந்தகற்பித்தல் சாதனமாகத் திகழ்கின்றன. நடத்தைமேம்பாட்டில் ஒரு மாணவனிடம் நன்னடத்தை, நல்லமனப்பாங்கு, நாட்டம், மற்றும் பிறஆளுமைப் பண்புகளை உருவாக்குவதற்கு நாம் மாதிரி அல்லது மாதிரியாக்கல் எனும் செயற்பாட்டில் ஓர் இலட்சிய நடத்தை உருவை வழங்குகின்றோம். ஓர் ஆசிரியர் அல்லது தலைவர், அல்லது ஒரு சிறந்த வீரன் போன்றோர் ஒரு பிள்ளைக்கு ஒரு மாதிரியாக அமைந்து அந்த ஆளுமையின் நடத்தைப் பண்புகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தொழிற்படுகின்றார்கள். இன்னொரு வழியில் மாதிரி என்னும் பதமானது கலைஞர்கள், கட்டிடநிருமாணக் கலைஞர்கள், மற்றும் பொறியியலாளர்கள், அணைக்கட்டுகளின் மாதிரிகள், செயற்திட்டங்கள் (Projects), இயந்திரங்களை அமைத்தல் அல்லது பொருத்தல் மூலம் பணிகளைச் செய்வதற்குத் தயாராகும் நிலையையும், பணிகளை அத்திட்டத்தின்படி செய்வதற்கு உதவியாக அமைவதையும் காணலாம். இப்பல்வேறு விளக்கங்கள் அல்லது வரைவிலக்கணங்கள் கற்பித்தல் மாதிரிகளை விளங்குவதற்கு உதவியாகின்றன. ஆராய்ச்சியாளர்கள் சிலர் தரும் வரைவிலக்கணங்கள் சிலவற்றைக் கீழேகாணலாம்.

**JOYCE and WELL (1972:2)**

★ கற்பித்தல் மாதிரிகள் போதனை செய்யும் திட்டங்களாகும். குறிப்பிட்ட சூழலில் மாணவன் தொழிற்படுவதால் அவனது நடத்தையில் குறிப்பான மாற்றங்கள் ஏற்படுகின்றன.

★ கற்பித்தல் மாதிரி என்பது ஒரு திட்டம் அது கலைத் திட்டத்தை அல்லது ஒரு பாடநெறியை செம்மைப் படுத்திப் போதிப்பதற்கான ஆசிரியர் வழிகாட்டியாகும் (1972:3).

★ கற்பித்தல் மாதிரியொன்றுகல்விச் செயற்பாடு களையும் சூழலையும் கொண்ட வழிகாட்டியாகும். அதுகற்பித்தல், கற்றல் என்பனவற்றால் அடையக் கூடிய குறிக்கோள்களைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது (!978:2).

## 02. கற்பித்தல் மாதிரிகளின் பண்புகள் (Characteristics of Teaching Models)

★ கற்றல் கற்பித்தல் வெற்றிக்கான திட்டங்களே மாதிரிகள்.

★ கற்பித்தல் பொதுநுட்பங்களினின்றும் வேறான தாயிருப்பதுடன் சிறப்பான குறிக்கோள்களை அடைவதற்கான திட்டங்களுமாகும்.

★ கற்றல் கற்பித்தல் சூழலை ஏற்படுத்த உதவுகின்றன.

★ மாணவனிடம் விரும்பக்கூடிய நடத்தையை ஏற்படுத்த உதவுகின்றன.

★ ஒரு பொறியியலாளருக்குப் பாலம் அமைப்பதற்கு மிகவும் திருத்தமாக உதவும் மாதிரிபோன்று ஆசிரியரது பணிக்கு ஒரு திட்டமாக அமைகின்றது.

★ ஆசிரியரது சக்தி, நேரம், முயற்சி என்பனவற்றைச் சேமிக்க உதவுவதுடன் மாணவனுக்கு கற்றல் சாதனங்களைச் சிக்கனமாக உபயோகிக்கவும் வழிகாட்டுகின்றது.

**03. கற்பித்தல் மாதிரிகளின் வகைகள (Types of Teaching Models)**

(i) தரவுநிரற்படுத்தல் மாதிரிகள் (Information Processing Models): சூழலில் பெறப்படும் தூண்டியைமக்கள் கையாளும் வழிகள், தரவுகளை ஒழுங்கமைத்தல், பிரச்சினைகளை உணருதல், எண்ணக்கருக்களை உருவாக்குதல், பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை ஏற்படுத்தல், சொல்சார்ந்த, சொல்சாரா அடையாளங் களைப் பயன்படுத்தல் என்பனவற்றைக் குறிப்பிடும்.

(ii) சமூக இடைத்தாக்க மாதிரிகள் (Social Interaction Models): பண்புசார்ந்த குறிக்கோள்களை அடைவதைக் கருத்திற் கொண்டது. இது Affective Domain வகையைச் சேர்ந்தது.

(iii) தனியாள் அபிவிருத்திமாதிரிகள் (Personal Development Models): சமூக அபிவிருத்திக் குடும்பத்தைச் சேர்ந்த இம் மாதிரிகளும் மனப்பாங்கு அல்லது பண்புகள், என்பனவற்றைக் கருத்திற்கொண்டவை கற்பித்தல் குறிக்கோள்களை அடைவதைக் கவனத்தில் எடுப்பவை.

(iv) நடத்தைமாற்றுமாதிரிகள் (Behaviour Modification Models): இம்மாதிரிகளின் குடும்பமானது நடத்தை மாற்றுக் கோட்பாடுகளுடன தொடர்புள்ளவை.

**04. வேறுசிலகற்பித்தல் மாதிரிகளையும் குறிப்பிடலாம்**

★ கல்விஉளவியலாளர் டேவிட் ஒஸ்பெல் (David Ausbel) என்பவரின் உயர்தர ஒழுங்கமைப்பு மாதிரி.

★ சச்மனின் விசாரணைபயிற்சிமாதிரியானது (suchman's inquiry training model) J. றிச்சாட் சச்மனால் விருத்தியாக்கப்பட்டது.

★ புளூமின் நிபுணத்துவகற்றல் மாதிரியானது (Mastery Learning) மிகவும் பயனுள்ள மாதிரியாக வகுப் பறைகளிலும், பயிற்சிநெறிகளிலும் பயன்படுத்தப் படுகின்றது. போதனையின் விளைவை மேம்படுத்து வதில் பயன் உள்ளமுறையாக இது உள்ளது.

★ புறூணரின் எண்ணக்கரு அடைவு மாதிரி (Bruner's Concept Attainment Model) இது புறூணராலும் சகாக்களாலும் விருத்தியாக்கப்பட்டது.

★ ஜீன் பியாஜேயின் அறிவுவிருத்திமாதிரி (Jean Piaget's Cognitive Development Model).

★ சமூக விசாரணை மாதிரியானது (Social Inquiry Model) பென்ஜமின்கொக்ஸ், பைரன் மிசியல்ஸ் (Byron Missials) என்பவர்களால் விருத்தியாக்கப்பட்டது. சமூகக்கல்விகற்பித்தல் மற்றும் ஆய்வுகள், எழுவினாக்களுக்கு இது மிகவும் பயன்உள்ளது.

★ ஆய்வுகூடமுறை மாதிரி (Laboratory Method Model) Bethel மற்றும் Maine ஆகியோர் ஐக்கிய அமெரிக்க தேசிய பயிற்சி ஆய்வுகூடத்தில் பணியாற்றிய வேளை விருத்தியாக்கப்பட்டது. கல்வியின் சமூகக் குறிக்கோளை அடைவதற்குப் பொருத்தமான சமூகச் சூழலும் சமூக இடையீடாட்டமும் இதன் செயற்பாட்டுக்குஅவசியம்.

★ சினெற்றிக்ஸ் மாதிரி (Synetics Model)

★ வில்லியம் J.J Gordon(1968) என்பவரால் உருவாக்கப் பட்டது. கைத்தொழில் நிறுவனங்களில் ஆக்கக் குழுக்களை (Creativity Groups) விருத்தியாக்க ஆரம்பத்தில் இம்முறைபயன்படுத்தப்பட்டது.

★ நிபந்தனைப்பாட்டுக் கற்பித்தல் மாதிரி (Operant Conditioning Teaching Model)

★ இதுவும் நடத்தைமாதிரிக் குடும்பத்தைச் சேர்ந்தது. பிரசித்தி பெற்ற உளவியலாளரான B.F. ஸ்கின்னரால் விருத்தியாக்கப்பட்டகோட்பாட்டைஅடிப்படையாகக் கொண்டது.

**05. நிறைவாக இரண்டு விடயங்களைச் சற்று விரிவாக நோக்கி இதனைப் பூர்த்தியாக்கலாம். அவை**

(i) போல் காரணங்காண் மாதிரி (Paul Reasoning Model)

(ii) சோக்கிரதீஸ் கருத்தரங்குமாதிரி (Socratic Seminar Model)

**போல் காரணங்காண் மாதிரி**

இம்மாதிரி காரணங்காணுதலின் நான்கு அம்சங்களின் மீதுகட்டியெழுப்பப்படுகின்றது. காரணங்காணலின் மூலங்கள், காரணங்காண் ஆற்றல், காரணங்காண் மனதின் பண்புகள் (Traits) காரணங்காணலுக்கான தரங்கள் (Standards) என்பனஅவை. ஓர் உள்ளடக்கப் பரப்பினுள் எழுவினாக்கள் அல்லது பிரச்சினைகள் தொடர்பாக காரணங்காண்பதற்கான மூலங்களைக் கருத்திற் கொள்வதற்கு மாணவர்களுக்கு இம்மாதிரி உதவியளிக்கின்றது.

இம்மாதிரியானதுஎட்டு மூலங்களில் கவனத்தைக் குவிக்கினறது. இதுவினாவுதல், ஒப்படை எழுதுல், ஆய்வுவேலை என்பனவற்றையும் இணைத்துக் கொள்ளுகின்றது.

(a) **தாக்கம்/இலக்கு:** காரணம் காணும்போது சில நோக்கங் களை அடைவதற்காக, சிலவிருப்பங்களைத் திருப்தி செய்வதற்காக அல்லது சிலதேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் செய்கின்றோம். இலக்குய தார்த்தமாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் காரணங் காணுதல் அடையக்கூடியதாக இருக்கும்.

(b) **பிரச்சினையொன்றைத் தீர்க்கக்கூடியதாயிருத்தல்:** இந்த முயற்சியில் குறைந்தது ஒரு பிரச்சினையாவது தீர்க்கக் கூடியதாயிருத்தல் வேண்டும். இதற்கான பிரச்சினை அல்லது வினா தொடர்பாக நாம் தெளிவாக இருக்க வேண்டும். இல்லாவிடில் அதற்கான தீர்வை நாம் காண்பது சுலபமாயிராது.

(c) **காரணங்காணலில் எண்ணக்கருரீதியானபண்புகள்:** அனைத்துக் காரணங்காணல்களும் சிலகருத்துக்கள் அல்லது எண்ணகருக்களை உபயோகிக்கின்றன. எண்ணக்கருக்கள் அல்லதுகருத்துக்கள் என்பனவற்றில்

தவறுகளிருந்தால் அவை பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

(d) **காரணங்காணுதலில் ஆய்வுப்பண்பு:** காரணங்களை நாம் காணும் போது சில தோற்றப்பாடுகள் பற்றிக் காரணங் காணலில் ஈடுபடுகின்றோம். நமது காரணங்காணலின் அடிப்படையாக இருக்கக்கூடிய அனுபவங்கள், தரவுகள், சான்றுகள் என்பனவற்றிலுள்ள குறைபாடுகள் பிரச் சினையின் மூலங்களாகஅமையும்.

(e) **எடுகோள்கள்** (Assumptions): இது காரணங்காணும் செயல்முறைக்கு ஆரம்பப் புள்ளியாகும். எல்லா காரணங் காண் முயற்சிகளும் எங்கோ ஓர் இடத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதிலுள்ள தவறுகளும் பிரச்சினைக்கு இட்டுச் செல்லும்.

(f) **அனுமானம்** (Inference): காரணங்காணுதலின் படிமுறை கள் அனுமானம் எனஅழைக்கப்படும். பெரும்பாலும் அவ்வாறு... இதன் காரணமாக என்ற சொற்பிரயோகங்கள் அங்கு இடம்பெறும். அனுமானத்தில் உள்ளதவறுகள் பிரச்சினைக்கு மூலமாகஅமையும்.

(g) **தொடர்புகளும் விளைவுகளும்** (Implication and Consequences): எல்லாக் காரணங்காணல்களும் ஏதோ ஓரிடத்தில் தொடங்கிஓரிடத்தைநோக்கிச் செல்லுகின்றன. எந்தக் காரணங்காணலும் நிலையானது அல்லது தடைப்பட்டு நிற்பதன்று. அது அனுமானங்களின் தொடர்ச்சியாகும்.

**சோக்கிரதீஸ் கருத்தரங்கு மாதிரி**

மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறிப்பிட்ட விடயம் (Text) தொடர்பில் இம்மாதிரி மாணவர்களை ஈடுபடுத்துகின்றது. மாணவர்கள் தெரிவு செய்ததும், வாசித்து அறிந்து உரையாடக் கூடியதுமான உரைப் பகுதியை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட உரையாடல் இடம்பெறும். தெரிவு செய்யப்பட்ட சிக்கலான கருத்து நிறைந்த பகுதி இதில் உள்ளடக்கப் பட்டிருக்கும். மாணவர்கள் சேர்ந்து உரையாடுவதன் மூலம் கருத்துக்களைத் தர்க்கரீதியாக உரையாடிப் பிறரது அபிப்பிராயங்களையும் கருத்திற் கொள்வர். சேர்ந்து வாசித்து உரையாடுவதன் மூலம்மாணவர் தமது விளக்கங்களை ஆழமாக்கிக் கொள்வர்.

**சோக்கிரதீஸ் கருத்தரங்கு மாதிரி சில அத்தியாவசிய மூலங்கள் உள.**

**1) வாசிப்புப் பகுதியின் சிறப்பானதெரிவு** (Substantive Reading Selection): சோக்கிரதீஸ் கருத்தரங்குக்கான வாசிப்புப் பகுதி எவ்வுள்ளடக்கப் பரப்பிதிருந்தும் தெரிவு செய்யப் படலாம். தெரிவுசெய்யப்படும் பகுதி கருத்துச் செறிவு, எழுவினா, விழுமியங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாக மாணவர் வினாவெழுப்பக் கூடியதாகவும், தமது சொந்தக் கருத்துக்களை உரையாடலுக்குட்படுத்துவதாகவுமிருக்க வேண்டும். வாசிப்புக்காகத் தெரிவுசெய்யப்படும் பகுதியானது மாணவர்களால் ஏற்கனவே வாசித்து விளங்கப்பட்டதாகவும் கருத்தரங்கில் பங்குகொள்ள ஆயத்தமாக வருவதாகவுருமிக்க வேண்டும்.

**2) முக்கியவினா** (Important Question): திறந்தகலந்துரை யாடல் முக்கியவினாவால் வழிநடத்தப்படல் வேண்டும். இவ்வினாவுக்கு சரியானதோ அல்லது தவறானதோ விடை இராது. இவ்வினாமாணவர்களது சிந்தனை, அவர்கள் குறிப்பிட்டவாசிப்புப் பகுதியைநோக்கும் விதம், மதிப்பீடு செய்யும் ஆற்றல், வரைவிலக்கணப்படுத்தும் திறன், எழுவினாக்களைத் தெளிவாக்கும் திறன் என்பனவற்றை வாசிப்புப் பகுதியின் மீது ஏற்படுத்துவதாக விருக்கும்.

**3) செயல்சார்ந்தபங்குகொள்வோர்** (Active Participants): பங்குபற்றுவோர் தமது பொறுப்புக்களைக் கருத்தரங்கின் தரத்தை நோக்காகக் கொண்டு பகிர்ந்து கொள்வர். கருத்தரங்கிற்கான உரையாடல் ஆயத்தம் ஒவ்வொரு பங்குபற்றுனரதும் பொறுப்பாகும். ஒவ்வொருவரும் தம்மைப் பார்த்துக் கொள்வதற்காக இருக்கும் முறை வட்டவடிவானதாக இருக்கும். ஆயத்தப்படுத்திவராத மாணவர்கள் தம்மை உள்வட்டத்தினின்றும் விடுவித்துக் கொள்ளவேண்டும். அத்தகையவர்கள் வெளிவட்டத் திலிருந்து கொண்டு உள்வட்டத்துக் கலந்துரையாடலை அவதானித்துக் குறிப்பெடுத்துக் கொள்ளலாம். கருத்தரங்கு நடைபெறும் போதுபங்கு பற்றுவோர் கவனமாகக் கேட்டல், கருத்துக்களைப் பரிமாறல், வினாவெழுப்பல், விடையளித்தல் தமது கருத்துக்களுக்கு உதவியாகஆதாரங்களைத்தேடல் என்பனவற்றில் ஈடுபடுவர். இம்மாதிரியில் விடயத்தைவாசிப்பதிலும் சிந்தித்தல் கேட்டல் உரையாடல் என்பனவற்றிலும் மிகுந்த கவனம் குவிக்கப்படல் அவசியம். சிறந்த விளக்கத்துடன் உரையாடல் முடிக்கப்படல் வேண்டும்.

சோக்கிரதீஸ் கருத்தரங்குமாதிரியின் முக்கிய அம்சம் ஒரு தலைப்பிலான திறந்ததும், சுதந்திரமானதுமான உரையாடலாகும். ஆசிரியர் பொதுவாக ஒருவளப்படுத் துனராக விளங்குவார். அவர் மாணவர் உரையாடலுக்கு உடன்பாடனதோ அல்லது எதிர் மறையானதோ கருத்துகளை வழங்கமாட்டார். ஆசிரியரது முக்கிய பணி சிறந்த சிந்தனையடிப்படையான, திறந்த வினாவை உரையாடலை ஏற்படுத்துவதற்கு வழங்குவதாகும்.

நிறைவாக, இத்தகைய மாதிரிகள் மாணவர்களது சிந்தனைக்கும் கற்றலுக்கும் உதவியளிக்கின்றன. எந்தச் சூழ்நிலையிலும் இவை சிறந்தபணிக்கு உதவியளிக்கின்றன. வகுப்பறையின் எல்லாமாணவர்களும் இம்மாதிரிகளின் பிரயோகத்தினால் பயனடைவர். மீத்திறமாணவர்களும் இம்மாதிரிகளில் உயரியஉள்ளடக்கத்திற்கும், ஆழமான அனுபவங்களுக்கும் விமர்சனரீதியான பிரச்சினை தீர்த்தலுக்கும் சந்தர்ப்பங்களைக் காண்பார்கள். ஒரு மாதிரியானது மாணவர்களுக்கு வசதியாக அமையும் போது தமது சிந்தனையை ஆழமாக்குவதுடன் வேறு உள்ளடக்கப் பரப்புகளிலும் பழக்கப்பட்ட கருவியாக உபயோகிப்பார்கள்.

# திருமந்திரம் கூறும் வாழ்வியல் சிந்தனைகள் - ஓர் ஆய்வு

செல்வி சுரேந்தினி துரைராசசிங்கம்
B.A (Hons) இந்துநாகரிகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**

சைவத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே திருமுறைகள் சிறப்பான இடம் வகிக்கின்றன. இத் திருமுறைகள் பன்னிரெண்டில் பத்தாம் திருமுறையாக திருமூலரின் திருமந்திரம் பல்வேறு செய்திகளினை சைவ உலகிற்கு வழங்கி நிற்கின்றது. குறிப்பிட்ட கால அளவுள்ள மனித வாழ்நாளில் மனிதன் ஒருவன் ஆற்ற வேண்டிய கடமைகளினை சிறப்பாக திருமந்திரம் எடுத்துக்கூறுகின்றது. அந்தவகையில் மனித வாழ்வியல் சிந்தனைகளை திருமந்திரம் எவ்வகையில் உள்வாங்கியுள்ளது என்பதனை எடுத்துக் கூறுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. இங்கு திருமந்திரம் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள், கட்டுரைகள், திருமந்திரம் என்பன இவ்வாய்வுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இவ்வாய்வுக் கட்டுரையில் திருமந்திரம் கூறும் வாழ்வியல் சிந்தனைகளான அறம், நிலையாமைச் சிந்தனைகள், கல்வி, பஞ்சமாபாதகங்கள், அரசியல், அட்டாங்கயோகம், பெரியோர் துணைக்கோடல், பொறையுடைமை, மருத்துவம் போன்ற அம்சங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. விவரண ஆய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரையானது அமையப் பெற்றுள்ளது.

*திறவுச்சொற்கள்: திருமுறைகள், திருமந்திரம், வாழ்வியல், நிலையாமை, அறம்*

**அறிமுகம்**

உலகப் பெருமதங்களில் ஒன்றாகவும் முதலில் தோன்றிய சமயமாகவும் விளங்கும் சனாதன தர்மமாகிய இந்துசமயத்தில் காலத்திற்குக் காலம் சித்தர்கள், பக்தர்கள், அறிஞர்கள், ஞானிகள் என்போர் தோன்றி சைவசமயத்தை வளம்படுத்தினார்கள். இத்தகைய தொன்மை வாய்ந்த சமயத்தினை மேன்மைப்படுத்தும் வகையில் பல தோத்திர நூல்களும், சாஸ்திர நூல் களும் தோற்றம் பெற்றன. இவ்வகையில் சுந்தரநாத முனிவர் என்ற இயற்பெயர் கொண்ட திருமூலநாயனார் தோன்றி திருமந்திரத்தினை சைவ உலகிற்கு நல்கிய பெரும் சித்தராவார். தமிழ்ஆகமம் என்னும் சிறப்புப் பெறும் திருமந்திரம் சைவத் திருமுறை வகுப்பிலே பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப்படுகின்றது. இந்நூல் ஒன்பது தந்திரங்களினையும் மூவாயிரம் பாடல்களையும் அகத்தே கொண்டு இருப்பதனால் தமிழ் மூவாயிரம் என்று போற்றப்படுகின்றது. திருமூலர் திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களையும் காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம் எனும் ஒன்பது ஆகமங்களின் சாரங்களினை அடிப்படையாகக் கொண்டு பாடியதுடன், இவர் மூவாயிரம் ஆண்டுகள் ஞானநிஸ்டையில் இருந்து வருடத்திற்கொரு பாசுரமாக மூவாயிரம் பாடல்களைப் பாடியருளினார். இத்தகைய திருமந்திரத்தில் அடங்காத வேதப் பொருளில்லை, ஆகம இரகசியமும் இல்லை. இந்நூல் யோகநூலாகவும், வைத்திய நூலாகவும், தத்துவ நூலாகவும், ஞான நூலாகவும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டிய வாழ்வியல் சிந்தனைகளையும் திருமந்திரம் நன்கு வலியுறுத்தி நிற்கின்றது.

**திருமந்திரம் கூறும் வாழ்வியல்**

திருமந்திரத்தில் வரும் ஒன்பது தந்திரங்களும் சைவத்தின் சிறப்பை உணர்த்தி நிற்கும் பங்குடையன என்பதனால் ஒரு சமய நூலாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. சமயம் என்பது வாழ்வியலை வளப்படுத்தும் ஓர் நெறியாகும். வாழ்வியல் என்பது 'வாழப்படும்முறை' என்று பொருள் படும். இதனால் மனித வாழ்விற்கு வேண்டிய வாழ்வியல் கருத்துக்களை உள்ளடக்கியுள்ள திருமந்திரம் வாழ்வியல் நூலாகவும் போற்றப்படுகின்றது. இவ்வகையில் ஜீவகாருண்ய சிந்தனைகள், அறச்சிந்தனைகள், நிலையாமைச் சிந்தனைகள், கல்வி, தவிர்க்கப்பட வேண்டிய பஞ்சமாபாதகங்கள், மனிதகுல ஒருமைப்பாடு, அரசியல் முறைமைகள், அட்டாங்க யோகம், ஆசைகளை விடுதல், பொறையுடைமையும் பெரியோர் துணைக் கோடலும், பெண்மை, நோய்களும் நோய்க்கான மருத்துவ முறைகள் என்பன திருமந்திரப் பாடல்களின் வழியாக மனிதரது வாழ்வினைச் செம்மைப்படுத்தும் நோக்கில் எடுத்து விளக்குகின்றது.

**ஜீவகாருண்ய சிந்தனைகள்**

மனித வாழ்வில் பாவம் செய்யாமை, வாழ்வியல் சீலம், இறையுணர்வு ஆகிய மூன்று பண்புகளும் வளர்க்கப்பட வேண்டும் என சமய நூல்கள் போதிக்கின்றன. திருமந்திரம் ஒவ்வொரு மனிதரும் தம் வாழ்விலே

ஜீவகாருணியப் பண்பு உடையவராக இருக்கவேண்டும் என்றும் கூறிநிற்கின்றது. இதனை நான்கு படிநிலைகளில் எடுத்துக் கூறுகின்றது. சகல மனிதர்களிடத்தும் அன்பு செலுத்துவதும் எல்லோருக்கும் ஒரு பிடி உணவு கிடைக்க வேண்டும் என்றும், இன்னுரை பேசல் வேண்டும் எனும் சிந்தனையை திருமூலர்,

*"யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை*
*யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை*
*யாவர்க்கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி*
*யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே" (1)*

எனும் திருமந்திரப் பாடலில் தினந்தோறும் பூஜையில் ஒரு பச்சிலையை எடுத்து அர்ச்சனை செய்வது எளிய காரியமாகும். அதை ஒரு கிரமமாக வைத்துக் கடைப் பிடிக்கவேண்டும். தெய்வீகப் பிராணியாகிய பசுவுக்கு ஒருபிடி உணவு கொடுப்பது யாவரும் செய்யக்கூடிய எளிய அறமாகும். பிறருக்கு ஒருபிடி உணவைத் தானமாக கொடுத்தல் அறத்தில் சிறந்த அறம் பிறரிடம் கடும் சொல் பேசாது இனிய வார்த்தைகளைப் பேசுவது எல்லோரும் செய்ய வேண்டியது என்று மக்களுக்கு திருமூலர் எடுத்து கூறியுள்ளார்.

**அறச்சிந்தனைகள்**

மனிதவாழ்வில் அறம் செய்ய வேண்டியதன் அவசியத் தையும், அறமாற்றாதோரின் நிலை குறித்தும் திருமந்திரம் புகட்டுகின்றது. அறநெறியை அறியாதவர்கள் அண்ணல் பாதம் அறியும் திறன் அறியாதவர்கள். அது மட்டுமல்லாது அவர்கள் சிவலோகநகருக்குச் செல்லும் திசையறியாதவர் கள். அவர்கள் அன்பும் அருளும் இல்லாதவர்கள். பொய்மொழிகேட்டு அதர்மமே தர்மம் என்று எண்ணி அதனைச் செய்ய முனைபவர். மேலும் பிறரை இவர்கள் எளிதில் பகைத்து கொள்வர் என எடுத்துக் கூறி மனிதர்களை அறத்தின் வழி வாழ வழி காட்டி நிற்கின்றது திருமந்திரம். இதனை,

*"அறம் அறியார் அண்ணல் பாதம் நினையும்..." (2)*

எனவரும் அடிகள் உறுதி செய்கின்றன.

மனித வாழ்வில் தானச்சிறப்பு என்பது மேன்மையானது. பிறருக்கு இயன்ற அளவு கொடுத்தலில் உள்ள பெருமையை திருமூலர்,

*"ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்*
*பார்த்து இருந்து உண்மின் பழம் பொருள் போற்றன்மின்*
*வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்*
*காக்கை கரைந்து உண்ணும் காலம் அறிமினே" (3)*

எனும் பாடலில் கற்றபின் கற்றவாறு ஒழுகவேண்டும். அவர் வறியர், இவர் செல்வர். அவர் நண்பர் இவர் பகைவர். அவர் என் மதத்தவர். இவர் பிறமதத்தவர் அதனால் அவருக்கு கொடுக்கலாம். இவருக்கு கொடுக்கக் கூடாது. என்று எண்ணாது ஏற்பவர் எவராயிருந்தாலும் அவருக்கு கொடுங்கள். வருவிருந்து பார்த்திருந்து உண்ணுங்கள் சுவையான உணவு மீது கொள்ளும் ஆசை காரணமாக அதை விரைவாக உண்ணாதீர்கள் மறுநாள் உண்பதற்காக உணவைப் பாதுகாத்து வைக்காதீர். காகங்கள் உண்ணும் காலத்தில் பிற காகங்களையும் அழைத்து ஒன்று சேர உண்ணுகின்ற தன்மையை போல பிறருக்கு கொடுத்து உண்ணவேண்டும். என்னும் எண்ணத்தைக் கொண்டு வாழ வேண்டுமென திருமூலர் உணர்த்தி நிற்கின்றார்.

இவ்வாறு மற்றவருக்கு கொடுத்து வாழவேண்டும் எனஅறிவுறுத்தும் திருமூலர் அவ்வாறு கொடுக்காது வாழ்வதால் மனிதனுக்கு ஏற்படும் நிலைகுறித்து

*"எட்டி பழுத்த இருங்கனி விழ்ந்தன*
*ஒட்டிய நல்லறம் செய்யாதவர் செல்வம்*
*வட்டி கொண்டு ஈட்டியே மண்ணின் முகத்திடும்*
*பட்டிப் பதகர் பயன் அறியாரே" (4)*

என்னும் அடிகள் அழகிய பெரிய எட்டிப் பழங்கள் நிலத்தில் விழுந்து கிடக்கின்றன. அவற்றை எவராலும் இலகுவாக எடுக்க முடியும் ஆனால் எவரும் அவற்றை எடுப்பதில்லை அதுபோல ஒருவரிடம் செல்வம் இருந்தால் அது பிறருக்கு பயன்பட வேண்டும். அச்செல்வத்தினை அறநெறியில் செலவிட வேண்டும். பிறருக்குப் பயன்படாத செல்வம் எட்டிப் பழத்தைப் போல் பயனற்றவையோகும். இவ்வுலகில் வட்டி வாங்கிச் சேர்த்து பணத்தைப் பெருக்கும் வஞ்சகப் பாதகர்களும் இருக்கின்றனர். அவர்கள் பணத்தினால் பெறக் கூடிய பயன் என்ன என்பதை அறிய முடியாத மூடர்கள் ஆவார். மானிடரும் மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்வதே சிறப்பு என்று திருமூலர் எடுத்துக் கூறுகின்றார்.

**நிலையாமைச் சிந்தனைகள்**

திருமந்திரம் இவ்வுலகிலுள்ள யாக்கை, செல்வம், இளமை, உயிர் என்பன எல்லாம் நிலையற்றவை என நிலையாமை குறித்த சிந்தனைகளை மானிட வாழ்வுக்கு ஏற்ற சிந்தனைகளாக எடுத்துக் கூறியுள்ள மிகச்சிறந்த வாழ்வியல் நூலாக அமைந்துள்ளது. யாக்கையும், இளமையும், செல்வமும் நிலையற்றவை ஆகவே அவை இருக்கும் போதே நிலையான இறைவனைத் தியானிக்க வேண்டும் என கூறும் திருமூலர் யாக்கை நிலையாமை குறித்துக் குறிப்பிடும் போது,

*"மண் ஒன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்*
*திண்ணென்று இருந்தது தீயினைச் சேர்ந்தது*
*விண்ணின்று நீர்விழின் மீண்டும்மண் ஆவபோல்*
*எண் ணின்ற மாந்தர் இறக்கின்ற வாறே" (5)*

மண்ணினால் செய்யப்பட்ட பாத்திரமொன்று வெறுமையாக இருக்கும் போது மண்பாத்திரம் என்று அழைக்கப்படுகின்றது. மண் பானை ஒன்றுக்குள் சோறிருக்கும் போது அதனை மண் பானையென்று கூறுவதில்லை சோற்றுப் பானையென்றே கூறுவர். திருமூலர் இங்கு இரண்டு பாத்திரங்களைக் கூறுகின்றார். ஒன்று மண்பாத்திரம் மற்றையது இருவினைப் பாத்திரம். இருவினைப் பாத்திரம்

முற்பிறப்பில் செய்த நல்வினை, தீவினை காரணமாக வரும் இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்காக இவ்வுடல் கொடுக்கப்பட்டுள்ளது. மழைநீர் விழுந்தால் மண்பாத்திரம் பழையபடி மண்ணாகிப் போவது போல வலிமை யோடிருக்கும் இருவினைப் பாத்திரமாகிய இவ்வுடம்பு உயிர் நீங்கியவுடன் தீயுடன் கலந்து அழிந்து போய்விடும்.

*"ஊர் எலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்,*
*பேரினை நீக்கிப் பிணம் என்று பேர் இட்டு,*
*சூரை அங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு*
*நீரினில் முழ்கி நினைப்பு ஒழிந்தார்களே" (6)*

என்னும் அடிகள் மூலம் மரணத்தின் பின்பு உடலுயிர்த் தொடர்பு நீங்குகின்றது. அதன் பின்பு உடலை யாருமே மதிப்பதில்லை. உடலைத்தகனம் செய்யும் போது உடல் வழியாக வந்த தொடர்பு அழிந்து போகின்றது. என்று மனிதவாழ்வில் யாக்கையின் நிலையற்ற தன்மையினை திருமந்திரம் போதிக்கின்றது.

திருமூலர் வாழ்வுக்கு அவசியமான செல்வத்தின் நிலையற்ற தன்மையினையும் எடுத்துக் கூறியள்ளார். அழியும் செல்வத்தின் பின் சென்று வாழ்வைக் கழிக்காது இறைவனைத் தியானிக்குமாறு மாந்தர்க்கு அறிவுறுத்து கின்றார். அதாவது வானில் இயங்கும் ஒளியுடைய சந்திரன் ஒளி குன்றி இருளாய் ஆவதைப் போன்று தளர்ச்சியடையும் செல்வம் குறைந்து இல்லாது போவதை யாரும் கூற வேண்டியதில்லை. பொருள் மயக்கத்தை நீக்கி சிவனை அடைய முயலுங்கள். அவனை அடைவ தனால் முகில் தானாகவே மழையைப் பொழிவதனைப் போல அவன் அருள் மழையைப் பொழிவான் என்கிறார். வானத்திலுள்ள சந்திரன் தேய்ந்து தேய்ந்து முற்றாக அற்றுப் போவதைப் போல செல்வமும் தேய்ந்து தேய்ந்து அற்றுப்போகும் என உணர்த்துகின்றார். இதனை திருமந்திரம் வருமாறு எடுத்துரைக்கின்றது.

*"இயக்கு உறு திங்கள் இருட்பிழம்பு ஒக்கும்*
*துயக்கு உறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா*
*மயக்கு அற நாடுமுன் வானவர் கோனைப்*
*பெயல்கொண்டல் போலப்பெருஞ் செல்வம் ஆமே" (7)*

பேராசை கொண்டு பிறரினுடைய பொருளினை விரும்ப வேண்டாம் எனவும் அதனால் துன்பமே நேரும் என்பதனை,

*"அவ்வியம் பேசி அறம்கெட நில்லன்மின்*
*செவ்வியன் ஆகிப் பிறர்பொ........" (8)*

என திருமந்திரம் கூறுமிடத்து பொருட் செல்வத்தின் நிலையற்ற தன்மையினை உணர்ந்து பிறர்பொருள் மீது ஆசை கொள்ள வேண்டாம் என எடுத்துக் கூறுகின்றது.

இளமைத் தன்மை மாறும் இயல்புடையது. இளமை என்பது என்றும் எவருக்கும் நிலையாக இருப்பதன்று ஒவ்வொருவரும் ஓர் காலகட்டத்தில் இளமையை இழக்க வேண்டும் என்ற நிலையாமைச் சிந்தனையை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்க்கு திருமூலர் தம் பாடல்களின் வழி எடுத்துக் கூறியுள்ளார். வயதில் முதிந்தவர்களைப் பார்த்து வயதில் குறைந்தவர்கள் நையாண்டி செய்கிறார்கள். 'காவோலை விழக் குருத் தோலை சிரிக்கின்றது' என்ற பழமொழி இதனை விளக்குகின்றது.

*"கிழக்கு எழுந்து ஓடிய ஞாயிறு மேற்கே*
*விழக் கண்டும் தேறார் விழிஇலா மாந்தர்*
*குழக்கன்று மூத்துஎரு தாய்ச்சில நாளில்*
*விழக்கண்டும் தேறார் வியன்உல கோரா" (9)*

எனத் திருமந்திரம் விளக்கும் போது காலையில் கிழக்குத் திசையில் வானத்தில் தோன்றி விளங்கும் கதிரவன் மேற்கில் மறைகின்றான். இவ்வுண்மையினைக் காணும் அறிவில்லாத மனிதர்கள் நிலையாமையை உணரமாட்டான். அது போல இளங்கன்று சில நாளில் வளர்ந்து மூப்பு அடைந்து இறப்பதைக் கண்டும் அகன்ற இவ்வுலகத்தவர் இளமை நிலையாமையை உணரமாட்டார்கள் என்று கூறுகின்றது. இளமையானது நாள்தோறும் சிறிது சிறிதாக தேய்ந்து ஒழிந்து போகும் தன்மையுடையது. முதுமை அடைந்த பின்பு அரிய செயல்களைச் செய்ய இயலாது. எனவே இளமை அழியும் முன்பு இறைவனுடன் இணைய வேண்டும் என்று திருமூலர் கூறுகின்றார். இத்தகைய உண்மையை இன்றைய இளம் சமூகத்தினரும் அறியாது இளமையில் பற்றுக் கொண்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறாக மனித வாழ்க்கையில் யாக்கை, செல்வம், இளமை, உயிர் என்பன நிலையற்றவை என்றும் இத்தகைய நிலையற்றவற்றின் மீது பற்றுக் கொள்ளாது நிலையான இறைவன் மீது பற்றுக் கொள்ளுமாறு திருமூலர் மனிதர்க்கு அறிவுறுத்துகின்றார்.

**கல்வி**

இன்றைய வாழ்வியலில் கல்வியானது முக்கிய இடம் பெறுகின்றது. இவ்வகையில் கற்றல், கல்லாமை என்னும் கருத்தியல்களை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களை வழி நடத்தியுள்ளார் திருமூலர். கல்வியில் கற்றல், கேட்டல், சிந்தித்தல் என்பன சிவகதிக்கு துணை புரிவனவாக விளங்குகின்றன.

*"கற்றறி வாளர் கருதிய காலத்துக்*
*கற்றறி வாளர் கருத்தில் ஓர் கண் உண்டு*
*கற்றறி வாளர் கருதி உரை செய்யும்*
*கற்றறி காட்டக் கயல்உள ஆக்குமே" (10)*

எனும் அடிகளின் மூலமாக உண்மையான கல்வியை சிவானுபவத்தைத் தரும் கல்வியைக் கற்றவர் சிந்தித்துப் பார்க்கும் போது அவர்கள் கருத்தில் ஞானக் கண் புலனாவதை உணரலாம். அப்பொழுது புலனாகும் உண்மைக்கருத்துக்களை சிந்தித்துப் பிறர்க்கு உரைப்பர். ஒரு கல்தூண் போல அவர்கள் சலனம் இல்லாது இருந்து மற்றவர்க்கு உணர்த்தி அவர்களுக்கு ஞானக்கண் உண்டாகுமாறு செய்வர். கல்வி கற்றவர் இதயத்திலிருந்து பிறரிடம் பரிவும் அன்பும் சுரக்க வேண்டும் கற்றபின் அன்பில் நிலைபெற்றவர்களே முறைமையறிந்து

வாழ்பவர்கள். ஏனையோர் என்ன கற்றும் கல்லாதவர் என்பது திருமூலரது கருத்தாகும். கல்வியே மனித வாழ்வுக்கு அடிப்படை என்று அறிவுறுத்துகின்றார்.

கல்வியானது ஏட்டுக் கல்வியையும், அனுபவக் கல்வியையும் எடுத்துக் கூறுவதாகும். இக்கல்வி எம் முறையிலாயினும் தக்கனவற்றை அறிந்து அதன்படி நடத்தலே வீட்டின்பப் பேற்றுக்கு வழியாகும் என்றும் கல்வி கேள்வி ஞானங்களினால் இறைசிந்தனையினைக் கொள்ளவேண்டும். அறிந்தவழி நடப்பதன் மூலமே கற்றதன் பயன் கிட்டும் எனதிருமூலர் குறிப்பிடுகின்றார்.

கல்வியினுடைய அவசியத்தினை குறிப்பிட்ட திருமூலர் கல்லாமை குறித்தும் எடுத்துக் குறிப்பிட்டுள்ளார். ஆசானிடம் சென்று முறைப்படி கற்காமல் பண்டைய தவத்தினால் தெய்வக் காட்சியை உணர்வாராயின் அவர்கள் இறைவன் அருளால் அனுக்கிரகம் பெற்றவர் ஆவார். இத்தகையவர் உலகைப் பற்றாமல் சிவத்தைப் பற்றி நிற்பர். முறையாகக் கல்வியினைக் கற்றவர்களும் கல்லதாதவராகவே கருதப்படுவார். இவர்கள் சிவானுபவத் தையும் பெறுவதில்லை. இதனை,

*"கல்லாதவரும் கருத்து அறி காட்சியை*
*வல்லார் எனில்அருட் கண்ணான்......" (11)*

எனும் அடிகளில் விளக்கி நிற்கின்றன. உண்மை அனுபவம் இல்லாதவர்கள் கல்லாதவர்கள் என திருமந்திரம் கூறுகின்றது.

**தவிர்க்கப்பட வேண்டிய பஞ்சமா பாதகங்கள்**

கொலை, களவு, கள்ளுண்ணாமை, காமம், பொய் ஆகிய ஐந்து குற்றங்களைப் பஞ்சமாபாதகங்கள் என எம் சமய நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன. இவற்றில் கொல்லாமை, பிறர்மனை நயவாமை, கள்ளுண்ணாமை ஆகிய செயல்களைத் திருமந்திரம் புகட்டுகின்றது. இவற்றை தவிர்த்துக் கொள்வதனால் மானிட வாழ்வு மேன்மை பெறும் என புகட்டப்படுகின்றது. சமய நூ ல்களிலும், அற நூல்களும் செய்யத்தகாதனவெனக் கூறப்படுவன பஞ்சமாபாதங்கள் ஆகும்.

*"கொலையே களவுகள் காமம் பொய்கூறல்*
*மலையான பாதக மாதம் அவை நீக்கித....."(12)*

எனும் அடிகள் மூலம் திருமந்திரம் மனிதர்கள் வாழ்வை சீர்குலைப்பவை கொலை, களவு, கள், காமம், பொய் கூறல் ஆகிய ஐந்து மாபெரும் பாதகங்களாகும். அப்பாதகங்களைச் செய்வதைத் தவிர்த்து தலையின் மேல் இறைவன் திருவடிகளைச் சூடி இன்பத்தைப் பெற்றோருக்கு இப்பாவ காரியங்களால் வரும் துன்பங்கள் இல்லாது போய் அவர்கள் பேரின்பத்தை அனுபவிப்பர் என திருமந்திரம் கூறுகின்றது.

சிவபூசைக்குச் சிறந்த மலர் கொல்லாமை இதனை மனிதர்கள் தம் வாழ்வில் ஏற்று வாழவேண்டும் என திருமூலர் விரும்புகின்றார். பற்றுக்கோடான நல்ல ஆசானின் பூசைக்கும் பலவகை மலராக உள்ளது கொல்லாமையே ஆகும். திருமூலர் கொல்லோனுக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பதனைக் கூறாமல் கொல் எனவும் குத்து எனவும் கூறும் விலங்கை ஒத்த ஏவுதற் கருத்தாக்களாகிய மக்களுக்கு இயமனது ஏவலர் என்ன தண்டனை கொடுப்பார்கள் என்பதை எடுத்துக் கூறுகின்றார். இதன் மூலமாக மனிதர்களை கொல்லாமை எனும் குற்றத்தை செய்ய வேண்டாம் என அறிவுறுத்து கின்றார். அதனை,

*"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை*
*வல்லடிக்காரர் வலிக்கயிற்...." (13)*

எனும் அடிகள் எடுத்துக் காட்டுகின்றன. எனினும் இங்கு கொல் என்றும் குத்தென்றும் கூறும் ஏவுதற்கருத்தாக்கள் யார் என்பதனைக் குறிப்பிடவில்லை. இன்றை சமூகத்தில் கொலை எனும் செயல் அதிகரித்து வருகின்றமையை அவதானிக்க முடிகிறது. இத்தகைய செயல்களைச் செய்யவேண்டாம் என திருமந்திரம் கூறுகின்றது.

சுழியில் அகப்பட்டவர் அதிலிருந்து வெளியேறுவது கடினம். அதனால் வரும் துன்பம் எத்தகையதென்பதை உறுதியாக கூறமுடியாது. அதனைப் போலவே பிறர் மனைப் புகுவோரும் அம்மனைக்குரியாளை விரும்பினால் காமச் சுழியிற் சிக்கிக் கொள்வர். அவர்கள் பெறுமின்பம் கனவில் அனுபவிக்கும் இன்பம் போல நிலையற்றதாகும். கனவு போல அந்த மங்கையிடம் சிறிதாய் ஏற்படும் அன்பை நனவைப் போன்று உண்மையானது என்று விரும்பக்கூடாது என திருமந்திரம் காமம் என்னும் வலையில் சிக்க வேண்டாம் என மானிடருக்கு நல்வழியினை,

*"மனைபுகு வார்கள் மனைவியை நாடில்*
*சுனைபுகு நீர்போல் சுழித்துடன் வாங்கும்*
*கனவது போலக் கசிந்தெழும் இன்பம்*
*நனவது போலவும் நாடவொண் ணாதே" (14)*

எனும் அடிகள் எடுத்துக் கூறுகின்றன. இதனைப் போலவே அன்புடைய மனைவி வீட்டில் இருக்கும் போது பிறர் மனைவியை விரும்பும் காமுகர்கள் வீட்டில் பழுத்துள்ள இனிய சுவை மிக்க பலாக்கனியை உண்ணப் பிடிக்காமல், காட்டில் பழுத்துள்ள ஈச்சம் பழத்தை உண்கின்றவர்கள் போன்றோராவார். அது மட்டுமா? செழித்து வளர்த்த மரத்திலிருந்து பெற்ற இனிய மாங்கனியை சேமிப்புப் பொருளாக எண்ணி அறையில் வைத்துவிட்டு தகுதியில்லா புளியம் பழத்துக்காக புளியங்கிளையில் ஏறிக் கீழே விழுந்து காலொடிந்து போகின்றவர்கள் போலப் பெரிதும் துன்புறுவார்கள். பொருட் பற்றுடையோரும் அறிவை மறந்து ஆளுகின்ற அறியாமையாகிய இருளில் தோன்றிய மின்னொளி போன்ற சிறிய அறிவை பெரிதென்று எண்ணுவார். தான் மருண்ட பார்வையுடைய மல்லிகை என நினைத்து மாற்றான் தோட்டத்து அலரியை விரும்புவர் அதனால் அவர்கள் துன்புறுவர் என்பதனை,

*"ஆத்த மனையாள் அகத்தே இருக்கவே*
*காத்த மனையாளைக் காமுறு காளையர்*
*காய்ச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்*
*ஈச்சம் பழத்துக்கு இடர்உற்ற வாறே" (15)*

எனும் அடிகள் மூலம் திருமந்திரம் எடுத்துக்காட்டுகின்றது. இன்றைய சமூகத்திலே பிறர்மனைவினையை நோக்கி அவர்களின் பின் செல்லும் ஆடவர்கள் துன்பத்தினையே அடைவார் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**மனிதகுல ஒருமைப்பாடு**

மனிதர்கள் எல்லோரும் ஒரே சாதி மற்றும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள். மனிதர்களிடம் காணப்படுகின்ற வேற்றுமைகள் அனைத்தும் மனிதர்களாலேயே உருவாக் கப்பட்டன. அவை இறைவனால் உருவாக்கப்படவில்லை. மானிடர்களின் செயல்களே இவ்வுயர்வு தாழ்வுக்கு காரணமாகும். தெய்வமும் ஒன்று அத்தெய்வத்தின் முன் சகல மானிடரும் ஒன்று எனும் உண்மையை திருமந்திரம்,

*"ஒன்றே குலம் ஒருவனே தேவன்*
*நன்றே நினைமின் நமனில்லை நாணும்*
*சென்றே புகுங்கதி.........." (16)*

எனும் அடிகள் மூலம் மனிதகுல சமத்துவத்தை திருமந்திரம் எடுத்துக் காட்டுகின்றது. இது ஓர் சமூக சீர்திருத்த சிந்தனையாகவும் விளங்குகின்றது.

**அரசியல்**

அரசன் ஒருவன் நன்னெறியில் நின்று நாட்டை ஆளவேண்டும். நல்லாட்சி நடைபெறாவிட்டால் நாட்டிற் குழப்பங்கள் ஏற்படுவதோடு அந்நாட்டில் அந்நியர் தலையிடுவதற்கும் வழி வகுக்கும். அரசனானவன் தான் நன்னெறியில் நிற்பதோடு மக்களையும் நன்னெறியில் நிற்கச் செய்ய வேண்டும். இதனைவிட அரசு மதசார்பற்றதாக இருக்க வேண்டும் என்னும் சிந்தனைகளை திருமந்திரத்தினூடாக அறிந்து கொள்ளமுடிகின்றது. அரசனைப் பற்றிய இலக்கணங்களில் தனி மனிதன் என்ற வகையில் அவனுக்கு இருக்க வேண்டிய இயல்புகள் மற்றும் குடிகளைப் பாதுகாக்க அரசனுக்கு இருக்க வேண்டிய இயல்புகள், கடமைகள் என்பன குறித்து திருமந்திரம் எடுத்துக் கூறுகின்றது.

திருமூலர் அரசன் ஒருவனுக்கு கல்வி அறிவு இன்றியமையாதது என்று கூறுகின்றார். அரசன் கல்வி அறிவு அற்றவனாக இருந்தால் நாட்டிற்குப் பல தீமைகள் ஏற்படும் என்றும் கூறுகின்றார். கல்லாத அரசனும் காலனும் ஒரே இயல்புடையவர்கள். காலன் மக்களுக்கு மரணத்தைத் தருபவன் உடலிலிருந்து உயிரைப் பிரித்துச் செல்பவன் கல்வி அறிவில்லாத அரசன் குடி மக்களைத் தக்க வண்ணம் காப்பாற்றாமல் வருத்தி மாயும் படி செய்வான். கல்வி இல்லாத அரசனைக் காட்டிலும் காலன் மிகவும் நல்லவன் என்று திருமூலர் கூறுகின்றார். காலன் யாருடைய விதி முடிகின்றதோ அவர்களுடைய உயிரை மட்டுமே கவர்ந்து செல்வான். ஆனால் கல்லாத அரசன் செங்கோண்மையை விடுத்துக் கொடுங் கோலனாகவே வாழ்வான். அவன் அறத்தின் வழி நடக்காது மக்களைத் துன்புறுத்துவான். ஆதனால் அவனை காலனை விடக் கொடியவன் என்று திருமந்திரம் கூறுகின்றது.

*"கல்லா அரசனும் காலனும் நேர் ஒப்பர்*
*கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்*
*கல்லா அரசன் அறம்ஒரான் கொல் என்பான்*
*நல்லாரைக் காலன் நணுகநில்லானே"(17)*

என்று கூறுகின்றது.

அரசன் நல்லாட்சி செய்ய வேண்டும், நல்லதுசெய்ய முடியாவிட்டாலும் தீயது செயயாமலிருக்க வேண்டும். இயமம், நியமம் என்பனவற்றைப் பின்பற்றவேண்டும் என்றும் மற்றும் இராசதோடம் (இராசாவுக்குரிய குற்றம்) என்பன குறித்தும் திருமூலர் பேசியுள்ளதைக் காண முடிகின்றது.

*"தத்தம் சமயத் தகுதி நில்லாதாரை*
*அத்தன் சிவன் சொன்ன ஆகம நூல்நெறி*
*எத்தண்டமும் செயும் அம்மையில்......" (18)*

ஒரு நாட்டு மக்கள் அனைவரும் ஒரே மதத்தை பின்பற்று பவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்கள் பல்வேறு மதங்களைக் கடைப்பிடிப்பவர்களாக இருப்பார்கள். அரசனும் அம்மதங்களில் ஒன்றைச் சார்ந்தவனாய் இருப்பான். அவ்வரசன் தான் சார்ந்த மதத்தினைப் பேணிப் பாதுகாத்து மற்றைய மதங்களைப் புறக்கணிக்கக் கூடாது. மக்களைப் பலவந்தமாகவோ ஆசை காட்டியோ மதமாற்றம் செய்யக்கூடாது. இவ்வாறு மதமாற்றஞ் செய்வதற்கும் எவரையும் அனுமதிக்கவும் கூடாது. அரசனானவன் மதபேதம் காட்டாது எல்லா மதத்தவரையும் அவரவர் சமயநெறியிலிருந்து வழுவாதொழுகச் செய்ய வேண்டும். தத்தம் சமயநெறிக்கு விரோதமான செயல்களில் ஈடுபடுவோருக்குத் தகுந்த தண்டனையினை வழங்கி அவர்களுக்கு தண்டனை வழங்கவேண்டியது அவனது கடமையாகும். இதன் மூலம் மன்னனானவன் மதசார்பின்றி தம் ஆட்சியை நடத்த வேண்டும் என்னும் வாழ்வியல் உண்மையைப் புகட்டும் நூலாக திருமந்திரம் விளங்குகின்றது.

*"திறந்தரு முத்தியுங் செல்வமும் வேண்டின்*
*மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்*
*சிறந்த நீர் ஞானம் செய்தொழில் யாவையும்*
*அறைந்திடில் வேந்தனுக் காறிலொன்றாமே" (19)*

எனும் திருமந்திர அடிகள் மக்கள் செய்யும் நல்வினை, தீவினை பயன்களில் ஆறிலொரு பங்கு அரசனுக்குரிய தாதலால் மன்னன் செங்கோலாட்சி செய்வதுடன் மக்களையும் நன்னெறியில் வழிப்படுத்த வேண்டும் என்று புகட்டுகின்றது. மற்றும் அரசன் முறை செலுத்தா விட்டால் வளம் குறையும் எனவும் மன்னன் ஆடம்பரத்தைக் களைந்து நாட்டிற்கு நன்மை உண்டாக்க வழி செய்ய

வேண்டும் என்னும் மன்னனின் சிறப்பான ஆட்சிக்கான நெறிமுறைகளை எடுத்துக் கூறுகின்றது.

**அட்டாங்க யோகம்**

இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகியன அட்டாங்க யோகம் எனக் கொள்ளப்படுகின்றது. இவற்றைத் திருமந்திரத்தில்,

*"இயம நியமமே எண்ணிலா வாதனம்*
*நயமுறு பிராணாயா மமபிரத்தி யாகாரஞ்*
*சயமுகு தாரணை தியானஞ் சமாதி" (20)*

எனும் அடிகள் உணர்த்தி நிற்கின்றன.

இவை ஒரு மனிதனின் வாழ்விலே இறைவனை அடைவதற்குரிய வழிகளாகப் பேசப்படுகின்றன. மனிதர்கள் இறைவனை அடைவதற்கு அதுவழி, இது வழி என்று எண்ணித் தடுமாறாது அட்டாங்கயோக நெறியில் நின்று சமாதி அடைய வேண்டும். இதன் மூலம் ஞானம் கைகூடும் என திருமூலர் அறிவுறுத்துகின்றார்.

ஓர் உயிரையும் கொல்லாதவன், பொய் சொல்லாதவன், களவெடுக்காமை, எண்ணித் துணிந்து செய்யும் இயல்புடைமை, நல்லன செய்தல், அடக்கமுடைமை, நீதி நெறியில் நிற்றல், பிறருக்கு தன் பொருளைப் பகுத்துத் தருதல், குற்றம் செய்யாமை, கள் காமம் என்பனவற்றை விடுத்தல் போன்ற ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிப்பவரே இயமத்தை மேற் கொள்ளக் கூடியவன் என்பதை,

*"கொல்லான், பொய்கூறான், களவுஇலான், எண்குணன்*
*நல்லான் அடக்கம் உடையாதன் நடுச் செய்ய*
*வல்லான் பகுத்து உண்பான் மாசு இலான் கள் காமம்*
*இல்லான் இயமத்து இடைநின்றானே"(21)*

எனும் அடிகள் புலப்படுத்தி நிற்கின்றன.

நியமத்தில் நிற்பவன் தூயதன்மை, அருள், சுருங்கிய உணவு, பொறுமை, நேர்மை, உண்மை, உறுதியுடைமை என்பவற்றை வளர்த்தலும், காமம், களவு, கொலை என்னும் தீயனவற்றை ஒதுக்கல் எனும் பத்தினையும் கடைப்பிடித்து நிற்கவேண்டும் என திருமூலர் அறிவுறுத்துகின்றார். அட்டாங்க யோகத்தில் இருக்க வேண்டிய முறையில் இருப்பது ஆசனமாகும். சுவத்திகாசனம், பத்மாசனம், பத்திராசனம், குக்கடாசனம், சிம்மாசனம், வீரம் ஆகிய ஆசனங்களுடன் மேலும் நூற்றிருபத்தாறு ஆசனங்கள் இருப்பதாகத் திருமந்திரம் கூறுகின்றது.

மேலும் திருமந்திரம் பிராணாயாமத்தைச் செய்யும் முறை, அதற்கு குருவருள் அவசியம் என்பதனையும், பிராணாயாமத்தினை மேற்கொள்வதனால் இளமையுடன் இருப்பதுடன் பிறவி நீங்க சிறந்த வழியாக அமையும் என எடுத்துக் காட்டுகின்றது. பிராணாயாமத்திற்கு அடுத்த அங்கம் பிரத்தியாகாரமாகும். இது புறத்தே செல்லும் மனத்தை உள்ளே இழுத்துப் பழகுதலாகும் புறத்தே செல்லுகின்ற மனத்தை உள்முகமாகத் திருப்பினால் சிறிது சிறிதாக இருள் நீங்கி உள்ளத்தில் ஒளியுண்டாகும். இதன் மூலம் இறைவனை தனக்குள் காணலாம். இதனைத் தொடர்ந்து தாரணை, தியானம் என்பனவற்றை மேற் கொள்வதன் மூலம் சமாதி என்னும் பேற்றைப் பெறமுடியும். சமாதி நிலையில் இருப்பவர்களுக்கு அறுபத்து நான்கு கலை ஞானங்களும் கைகூடும். ஞான வடிவான சிவன் அழகான பேரொளியாகப் புலப்படும்.

அட்டாங்கயோகத்தின் பயனாக அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் எனும் அட்டமா சித்திகளும் உண்டாகும் என்பதனை,

*"பணிந்து எண்திசையும் பரமனை......*
*அணிந்து எண்திசையிலும் அட்டமா சித்தி" (22)*

எனும் திருமந்திர அடிகள் எடுத்துக் கூறுகின்றன.

**ஆசைகளை விடுத்தல்**

ஒரு மனிதனது வாழ்விலே ஆசை தான் அனைத்துத் துன்பத்திற்கும் காரணமாக அமைகின்றது. ஆசையை வெல்பவன் பூரண மனிதனாகின்றான் என்று பகவத் கீதை கூறுகின்றது. திருமூலர் மண், பொன், பெண் முதலியவற்றின் மீது பற்று வைத்துக்கொண்டு கடவுளிடத்தில் அன்பு செலுத்தக் கூடாது என்ற கூறுகின்றார். ஆசையே பிறவி நோய்க்கு வித்தாகும். இறைவனைத் தியானிக்கும் போது தியானத்துடன் ஆசைகளை சேர்த்து வழிபடக்கூடாது மனத்திலே ஆசைகள் பெருக துன்பங்களும் பெருகும். ஆசைகளை விட்டோமானால் ஆன்மா உலகியல் துன்பங்களிலிருந்து விடுபட்டுப் பேரானந்த நிலையைப் பெறும்.

*"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்*
*ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்*
*ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்*
*ஆசை விடவிட ஆனந்த மாமே"(23)*

எனத் திருமூலர் சுட்டுகின்றார். மனம் கொள்ளும் மண், பெண், பொன் ஆசையே வாழ்வில் துன்பமாக மாறுகிறது. அதை விட்டொழிக்க வேண்டும் என்னும் வாழ்வியல் உண்மையைத் திருமூலர் உணர்த்தியுள்ளார்

**பொறையுடைமையும் பெரியோரைத் துணைக் கோடலும்**

பொறுத்துக் கொள்ளும் தன்னை உடைமை. உடலில் உள்ள அமுதம் வற்றிடாமல் பொறுத்தல் பொறை நிலை எனப்படும். பொறுமை என்னும் பண்பினை ஒவ்வொரு மனிதரும் தன்னிடம் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவர்களது வாழ்வினை நெறிப்படுத்தக் கூடியது.

பொறி புலன்களோடு கட்டப்பட்டிருக்கும் சித்தியைப் பிரித்துப் பொறுமையை வளர்க்க வேண்டும். மெய்யான நெறியைப் பற்றி வழுவாமல் நிற்கும் யோகியர் நெஞ்சில் மெய்ப்பொருளுடன் கூட வேண்டும் என்ற எண்ணம் ஆகிய பல்லி ஒன்று இருக்கின்றது. இங்கு பல்லி என்பது குறிக்கோளில் உறுதி குலையாதிருக்கின்ற உறுதிப்பாடு எடுத்துக் கூறப்படுகின்றது. மனிதனின் பஞ்ச புலன்களில்

நாக்கும் மூக்கும் பெரும் துன்பத்தைத் தருவன. பிரபஞ்ச மயக்கத்தில் ஈடுபட வைப்பதில் இந்த இரண்டு உறுப்பிற்கும் பெரும் பங்கு உண்டு.மிக நுண்மையானது மூக்கு, பருமையானது நாக்கு இந்த இரண்டையும் பற்றி நிற்கும் சித்தத்தைப் பிரித்து இந்தக் கமையைக் கொஞ்சம் வளர்த்தால் இதுவே பொறையுடைமையை வளர்ப்பதற்குரிய முறையாகும். இதனைத் திருமந்திரம்,

*பற்றி நின்றார் நெஞ்சில் பல்லிதான் ஒன்று உண்டு*
*முற்றிக் கிடந்தது மூக்கையம் நாவையும்*
*தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிதையுள்*
*வற்றாத ஒழிவது மாகமை ஆமே" (24)*

எனக் குறிப்பிடுகின்றது.

திருமந்திரம் பொறுமையை அடைந்த பின்பு அத்தகைய குணம் வளரவும் ஞானிகளின் கூட்டுறவு அவசியம் என்று எடுத்துக் கூறுகின்றது. பெரியோரைத் துணையாகப் பெறுதல் அரியவற்றுள் அரிய செயலாகும். பொறுமைப் பண்பிலிருந்து சோர்வடைய நேரிட்டால் பெரியோரினுடைய துணையே கை கொடுத்துதவும். பெரியோரின் துணையைக் கொண்டு இறைவனை அடைய முடியும். இதனை திருமந்திரத்தில்,

*"ஓடவல் லார்தமரோடு நடாவுவன்*
*பாடவல் லார்ஒலி பார்மிசை வாழ்குவன்*
*தேடவல்லார் க்கருள் தேவர் பிரானொடும்*
*கூடவல் லார்அடி கூடுவான் யான்" (25)*

என வரும் அடிகள் மூலமாக ஓடவல்லார், பாடவல்லார், தேடவல்லார், கூடவல்லார் ஆகிய நால்வரையும் பெரியோர்கள் என்று எடுத்துக் கூறுகின்றது.

**பெண்மை**

பெண் என்ற சொல்லுக்குப் பேணுந்தன்மையுடையவள் என்பது பொருள். கணவனையும், குடும்பத்தையும் மக்கள் என்போரையும் பேணிப் பெருமைப்படுத்துகின்றவள் பெண் என்பதனை,

*தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகை சான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்"(26)*

எனும் திருக்குறள் விளக்குகின்றது. இவ்வாறு விளக்கும் பெண்மையின்பெருமையினைத் திருமந்திரமும் கூறத் தவறவில்லை. மனித வாழ்வில் பெண்கள் முக்கிய இடம் பெறுகின்றனர். பெண்களின் ஒழுக்கம், பெண்களின் இழிவு என்பன குறித்து திருமந்திரம் விளக்கி உள்ளது. உலகில் தலைசிறந்தவர்கள் பத்தினிப் பெண்கள் என திருமூலர் கூறுகின்றார்.

*"பத்தினி, பக்தர்கள் ,தத்துவ ஞானிகள்*
*சித்தங்கலங்கச் சிதைவுகள் செய்தவா'.."(27)*

பக்தர்களையும் முக்தர்களையும் சித்தர்களையும் பெற்று உலகிற்கு வழங்கபவர்கள் பத்தினிப் பெண்களே ஆவார். பெண்களுக்குரிய உயரிய மதிப்பை முழுமையாக இன்றும் கிடைக்கவில்லை. பெண்ணின் பிறப்பிற்கும் ஆணின் பிறப்பிற்குமள் இன்றும் வேறுபாடுகள் நிலவுகின்றன. இறைநிலையிலும், இயற்கை நிலையிலும் பெண்மையின் தேவை ஆணிடத்திலும் ஆணின்தேவை பெண்ணிடத்திலும் உள்ளதை திருமூலர் நன்கு அறிந்துள்ளார். இதனால் பெண்களின்பெருமையை போற்றி ஆண் பெண் கலந்த இல்லற வாழ்வின் மான்பினை உவமையாக்கி பல கருத்துக்களை வழங்கியுள்ளார்.

ஒரு பெண் இல்லறத்தில் ஒருவனுக்கு ஒருத்தி எனும் தர்மப்படி வாழ வேண்டும் என்று திருமந்திரம் உரைக்கின்றது. ஒருவன் தனது மனைவியை விட்டுப் பிறர்மனையை நாடக் கூடாது என்பதனை திருமூலர் பிறர்மனை நயவாமையில் எடுத்துக் கூறுகின்றார். திருமந்திரம் சுட்டும் பெண்மையின் இயல்பு இன்றைய உலக வாழ்விலும் அவதானிக்க முடிகின்றது.

**நோய்களும் நோய்க்கான மருத்துவ முறைகளும்**

மனித வாழ்வில் மருத்துவம் என்பது அவசியமான ஒன்றாகும். சித்தமருத்துவத்தின் மூலத்தினை சித்தர்களே வழங்கினர் என்பது அனைவரும் அறிந்த உண்மை. உடம்புக்கும் உயிருக்கும் உள்ள உறவைச் சுட்டும் திருமூலர் உடம்பினையும் அதன்வழி உயிரினையும் போற்றும் உபாயங்களை எடுத்துக் கூறியுள்ளார். ஒருவர் நீண்டநாள் வாழ்வதற்குரிய வழிமுறைகளை இங்கு எடுத்துக் காட்டுகின்றார்.

*"உடம்பார் அழியில் உயிரார் அழிவார்*
*திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"(28)*

எனும் பாடலின் மூலமாக உடம்பைப் பேணுதல் வேண்டும் என்றும் அதனால் உயிர் உடலில் நீண்டநாள் வாழும் என்று குறிப்பிடுகின்றார். மற்றும் திருமந்திரம் உடலைக் காக்கும் கற்பங்கள் 108 என்று கூறுகின்றது. நாடி பார்த்து நோயினை அறியும் மருத்துவ முறை (திருமந்திரம் 151), மனிதனின் சராசரி இறப்பு வயது70 (திருமந்திரம் 163) என்றும் உடல் அமைப்பு குறித்து குறிப்பிடும் போது கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, நாசித்துவாரம் இரண்டு வாய் ஒன்று கருவாய் எருவாய் என இரண்டு ஆக உடலில் ஒன்பது துவாரங்கள் உள்ளன. உடம்பில் ஐந்திரியங்களும், ஆறு ஆதாரங் களும் உள்ளன. எலும்பு இணைப்புக்கள் முப்பது உண்டு அவற்றைச் சார்ந்துள்ள பொருத்துக்கள் பதினெட்டு இவற்றின் மீது போர்த்தப்பட்டுள்ள பந்தல் ஒன்பது, வரிசையாகவுள்ள எலும்புகள் பதினைந்து என்றும் (திருமந்திரம் 152, 159) எடுத்துக் கூறுகின்றது.

மற்றும் திருமூலர் திருமந்திரத்தில் கலவி குறித்தும் கருவின் வளர்ச்சி நிலை குறித்து கூறுகின்றார். பெண்ணின் வயிற்றில் தோன்றி வளர்ந்து வரும் கரு எவ்வெவ் காரணங்களால் எவ்வெக் காலத்தில் ஆணாகவும், பெண்ணாகவும், அலியாகவும் தோன்றம் எனபது குறித்தும் குழந்தை கருவில் இருக்கும் போதே ஆணா பெண்ணா எனக்கண்டறியும் நிலை குறித்தும்,

எக்காரணத்தினால் குழந்தை உறப்புக் குறைபாடுடையதாக, முடமாக, கூனாக, மந்தத் தன்மையடையதாக, ஊமையாக, குருடாக பிறக்கும் என்பது குறித்தும் எவ் காரணத்தினால் இரட்டைக் குழந்தைகள் உருவாகும் என்பது பற்றியும் திருமந்திரம் வெளிப்படுத்துகின்றது.

*"பாய்கின்ற வாயு குறையிற்குறளாகும்*
*பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்*
*பாய்கின்ற வாயு நடுப்படின் கூனாகும்*
*பாய்கின்ற வாயு மாதர்க்கில்லை பார்க்கிலே"(29)*

எனும் பாடலில் ஆணின் உடலிலிருந்து விந்து வெளிப்படும் போது அவனது வலது நாசியில் சுவாசம் ஓடினால் ஆண் குழந்தை தரிக்கும் எனவும் இடது நாசியில் ஓடினால் பெண் குழந்தை பிறக்கும். ஆனால் இரு நாசிகளிலும் இணைந்து சுவாசம் ஓடினால் கருவுறும் குழந்தை அலியாகப் பிறக்கும் எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். திருமூலர் பல வருடங்களின் முன்பு கண்டறிந்து கூறியவற்றை இன்று நவீன மருத்துவ உலகம் கண்டறிந்தள்ளது. மேலும் நீங்காத் துன்பததைத் தரும் இருமலும் குருதிக் குறைவால் வரும் சோகை நோயும், ஈளை நோயும், வெப்பு நோயும், தொண்டைநோய் போன்ற நோய்கள் நல்லறம் செய்வோருனக்கு வருவதில்லை என்று திருமந்திரம் கூறுகின்றது.

இவ்வகையிலே உடலியக்கம், காயகற்பம், யோகம் போன்ற பல்வேறு மருத்துவப் புலமைகளினை திருமந்திரம் மனித வாழ்விற்கு பயன்படும் வகையில் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளது.

**முடிவுரை**

திருமுறை பகுப்பிலே பத்தாம் திருமுறையாக வகுக்கப் பட்டுள்ள திருமந்திரம் திருமூலரினால் தமிழ்ப் பண்பாட்டுப் பலகணியாகவும், தமிழ் ஞானத் திறவு கோலாகவும், சமூகத்தின் தலை வாசலாகவும் விளங்குகின்றது. இது மானிடர்கள் அனைவரும் கற்றுப் பயன்படுத்த வேண்டிய அரிய கருத்துக் கருவூலங்களைக் கொண்டுள்ளன. திருமந்திரம் சமய தத்துவ கருத்துக்களைத் தருவதோடு வாழ்க்கைக்குத் தேவையான சிந்தனைக் கருத்துக்களை முன்வைத்திருக்கும் ஒரு வாழ்வியல் நெறியாகவும் விளங்குகின்றது.

இவ் உலக வாழ்வியலி அனைவரும் ஜீவகாருண்ய பண்புடையோராக வாழ வேண்டியதன்அவசியம் குறித்தும், மற்றும் அறத்தின் சிறப்பு குறித்தும் அறத்தினை பின்பற்றுவதால் ஏற்படும் நன்மை குறித்தும், அறத்தினை பின்பற்றாதோர் அடையும் நிலை குறித்தும் எடுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. மேலும் நிலையாமைச் சிந்தனையில் இளமை, செல்வம், உடல், உயிர் என்பன அழியக் கூடியன. அவற்றினை நிலையானவை என எண்ணாது நிலையாக இறைவனை பற்றிக்கொள்ளமாறு திருமந்திரம் எடுத்துரைக்கின்றது.

மேலும், கல்வியினைக் கற்பதனால் ஏற்படும் சிறப்பு குறித்தும் கல்லாமை குறித்தும் இவ்வாய்வுக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் மானிட வாழ்வில் தவிர்க்கப் பட வேண்டிய பஞ்சமாபாதகங்களான கொலை, களவு, கள்ளுண்ணாமை, காமம், பொய் ஆகிய செயல்களினை மேற்கொள்ளாது வாழ்தலின் அவசியம் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது. மனிதகுல ஒருமைப்பாடு பற்றியும் அரசன் ஒருவன் நாட்டைப் பாதுகாக்க கொண்டிருக்க வேண்டிய தகமைகள் குறித்தும் அவனது ஆட்சித்திறன் குறித்தும் இங்கு நோக்கப்பட்டுள்ளது. மற்றும் மனித வாழ்வில் அவசியம் பெறும் மருத்துவம் குறித்தும் நோய்கள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டுள்ளது. இத்தகைய வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக் கூறி இல்லறத்தார்க்கும், துறவறத்தார்க்கும் வீடுபேற்றினை வழங்கி மானிட வாழ்வினை சிறப்பாக்குவதிலும் வழிப்படுத்துவதிலும் திருமந்திரம் ஓர் வாழ்வியல் நூலாக விளங்குகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. மாணிக்கம்.அ, (2004), திருமந்திரம் மூலமும் தெளிவுரையும், மெய்யப்பன் பதிப்பகம், ப.252
2. மேலது, பா.262. 3. மேலது, பா.250. 4. மேலது, பா.260. 5. மேலது பா.143. 6. மேலது பா.145. 7. மேலது பா.169. 8. மேலது பா.196. 9. மேலது பா.177. 10. மேலது பா.291. 11. மேலது பா.310. 12. மேலது, பா.200. 13. மேலது, பா.198. 14. மேலது, பா.205. 15. மேலது, பா.201. 16. மேலது, பா.2104. 17. மேலது, பா.238 18. மேலது, பா.247 19. மேலது, பா.244. 20. மேலது, பா.552. 21. மேலது, பா.554. 22. மேலது, பா.640. 23. மேலது, பா.2615 24. மேலது, பா.539 25. மேலது, பா.329 26. நாராயணசாமி. இரா, (2012), திருக்குறள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, ப.56. 27. திருமந்திரம், மு.கூ.நூ, ப.532. 28. மேலது ப.724. 29. மேலது ப.480

**உசாத்துணைகள்**


1. மாணிக்கம, அ., (2004), திருமந்திரம் மூலமும் தெளிவுரையும், மெய்யப்பன் பதிப்பகம்.
2. தவேந்திரன், (மு., (2002), மெய்ப்பொருள், (திருமூலர் காலம் வரலாறும்), இந்துப்பண்பாட்டுக்கழகம்.
3. அருணாசலம, ப., (1973), பக்திஇலக்கியம் ஓர் அறிமுகம், தமிழ்ப் புத்தகாலயம்.
4. (2015), இசைப்பாவும் மந்திரமும் - ஆய்வரங்கச் சிறப்பு மலர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
5. இறையன்பன், (1997), திருமந்திரம் மூலமும் விளக்கவுரையும் பாகம்-01, பாகம் -04, மணிமேகலைப் பிரசுரம், சென்னை 17.
6. சின்னத்துரை சோதிலிங்கம், (2002), இந்து நாகரிகம் சில பார்வைகள், தேன்மொழி வெளியீடு.
7. துரை. இராஜாபுரம், (2010), திருமூலர் வாழ்வும் வாக்கும், நர்மதா வெளியீடு.
8. வெள்ளைவாரணன், க., (2008), பன்னிருதிருமுறைவரலாறு (8-12திருமுறைகள்), சாரதா பதிப்பகம், சென்னை.
9. நாராயணசாமி, இரா., (2012), திருக்குறள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

# ஆன்மீகச் சிந்தனைகளின் வளர்ச்சிப் போக்கில் மின் ஊடகங்களின் (இணையத்தளம்) வகிபங்கு

திருமதி.எஸ்.கேசவன்

தலைவர், இந்துநாகரிகத்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை

**அறிமுகம்**

ஆன்மிக விடயங்கள், மானுடத்தைக் கடந்த இயல்பையும் நோக்கத்தையும் குறிப்பன. இது மனிதர்களைப் பொருள் சார்ந்த, உயிரியலோடு தொடர்புடைய ஒரு உயிரினமாக மட்டும் கருதாமல், பொருள்சார் உலகையும் காலத்தையும் கடந்ததாகவும் இவ்விரண்டில் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவையாகவும் கருதப்படுகின்றது. ஆன்மீகம் என்பது, உடல், ஆன்மா என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைக் குறிக்கும். இது மனம், உடல் ஆகிய வற்றின் இருமைத்தன்மையையும் உணர்த்துகிறது.இதனால், ஆன்மிகம் என்பது, பொருள் சார்ந்த, உலகியல் விடயங்களுடன் முரண்பட்டதாகக் கருதப்படுகிறது. ஆன்மீகம் மனம் கடந்த பெருநிலையை உணர்த்துவதால் ஆன்மீகம் பற்றிய தேடல்கள் மானுட மேம்பாட்டிற்கு இன்றியமையாதொன்று. குறிப்பாக இன்றைய கால கட்டத்தில் இளஞ் சமுதாயத்தினருக்கு இத்தேடல் மிகுந்த அவசியமானதாகும். இவ்விளஞ் சமுதாயம் எளிதில் ஆன்மீகம் பற்றி அறிந்து கொள்ளவும், விளங்கிக் கொள்ளவும் பல வழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. அத்தகைய முயற்சிகளில் மின் ஊடகங்களுக் கூடாக ஆன்மீகச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதும் ஒன்றாகும். அந்தவகையில் இவ்வாய்வு இத்தகைய வகிபங்கினைப் புரியும் Vedic Science Research Centre (www.vsrc.in) எனும் தமிழ் இணையத்தளத்தை மையப் படுத்தியதாக அமைகின்றது.

**ஆன்மீகம்**

ஆன்மிகம் அல்லது ஆன்மவியல் (spirituality) என்பது, இறைவனை வணங்கி ஆன்மாவை உலகத் தளைகளில் இருந்து மீட்டு எடுக்கும் செயலாகும். மானுட வாழ்க்கையை, இயற்கையை, பிரபஞ்சத்தை ஒட்டுமொத்தமாகவும் முழுமையாகவும் அறிவதற்கான ஒரு மானுடமுயற்சியே ஆன்மீகமாகும். முழுமைநோக்கு அல்லது சாராம்சநோக்கு என அதை விளக்கலாம். இது ஆன்மாவுடன் தொடர்புடைய விடயங்களைக் குறிக்கும். ஆன்மிகத்தினைப் பின்பற்றுதல் பயனுள்ள ஒரு செயற்பாடு ஆகும். இது, மத நம்பிக்கை, ஆழ்நிலை உண்மை என்பவற்றுக்கு நெருக்கமான ஒரு கருத்துரு ஆகும்.

மனிதனுக்கு ஏற்படும் நன்மைகளுக்கும், தீமை களுக்கும் அவனே பொறுப்பு. அனைவரிடமும் அன்பாக பேசுதல், அனைவருக்கும் நன்மை செய்தல், அனைவரை யும் மரியாதையுடன் நடத்துதல், எதற்குமே ஆசைப்படாமல் இருத்தல் என்பன ஒரு வகை ஆன்மீக வாழ்க்கை.நமது வலது கையில் செயல் திறமை உள்ளது, அதை மிகச் சரியாக செய்து உண்மையாக வாழ்ந்தால், இடது கையில் வெற்றி தானாகவே வந்து சேரும். ஆன்மீகம் என்பது நாம் நமக்குரிய விடையை நாமே கண்டடைந்து அதை நம்முள் நிறைத்துக்கொள்வதாகும்.

**மின் ஊடகம்**

மொழி மற்றும் குறியீடுகள் மூலம் மனிதர்கள் தொடர்பு கொள்ளும் வழி ஊடகம் எனப்படும். ஊடகங்கள் அச்சு ஊடகம், மின் ஊடகம் என இரு வகைப்படுகின்றது. இவற்றுள் அதிநவீன வழிகளில் ஒன்றாக மின் ஊடகம் உள்ளது. மின் ஊடகங்கள் உலக மயமாகும் சந்தையைப் பின்தொடர்ந்து உலகத்தில் பரவின.

மின் ஊடகங்களில் இணையத்தின் வகிபங்கானது சிறப்பானது. இணையம் ஒரு பன்மொழி ஊடகம். நூற்றுக் கணக்கான செயற்கை மொழிகளுக்குக் கூட இணையத்தில் பக்கங்கள் இருக்கின்றன. இணையம் என்பது அடிப்படையில் டிஜிட்டல் வடிவத்திலுள்ள தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான ஊடகம். இணையம் மூன்று விதமான தகவல் தொடர்பு முறைகளை ஒருங்கே கொண்டிருக்கிறது.

01. இரு தனி நபர்களுக்கிடையே மட்டும் நடக்கும் தனி நபர் நிலைப்பட்ட தொடர்புகள் (உதாரணம் – மின் அஞ்சல், அரட்டை)
02. ஏதோ ஒரு வகையில் ஒன்றுபட்டவர்களுக்குள் நடக்கும் குழு நிலைப்பட்ட தொடர்புகள் (உதாரணம் – மின்னஞ்சல் அட்டவணைகள், செய்திக் குழுக்கள்).
03. மூன்றாவது ஒரு தனி நபர் அல்லது நிறுவனம் பரவலாகத் தகவல் பெறுநர்களுக்காக நடத்தும் வெகு சன ஊடகங்கள் (உதாரணம் – வலைய கங்கள், மின் அஞ்சல், மின் இதழ்கள்).

இத்தகைய தன்மைகளின் ஊடாக இணையத்தளம் சந்தை முதன்மைப்படுத்தும் கலாசாரங்களுக்கு மாற்றாக, எண்ணற்ற பிற கலாசாரங்களுக்கான பாலமாகவும் இருக்கிறது. அது எதிர்பாராதவர்கள் மத்தியில் புதிய உறவுகளை உருவாக்குகிறது. உலகம் முழுவதிலும் உள்ள ஒரு குறிப்பிட்ட இனத்தவரை அல்லது ஒரு குறிப்பிட்ட விஷயங்களில் ஒற்றுமை உடையவர்களை இணைக்கின்றது.

Vedic Science Research Centre (www.vsrc.in)

இந்துமதச் சார்பான ஒரு இணையத்தளமாக www.vsrc.in உள்ளது. இருப்பினும் பிறமதக் கொள்கைகளை ஒப்பீட்டளவில் வெளிப்படுத்துகின்றது. இவ்விணையத்தளம் பிரதானமாக ஐந்து பகுதிகளைக் கொண்டது. முகப்பு, கட்டுரைகள், ஆடியோ, வீடியோ, வெளியீடுகள் எனும் இவ்வைந்து பகுதிகளும் ஆன்மீகத்தை மையப்படுத்தியவை. இருப்பினும் சமகால நிகழ்வுகள், பிரச்சினைகள் என்பனவும் இவ்விணையத்தளத்தில் ஆராயப்படுகின்றது. இது இளைஞர்களை ஆன்மீகத்தின் பால் ஈர்க்கும் ஒரு உத்தியாகவும் கருதலாம்.

**கட்டுரைப் பகுதி – பெண்கள் நிலை**

கட்டுரை எனும் பகுதியில் பல்வேறுபட்ட அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. வேத காலம் தொட்டு நம் பாரத நாட்டில் பெண்களின் நிலை மிகவும் மேலோங்கியே இருந்துள்ளது. பெண்கள் நன்கு படித்தவர்களாகவும், சிறந்த நிர்வாகிகளாகவும் இருந்துள்ளனர். நம் நாட்டில் ஆண்களும், பெண்களும் சமம் என்பதையும் விட ஒருவருக்கொருவர் நிகரானவர்களாகவும் ஒத்துழைப்பவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதே உண்மை. பழங்காலத்தில் ஆண்களும் பெண்களும் தங்களுக்கு இயற்கையாக அமைந்திருக்கும் உடற் கூறுகளின் திறன் மற்றும் தங்களின் இயல்பான வலிமை ஆகியவற்றை நன்றாக புரிந்து வைத்திருந்தனர். அதன் அடிப்படையில் ஆண்களும் பெண்களும் இந்தச் சமுதாயத்தில் அவர்களின் பங்களிப்பை முறையாக அளித்து இந்த மனித குலம் தழைக்கச் செயல்பட்டனர். அதுவே ஹிந்து தர்மமாகவும் இருந்தது. இத்தகை செய்திகளைத் தரும் 'தேவை மகளிர் தினம் அல்ல மகளிர் திறன்!' எனும் தலைப்பில் அமைந்துள்ள கட்டுரை ஆண்களுக்குச் சமமாகவே பெண்கள் இருந்துள்ளனர் என்பதனை வெளிப்படுத்துகின்றது.

**சபரிமலையின் பாரம்பரியம் பாதுகாக்கப்படவேண்டும்**

பெரும்பான்மையான இந்துப் பெண்கள் எப்படி ஷிங்னாபூர் சனீஸ்வரன் கோவிலின் பாரம்பரியம் காப்பாற்றப்படவேண்டும் என்று விரும்புகிறார்களோ, அதே போலத்தான் மிகப்பெரும்பான்மையான இந்துப் பெண்களும் சபரிமலையின் பாரம்பரியம் காப்பாற்றப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஹிந்து கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவை காப்பாற்றப்படவேண்டும் என்று வருகின்ற போது, அதில் பெண்களின் பங்கு மகத்தானது என்பது வரலாற்று ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும், அன்றாட வாழ்வியலிலும் நிறுபிக்கப்பட்ட ஒன்று என 'சபரிமலையின் பாரம்பரியம் பாதுகாக்கப்படவேண்டும்' எனும் தலைப்பில் அமைந்த கட்டுரை கூறுகின்றது.

**ஆலயங்களில் ஆடைக் கட்டுப்பாடு அவசியம்**

இத் தலைப்பில் அமைந்துள்ள கட்டுரை ஹிந்து மத விஷயங்களை மட்டுமே கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாக்கும் திராவிட இனவெறியாளர்களும், நாத்திகர்களும், தங்களை முற்போக்காளர்கள், சீர்திருத்தவாதிகள் என்று சொல்லிக்கொள்பவர்களும், ஹிந்துக்களிலேயே ஒரு சிறு பிரிவினரும் ஆடைகள் கட்டுப்பாட்டிற்கு எதிராக பேசுவது அவர்களது அறியாமையையும் அகம்பாவத்தையும் தான் காட்டுவதாக இருக்கின்றது என விவாதிக்கின்றது.

**கம்பன் என்றொரு மானிடன்**


பேராசிரியர் சாமி தியாகராசன் அவர்களின் "கம்பன் என்றொரு மானிடன்" என்ற நூலும் அவர்தம் பண்புக்கு உரைகல்லாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை. இந்நூலில் பாரதியின் வாக்கினைக் கம்பன் கண்ட மானுடவியல் மூலம் அவர் எடுத்துக்கூறும் பாங்கும், விளக்கும் விதமும் அருமை. கம்பனைப் பற்றி எத்துணையோ ஆசிரியர்களும் தமிழறிந்த சான்றோரும் தத்தம் நோக்கில் விரிவுரை ஆற்றியுள்ளனர் ஆய்வு நூல்கள் எழுதியுள்ளனர். அவர்களின் வரிசையில் வந்த சாமி தியாகராசன் அவர்களும் தம் நூலில் கம்பனைப் பற்றி ஆய்ந்து கூறியுள்ளார். ஆனால் "கம்பன் என்றொரு மானிடன்" என்ற பாரதியாரின் வாக்கினை தன்னுடைய நூலுக்குத் தலைப்பாக அவர் வைத்து நாம் மறக்க இயலாதபடி நூலை அமைத்துள்ளார் என 'கம்பன் என்றொரு மானிடன்' எனும் நூலின் விமர்சனம் ஒரு கட்டுரையாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளின சமயம் சைவசமயமே**

சிலப்பதிகாரத்தை எழுதிய வித்தகப் புலமையாளர் இளங்கோவடிகள் என்றும் சிலர் அவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் என எழுதியும் பேசியும் வருகின்றனர். அவர் சமண சமயத்தவர் எனக் கூறுவதற்கு நூலில் எந்த ஆதாரமும் இல்லை. பிறகு ஏன் அவர்கள் அவ்வாறு சொல்கிறார்கள் என்றால், அடியார்க்கு நல்லார் என்னும் உரையாசிரியர் சொல்லிச் சென்ற கருத்தை ஏற்று அவ்வாறு சொல்லிவருகின்றனர் என விவாதிக்கின்றது 'சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளின் சமயம் சைவசமயமே' எனும் கட்டுரை.

**ஆடியோப் பகுதி**

ஒலி வடிவில் பல பயனுள்ள ஆன்மீக மற்றும் பண்பாடு ரீதியான தகவல்களை இம்மின்னூடகம் வெளிப்படுத்து கின்றது. மதமாற்றம் என்பது ஒரு சமூகநோய் என அடையாளப்படுத்தும் இவ்வூடகம் 'மதமாற்றம் ஒரு




தேசிய அபாயம்' எனும் தலைப்பில் பயனுள்ள பல தகவல்களைத் தருகின்றது. வீரத்துறவி இராம. கோபாலனின் 87வது பிறந்த தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பல்திறப்பட்ட வல்லுனர்களால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகள் இதில் இடம் பெற்றுள்ளன.

திருத்தொண்டர்களின் வரலாற்றையும் அவ்வரலாறுகள் ஊடாக உன்னதமான சமுதாயச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் வகையில் 'பெரிய புராணச் சிந்தனைகள்' தொடர் சொற்பொழிவுகளாக இதில் பதியப்பட்டுள்ளன. பெரிய புராணத்தில் வாழ்வியல் மிக நேர்த்தியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. புத்தாண்டு தமிழ்த் திருவிழா சிறப்புரை ஒலி வடிவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சொற்பொழிவு பேராசிரியர் முனைவர்.சாமி தியாகராசன் அவர்களால் ஆற்றப்பட்டது. மொழி, சமயம் என்பன பற்றி மிகச் சிறப்பாக இதில் விபரித்துள்ளார்.

**வீடியோப் பகுதி**

இப்பகுதி ஆன்மீகம் தொடர்பான பல விடயங்களை ஒளியொலி வடிவில் வெளிப்படுத்துகின்றது. இப்பகுதி நான்கு தலைப்புக்களில் இடம்பெறுகின்றது. முதலாவதாக அமைவது ஆவணங்கள் எனும் பகுதி. தமிழகத்தில் அடிப்படை உரிமையற்ற இந்துக்கள், இந்துப் பெண்களுக்கு பாதுகாப்பில்லாத தமிழகம் போன்ற தலைப்புக்களில் ஆவணப்படங்கள் இடம் பெற்றுள்ளன. இன்றைய சமுதாயத்தை கவரும் வகையில் ஆன்மீகத்தையும் சமூக பிரச்சினைகளையும் ஆவணப்படங்கள் மூலம் தெளிவு படுத்தியிருப்பது இம்மின் ஊடகத்தின் சிறப்பம்சமெனலாம்.

வீடியோ பகுதிக்குள் இடம் பெறும் மற்றுமோர் தலைப்பு 'தொலைக்காட்சி விவாதம்' என்பதாகும். சமகால பிரச்சினைகளை மையப்படுத்திய தலைப்புக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொலைக்காட்சிகளில் விவாதிக்கப்பட்ட ஒலிநாடாக்கள் இங்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. வெவ்வேறு தொலைக்காட்சிகளின் விவாதங்களும் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. சன் தொலைக்காட்சி, மக்கள் தொலைக்காட்சி, கேப்டன் தொலைக்காட்சி, வின் தொலைக்காட்சி போன்ற தொலைக்காட்சிகளின் விவாதங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை யாவும் ஆன்மீகம், பண்பாடு தொடர்பானதாக உள்ளமை குறிப்பிடற்பாலன.

**சொற்பொழிவுகள்**


மூன்றாவதாக அமையும் இத்தலைப்பில் ஆன்மீகம், சமகால மதப் பிரச்சினைகள் தொடர்பாக பல்துறை சார்ந்த நிபுணர்களால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகள் ஒலியொளி பதிவுகளாக இடம் பெற்றுள்ளன.

**மறுமொழிகள்**

நான்காவது பகுதி 'மறுமொழிகள்' எனும் தலைப்பில் அமைகின்றது. இப்பகுதி முற்றுமுழுதாக சமகால பிரச்சினைகளுக்கு உடன் பதிலுரைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் இடம்பெறும் பிரச்சினைகளை அடையாளங்கண்டு ஒலியொளி மூலம் இதில் பதில் கொடுக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

**வெளியீடுகள்**

இப்பகுதி இரண்டு வகைப்பாடுகளாக காட்டப்பட்டுள்ளது. அவை புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள் என்பனவாகும். துண்டுப்பிரசுரங்கள் ஆங்கிலேய கால சமயப் போட்டிகளை வெளிப்படுத்தும் துண்டுப்பிரசுரங்களை ஒத்தவையாகக் காணப்படுகின்றன. இந்துக்கள் தமது மத ஆன்மிகச் சிந்தனைகளில் நிலை பெற்றிருக்க வேண்டும் என்கின்ற உயரிய நோக்கு இத்துண்டுப் பிரசுரங்களில் வெளிப்படுகின்றது. இந்துக்கள் தெரிந்திருக்க வேண்டிய




கிறிஸ்தவம், இந்துக்கள் தெரிந்திருக்க வேண்டிய இஸ்லாம் என அத்துண்டுப் பிரசுரங்கள் அமைகின்றன.

வெளியீட்டு பகுதிக்குள் இடம் பெறும் முதற்பகுதி புத்தகங்கள். புத்தகங்கள் பலவற்றைஇவ்விணையத்தளம் வாசகர்களுக்கு அறிமுகம் செய்கின்றது.

எ-டு 1. சொன்னால் விரோதம்

2. ஆயினும் சொல்கிறேன்,

3. பாதகம் செய்பவரைக் கண்டால்

போன்ற நூல்கள் சமகால பிரச்சினைகளை எடுத்துக் கூறுபவனவாக உள்ள போதிலும் இந்தமத ஆன்மீகச் சிந்தனைகளுக்குட்பட்ட வழிமுறைகளையே உரைக் கின்றது.

**நிறைவாக**

ஆன்மீகம் தொடர்பான இளஞ் சமுதாயத்தின் தேடல் காலத்தின் கட்டாயமாக உள்ளது. குறைந்தபட்சம் அது பற்றிய அடிப்படை அறிவையும் ஆன்மீக அனுபவத்தையும் பெற்றிருக்க வேண்டுமென்பதை சமீபத்தைய நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன. இவ் உணர்வுகளால் ஒருவன் சிறந்த பண்புள்ளனாக மாற முடியும். வையத்துள் வாழ்வாங்கு வாழ முடியும். எனவேதான், இளஞ் சமுதாயம் அதிகளவில் பயன்படுத்தும் மின் ஊடகங்களில் குறிப்பாக இணையத்தளங்களில் ஆன்மீகச் சிந்தனைகளை அவர்களுக்கு ஏற்ற வகையில் கூற வேண்டியுள்ளது. இந்த தேவையை நிறைவேற்றும் ஒரு மின் ஊடகமாக ஏனனைஉ ளுஉநைஉெந சுநளநயசஉா ஊநவெசந (றறற.எளசஉ.ைை) இணையத்தளம் அமைகின்றது. எனினும் பல்பரிமாணங்களில் மேலும் விரிவுபடுத்தினால் இன்னும் சிறப்பினைக்காணலாம்.

**உசாவிய இணையத்தளங்கள்**

1. www.vsrc.in
2. www.cir.nus.edu
3. www.thamizh.com
4. www.kanithamizh.org

# திருநாவுக்கரசர் திருப்பாடல்களில் வாழ்வியற் சிந்தனைகள்

அ.கலைச்செல்வி[1], சோ.பிறேமிளா[2], வி.சிவசங்கரி[3]
இரண்டாம் வருடம் (இந்து நாகரிக சிறப்புக் கற்றை)
இந்துநாகரிகப் பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**

பல்லவர்காலத்தில் பெருக்கெடுத்த தேவாரங்களினால் சைவ சமயமும் திவ்வியப்பிரபந்த வெள்ளத்தில் வைணவ சமயமும் புதுப்பொலிவு பெற்றுச் சிறந்து விளங்கின. இப்பெருமை மிகு பணியின் முக்கிய கர்த்தா "நாவுக்கரசர்" எனப்படும் அப்பரடிகள். அவரது திருவாக்கில் தோன்றிய தேவாரப் பதிகங்களாக இன்று கிடைப்பவை 313 ஆகும். பல்வேறு சிவாலயங்களை வணங்கி, அவற்றின் சிறப்புக் களையும், அங்கு உறையும் சிவபெருமானின் அருட் திறத்தினையும் அடியார் பாடியுள்ளார். இத்தகைய அப்பர் தேவாரத்தில் மனித வாழ்வியலுக்கான சிறந்த சிந்தனை களும் வெளிப்படுகின்றன.

**ஆய்வின் நோக்கம்**

அப்பர் தேவாரங்களில் மனித நேயம் பற்றி ஆய்வு செய்வது சமூகத்திற்கு இட்டுச் செல்வதே ஆய்வாளரின் முக்கிய நோக்கமாகும். எனினும் ஆய்வின் விரிவஞ்சி தெரிவு செய்யப்பட்ட திருமுறைகளே இங்கு எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன.

**ஆய்வின் நோக்கம்**

அப்பர் சுவாமிகளின் தேவாரத்தில் கூறப்பட்டுள்ள வாழ்வியற் சிந்தனைகளை எடுத்துக்காட்டுவதோடு அமையாது அது தற்கால சமூகத்தில் பெறும் இடத்தினையும் மதிப்பீடு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வு எல்லை**

திருமறைகளில் அப்பர் சுவாமிகளின் தேவாரத் திருப்பதிகங்களின் மூலங்களே ஆய்வின் எல்லையாகக் கொள்ளப்படுகின்றன.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வின் முதனிலைத் தரவுகளாக அப்பர் சுவாமி களின் தேவாரத் திருப்பாடல்கள் இவ்வாய்வின் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அப்பர் சுவாமிகளின் தேவாரம் தொடர்பாக வெளிவந்த நூல்களும் பிற ஆக்கங்களும் இவ்வாய்வின் இரண்டாம்நிலைத் தரவுகளாக அமைகின்றன.

திறவுச் சொற்கள்:பக்தி இலக்கியம், அப்பர் தேவாரம், வாழ்வியல், ஒழுக்கம்

**ஆய்வுஅறிமுகம்**

சங்க காலம் முதல் சோழர் காலம் வரையான காலப் பகுதியில் தமிழ் மொழி மூலமாக எழுந்த பக்தி இலக்கியங்களின் தொகுப்பே பன்னிரு திருமுறைகளாகும். பன்னிரு திருமுறைகளில் சம்பந்தர்இஅப்பர்இசுந்தரர் ஆகிய தேவார முதலிகளால் பாடப்பட்ட முதல் ஏழு திருமுறைகளே தேவாரம் என அழைக்கப்படும். இவற்றுள் சேக்கிழார் கூறுவற்கிணங்க

*"தேய்ந்த உடலும் தேயாத உள்ளமுமாய் இறைவனைத் தேடிய முதல் மனிதன் திருநாவுக்கரசர்"*[1]

இவரது திருப்பாடல்கள் பக்தியை மையப்படுத்தியே இருந்தாலும் அப்பர் பெருமான் தனது வாழ்க்கையில் பெற்ற அனுபவத்தால் மனித குலத்திற்கு அறிவுறுத்திய பல நற்செய்திகளையும் சமூகத்திற்கு தேவையான வாழ்வியல் சிந்தனைகளையும் அடையாளம் காண முடிகின்றது.

**திருமுறைகளின் வைப்பில் அப்பர் சுவாமிகளின் தேவாரம்**

இறையருள் பெற்ற அருளாளர்களால் இயற்றப்பட்ட பாடல்களானது இறைவனைப்போற்றித்துதிக்கும் திருத்தமிழ் பாடல்களான திருமுறைகளாக வகுக்கப் பட்டுள்ளன. சோழப்பேரரசான இராஜராஜசோழன் நம்பியாண்டார் நம்பியைக்கொண்டு வேத மந்திரம் போன்று சக்தி வாய்ந்த திருமுறையை பன்னிரெண்டாக தொகுத்துள்ளார். சிவபுரத்து திருஞானசம்பந்தர் முதலாகத் தெய்வந் சேக்கிழார் ஈறாவதாகவுள்ள அருளாசிரியர்கள் இருபத்தெழுவர் இவற்றுள் முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. இவையேஅடங்கன் முறை என அழைக்கப் படுகின்றது. முதல் மூன்று திருமுறைகளும் சம்பந்தராலும் நான்குஇ ஐந்துஇ ஆறாம் திருமுறைகள் அப்பராலும் ஏழாம் திருமுறை சுந்தரராலும் பாடப்பட்டது.

'திரு', 'முறை' என்னும் சொற்களின் சேர்க்கையே திருமுறையென அழைக்கப்படுகின்றது. அழகு, அறிவு, செல்வம், நல்வினை முதலிய பல பொருள்களை

உள்ளடக்கிய செஞ்சொல் ஆகும். முறை என்ற சொல்லுக்கு உறவு, ஒழுக்கம், ஒழுங்கு, குணம், பழமை எனப் பல பொருள்கள் உள்ளன. எனவே தெய்வத்தன்மை பொருந்திய நூல் எனப் பல பொருள்கள் உள்ளன. எனவே இந் நூல் உயிர்களைச் செம்மையான ஒழுங்கு முறையில் இறைவனிடம் சேர்ப்பிக்கும் நூல் என பொருள்படும். இதனை

*"இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்*
*முறைவரை வேனெனமுயல்வ தெக்குமால"*[2]

எனவரும் கந்தபுராணச் செய்யுளடிகள் உணர்த்துகின்றது.

ஏழாம் நூற்றாண்டில் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்ற ஊரில் வேளான் மரபில் குறுக்கையர் குடியில் புகளனார் என்போருக்கும் மாதினியார் என் போருக்கும் மகனாகத் தோன்றினார். இவரை உழவாரப்படையாளிஇ மருணீக்கியார்இ தருமசேனர், வாசீகர் போன்ற பல பெயர்கள் காணப்படுகின்றது. சரியை நெறியில் நின்று எண்பத்தொரு வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து காட்டி சாதாரண மனிதனும் தன்னலமற்ற தொண்டினாலே உய்வடைய முடியும் என்பதை எமக்கு உணர்த்தியவர். சூழை நோய் கொடுத்து ஆட்கொள்ளப்பட்டவர். தாம் சென்ற தலங்கள் தோறும் உழவாரத்தொண்டாற்றி 'தொண்டுக்கு அப்பர்' என்ற சிறப்பையும் பெற்றார்.

*"நங்கடம்பனைப் பெற்றவன் பங்கினன்*
*தென்கடம்பைத் திருக்கடக் கோயிலான்*
*தன் கடன் அடியேனையும் தாங்குதல்*
*என்கடன் பணிசெய்து கிடப்பதே".*[3]

இவ்வாறு சமணர்கள் ஆற்றிய கொடுமைகளையெல்லாம் இறையருளியவென்று 'நாமார்க்கும் குடியல்லோம் நமணை யஞ்சோம்' என இறைவனுக்கேயன்றி வேறு எவருக்கும் ஆட்படமாட்டேன் என உறுதியாய்க் கூறி தாச மார்க்கத்தில் நின்று இறைவன் இருக்கும் உலகத்தை அடைதலாகிய சாலோக முத்தியை அடைகிறார்.சைவத் திலிருந்து சமணத்துக்கு மாறி பின்,

*"சிவனென்னும் ஓசையல்ல தளையோ*
*உலகில் திரு நின்ற செம்மை உளதே"*[4]

என சைவத்தை தளைத்தோங்கச்செய்த இறைப்பிரியர் அவரே ஆகும். இவரால் பாடப்பட்ட பாடல்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டதோடு இவை 'தேவாரம்' என அழைக்கப்படுகிறது. 312 பதிகங் களும் 3066 பாடல்களையும் கொண்டுள்ளது. இவற்றுள் பண்ணமைந்த பாடல்கள் அனைத்தும் நான்காம் திருமுறையிலும் திருக்குறுந்தொகைப் பதிகங்கள் அனைத்தும் ஐந்தாம் திருமுறையிலும் திருத்தாண்டகப் பதிகங்கள் ஆறாம் திருமுறையிலும் அடங்கும். இறைவனது திருவருட் பெருமையினை உலக மக்கள் உணர்ந்து போற்றும்படி வியப்புடைய அருட் செயல்கள் பல நிகழும் வண்ணம் பாடப்பெற்ற திருப்பதிகங்கள் அற்புதத் திருப்பதிகங்களாகும். 'கூற்றாயினவாறு விலகக்கவீர்' எனும் அற்புதத் திருப்பதிகம் நான்காம் திருமுறையில் முதற் பதிகமாகவும் ஐந்தாம் திருமுறையில் 'அன்னம் பாலிக்கும்' என்ற கோயில் திருப்பதிகம் முதலிலும் அங்கணமே அரியானை என்ற கோயில் பெரிய தாண்டகம் முதலாக அமைந்தது. இறைவன் திரவடி நிழலை எய்து இன்புறும் நிலையில் பாடிய 'எண்ணுகேள என் சொல்லி எண்ணுகேளா?' என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் ஆறாம் திருமுறையில் அமைந்துள்ளது.[5]

**வாழ்வியற் சிந்தனைகள்**

இவரது வாழ்வியல் சிந்தனைகள் பற்றி நோக்கும் போது இவ்வுலகில் தோன்றியமனிதர் அனைவரது வாழ்வும் வளம் பெறச் செய்வதற்கு சமயம் முக்கிய காரணியாக அமைகின்றது. அதாவது மனிதனை பண்புடையவனாக்குவது சமயமே. அந்த வகையில் மனித சமூகம் வாழ்வதற்கென சில நியமங்களை அச் சமூகம் சார்ந்த சமயங்கள் எடுத்துரைக்கின்றன. அதே போல் மக்கள் வாழ்வதற்கான வழிமுறைகளை திருஞாவுக்கரசர் தேவாரத்தில் அறியமுடிகின்றது.

*"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது*
*தானமர்ந்து வருஉம் மேவற்றாகும"*[6]

என்பது தொல்காப்பியம். இன்பமாக வாழ நினைப்பது உயிரியற்கை இன்பத்தை அடைவதற்குரிய வழிமுறைகள் பலவாகும். இவற்றுள் சமயமும் ஒன்று. எனவே மனித வாழ்க்கை சமயத்தோடு மிகவும் தொடர்படையது.

திருத்தொண்டின் நெறியில் இவ்வுலகில் வாழ்வதற் காக வந்து தோன்றியவர் அப்பர். பெருந்தகை இறையியலோடு கூடிய வாழ்வே ஏற்றம் பெறும் என்பதைத் தம் வாழ்விலும் வாக்காலும் உணர்த்தியவர். அந்த வகையில் அதற்கான வழிமுறைகளில் மனிதர் களுக்கு ஏற்றதான வாழ்வியல் சிந்தனைகள் பற்றி நோக்க வேண்டும்.

**பிறவிப்பயன்**

அடுத்து பிறவிப்பயன் பற்றிக் கூறும் போது மனிதன் இறையுணர்வுடன் கூடிய அருள் வாழ்க்கை நடத்தும் போதுதான் அவனுடைய பிறவிக்கு பொருள் உண்டு. அப்பர் பிறவியை பல வகையில் இகழ்ந்து பாடியுள்ளார். எனினும் இறைவனை வணங்குவதற்கும் அவனுக்கு பணிசெய்வதற்கும், அவன் புகழ் போற்றவும் இப்பிறவி உரியதாக அமைந்து விட்டால் அத்தகைய பிறவி வேண்டப்படுவது என்கிறார்.

*"மனிதப் பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே"*[7]

உலகப்பொருள்களில் பற்றுக் கொண்டு பொய்யான வாழ்க்கை நடத்தும் மனிதனின் சிக்கித்தவிப்பை இகழ்வதை காணலாம்.

*"வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்துடுமின்"*[8]

எனவே பிறவி எடுத்ததன் பயனாக வாழ்க்கையை நன்நெயியில் ஒழுகி இறைவழி நிற்பதே பிறவிப்பயன்

என அப்பர் குறிப்பிடுகிறார். அறம் மற்றும் அருள் பற்றிக் கூறும் போது அருளும் அறமும் பிணைந்த வாழ்வே பண்பட்டுச் சிறக்கும் என்பது அப்பரின் வாக்கு. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் உயரிய கொள்கைக்கிணங்க அன்பும் அருளும் உலக மக்களுக்கு அமையுமாக இருந்தால் போரும் பிணக்கும் தன்னலமும் நீங்கி வழம் பெற்று நல்வாழ்வு வாழலாம் எனும் கூற்றின் மூலம் வாழ்வியல் கொள்கையால் அறிவுறுத்தினார்.

*"யாம் இரப்பவை*
*பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்*
*அருளும் அன்பும் அறனும் மூன்றும்"*[9]

பரிபாடல் கூறுவதை ஈண்டு நோக்கலாம். இதனையே அப்பர் மக்களையும் இவ்வழியை பின்பற்றத் தூண்டுகிறார்.

*"சலங்கொடுத்துத் தாயாமூல தன்ம மென்னுந்*
*தத்துவத்தின் வழி நின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்*
*தலங் கொடுக்கும் நம்பி"*[10]

**மனவுறுதி**

மனவுறுதி பற்றி அப்பர் கூறும் போது அன்பும் அறமும் கூடிய வாழ்க்கைக்கு மன உறுதியற்ற எண்ணங்களும் மனத்தடுமாற்றங்களும் உறுதுணையாக அமையாது. தனது குறிக்கோளை அடைய முடியும் என்ற அசையாத நம்பிக்கையும் அதன் அடிப்படையில் எழுகின்ற மனவுறுதியுமே வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படை. இதற்கு அப்பரையே எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். அப்பர் தன் வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் ஏற்பட்ட துயரங்களையும் சோதனைகளையும் தம்முடைய மனவுறுதியைக் கொண்டே வெற்றி பெற்றார்.

*"வினைத்திட்ப பென்பதொருவன் மனத்திட்பம்*
*முற்றைய வெல்லாம் பிற"*[11]

இக்குறளில் செயலுறுதிக்கு மனவுறுதி அடிப்படை எனலாம். இதனை

*"நிலையில் திரியாது அடக்கியான் தோற்றம்*
*மலையிலும் மானப் பெரிது"12*

இதனை அப்பர் வாழ்க்கை வெற்றிக்கு மனவுறுதி வேண்டும் இ சற்றுக் கலங்கினாலும் ஐம்புல யானையால் அலைக்கழிக்கப் பட்டு அல்லலுற நேரிடும் என்பதை

*"மலை வந்து வீழினும் மனிதர்காள்*
*நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்"*[13]

உறுதியான எண்ணத்திற்கு எப்போதும் ஆற்றலுண்டு. காந்தியடிகள், ஆபிரகாம் லிங்கன், நெப்போலியன் போன்றோரின் வாழ்க்கையில் மனவுறுதியே நிலைத்த புகழைப் பெறுவதற்கு காரணமாய் அமைந்தது.

**நிலையாமை**

மனித வாழ்வில் நிலையாமை என்பது மிகப் பெரிய உண்மையாகக் காணப்படுகின்றது. இளமைக் காலத்திலே நிலையாமை அனுபவத்தை அப்பர் நன்கு உணர்ந்திருந்தார். அதனால் 'நில்லாத உலகியல்பு கண்டு இ நிலையான வாழ்க்கை அல்லேன்' என்று முழுமையான துறவு நிலையைத் தழுவினார். அவர் சார்ந்த சமண சமயமும் நிலையாமைத் தத்துவத்தை முதன்மைப்படுத்திப் பேசியதால் அப்பரின் மனதில் நிலையாமை உணர்வு ஆழப் பதிந்துவிட்டது எனலாம். சைவத்திற்குத் திரும்பிய பின்னும் நிலையாமையிலிருந்து மீளவில்லை. எனவே அவரது பாடல்களில் நிலையாமை பற்றிய கருத்துக்கள் மிகவும் முக்கியமானதாக காணப்படுகின்றது. அவை மக்களுக்கு கூறும் அறிவுரைகளாகவும் அமைந்துள்ளன. இதனைப் பல கோணங்களில் காண்கிறார்.

அப்பர் வாழ்க்கை பற்றிக் கூறும் போது வாழ்கின்ற சில நாட்களுள் இல்வாழ்க்கையை நிலைத்ததெனக் கருதி உலகமே தங்களுடையது என்ற ஆணவத்தில் மக்கள் மதி மயங்கிச் செய்யும் செயல்களை கண்டிக்கும் நோக்கில் வாழ்க்கை நிலையுடையதன்று எனக் கூறுகிறார். ஆனால் வாழ்க்கையை வெறுக்க வேண்டும் என்பது இவரது நோக்கமன்று. இதனை அப்பர் அழியக் கூடிய இல்வாழ்க்கையை பெரிதென எண்ணி அந்நெறியில் திரிந்து உழலல் வேண்டாம் என்கிறார்.

*"சாமனை வாழ்க்கை யான*
*சலத்து ளேஅழுந்த வேண்டாம்"*[15]

இதையே 'வெறுத்தேன் மனை வாழ்க்கையை' என சம்பந்தரும் குறிப்பிடுகிறார். அடுத்து செல்வம் பற்றிக் கூறும் போது இவ்வுலக வாழ்வில் மனிதனின் அடிப்படை இன்றியமையாத ஒன்று செல்வம் இச் செல்வம் ஓர் இடத்தில் எப்போதும் நிலைத்திருப்பதில்லை. இறையன்பை விடுத்துச் செல்வதையே ஒரு பொருளாகக் கொண்டு வாழும் வாழ்வு மான்புடைய வாழ்வாகாது என்கிறார்.

*'மாடு தேடி மயக்கினில் வீழ்ந்துநீர்*
*ஓடி யெய்த்தும் பயனில்லை ஊமர்காள்..."*[16]

ஊமர்காள்! செல்வத்தைத் தேடி நிலையில்லாதனவற்றை நிலையென்று உணர்ந்து நீங்கள் ஓடியும் தேடியும் இளைத்தும் சேர்த்து வைத்தால் பயன் என்ன? (மாடு - செல்வம்) என்கிறார். நிலையில்லா செல்வத்தால் இன்று மனிதன் பஞ்சமா பாவங்களையும், ஏற்றத் தாழ்வுகளையும் இ சுயநலத்தையும் கொண்டு வாழும் நிலையில் இவர் கூறுவதற்கிணங்க செல்வத்தையே பெரிதென்று எண்ணி பொய்யெல்லாம் பேசித்திரியும் வெட்கமற்றோர் உயிர் நீக்குமுன் இறைவன் திருவடி நினைய வேண்டும் என்கிறார்.

அதே போல் இளமை பற்றிக் கூறும் போது மனித உடலானது என்றும் ஒரே நிலை கொண்டதன்று. இளமை அகலும் மூப்புத் தொடர்ந்து வழமை கெட்டு பிணியும் வந்தடையும். மனித வாழ்விலே இளமைக்காலம் ஆற்றலை அளிக்கும் வல்லமை உடையது. ஆந்த ஆற்றலை அடக்கிக் காக்க வேண்டும். இக்காலத்தில் ஆற்றலை நிலையெனம் கருதிச் செருக்குறுதல் தக்கதன்று என்கிறார் அப்பர்.

*"இளமை கைவிட்ட டகறலு மூப்பினார்*
*வளமை போய்ப் பிணி யோடு வருதலால்"*[17]

யாக்கை பற்றிக் கூறும் போது உடலின் நிலையாமையைப் பல வமையில் இழித்துக்கூறிய சித்தர்களுக்கு அடியெடுத்துக் கொடுத்தாற் போல் அழியும் இவ் உடம்பைக் கொண்டு இருக்கும் போதே நல்லன செய்ய வேண்டும்இ இறைவனை வணங்க வேண்டும். பிறவியை நீக்க வேண்டும் என்கிறார்.

*"பழியுடை யாக்கை தன்னில்*
*பாலுக்கே நீர் இறைத்து*
*வழியிடை வாழ மாட்டேன்...."*[18]

சுற்றம் பற்றி அப்பர் கூறும் போது இறைவனை தாயாகவும் தந்தையாகவும் உறவுமுறை சொல்லிப் போற்றிய அருளாளர்கள் நிலையாமை பற்றிக் கூறும் போது சுற்றங்களை எல்லாம் புறக்கணித்துப் பாடியுள்ளமையை காணலாம். அப்பர் இறைவனை

*"அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ...."*[19]

என்று உறவு முறை சொல்லி வாயாரப் போற்றினும் இவ்வுலகில் எச் சுற்றமும் நிலையில்லை என முற்றிலுமாக அனைத்து சுற்றங்களையும் வெறுக்கிறார்.

"வைத்த மாடும் மனைவியும் மக்கள் நீர்
செத்த போது செறியார் பிரிவதே"[20]

என இன்று நான் நாளையில்லை என்ற நிலையாமை உணர்வும் அச் சுற்றத்தினால் எவ்வித பயனுமில்மை என நிலைத்த வாழ்வாகிய பேரின்ப வாழ்வினை மனித குலம் எய்த வேண்டும் என பெருநோக்கங் கொண்டே உலகம் நிலையற்றதுஇ பிறவி கூடாது, பிறப்பால் வரும் யாக்கை, செல்வம், இளமை, ஆகியனவற்றின் நிலையற்ற தன்மையை அப்பர் உணர வைக்கிறார்.

**அஞ்சாமை**

அஞ்சாமை பற்றியும் கூறியுள்ளார். அதாவது பிறப்பிலே மனித வாழ்வில் அச்சம் என்பது மிகுந்த இழுக்கையும் உயர்ந்த துன்பத்தையும் தரக்கூடிய ஒன்று. உயர்ந்தோர்கள் அச்சத்தை தவிர்த்து வாழ்வர். தொண்டு செய்பவர்களுக்கு முதன்மையாக வேண்டப் படும் பண்பு அஞ்சாமையாகும்.

*"நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்*
*நரகத்தில் இடர்ப்பட்டோம் நடலை யில்லோம"*[21]

இதனையே 'யாம் ஆர்க்கும் குடியல்லோம் இ யாதும் அஞ்சோம்என்பர்' என மாணிக்க வாசகர் கூறியுள்ளார்.

நாவுக்கரசர் தொண்டுணர்பு பற்றி மிகவும் சிறப்பாகக் கூறியுள்ளார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே...' என 'தொண்டு' என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் அப்பரடிகள்.

*"திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ*
*வருஞானத் தவமுனிவர் வாசீகர்"*[22]

கையில் உழவாரத்துடன் ஊர் ஊராகச் சென்று கோயில்களைச் சுற்றி அடர்ந்துள்ள கல்லும் முள்ளும் புல்லும் புதரும் நீக்கித் தொண்டு செய்து மற்றவர்களுக்கும் அத்தொண்டு நெறியின் சிறப்பை வலியுறுத்தினார்.

*".....தொண்டீர்*
*ஆம்பலம் பூம்பொய்கை யாரூரமரந்தா னடிநிழ்கீழ்ச்*
*சாம்பலை பூசிச் சலமின்றித் தொண்டுபட்டுய்மின்களே"*[23]

என்று வஞ்சனையின்றி தொண்டாற்றுமாறு வேண்டுகின்றார். வாழும் உயிர்க்கு நன்மை பயக்காத வேம்பனைய கைப்புச் சொற்களை பயனின்றி கூறி பிறவிக்குக் காரணமாக வினையைப் பெருக்கி வயிற்றினை வளர்த்து நமக்கு சுற்றமே நற்றுனை எனக் கருதி வாழும் மக்களே தொண்டினைப் பேணுவீர் எனக் கூறுகின்றார்

**ஒழுக்கம்**

ஒழுக்கம் பற்றிக் கூறும் போது 'ஒழுக்கம் விழுப்பம் தரலால்....' உயிரிலும் மேலாகப் போற்றப்படும் ஒழுக்கம் மனிதனுக்கு இன்றியமையாத ஒன்று. சகல செல்வமும் பெற்று ஆரோக்கியமாக வாழ்ந்தாலும் ஒழுக்கம் தவறின் இழிவாக மதிக்கப்படுவர். அவ்வகையில் அப்பரும் ஒழுக்க நெறி வாழா மக்கள் புலன்கள் செய்யும் வஞ்சனையால் ஈர்க்கப்பட்டு அதனால் தாக்குண்டு அப்புலன்களுக்குரிய வேட்கையை செய்துமுடித்து வினைகளுக்காட்பட்டு நரகக்குழியில் வீழ்ந்து பிறவிப் பயனைப் பெறுவர் என இன்னும் பலவாறு கூறுகின்றார். இதனை அப்பர்

"வேழும் பத்தைவர் வேண்டிற்று வேண்டிப் போய்
ஆழும் பற்றிவீழ் வார்பல வாதர்கள்
கோழும் பத்துறை கூத்தன் குரைகழல்
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே"[24]

எனக் கூறுகின்றார். மனிதக் மனிதனாக வாழ்வதற்கு புலனடக்கம் அடித்தளமாக அமைவதோடு அடக்கமில்லை யேல் ஒழுக்கம் என்பது இல்லாமற் போய்விடும். உலகில் நடைபெறும் தீயசெயல்கள் அனைத்திற்கும் புலனடக்கமின்மையே காரணமாகும். ஐம்பொறிகளுக்கு தருகின்ற உரிமை மனிதனை அடிமைப்படுத்தி விடுகிறது.

*"ஊரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்*
*வரனென்னும் வைப்பிற் கோர் வித்து"*[25]

எனும் குறள் 'மனத்தின்மை' ஒன்றே ஐம்பொறிகளை அடக்கியாழ்வதன் வழியென கூற அப்பரும் அதன் படி வாழ்ந்து புல அடக்கம் பற்றி அவற்றுக்குரிய வழியையும் கூறுகிறார்.

*"குறிகளும் அடையாளமும் கோயிலும்*
*...பொறியி லீர்மனம் என் கொல் புகாதே"*[26]

**கோபம்**

மேலும் அப்பர் கோபம் பற்றியும் கூறியுள்ளார். அதாவது மனிதனை ஆணவத்திற்கு உள்ளாக்கும் குணங்குறிகளில் ஒன்றான சினம் பற்றி நல்லறிவு கெடும் நிலையும் குறிப்பிடுகின்றார். இதற்கு இராவணனை மையப்படுத்திக்

கூறியுள்ளார். சினத்தின் மீதூரலால் நல்லறிவு கெட்டு அதனுள் சிக்கி மதம் கொண்ட மனத்தினானாகிய இராவணனை நன்கு நோக்கி அத்திப்பழம் போல் நசிந்தும் நலிந்தும் செய்தமையால் விளக்குதல் காணலாம்.

*"....சிதம்பட நின்ற நீர்கள் சிக்கனத் தவிரும் என்று*
*மதம்படு மனத்தனாகி வன்மையால் மிக்குநோக்க*
*அதம் பழத் துருவு செய்தார் அவளிவள் நல்லூராரே"*[27]

சினங்கொண்டு அதனால் பிறருக்குச் செய்கின்ற இடர்களால் தீமையே விளையும் எனவாறு சினத்தினால் வரும் செய்தொழிலாம் அவை... என்பதனூடாகக் குறிப்பிடுகின்றார். அடுத்து பற்றற்ற நிலை பற்றிக் கூறும் போது

*"காமிகம் செய்து காலம் கழியாதே*
*ஓமியம் செய்தங்கு உள்ளத்து உணர்மினோ"*[28]

பற்றுக் கொண்டு அதற்கான செயல்களை செய்து அதில் கொல்லாமையை மரபிற் கொண்டு இறைவனை மனதில் நிறுத்தி அகவழிபாடு செய்திடுக என வலியுறுத்துகிறார்.

இறையருட் செல்வங்களின் வரிசையிலே இளமையை நாட்டங் கொண்டு அதனைத் தேடிக் கண்டவையும் முயற்சியிலும் முதுமையைத் தாம் தேடிக் கண்டு கொண்ட மெய்ப்பொருள் அனுபவ இன்பத்தினை மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை நெறிப்படுத்தும் முயற்சியிலும் கழித்த நடையறாப் பெருந்துறவி. இத்தகைய பெருந்தகைப் பக்தியை மையப்படுத்தி இறையியல் சிந்தனைகளையே பெரும்பாலும் தனது பாடலில் கூறியதோடு அவற்றைக் கடைப்பிடிப்பதற்கும் சிறப்பாக வாழ்வதற்குமான மேலான வாழ்வியற் சிந்தனைகளையும் கூறியுள்ளமை ஈண்டு நோக்கத் தக்கவை.

பற்றற்று வாழ்ந்தாலும் மக்களை இறைவன்பால் பற்றுடையோனாக்கி பிறவிப் பயனை எய்துவதற்கான பல வாழ்வியல் சிந்தனைகளையும் கூறியுள்ளமை சிறப்பானதாகும். சைவநாயன்மார்களின் வரிசையில் சைவத்திலிருந்து சமணத்திற்கு மதம் மாறி மீண்டும் தமக்கையரின் வேண்டுதலால் சிவனருள் பெற்று மீண்டும் சைவநெறியை இசரியை நெறி நின்று பக்தி நெறி தளைத்தோங்கிய பல்லவர் காலத்திலிருந்து தான் வாழ்ந்த எண்பத்தொரு வருடமும் பக்தியால் இறைவனை போற்றிப் பாடிய அப்படிகள் துறவு வாழ்க்கையே வாழ்ந்தார்.

அத்தகைய பெருந்தகை அடியவர்களை துறவு வாழ்க்கை வாழவோ வாழ்க்கையை வெறுக்கவோ பாடவில்லை. மாறாக வாழ்க்கையை நல்லபடி ஒழுகுவதற்கான வழிமுறைகளை இறைநெறி தவறாது வாழ நடைமுறை வாழ்வோடு ஒப்பிட்டு பாடியுள்ளார். ஆகவே தான் அப்பர் தேவாரத்தில் இறையியல் சிந்தனை மட்டுமின்றி வாழ்வியல் சிந்தனைகளையும் குறிப்பிட்டுள்ளார் என்பதை அவரின் வாழ்வியலுக்கான பங்களிப்பை அடையாளப்படுத்துவது அவசியமானதாகும்.

மனிதவாழ்வு நீதியானதாக அன்பு நிறைந்ததாக இருக்க வேண்டும் என்பதை அப்பர் சுவாமிகள் தன் திருப்பாடல்களூடாக முன்மொழிந்துள்ளார். மனித நேயம் பேசும் நவீன உலகில் அன்பே சிவம் என்று நமது சைவத்திலும் கூறியிருக்கின்றது. நாம் சகமனிதர்கள் மேல் காட்டுவது அன்பு. இறைவன் அன்பே வடிவானவர். அன்பே சிவம் என்று திருமந்திரம் சொல்வது போல் அப்பர் சுவாமிகள் தன் திருப்பாடல்களில் எடுத்தியம்பியுள்ளார். இவற்றின் மூலம் மனித வாழ்வு எத்தகைய இலக்கினைக் கொண்டதாக இருக்க வேண்டுமென எமக்குப் புகட்டியுள்ளார்.

**அடிக்குறிப்புக்கள்**

01. சுப்பிரமணியன், (2007), 'பன்னிருதிருமுறைகள்', ப.87
02. அருணாச்சலம்.ப., (2002), 'பக்திஇலக்கியம்', ப.46
03. நடராசன்.பி.ரா, 2003, 'திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்' (4,5,6 திருமுறைகள்) - முதல் பகுதி, ப.45
04. மேலது, ப.89 05. மேலது, ப.34
06. பொருளதிகாரம்: 27. 07. அப்பர் தேவாரம், கோயில்:265
08. அப்பர் தேவாரம், கோயில்: 266. 09. பரிபாடல்:..... 10. அப்பர் தேவாரம்: 6.20.6. 11. குறள்: 661. 12. குறள்: 124. 13. திருப்பூந்துருத்தி. 2672. 14. திருத்துருத்தி. 607.
15. திருச்சேறை. 1136. 16. திருப்பூந்துருத்தி. 2757.
17. திருக்கடவூர் வீரட்டம். 1511. 18. திருப்புகலூர். 2813 19. அப்பர் தேவாரம்: 5.72.1. 20. அப்பர் தேவாரம்: 5.45.3
21. மறுமாற்று திருத்தாண்டகம்: 11. 22. பெரிய புராணம், திருநாவு: 1. 23. திருவாரூர்: 1238. 24. திருக்கோழம்பம்: 725. 25. குறள்: 24. 26. தனிக்குறுந்தொகை: 26. 27. அவளிவநல்லூர்: 925. 28. திருக்குடமுழுக்கு: 1110

**உசாத்துணைகள்**


1. அருணாச்சலம்.ப., (2002), 'பக்திஇலக்கியம்', மோனார்க் கிராப்பிக்ஸ்.
2. குமாரசாமி சோமசுந்தரம்., (1995), 'மனிதவிழுமியங்கள்', ரஜ் வெளியீடு.
3. சிவயோகமதிகந்தவனம், (2013), 'அருளாளர் தொண்டு', ஆலயம் வெளியீட்டகம்
4. சுப்பிரமணியன், (2007), 'பன்னிருதிருமுறைகள்', மணிவாசகர் ஆப்செட் பிரின்டர்ஸ்.
5. சுப்புரெட்டியார். ந., 1986, 'நாவுக்கரசர்', ஐந்திணைப் பதிப்பகம், 282, பாரதிசாலை, திருவல்லிக்கேணி, சென்னை.
6. திருமுறைப்பாடல்கள், பன்னிரு திருமுறை ஆராய்ச்சி மையம், கற்பகம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.
7. நடராசன, பி.ரா, 2003, 'திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்' (4,5,6 திருமுறைகள்) - முதல் பகுதி, உமா பதிப்பகம்,37 (71) இபவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை.
8. நடராசன்.பி.ரா, 2003, 'திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்' (4,5,6 திருமுறைகள்)- இரண்டாம் பகுதி, உமா பதிப்பகம், 37(71)இபவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை.
9. நடராசன், பி.ரா., 2003, 'திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்' (4,5,6 திருமுறைகள்) - மூன்றாம் பகுதி, உமா பதிப்பகம், 37(71), பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை.

# ஆசிரிய வாண்மை விருத்திச் செயலமர்வும் களப்பயணமும்

பொன் ஜெயரூபன்
தேசிய கல்வி நிறுவகம்

*(2016 யூன் மாதத்தில் மட்டக்களப்பு மயிலம்பாவெளி கருணாலய வளாகத்தில நடைபெற்ற வாண்மைத்துவப் பயிற்சி தொடர்பானது)*

ஆசிரியர்களின் வாண்மை மட்டுமே பாடசாலைகளின் தரத்தை நிர்ணயிக்கிறது. கல்வியின் விளைதிறன் வேறெந்த காரணிகளையும் விட ஆசிரியர்களின் தரத்திலேயே பெரிதும் தங்கியுள்ளது.

எமது நாட்டில் ஆசிரியர்கள் மிக உயர்ந்த அந்தஸ்த்தைக் கொண்டிருந்தனர். எனினும் கடந்த சில தசாப்பதங்களில் அத்தகைய அந்தஸ்து சிதைவடைந்து விட்டது. எமது பாடசாலைகளுக்கு தொழில் ரீதியான தேர்ச்சிகளைக் கொண்ட ஆசிரிய ஆளணியை உருவாக்குவது நம்முன்னே உள்ள பெரும் சவாலாகும். இவ்விடயத்தில் மூன்று முக்கிய விடயங்களை நாம் கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது. அவையாவன ஆசிரிய அபிவிருத்திச் செயன்முறையின் இயல்பு, ஆசிரியரின் வகிபங்கு மற்றும் ஆசிரிய வாண்மைத்துவம் இன்றைய நிலையில் பாடசாலைகளில் ஆசிரியர்களின் நடத்தையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது ஆசிரியர்களைத் தொழிலுக்குத் தயாரிக்கும் செயன்முறை பற்றி நாம் தீவிரமாக சிந்திக்க வேண்டிய நிலையிலிருக்கிறோம். 1990களில் ஆசிரியர் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பாடசாலையை தளமாகக் கொண்டமைந்தன. இது முக்கியமான அடிப்படை மாற்றமாகும். இது உயர் கல்வி நிலையங்களில் வழங்கப்படும் ஆசிரியர் கல்வியை விட மேம்பட்டிருந்தது. இந்தப் பின்னணியில் கற்றல் என்பது நடத்தை வாத அணுகுமுறையில் இருந்து விடுபட்டு கட்டுறுவாத கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மாற்றமடைந்தது. கட்டுறுவாதத்தின்படி கற்றல் என்பது சில தீர்மானிக்கப்பட்ட தகவல் தொகுதிகளை ஈடுபாடற்ற வகையில் உள்வாங்கி வறட்டு மனனம் செய்து ஒப்புவிப்பதல்ல, அது கற்போன் தமது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் உயிர்ப்புள்ள முறைகள் பிரதிபலிப்பு நடைமுறைகள் விசாரணைகள் போன்றவற்றின் அடிப்படையில் தானே கட்டமைப்பதாகும். ஆசிரியர் விருத்தியைப் பொறுத்த மட்டில் அது கட்டுறுவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமே அல்லாது அறிவைக் கடத்தும் (Transmission Model) மாதிரிகை என்ற அடிப்படையில் பாடசாலை சீர்திருத்தங்களுடன் தொடர்புபட்டதாக இருத்தல்கூடாது. ஏனெனில் ஆசிரியர்களின் வாண்மை அபிவிருத்தி என்பது கலாசாரத்தைக் கட்டமைக்கும் செயன்முறையாகும். அது இடைவினையாற்றல், பிரதிபலித்தல் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவை சார்ந்ததொரு செயன்முறையாகும்.

பொதுவாக ஆசிரியர் தொழில் ஒரு வாண்மைத் தொழில் என கூறப்படுகின்றது. எனினும் ஆசிரியர் தொழில் உண்மையில் ஒரு வாண்மைத் தொழில்தானா என்பதில் இன்று ஏற்பட்டுள்ள விவாதம் ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாட்டில் மிகவும் முக்கியமானது. ஆசிரியர் தொழிலை ஒரு வாண்மைத்துவ தொழிலாக அங்கீகரிக்க வேண்டுமெனில் ஆசிரியர்கள் தொழில் முன் பயிற்சியை மேற்கொண்டிருக்கவேண்டும், அவர் ஒரு அறிவுக் களஞ்சியமாதல் வேண்டும். பொதுத்துறை செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பதால் அவருக்கு ஓரளவு தொழில்சார் தன்னாதிக்கம் இருப்பதோடு தனது கற்பித்தலின் அறம்சார் அடிப்படையாக ஓர் ஒழுக்கக் கோவையை அவர் பின்பற்றவேண்டும்.

இலங்கையில் ஆசிரியர் கல்வி மற்றும் அபிவிருத்தி தொடர்பில் தேசிய கருத்தொருமிப்பு எதுவுமில்லை. இவ்விடயத்தில் பல நிறுவனங்கள் தனித்தனியாக இயங்குகின்றன. அவையாவும் ஒன்றியைந்து இயங்கக் கூடியவகையில் ஒரு சீரான தேசியக் கொள்கையும் அந்நிறுவனங்களின் பங்குபற்றலுடன் கூடிய ஒன்றிணைக் கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமும் அவசியமாகும். ஆசிரியர் அபிவிருத்தி என்பது ஒரு வாழ்க்கை நீடித்த தொடருறு நிகழ்ச்சித்திட்டம் என்ற அடிப்படையில் தேசிய நிகழ்ச்சித்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

ஆசிரியத் தொழில் இன்று ஓர் உயர் தொழிலாக வாண்மைத்துவத் தொழிலாக (Profession) பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. பொறியியல், மருத்துவம், சட்டம் என்பன போன்று ஆசிரியமும் ஓர் உயர் தொழிலாகக் கொள்ளப்படுதல் ஆசிரியத் தொழிலுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும். ஆனாலும் ஆசிரியத் தொழில் ஒரு வாண்மையாகக் கொள்ளப்படும் அளவுக்கு ஆசிரியர்கள் இன்று நன்கு மதிக்கப்படுவதில்லை என்ற பொதுவான குற்றச் சாட்டு எம்மிடையே உண்டு. இக் குற்றச்சாட்டிலிருந்து விடுபடவேண்டுமாயின் ஆசிரியர்கள் உயர் தொழில் தகைமையாளர்களாக விளங்கும்

வகையில் அவர்களுக்கு வலுவூட்டவேண்டியது அவசியமாகும். இவ்வலூட்டலுக்கான நிகழ்ச்சித்திட்டம் வாண்மையின் பண்புகளைத் தெளிவுபடுத்துவதாகவும் வலியுறுத்துவதாகவும் வாண்மையாளராக விருத்தி அடைவதற்கான பயிற்சிகளையும் திறன்களையும் வழங்குவதாகவும் இருக்க வேண்டும்.

ஆசிரிய வாண்மையாளர்களிடம் எதிர்பார்க்கப்படும் முக்கியமான பண்புக்கூறுகள் தேர்ச்சி செயலாற்றுகை, நடத்தை என்பனவாகும். தேர்ச்சி என்பது. பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தயார்நிலை, முழுமையான பாடப்புல அறிவு வினைத்திறன் மிக்க கற்றல் கற்பித்தல் நுட்பங்களைப் பிரயோகித்தல் போன்றவற்றை உள்ளடக்கும் தேர்ச்சிகளின் வெளிப் படையாக பணியில் விசேடத்துவம் பொருத்தமான நுட்ப்பமுறைகள், தொழிநுட்பம் பற்றிய அறிவு, வாண்மைத்துவசேவையின் ஒழுக்கக் கோவைக்கான நடத்தைசார் அமைப்பு, சேவையைப் பெறுவோரின் நம்பிக்கையைச் சிதையாமல் செயற்படல், தொழில்சார் குழுக்களின் ஒத்துழைப்புடன் செயற்படல் போன்றவை வாண்மையார் ஒருவரிடம் காணப்பட வேண்டும்.

ஆசிரிய வாண்மையில் செயலாற்றுகை என்பது கற்பிக்கும் ஆற்றலைக் குறிப்பதாகும். மாணவர் பற்றிய உளவியல்சார் அறிவு பாடப்புல அறிவு, முறையியல் பற்றிய அறிவு, மாணவரை மதிப்பீடு செய்யும் ஆற்றல், சுய மதிப்பீடு செய்யும் ஆற்றல் போன்றவற்றில் கற்பிக்கும் ஆற்றல் தங்கியுள்ளது.

தொழில் வாண்மையில் நடத்தை என்பது வாண்மை யாளரின் தோற்றம், நடை, உடை, குரல் வளம், தொனி, கற்பித்தல் பாணி போன்றவற்றைக் குறிப்பதாகும். ஆசிரிய வாண்மையாளர் இந் நடத்தைகளில் கூடிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அந்தவகையில் 2016 யூன் மாதம் 7,8,9 ஆகிய திகதிகளில் மட்டக்களப்பு மயிலம்பாவெளி கருணாலய வளாகத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறையினால் ஏற்பாடு செய்யப்பட்ட வாண்மைத்துவப் பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. இவ் வாண்மைத்துவப் பயிற்சியில் வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாண ஆசிரிய ஆலோசகர்களும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களும் கலந்து கொண்டதோடு ஏனைய மாகாணங்களில் இருந்து இருவர் என்ற அடிப்படையில் எழுபதுக்கும் மேற்பட்டோர் பங்கு பற்றினர். வளவாளர்களாக திரு.பி. பேரின்பராசா, திரு. கமலநாதன், கலாநிதி பா. தனபாலன் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

உயர்தரப் பயிற்சிகளையும் உயர் உளத்தொழிற்பாடு களையும் வேண்டி நிற்கின்ற தொழிலே வாண்மையாகும். ஒரு தொழிலானது வாண்மைத்துவ தொழிலாகக் கொள்ளப்படுவதற்கு குறிப்பான சில பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டியுள்ளது. குறிப்பாக,

- அறிவை அடிப்படையாகக் கொண்டிருத்தல்
- வாடிக்கையாளரை அல்லது சேவை பெறுநரை மையப்படுத்தியதாக இருத்தல் போன்ற குறிப்பான பண்புகளை அடிப்படையாகக் கொண்டு வாண்மைத் துவப் பயிற்சிகள் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது. இவ்வவாண்மைத்துவ பயிற்சியின் போது பின்வரும் அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டது.

1. குறித்த விடயப்பரப்புக்கள் பற்றிக் கற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துதல், சைவசமய ஆசிரியருக்கென தனித்துவமான வாண்மைத்துவப் பயிற்சிகளை அளித்தல்.
2. குறித்த வாண்மைத்தொழிலில் ஈடுபடுத்தப்படு வதற்கான பொருத்தமான தகைமைகளுக்கான கல்வி நெறி தொடர்பான வழிகாட்டல்கள் வழங்குதல்
3. அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை இற்றைப் படுத்துவதற்கான யோகா, தியானம் மற்றும் திருமுறைப்பாடல் பண்ணிசைப் பயிற்சிகள் வழங்குதல்
4. சைவசமய வாண்மைத்துவக் கழகம் அல்லது சைவ சமய வள நிலையங்களை ஏற்படுத்துவதும் அவற்றில் அங்கத்தும் வகிப்பதும் அவற்றை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான பயிற்சிகள்.
5. குறித்த பாடத்தை பிள்ளைகளுக்கு எவ்வாறு கற்பிப்பது என்பது பற்றிய விளக்கங்கள், கற்பித்தல் முறைகள், கற்பித்தல் நுட்பங்கள் பற்றிய பயிற்சிகள் வழங்குதல்
6. வகுப்பறை முகாமைத்துவம், சிறந்த தொடர்பாடல், பாடத்திட்டமிடல், சுயமதிப்பீடு பற்றிய பயிற்சிகள் வழங்குதல்
7. பிற ஆசிரியர்களுடனும் சமூகத்துடனும் ஊடாட்டம் மற்றும் சமூக நல்லிணக்கம் பேணுதல் தொடர்பான பயிற்சிகள்
8. குறித்த விடயப்பரப்புக்களில் உள்ள விடயங்களை மாணவர்கள் அடைந்து கொள்ளவும் அத்தராதரங் களை எய்துவதற்கான உயர் எதிர்பார்ப்புக்களை பிள்ளையிடம் உருவதாக்குவதற்கான பயிற்சிகள் வழங்குதல்
9. மாணவர்களுக்கும், பாடத்திற்கும் பாடத்தினது நோக்கங்களுக்கும் சந்தர்பத்திற்கேற்பவும் பொருத்தக்கூடிய பல்வகைத் தன்மைகளுக்கேற்ற கற்பித்தல் துணைகளைப் பயன்படுத்துதல் மற்றும் நாடக பாணியை பயன்படுத்திக் கற்பித்தல் தொடர்பான பயிற்சிகள் வழங்குதல்.
10. தலயாத்திரையும் ஆன்மீக சுற்றுலாவும் தொடர்பான களப்பயணத்தை எற்படுத்தி அவை தொடர்பான தேடல்களுக்கு வழிகாட்டல் பயிற்சிகள் வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட அம்சங்களை மையப்படுத்தியதாக

வாண்மைத்துவப் பயிற்சிகள் திட்டமிட்டு நடைபெற்றன காலை 8 மணி முதல் இரவு 11.00 வரையான காப்பகுதியில் குறிப்பிட்ட அம்சங்களை அடைந்து கொள்ளும் வகையில் வளவாளர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. குறிப்பிட்ட பயிற்சிகள் அனைத்திலும் பெற்ற அனுபவங்களை குழுக்களின் பிரதிபலிப்புக்களாக முன்வைப்புக்களும் இடம்பெற்றது.

வாண்மைத்துவப் பயிற்சிகளின் போது வகுப்பறை முகாமைத்துவம் மற்றும் கற்பித்தல் முறையியல்கள் தொடர்பாக பின்வரும் முறையியல்களின்படி பயிற்சிகள் வழங்கப்பட்டது. குறிப்பாக

கற்றல் கற்பித்தல் முறைகளும் அனுபவம்சார் கற்றல் உபாயத்துக்கான நுட்பங்களும்

களப்பயணங்கள்

விடய ஆய்வு

பாவனை செய்தல்

கதை கூறல்

வெளிக்கள அவதானங்கள்

இலக்கிய வட்டங்கள்

ஒன்றுபடுத்தல்

விளையாட்டுக்கள்

மாதிரி சமூக நிகழ்வுகள்

**கற்றல் கற்பித்தல் முறைகளும் நேரடிப்போதனை உபாயத்துக்கான நுட்பங்களும்**

நேரடிப்போதனை முறை

விரிவுரை முறை

Power Point பயன்படுத்திய விரிவுரைமுறை

வலுவூட்டல் விரிவுரையும் செய்து காட்டலும்

செய்து காட்டல் முறை

பழக்குதலும் பயிற்சியும்

வெளிப்படையான கற்றல்

அமைப்பாக்கப்பட்ட முழுமையான நோக்கு

பாத்திரமேற்று நடித்தல்

கூட்டாகக் கற்றல்

அமைப்பாக்கப்பட்ட வாக்குவாதம்

சகபாடி பங்குதாரர் கற்றல்


சிந்தனைத்தூண்டல்

விவாதங்களும் குழுக்கலந்துரையாடல்களும்

மேற்குறிப்பிட்ட பயிற்சிகளுடன் ஆசிரிய வாண்மைத்துவத்திற்கான அத்தியாவசிய வாண்மைத்தரங்கள் சிலவற்றை அடையாளப்படுத்திய விடயற்கற்கைகள் மற்றும் குறுந்திரைப்பட காட்சிகளுடனான பிரச்சினை தீர்த்தலுக்கான செயற்பாடுகள் மற்றும் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. குறிப்பாக

- ★ ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடங்களில் போதிய அறிவுடையவர்களாக இருக்கவேண்டும், பிள்ளைகளின் வளர்ச்சிபற்றியும் விருத்தி பற்றியும் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும்.
- ★ வகுப்பறை எவ்வாறு முகாமை செய்யப்படவேண்டுமென அறிந்திருக்க வேண்டும்
- ★ சிறந்த தொடர்பாடல் மேற்கொள்ளக்கூடியவராக இருக்கவேண்டும்
- ★ வெவ்வேறு பாடங்களைத் தமது சமய பாடத்துடனும் சமய அறிவியலுடனும் இணைத்துக் காட்டமுடியுமான தன்மையை வளர்த்துக் கொள்ளல்
- ★ மாணவர்கள் வெவ்வேறு முறைகளில் கற்றுக்கொள்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.
- ★ பிள்ளைகளுக்கு எவ்வாறு கற்பிக்க வேண்டுமென்பதை அறிந்திருத்தல்
- ★ தாமே தம்மைச் சுயமதிப்பீடு செய்யச் கூடியவராக இருத்தல்
- ★ மாணவர் முன்னேற்றத்தைச் சோதிப்பவராக இருத்தல்
- ★ பிற ஆசிரியர்களுடனும் சமூகத்துடனும் ஊடாட்டம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்ற வகையில் குறித்த மூன்று நாட்களும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

வாண்மைத்துவ பயிற்சி நடைபெற்ற வளாகம் - "கருணாலயம்"



மட்டக்களப்புப் பிராந்தியம் முழுவதிலும் வாழ்ந்த மக்களிடையே சமய வழிபாடுகள், சம்பிரதாயங்கள், இலக்கிய மரபுகள், சடங்குகள் முதலானவற்றிலே ஒரு பொதுவான பாரம்பரியம் இருந்து வந்துள்ளது. அதன் விளைவாகவே மத்திய காலத்தில் மட்டக்களப்புத் தேசம் என்ற சிந்தனை உருவாகியது.

இயற்கையின் காரணமாக எழுவான் கரை (வாவியின் கிழக்குக் கரை - அதாவது சூரியன் எழும்பும் திசையிலுள்ள கரை) படுவான் கரை (பொழுது படும் மேல்திசைக்கரை) எனும் இரு பிரிவுகள் அமைந்து கண்ணுக்கும், மனதுக்கும் இனிய காட்சியாகத் திகழ்கின்றன. இங்கு மிகப் பெரிய பரந்த மருத நில வயல்வெளிகளும் உண்டு. இங்கு உழவர்கள் நிறைந்து வாழ்கின்றார்கள். இங்குள்ள நிலபோக முறைகளும், பயிர்ச்செய்கை முறைகளும் தனித்துவமானவை.

அத்துடன் காடுகளைக் கொண்ட முல்லை நிலப்பகுதியும், மலைகளைக் கொண்ட குறிஞ்சி நிலப்பகுதியும் உண்டு.

இலங்கை மீது படையெடுத்து வந்த வடஇந்திய முற்குகர் கிழக்குப் பக்கம் தம் ஓடத்தைச் செலுத்தி மட்டக்களப்பு வாவி வரை சென்று அதற்கு அப்பால் செல்ல வழியில்லாததால் "இதுமட்டும் மட்டடா மட்டக் களப்படா" (இந்தக்களப்பு இதுவரையுந்தான்) எனக் கூறி மட்டக்களப்பு எனப் பெயர் வைத்தனர் என்கிறது மட்டக்களப்பு மான்மியம். இவ்வாவியானது நீரும் சேறுமாய் உள்ள சதுப்பு நிலங்களை கொண்டமையினால் சேற்று வாவி எனப் பொருள் கொண்டு சிங்களவர்கள் 'மடகளப்புவ' என்று அழைத்தனர். மட்டக்களப்பை ஆங்கிலத்தில் குறிக்கும் "பற்றிக்கலோ" (Batticaloa) என்பது போர்த்துக்கீச சொல்லிலிருந்து பெறப்பட்டது.

ஒரு சமூகத்தின் முக்கிய கூறாக இருப்பது பண் பாடாகும். பண்பாடு என்பது பேணிக்காக்கப்பட வேண்டிய ஒன்றாகும். பண்பாடு என்பது ஒழுகலாறு தொடர்பான நெறிமுறைகளையும், விழுமியங்களையும், வழக்காறு களையும் கொண்ட ஒரு சிக்கலான தொகுதி. எனினும் சமூகமும் பண்பாடும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவ்விரண்டையும் "Cultural Sociology" விரிவாக விளக்கு கின்றது.


சமுதாய வாழ்வில் மாற்றம், வளர்ச்சி என்பவற்றைக் காட்டிலும் வேறு எந்த நிகழ்வும் அச்சமுதாயத்தினருக்கு பெரும் சவாலாக இருக்கமுடியாது. ஏனெனில் பண்பாட்டு மாற்றமானது (culture change) அந்தந்தப் பண்பாட்டின் என்றும் நிலைத்து இயங்கக்கூடியதாகவும் பிற பண்பாடுகளின் தாக்கத்திலிருந்து மீளமுடியாமலும் செயல்படுகின்றது. பண்பாடு என்பது மிகவும் இணக்கமுற்ற ஒருங்கிணைந்த ஒன்றியமாகும். இதனுள் உள்ள கூறுகள் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு கூறும் பண்பாடு என்னும் முழுமைக்குள் (whole) மிகவும் ஏற்ற நிலையில் பொருத்தப்பட்டுள்ளது. இதன் இயக்கத்தால் அம்முழுமை கட்டிக்காக்கப்பட்டு முழுமையாக செயற்படுகின்றது. அந்த வகையில் பண்பாட்டின் கூறுகளுள் ஒன்றாகிய வழிபாடும் அமைந்துள்ளது.

பண்பாட்டு ஒன்றியம் (integration of culture) என்னும் மொழித்தொடர் பண்பாட்டு கூறுகளுக்கிடையில் நிலவு கின்ற பிணைப்புகளைக் குறிக்கின்றது. சில பண்பாடுகள் வலிமையான கூறுகளைக் கொண்டிருக்கும். சில வலிமையற்ற ஒன்றியத்தை கொண்டிருக்கும். வலிமையான ஒன்றியத்தைக் கொண்ட பண்பாடுகளில் பண்பாட்டு மாற்றம் குறைவாக நிகழும். வலிமையற்ற ஒன்றியத்தில் மாற்றங்கள் விரைந்து நிகழும். அந்தவகையில் மட்டக்களப்புப் பண்பாட்டின் வலிமையான கூறாக சமய வழிபாட்டைக் காணலாம். அது கிராமிய வழிபாடாக அமைந்திருப்பதே விசேட அம்சமாகும். கிராமிய வழிபாடு என்பது நாட்டுப்புறவியலின் ஒரு கூறாகும். இது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும். நாட்டுப்புற நம்பிக்கை நாட்டுப்புறவியலின் அடிப்படைப் பொதுக்கூறு எனப்படும். மக்களின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலியவை தாம் பண்பாடாக மலர்கின்றன. இப்பண்பாட்டுக்கூறுகள் தலைமுறை தலைமுறையாக கையளிக்கப்படுகின்றன.

தமிழ்ப் புலமையோடு கலைவளங்களும் நிறைந்து விளங்கும் மட்டக்களப்புத் தமிழகம் பண்டை நாளிலிருந்து மந்திரப் பயிற்சிகளாலேயே ஈழத்தின் மற்றைய பகுதிகளில் கருதப்பெற்று வந்த ஒரு நாடு, மட்டக்களப்பாரின் மந்திர ஆற்றல் புகழ்பெற்ற ஒன்றாக விளங்கத்தக்கவாறு மந்திரவழக்கும், மந்திரம் கலந்த 'மருந்துப்' பயிற்சிகளும் இங்குள்ளாரின் நாளாந்த வாழ்க்கையிலே பின்னிப் பிணைந்திருந்தது. (மட்டக்களப்பு - கருணாலயம்)



இத்தேசத்து மக்கள் மந்திரங்களிற் கொண்டிருந்த அசையாத நம்பிக்கையானது கல்வியறிவு, நாகரிகம் என்பனவற்றில் முன்னேற்றமடைந்துள்ள இக்காலத்திற்கூட இலகுவில் மாற்றமடையாத ஒன்றாகி விட்டது. இதனால் எங்கும் நிலவிவரும் மந்திரப்பயிற்சிகள், மக்களிடையே அச்சம் கலந்த நம்பிக்கையின் தொடர்பாக இன்றும் வழங்கக் காண்கின்றோம். எல்லாச் சொற்களுக்கும் ஆற்றல் உண்டென்பதும், சரியான சொல்லை வேண்டிய படி அறிந்து, உச்சரிப்பு வேறாகாது சொன்னால் நாம் கருதும் பலனை அது தவறாது தரும் என்பதும், மக்களுடைய நம்பிக்கையாகும். அக்காரணத்தினாற் பழஞ்சொற்களின் உச்சரிப்பு முறைகளையெல்லாம் அவர்கள் பெரிதும் போற்றிக்காத்தனர் என்றும், மொழி நடையிலோ உச்சரிப்பு முறையிலோ எவ்வித புது மாற்றத்தினையும் எளிதில் ஏற்றுக்கொள்ள மறுத்தன ரென்றும், அத்தகைய கொள்கையின் நீடிப்பு, காலச் செலவில் பழம்பெரும் மொழிகளெல்லாம் வழக்கொழிந்து போவதற்கு இலகுவாக இடமளிக்கலாயிற்று என்று மொழி வரலாறுகள் தெரிவிக்கின்றன. இந்த உச்சரிப்பு வகையின் வழமைபற்றிய குறிப்புக்களெல்லாம் மந்திர சக்தியின் மீது மக்களுக்கிருந்த நம்பிக்கையின் அளவினை நமக்குத் தெளிவறக் காட்டுவனவாகும். சொற்களின் ஆற்றலானது மந்திர சக்தியாய் விளங்கி யமையைச் 'சாபமிடுதல்' என்னும் சொல்வாயிலாகப் புராணங்கள் விளக்கம் செய்கின்றன. இம்மந்திர முறைகளுக்கும் கண்ணகி வழிபாட்டுக்கும் மிகுந்த தொடர்பு இருப்பதை அவதானிக்கமுடியும்.



(கருணாலய வளாகம்)

**வாண்மைத்துவ பயிற்சியும் களப்பயணமும்**

களப் பயணம் என்பது ஒரு அமைப்பாக்கப்பட்ட செயற்பாடாகும். அது பயிற்சி வளாகத்துக்கு வெளியே நிகழ்கின்றது. அது அவதானம் சார்ந்த செயற்பாட்டினைக் கூறுகின்றது அல்லது நீடித்துநிலவும் ஆராய்ச்சிகளை அல்லது செயற்றிட்டங்களைக் குறிப்பிடுகின்றது. இது அவதானிப்புச் சுற்றுலாவில் இருந்தும் வேறுபடுகின்றது. ஓர் சுற்றுலாவானது விரும்பிய ஓர இடத்துக்குச் செல் வதைக் குறிப்பிடுவதுடன் அதற்கு குறிப்பான கல்விசார் இலக்குகள் இருப்பதில்லை. ஆனால் இங்கு ஏற்படுத்தப்பட்ட சுற்றுலாவானது குறிப்பான கல்விசார் இலக்குகளை அடையாளப்படுத்தி திட்டமிட்டவகையில் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மற்றும் பிரசித்தமான தலங்களை தரிசித்தலும் அவை பற்றிய வரலாறுகளை நேரில் அவதானிக்கவும், தலங்களுக்கும் சமூகத்துக்குமான தொடர்புகள் பற்றிய பல்வேறு விடயங்களை ஆராய்வதை நோக்காக கொண்டதுமாக அமைந்திருந்தது.

அந்தவகையில் இவ்வாண்மைத்துவப் பயிற்சியில் இரண்டாம் நாள் நிகழ்வாக தலங்களை தரிசித்தலான களப்பயணத்துடன் ஆரம்பமானது. களப்பயணம் பற்றிய பின்வரும் விடயங்கள் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டது குறிப்பாக.

- ★ வெளிக்களப் பயணத்துக்கான நோக்கங்கள், அதன் நன்மைகள்
- ★ எழுதும் கருவிகள், புகைப்படக்கருவிகள்
- ★ பொருத்தமான உடைகள்
- ★ திட்டமிட்ட செயற்பாட்டு அட்டவனைகள்


**களப்பயணத்திற்கான போக்குவரத்து வசதிகள்**

போக்குவரத்து வசதிக்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பில் பிரசித்தி பெற்ற விநாயகர் தலங்களில் ஒன்றான களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய நிர்வாக சபையினரால் ஒரு நாள் போக்குவரத்து வசதியை மனமுவந்து ஏற்படுத்தி தந்திருந்தனர். இது ஆலயமும் சமூகத்திற்குமான சேவைகளில் ஒன்றாக காணப்பட்டது. களப்பயணதிற்போது பின்வரும் தலங்கள் பெயரிடப் பட்டன


1. மயிலம்பாவெளி இராம்நகர் ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆலயம்
2. சித்தாண்டி ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயம்
3. மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்
4. களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம்
5. செட்டிபாளையம் ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயம்
6. தேற்றாத்தீவு கொம்புச் சந்திப் பிள்ளையார் ஆலயம்
7. பெரியபோரைதீவு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம்
8. மண்டூர் முருகன் ஆலயம்
9. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்
10. புன்னைச்சோலை ஸ்ரீ பத்தரகாளியம்மன் ஆலயம்

மேற்குறித்த தலங்களுக்கு ஆலய நிர்வாக சபையினருடன் தொடர்புகொண்டு அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டது மட்டுமன்றி ஆலய வரலாற்று சிறப்புக்கள் தொடர்பாக ஆவணங்கள் பார்வையிடவும் அவை தொடர்பான விளக்கமளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதன்படி காலை 7 மணி முதல் இரவு 8.30 வரையும் களப்பயணச் செயற்பாடுகள் நடைபெற்று.

**1. மயிலம்பாவெளி இராம்நகர் ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆலயம்**



மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் மயிலம்பா வெளி இராம்நகர் எனும் இடத்தில் ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. 1954 ஆம் ஆண்டு இராம தாஸ் சுவாமிகளும், மாதாஜி கிருஷ்ணாபாய் மற்றும் சுவாமி சச்சிதானந்தர் அவர்களும் மட்டக்களப்புக்கு வருகைதந்து மூன்று நாட்களுக்குமேலாக மட்டக்களப்பின் இயற்கை எழில் கண்டு மக்களின் வாழ்வும் வழமும், அவர்களின் இறைவழிபாடு, நம்பிக்கை, அடியார் சேவை, விருந்தோம்பல் என்பவற்றை நேரில் கண்டு ஆனந்த மடைந்த நிலையில் மக்களின் வாழ்வு வளமாக




அமையவேண்டி வாழ்த்தி ஆசீர்வதித்துச் சென்றனர். அவர்களின் வருகையின் தொடர்ச்சியாக இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மகானந்த மகராஜ் அவர்களுடன் மட்டக்களப்புக்கு வருகை தந்திருந்த யாழ். அனலைதீவை பிறப்பிடமாகவும் துபாய் நாட்டில் வசிப்பவருமான சமூக சேவையாளர் திரு.V.P.பரமலிங்கம் அவர்கள் சுவாமிகளின் வேண்டுகளின்படி மட்டக்களிப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஒரு தொழிற்சாலையை உருவாக்கும் திட்டத்துடன் வருகை தந்திருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பின் யுத்த சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மக்களின் நிலைமைகளை நேரில் கண்டும் அவர்களுடன் கலந்துரையாடியும் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் தொழிற்சாலை அமைக்கும் எண்ணத்தை கைவிட்டு, பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கான கல்விக்கூடான தனது சேவைகளை வழங்கும் நோக்கில் கருணாலயம் என்னும் ஆச்சிரமத்தை 2002 ஆம் ஆண்டு தொடக்கிவைத்தார். அது நிறைவு பெற்றதும் பாதிக்கப்பட்ட பின்தங்கிய வறிய குடும்பங்களுக்காக தனது உழைப்பின் ஒருபகுதியில் 75க்கும் மேற்பட்ட அனைத்து வசதிகளையும் கொண்ட வீட்டுத்திட்டத்தை உருவாக்கி அவற்றை முழுமையாக கையளித்தார்.

அதன் பின்னர் அம்மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இறைவழிபாட்டுக்குரிய இடமாக ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தையும் உருவாக்கிக் கொடுத்தார். இவ்வாலய வளாகத்திலும் அதன் புந்தோட்டம் என்பவற்றில் சுமார் 50க்கு மேற்பட்டோர் வேலை வாய்ப்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அத்துடன் ஆலயத்திற்கு கிடைக்கும் வருமானத்தில் அப்பகுதியில் உள்ள வறிய குமடும்பங்களுக்கும், பாடசாலைக் கல்வியில் ஈடுபட்டுள்ள ஏழை மாணவர் களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மாத தாந்தம் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. மேலும், ஆலயத்தினால் அறநெறிப் பாடசாலைகள், கணினி வகுப்புக்கள், சங்கீத மற்றும் நடன வகுப்புக்கள் ஏற்படுத்தி அவற்றை முன்னேற்றும் செயற்பாடுகளை ஆலயத்தினூடாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

இவை அனைத்தும் மட்டக்களப்புக்கு வருகைதந் திருந்த இராமதாஸ் சுவாமிகள், மாதாஜி கிருஷ்ணாபாய்



மற்றும் சுவாமி சச்சிதானந்தர் ஆகியோர்களின் அற்புதங் களாக இருக்கலாம் என நம்பப்படும் அதேவேளை அவ் அற்புதங்கள் சமூக சேவையாளர் திரு.V.P.பரமலிங்கம் மூலமாகவே கிடைத்த பேறாக கருத இடமுண்டு. இராம நாமத்தினால் இறைவனை அடையலாம் என்னும் உயரிய இறை சிந்தனை கொண்ட அவரின் சமூக சேவை நோக்கிலான சிந்தனையின் தாக்கமே இவ்வாறானதொரு புண்ணிய செயற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதனை அங்கு வாழும் மாணவர்கள் சேவையில் உள்ள அனைவரும் காலையிலும் மாலையிலும் இராம கான பஜனைகளில் ஈடுபடுவதைக் காணமுடிகின்றது. இச்சந்தர்ப்பங்களில் எமது ஆசிரியர்களும் காலை மாலை பஜனைகளில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களுக்கான வாசிகசாலை, பிரத்தியேக வகுப்பறை தங்குமிடம், உணவு மண்டபம், வழிபாட்டு மண்டபம், பொது மண்டபம், மாலை நேர வகுப்பறை வசிகள், கணினி அறைகள், உடற்பயிற்சிக்கான வசதிகள் என்பனவும் கற்றலில் இடர்படும் மாணவர்கள் மற்றும் பரிட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான விசேட வகுப்புக்களை பல்வேறு ஆசிரியர்கள் சேவைநோக்கில் அவற்றை நடாத்திச் செல்கின்றனர். மேலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளத்துணை ஆலோசனைச் சேவைகளும் இடம்பெறுவதும் அவற்றில் பங்கு பற்றும் ஏனைய மதங்களை சேர்ந்தவர்கள் தங்கள் வழிபாடுகளை மேற்கொள்ள வசதியாக அவர்களின் வழிபாட்டுக்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ள மையானது மத ஒற்றுமை மட்டுமன்றி சமூக நல்லிணக் கத்திற்கான அடித்தளமாகவும் காணப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் எம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மூன்று நாள் பயிற்சிக்கான சகல ஒத்துழைப்புக் களையும் மனமுவந்து கருணாலய பணியாளர்கள் ஏற்படுத்தி தந்திருந்தனர் அவ் ஆச்சிரமத்தில் தங்கிருந்த நாட்கள் தங்களால் மறக்கமுடியாத பேறாக பங்கு பற்றுநர்கள் நன்றி தெரிவித்ததையும் குறிப்பிடத்தக்கது.

### சித்தாண்டி சித்திரவேலாயுதர் ஆலயம்

பல நூற்றாண்டுகளுக்கு முன் சிகண்டி எனும் முனிவர் பெருமான் இங்கு வந்து தம்மிடம் இருந்த வேலாயுதத்தை வைத்து வழிபட்டாரென்றும் அவர் பல சித்துவிளையாட்டுக் களால் பல அற்புதங்களைச் செய்தாரென்றும் பல ஐதீக







கதைகள் கொண்ட இவ்வாலயம் (சித்து + ஆண்டு) சித்தாண்டி என காரண இடுகுறிப் பெயராக அமைந்தது.


பாரம்பரிய நிகழ்வுகளான வசந்தன் கூத்து, காவடியாட்டம், கரகம், கொம்புவிளையாட்டு என்பன திருவிழாக்காலங்கிளலும் விசேட தினங்களிலும் நடைபெறுவது சிறப்புக்குரியதாக காணப்படுகின்றது.

இவ் ஆலயத்தினூடாக பல சமூக சேவைகள் முன்னெடுக்கபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது ஆலயமும் கல்வி அபிவிருத்தியும், ஆலயமும் படைப்பாற்றல்களும், ஆலயமும் கலையும், ஆலயமும் தொண்டும் போன்ற செயற்பாடுகள் நடைபெறுவதைக் காணமுடிந்தது. மற்றும் கதிர்காம யாத்திரிகர்கள் தங்கிச் செல்லும் தலமாகவும் அவர்களை அன்புடனும் பக்தியுடனும் பராமரித்து அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் சிரமம் பாராது நிர்வாக சபையினரும் ஊர்மக்களும் ஒன்று கூடி அடியார் பணிகளில் ஈடுபடுவது சிறப்புக்குரியதாக காணப்படுகிறது. களப்பயணத்தின் போது அவ்வாலய மடத்தில் காலை உணவினை அனைவரும் விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டனர். களப்பயணத்தில் சென்றிருந்த அனைவரும் நிர்வாகத்துடனும் பெரியோர்களிடமும் இவ்வாறான நிலைமைகள் தங்கள் பகுதிகளில் இல்லை எனவும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக ஏற்படுத்த வேண்டுமெனவும் ஊர்மக்களுக்கும் நிர்வாக சபையின ருக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் மனமுவந்து கூறிக் கொண்டிருந்ததை காணமுடிந்தது. நேர்காணல்களில் ஈடுபட்டதோடு அவர்களின் தொடர்பு களை தொடர்வதற்கான விடயங்களையும் குறித்துக் கொண்டிருந்தனர்.


### களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம்

இவ்வாலயம் பற்றிய செய்திகளை களுதேவாலயக் கல்வெட்டு மிகவும் சிறப்பாக எடுத்தியம்புகிறது. ஆலய பரிபாலனமானது கிராமம் சார்ந்தது, கிராமத்தின் கடமைகள், ஆலய நிர்வாகம், ஆலய தருமம், ஆலயத்தின் புனருத்தாரணம், ஆலயத் திருப்பணி, ஆலய மானியம் என்பவைற்றினூடாக பலவேறு சமூகம்சார் செய்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச மக்களதும் சமூக, சமய விருத்திக்குப் பங்காற்றுவதில் முன்னின்று செயற்படுவதை பங்கு பற்றுநர்கள் கலந்துரையாடல் மற்றும் ஆவணங்கள் மூலமும் நேர்காணல் மூலம் பெற்றுக் கொண்ட விடயங்கள் தெளிவுபடுத்துகின்றன. மாவணர்களுக்கான புலமைப்பரிசில்கள் வழங்குதல், களுதாவளை திருஞான சம்பந்தர் குருகுலத்தை ஸ்தாபித்து பராமரித்தல், சமய அபிவிருத்திக்கான அறப்பணிகள், ஆலயத்திற்கு வரும் பெறுமதிமிக்க பொருட்களை பாடசாலைகளுக்கும், ஆலயங்களுக்கும் வழங்கி சமயம், சமூகம், பண்பாடு, கல்வி அபிவிருத்திக்கு தொண்டாற்றுகின்றமை குறிப் பிடத்தக்கது. குறிப்பாக வாண்மைத்துவ பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கான களப்பயணத்துக்கான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தந்திருந்தமை குறிப்பிடத்தக்க பணியாகக் காணப்படுகின்றது.









**செட்டிபாளையம் கண்ணகையம்மன் ஆலயம்**

மட்டக்களப்பில் வாழும் ஒவ்வொரு மனித வாழ்க்கையிலும் பத்ததி முறையில் அமைந்த தெய்வங்கள் பாரியளவில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. கருவிலிருந்து இறக்கும் வரை வழிபாட்டுடன் தொடர்பு கொள்ள வேண்டி நோயின்றி வாழ்தல், வீட்டில் அமைதி நிலவுதல், செய்தொழில் விருத்தியடைதல், பாதுகாப்போடு இருத்தல், எதிர்ப்புக்களை வெல்லுதல் போன்றன இத் தெய்வங்களின் கருணையாலே சாத்தியமாகும் என்று இவர்கள் நம்பி வந்தனர்.

உலகின் முதலாவது சமுதாயமாக இருந்தது தாய் வழிச் சமுதாயமே. பெண்களை மதித்து அவர்களுக்கு கீழ்படிந்து அவர்களை தெய்வமாக வழிபட்ட சமுதாயமாக தொடக்க கால சமூகம் இருந்துள்ளது. தாய்த் தெய்வ





வழிபாடு தோன்றுவதற்கு அடிப்படைக் காரணம் அது தோன்றிய சமுதாயத்தில் தாய்வழிமுறை நிலவியதே என்பது ஆராய்ச்சியாளர்களது கருத்து.

**தேற்றாத்தீவு கொம்புச் சந்திப்பிள்ளையார் ஆலயம்**

பிள்ளையாரப்பா! எனத் தொடங்குகின்ற காரியம் ஒரு விக்கினமும் இல்லாமல் நிறைவேறனும் என்று நம்புகின்ற சைவர்கள். வீரத்தையும் உழைப்பையும் சாரமாகக் கொண்டு விநாயகனே குலதெய்வமாக்கி வழிபட்டு வருகின்றனர் இம் மக்கள்.

மண்முனையை உலகநாச்சியார் ஆட்சி செய்த காலத்தில் இந்த தொட்டத்தடியில் போர் யானைகள் கட்டப்பட்டு வந்ததாக ஒரு செய்தியும் உண்டு. சோழர் காலத்து புரட்சியை அட்சரம் தமவறாமல் பின்தொடரும் ஆலயம் மட்டக்களப்பு ஆலயங்களுடன் ஒரு சமூகத்தொடர்பை பேணுவதில் எடுத்துக் காட்டாக உள்ளது.




இங்கு சமூகம் என்கின்ற நிறுவகத்தின் தலைமை இடமாக இருந்துவருகின்றது. பல ஊர்சார்ந்த பொது நிகழ்வுகள், ஊர்சார்ந்த பொது முடிவுகள் என்பன இங்கு தீர்மானிக்கப்படுகின்றது.

தலயாத்திரை செல்வோருக்கான தங்குமிடவசதிகள், அன்னதான நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகள்,



அதுபோல கல்யாணம், காதுகுத்து, மொட்டையடித்தல் போன்ற வாழ்வியல் சடங்குகள் நடைபெறும் இடமாக உள்ளது.

**பெரியபோரைதீவு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம்**



மட்டக்களப்பில் இருந்து தெற்குநோக்கி முப்பது கிலோமீற்றர் தொலைவில் (படுவான்கரை) பெரிய பெரியபோரைதீவில் அமைந்துள்ளது. 1556இல் இவ் வாலயம் உருவாக்கப்பட்டு 1825இல் கல்லால் கட்டப் பட்டது என கல்வெட்டுக் கூறுகின்றது. (மட்டக்களப்பு சைவக் கோயில் வரலாறு வி.சி. கந்தையா)

புராதன முறைப்படி நாட்டார் மரபுதழுவிய பத்ததி முறையில் சடங்கு நடைபெறுகின்றது. சடங்கு வழிபாடு வருடாந்தம் நடைபெறும் குறிப்பாக புரட்டாதி மாதம் நவராத்திரியின் இறுதிநாளான ஆயுத பூசைக்கு அண்மையாக வரும் புதன்கிழமையை தீமிதிப்பாகக் கொண்டு 12 நாட்கள் நடைபெறும்.





இன, மத, சாதி வேறுபாடின்றி சடங்குகள் பிரிக்கப் பட்டு அனைவருக்கும் சடங்குகளில் பங்கு பற்றச் சந்தர்ப்பம் அளிக்கும் முறையும் உண்டு.


சடங்குகள் நாட்டார் அறிவியலோடு தொடர்புபட்டதாக நடைபெறுவது சிறப்புக்குரியது. ஆலயத்தினூடாக சமய, சமூக விழுமியங்கள் வளர்க்கப்படுவதோடு, ஆலயத்தினூ டாக பல்வேறு சமூகப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

**மண்டூர் முருகன் ஆலயம்**




சீர்பாதவரன்முறைக் கல்வெட்டு பின்வருமாறு இவ்வாலயம் பற்றிய செய்திகளை விளக்குகின்றது. சோழநாட்டு மன்னனின் மனைவி சீர்பாததேவி வீரமுனையை விட்டு, சிங்க நகருக்குச் செல்லும்போது தான் வழிபட்டுவந்த தங்கத்தினாலான வேலை, தனது குல மக்களிடம் கையளித்துச் சென்றார், சிறு காலத்தின் பின் அவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அவர்களில் சிந்தன் என்பவன் அவ்வேலினை எடுத்துக் கொண்டு வடக்கு நோக்கி வெகு தொலைவு சென்று, அங்கிருந்த தில்லை மரமொன்றில் பதித்துவைத்துவிட்டு, சில நாட்களின் பின் வேலினை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டான் இறுதியில் தான் வைத்த இடத்தில் கொத்துப் பந்தலின் கீழ் அவ்வேல் இருப்பதைக் கண்டான். பின்னர் ஊரவர்களின் உதவியுடன் தில்லை மண்டூர் முருகன் ஆலயம் என நாமம் சூட்டி ஆலயமாக்கினார்கள்.

**கொக்கட்டிச்சோலை தான் தோன்றீச்சரம்**



இங்குள்ள கோயில்கள், திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் என்று வேறுபடுத்திக் கூறப்படுகின்றன. திருப்படை என்பது இங்கு வாழும் பல்வேறு இன மக்களின் ஒன்றியம் எனப்படும். தேசம் என்பது அப்பிரதேசம் முழுவதையும் அடக்குகின்றது.


இக்காலத்தில் மண்முனைக் காட்டில் விறகு வெட்டச் சென்ற வேடர்கள் ஒரு கொக்கட்டி மரத்தை வெட்டிய போது அதிலிருந்து செந்நிறமான சாறு வடிந்தது. இதை இரத்தம் என்று எண்ணிய வேடர் தலைவன் திடகன் உலக நாச்சியிடம் சென்று சொல்ல உலக நாச்சி தன் பரிவாரங்களுடன் குறித்த மரத்தைச் சென்று பார்த்த போது அவ்விடத்தில் ஒரு சிவலிங்கம் புதையுண்டு இருப்பதைக் கண்டு அதைப் பக்தி சிரத்தையோடு எடுத்து அவ்விடத்தில் ஒரு சிறு கோயிலை அமைத்து வழிபாட்டை ஆரம்பித்து வைத்தாள். காலக்கிரமத்தில் அவ்விடத்தில் ஆலயம் அமைக்கப்பட்டு அது இன்றைய தான்தோற்றியீச்சர ஆலயமாகியது.



மேலும் போர்த்துக்கீசர் காலத்தில் இவ்வாலயத்தை அழிக்க வந்த போர்த்துக்கீசத் தளபதி அசலிடோவுடன் ஆலயப் பூசகர் தர்க்கம் செய்து, அவன் சவாலுக்கு விடையாக, அங்கிருந்த கல் நந்தி ஐயர் கொடுத்த புல்லைச் சாப்பிட்டு சாணம் போட்டது என்றும் அதைக் கண்ட தளபதி கோயிலை அழிக்காமல் சென்றான் என்றும் மற்றொரு வாய்மொழி கதை மக்கள் மத்தியல் நிலவுகின்றது. இந்தத் தலத்தின் சிறப்பை அறிந்த குளக்கோட்டன் தான்தோன்றீஸ்வரருக்கு கோயில் எழுப்ப முனைந்தான் எனக் கூறப்படுகின்றது.

இக் கோயிலின் இறைவன் பெயர் தான்தோன்றீச்சரர். இறைவி பெயர் பார்வதி அம்மையார். தல விருட்சம் கொக்கட்டி மரம். இயற்கையாகத் தோன்றிய சிவலிங்கத்தை அவ்விடத்திலே வைத்துக் கோயில் அமைக்கப்பட்டதால் கருவறையில் உள்ள அந்த இலிங்கம் வெளியே அடியார்களுக்குத் தெரிவதில்லை. எனவே, அச்சிவலிங்கத்துக்கு மேலே உமாமகேஸ்வரர் விக்கிரகம் ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது.

சங்கமர் என்னும் சைவக் குருமார் இங்கு பூசை செய்கின்றனர். இவர்களுடைய பூசை முறை ஆகம விதிப்புகமைந்த பிற சைவக் கோயில்களில் நடை பெறுகின்ற பூசை முறையிலிருந்து சற்று வேறுபட்டது. இவர்கள் பின்பற்றும் நெறி "வீராகமம்" எனப்படும்.




ஏனைய சைவக் கோயில்களைப் போலன்றி இக் கோயிலின் பரிபாலனம் சற்று வேறுபட்டது. வண்ணக்கர் மூவர் கூட்டாக பரிபாலனத்துக்கு பொறுப்பாக இருக்கின்றனர்.

இவர்கள் 'முற்குகர்' என்னுங் குலத்தைச் சேர்ந்தவர் களாவர். வேளாண்மைத் தொழிலைச் செய்து வருபவர்கள். இவர்களை காலிங்கமகுடி, உலகிப் போடிகுடி, படையாண்டகுடி என மூன்று குடிகளைச் சேர்ந்தவர்கள். பதவி பெறுபவர் ஆயுள் முழுவதும் அப்பதவியை வகிப்பார்கள்.

இவர்களில் காலிங்கா குடியைச் சேர்ந்தவர் தலைமைப் பதவிக்கும், உலகிப்போடிக் குடியைச் சேர்ந்தவர் பொருளாளராகவும், படையாண்டகுடியைச் சேர்ந்தவர் செயலாளராகவும் நியமிக்கப்படுவார்கள். இப்பதவிகள் தாய் வழி உரிமை மூலம் பொறுப்பு மாற்றம் செய்யப்படும்.

**மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்**

மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றும் முறையே அமையப்பெற்ற மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வரலாறு இராமாயண காலத்தோடு தொடர்புபட்டிருப்பதனை இங்கு வழக்கில் உள்ள ஐதீகக் கதைகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. இராமர் சீதையை மீட்டுச் செல்லும்போது இவ்வழியால் வந்து இங்கே தங்கினார் எனவும் அவர் சிவபூசை செய்யும் பொருட்டு மண்ணினால்




பிசைந்த லிங்கத்தினை அமைத்து வழிபாடு செய்தார் எனவும் ஆலயம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றது.

தன்னலம் கருதாத சேவை மார்க்கம் திருத்தொண்டே என்ற அடிப்படையில் மக்களின் பல்வேறு பிரிவினரும் படுகின்ற கஷ்டங்களிலும் துன்பங்களிலும் போக்கும் பொருட்டு பல்வேறு சமூக சேவைகளை இவ்வாலயத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது

சைவர்கள் இறைவனை அடைவதற்குரிய இலகுவான சாதனமாக சரியைத் தொண்டினைக் கடைப்பிடிக்கின் றார்கள். ஆந்தவைகையில் மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தினால் பல்வேறு சமூகசேவை தொண்டுகள் முன்னெடுக்கப்படுகின்றமையைக் காண முடிகின்றது.

இவ்வாலயத்தின் தீர்த்தத்திருவிழா ஆடி அமாவாசை அன்று இடம்பெறுவதால் பிதிர்க்கடன் செய்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அடியவர்கள் ஒன்று கூடி பிதிர்கடன்களை நிறைவேற்றி பிதிர்வழிபாடு செய்யும் சிறப்பான ஆலயமாக திகழ்கின்றது.

**புன்னைச் சோலை ஸ்ரீ பத்தரகாளியம்மன் ஆலயம்**



புன்னைச் சோலையின் பெரும்பகுதி குடிசனமற்ற பெரும் காடாகிக் காணப்பட்டது. இக்காட்டுவழியால் சென்ற ஒருவருக்கு அம்பாள் காட்சி கொடுத்ததாகவும் அம்பிகையின் தோற்றத்தினைக் கண்ட அன்பர் மயங்கி விழுந்ததாகவும் பின்னர் மயக்கம் தெளிந்து பார்த்தபோது அம்பிகையைக் காணாது நின்றார். அக்கணமே அம்மனுக்கு ஆலயம் அமைத்து வழிபடத் தொடங்கினார் என்பது பிரதேச மக்களின் ஐதீகமாக உள்ளது.



வாண்மைத்துவப் பயிற்சியில் ஈடுபட்ட அனைவரும் கோயிலின் சடங்கு உற்சவத்திலும் கலந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. அனைவரும் களப்பயணமாக இவ்வாலயத்திற்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டதோடு ஒவ்வொரு நாட்டார் தெய்வங்கள் பற்றி பிரதேசவாசி களுடனும் ஆலய நிர்வாகத்தினருடனும் ஆர்வத்துடன் நேரடியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.



மட்டக்களப்பில் வாழும் மக்களிடத்தில் கிராமியத் தெய்வங்கள் பாரியளவில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. கருவிலிருந்து இறக்கும் வரை கிராமிய வழிபாட்டுடன் தொடர்பு கொள்ள வேண்டி நோயின்றி வாழ்தல், வீட்டின் அமைதி நிலவுதல், செய்தொழில் விருத்தியடைதல், பாதுகாப்போடு இருத்தல், எதிர்ப்புக்களை வெல்லுதல் போன்றன சிறு தெய்வங்களின் கருணையாலே சாத்தியமாகும் என்று நம்பபுகின்றனர். சிறு தெய்வங்களை வெறுத்தால் மேற்கூறியவை எல்லாம் சாத்தியப்படாது






என்ற நம்பிக்கை. வாழ்க்கையில் நோய்கள், தீமைகள் என எவை வந்தாலும் கிராமியத் தெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் வைத்தால் அதிலிருந்து மீளலாம் என்பது பெரு நம்பிக்கையாக உள்ளது. தமது உழைப்பில் பெரும் பகுதியை கிராமத்துத் தெய்வங்களுக்காக செலவிட்டு வந்தனர். ஒவ்வொரு ஊரிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிராமியத் தெய்வங்களைக் காண முடியும்.

பரம்பரையாக இம் மக்கள் வழிபாட்டு முறைகளையும், பக்திப் பாடல்களையும், மந்திரங்களையும் மறந்து போகாது பேணி வருகின்றனர். வைகாசி தொடக்கம் மார்கழி மாதம் வரை ஒவ்வொரு வருடமும் உயிரோட்டமான சடங்குகள் தவறாது நடாத்தப்படும்.

இலங்கையில் இந்துக்கள் வாழும் ஏனைய மாவட்டங்களில் ஆகம முறை சார்ந்த தெய்வ வழிபாட்டின் செல்வாக்கும் ஆகம மயமாக்கமும் கிராமியத் தெய்வ வழிபாட்டைப் பெரிதும் பாதிப்படையச் செய்துள்ளன. ஆறுமுகநாவலர் காலத்தில் பெருமளவு கிராமியத் தெய்வங்கள் நலிவுற்றன. கண்ணகியம்மன் கோயில்கள் வேறு பெயர்களாக மாற்றப்பட்டுள்ளன. வீடுகளில் கிராமத் தெய்வங்களுக்கு வழிபாடாற்றி வந்தமை அருகி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. பட்டதாரிகள் கூட பூசாரிகளாகத் தொழில் புரிவதையும், வாலிபர்கள் உருக் கொண்டு தெய்வமாடுவதையும் இங்கு காணலாம். சிறு குழந்தைகள், கன்னிப் பெண்கள், திருமணம் செய்த இளம் பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் தீப்பாய்தலில் ஈடுபடுகின்றனர். மட்டக்களப்பு மாநிலத்தில் இத்தகைய கிராமிய வழிபாடு செல்வாக்குப் பெற்று மக்கள் மத்தியில் நிலைத்து நிற்பதற்கு பல காரணங்களை அடையாளங் காணமுடிகின்றது.

## மாதிரி சமூக நிகழ்வு

### இரங்கல் நிகழ்வு மறைந்த பேராசிரியர் இரா.வை. கனகரெத்தினம் அவர்களுக்கானது



09.06.2016 அன்று காலை 11.00 முதல் 12.00 மணிவரை மாதிரி சமூக நிகழ்வாக மறைந்த பேராசிரியர் இரா.வை. கனகரெத்தினம் அவர்களுக்கான இரங்கல் நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மா. செல்வராசா மற்றும் பேராசிரியர் மௌனகுரு ஆகியோர்களுடன் எமது வளவாளர்களான கலாநிதி பா. தனபாலன், பி. பேரின்பராசா, எஸ்.ஏ. கமலநாதன் மற்றும் அவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆலய நிருவாகிகள், அனைத்து மாகாண இந்துசமய உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் சிரேஷ்ட ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து மறைந்த பேராசிரியரின் பணிகளைப் பற்றி கருத்துரை வழங்கினார்கள்

ஆரம்ப நிகழ்வாக மறைந்த பேராசிரியருக்கான சுடரேற்றும் நிகழ்வு நடைபெற்றது அதனைத்தொடர்ந்து பேராசிரியரின் உருவப்படத்திற்கு பேராசிரியர் மௌனகுரு அவர்களால் மாலை அணிவிக்கப்பட்டு கலந்து கொண்ட



அனைவரும் மலரஞ்சலி செலுத்தினார்கள். எனது ஆரம்ப உரையைத் தொடர்ந்து கலாநிதி தனபாலன் மற்றும் பி.பேரின்பராசா ஆகியோர் இரங்கல் உரை நிகழ்த்தினர் அவர்களின் கருத்துக்களில் பேராசிரியரின் பல்வேறு ஆளுமைகளை நினைவுபடுத்தினார்கள்.

பேராசிரியர் செல்வராசா மற்றும் பேராசிரியர் மௌனகுரு ஆகியோர் தாங்கள் அவருடன் பழகிய நினைவுகளை மிக அழகாக நினைவுக்கு கொண்டு வந்திருந்தனர். அவர்கள் மறைந்த பேராசிரியருடைய



எழுத்தாற்றல் மற்றும் தேடல்கள் பற்றிய விடயங்கள் மற்றும் ஆறுமுகநாவலருக்கும் அவருக்குமிடையிலான பிணைப்புக்கள் பற்றியும் அவரின் ஆக்கங்கள் மற்றும் இந்துசமயத்திற்கும் இந்து நாகரிகத்திற்கும் அவரின் பணிகள் பற்றியும் எடுத்துக் காட்டுக்கள் மற்றும் சம்பவங்கள் மூலம் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

**பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம் - வாழ்க்கைக் குறிப்புக்கள்**

முழுப்பெயர் : இராமநாதர்வைத்திலிங்கம் கனகரத்தினம்

தந்தையார் பெயர்: இராமநாதர்வைத்திலிங்கம்

தாயார் பெயர் : வைத்திலிங்கம் சிவகாமிப்பிள்ளை (பூரணம்)

பிறப்பு : *23.08.1946*

ஆரம்பக்கல்வி : 1951 நெடுந்தீவு கோட்டைக்காடு மகேஸ்வரி வித்தியயாசாலை

1952 நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாசாலை

1953 யாழ்/முத்துத்தம்பி வித்தியாசாலை

1962 யாழ்/செங்குந்தா இந்துக்கல்லூரி

உயர்கல்வி: 1964 - 1968 கொழும்புப் பல்கலைக்கழகம்

கல்வித் தகைமைகள்: இளங்கலைமாணி, முதுகலைமாணி

கற்பித்தல் செயற்பாடு: 1975–1980 களனிப் பல்கலைக் கழகம்

கற்பித்தபாடங்கள் : இந்துநாகரிகமும் தமிழும்


1980-2012 பேராதனைப் பல்கலைக்கழகம்


1980 - விரிவுரையாளர்

1989 - சிரேஷ்டவிரிவுரையாளர்

1996 - துணைப்பேராசிரியர் (Marid)

1999 - பேராசிரியர் (Marid)





வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றிய பல்கலைக்கழகம்: கிழக்குபல்கலைக்கழகம்


**விருதுகள்**

- ★ 1995 - சாகித்தியமண்டலவிருது - கனகரத்தின உபாத்தியாரின் ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம்
- ★ 1996 - இந்துசமயப் பண்பாட்டு கலாசார அமைச்சால் வழங்கப்பட்டவிருது - சி. செல்லையாப் பிள்ளையின் யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களின் சரித்திர சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமலையும்
- ★ 2007 - சம்பந்தர்விருது – 2007 - ஆறுமுகநாவலர் வரலாறு ஒரு புதிய பார்வையும் பதிவும்
- ★ 2012 - சைவச் சான்றோர் விருது சமங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம்

அன்னாரின் ஆளுமையினை அவர் எழுதிய நூல்கள், பதிப்பித்தவைகள், கட்டுகைள், ஆய்வுகள், தேடல்கள் என்பன சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவைகள் மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது. அன்னாரின் பணிகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் இவ்வாறான பெரியார்களின் சேவைகளுக்கு இவ்வாறான இரங்கல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்து அவர்களின் ஆளுமைகளை வெளிப்படுத்த



வேண்டும் என்ற நோக்கில் ஒரு எடுத்துக்காட்டான மாதிரி சமூக நிகழ்வான இந்நிகழ்வு மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் மதிய உணவின் பின்னர் குழுக்களின் முன்வைப்புகள், அனுபவப் பகிர்வுகள் என்பனவற்றுடன் மாலை 5.00 மணியளவில் நன்றி நவிலலுடன் நிகழ்வுகளுடன் வாண்மைத்துவம் தொடர்பான பயிற்சிகள் இனிதே நிறைவு பெற்றது.



வாண்மைத்துவப் பயிற்சி நிறைவில் பங்குபற்றுநர்கள் பேராசிரியர்களுடன் இணைந்து எடுத்துக்கொண்ட படம்

## பூனை குறுக்கே போனால் என்ன அர்த்தம்..?

மன்னர்கள் காலத்தில் போருக்கு படை திரட்டிச் செல்லும் வழியில் பூனையை பார்த்தால், இந்த வழியில் குடியிருப்புகள் இருக்கிறது. அங்கே இருக்கும் ஆண்மகன்கள் அனைவரும் போர்க்களத்திற்கு சென்றிருப்பார்கள். அங்கே சிறுவர்கள், வயதானவர்கள், பெண்கள் மட்டுமே இருப்பார்கள்.

ஆகவே இந்த வழியாக சென்றால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காக, அவர்கள் வந்த திசையை மாற்றி வேறு திசையில் செல்வார்களாம். மேலும் அக்காலத்தில் போக்குவரத்துக்கு பெரும்பாலும் குதிரையை பயன்படுத்தினர்.

பூனையைப் பார்த்தால் குடியிருப்புகள் இருக்கும் என உணர்ந்து, யாரும் அடிபட்டுவிடக் கூடாது என்பதற்காக குதிரையில் மெதுவாக செல்வார்களாம். அதனால்தான் பூனை குறுக்கே போனால் அந்த வழியாக செல்லக்கூடாது என்றார்கள்.

நம் முன்னோர்கள் சொல்லி வைத்த இதுபோன்ற பல விஷயங்களை காரணம் தெரியாமலேயே இன்று வரை கடைபிடிக்கிறோம். பல விஷயங்கள் மூட நம்பிக்கைகளாகவும் திரிக்கப்பட்டுவிட்டது.

பூனை குறுக்கே போனால் அந்த வழியாகப் போகக்கூடாது என்ற விஷயத்தை கடைபிடிக்கவேண்டிய அவசியம் தற்போதைய கால கட்டத்தில் தேவை இல்லை.

# Understanding the Saiva – Jaina Conflict During the Bakti Movement and the Attempt by the Nayanmars to Resolve it

**S. Pathmanathan**
Principal Emiritus,
Palaly Teachers' College.

## Abstract

Jainism had a substantial following in Tamilnādu from the 3rd century B.C. Jaina monks contributed to the development of Tamil grammar and produced a large number of ethical works. They also enjoyed the patronage of the Pallava and Pandya kings. Saint Tirugnānasampanthar who spearheaded the Saiva revival movement went all out to attack Jainism and its adherents in every decad of his thevārams. This paper attempts to probe into the underlying causes of Sampanthar's tirade against the Jains and highlights a more accommondative approach taken by Thirunavukkarasar.

## Key words

Saiva – Jaina conflict, schism, orthodox religions, ahimsa, karma, mercantile class, language, Dravida sangam, devotional hymns, synthesis, patronage.

This paper attempts to trace the cause for the conflict between the saivates and the Jains of Tamilnadu which manifested itself in the thevārams of Saint Tirugānasampanthar. Although Sampanthar attacked the Buddhists with equal vehemence, this paper is confined to the Saiva –Jaina conflict in Tamilnādu that prevailed in the 6th – 7th centuries.

Vardhamāna the expounder of the tenets of Jainism, was the elder contemporary of Buddha. Although there has been a succession of twenty – three earlier sages, he is considered the founder of Jainism. Like Gautama, he and his followers were from the Kshatriya aristocracy.

Jainism faced a schism around A.D 80 over the question of clothes. The Svetāmbara (white robed) and the Digambara (nude) went different ways. This principle was extended to the deity they worshipped. While the Svetāmbaras adorned their deity with clothes and jewellery, the Aruhadeva of the Digambaras was nude with downcast eyes.

The orthodox religions of India (the six darsanas) consider the Vedas as the highest authority and accept them without question. The nayanmārs (in particular Tirugnānasampanthar) reiterate again and again that Vedas are the highest and Lord Shiva is the master of the Vedas (Veda nāyahan). But Jainism and Buddhism did not accept the authority of the Vedas.

Sacrifice was an integral part of ancient Hinduism. The Buddhists and the Jains were unequivocal in condemning this practice. But the Saivites considered this stance of the Jainas as blasphemous. In fact, before embarking on the debate with the Jainas at Madurai, Sampanthar would pose this question:

*"is it thy wish, my Lord*
*whois half woman*
*that I should vanquish, in debate*
*theJainas and the Theras who scorn the Vedas?"* [1]

Instances of Gautama rescuing animals that were being led to the sacrifice are on record.

Vardhamāna, insisted that we should not injur any living thing including animals insects and plants.[2] "Ahimsa paramo dharma" was his article of faith. In fact the Jainas took it to an extreme by sweeping the ground they trod on, by not sleeping on the floor, by not bathing and by pulling out their hair rather than cutting it, lest they injur unseen foms of life. No wonder therefore they condemned the ritualism that accompanied sacrifice. Tiruvalluvar is in the company of the Jains in advocating non – killing and abstinence from meat eating

*"Not to kill and eat the flesh of an animal is better than pouring forth of ghee in a thousand sacrifices"*[3]

Next to ahimsa (non – violence), Jains prohibit falsehood, stealing, coveting another man's wife, hoarding possessions and taking alcohol.

The Jaina concept of karma is different from that of the Hindus and even the Buddhists.

"Karma is of material nature. Karma works in such a way that every change which takes place leaves a mark

---

1. "வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே....." – சம்பந்தர் தேவாரம் (3956)
2. Radhakrishnan.S, Indian Philosaphy, George Ullen&Unwin (1929) p.293
3. அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றின் உயிர் செகுத்துண் ணாமைநன்று" – குறள் 259

which is retained and built into the organism to serve as the foundation for future action" [4]

According to Jainism, Karma will determine the course the jiva (soul) will take. God plays no part in the process. There is no place for bhakti (devotion) in the Jaina system.[5]

Some of the fundamental features of Jainism have been mentioned above.

Let us now deal with the Jaina- Saiva conflict that raged in Tamilnādu in the 7th – 8th centuries. Sankara is given the credit for establishing the sanmathas (six orthodox Hindu sects) on a firm footing. It was Sampanthar who engaged the Jains in Tamilnādu.

P. Sundarampillay was the first to attempt to trace the cause of this animosity on the part of the child – saint.[6] He found no answer. Kailasapathy took the cue from him and gave a Marxist explanation. The conditions that prevailed in the Tamilnādu of the Sangamperiod is akin to those that prevailed in the Ganges valley around 6th century B.C. There ganas were fighting it out. Here chieftains like Ko and Vel were powerful in their own pockets. In due course Chera, Chola and Pandiyassubjugated them.[7] Greed, Savagery, Sensual pleasure and Selfishness were the order of the day. States were just emerging. Society was becoming polarised on the lines of private ownership – as bureaucracy, the military and the mercantile sectors. Life became a burden to the people. Buddha made sorrow an abstract, universal concept and renunciation the refuge from the misery the world was. This is reflected in the proliferation of ethical works during the post – sangam period.

The Jaina monks had come to Tamilnādu as early as the 3rdcentury B.C. The cave inscriptions found in Madurai and Tirunelvely provide proof of their presence in the Pandya kingdom. It is worth noting that even the earliest (Sangam) Tamil Literature had not appeared at that time. A. Velupillai credits the Jaina monks for developing the Tamil language and making it a fit vehicle for Literature.[8]

Why, of all places, did these monks choose the Pandyan territory for their activities? The kingdom with its ports like Kotkai and Thondi must have attracted scholars like Vajranandhi. A.S. Gnānasampanthan uses an interesting set of statistics to guage the influence wielded by the Jains in Tamilnādu. The number of Siva temples in Colanadu was 190 wheras in Pandinadu the number was a mere 14.[9] Why? Jaina monks lived by the thousands in abodes like Anaimalai.[10]

The rise of the states, accompanied by division of labour, foreign trade, industry and agriculture paved the way for the rise of the mercantile class which was not involved in production. It was at this juncture that Jainism stabilized itself in Tamilnādu. Cilapathikaram and Tirukkural provide ample testimony to the influence of the mercantile class. The majority of this up and coming class were Jains. Pallava, Cera, Cola and Pandya kings who embraced Jainism were lavish in their endowments (pallichantham) to the Jaina pallis (monasteries). While Buddhism was on the decline around 5th century A.D, Jainism remained powerful and popular. The Jains had the benefit of state patronage both in the Pallava and the Pandya kingdoms. The Jaina influence and the rise of the mercantile class were complementary. That the struggle of the landed class against the non – productive mercantile class was spearheaded by Saint Tirunavukkarasu who came from the farming class was no co–incidence. The "Jaina threat" was so strongly felt that the leaders of bhakti movement were able to marshal almost all the sub- castes against the mercantile class"[11] Withthe backing of the kings, Jainas took over lands belonging to the Saiva and Vaishnava temples. This led to the conflict between the mercantile (Jaina) class and the landed (Saiva / Vaishnava) class.[12] The invective against the Jains that finds expression in Sampanthar's thevārams could be attributed to this well - found grievance.

The appearance, habits and customs of the Jains are ridiculed and derided by Sampanthar again and again.

> "the filthy bodied", "the Jains who don't bathe before eating ", "the heartless", "the fat, naked Jains", "the dirty mouthed Jains", "those who carry umbrellas", "those who beg for rice and eat off their hands", "those who wear bark –made, gold – coloured clothes", "those who pull off their hair from their head", "the Jains and the Buddhists who condemn the vedic ritual", "those who move about naked

---

4. Radhakrishnan.S, Indian Philosophy part 1,p.319, London: George Ullen & Unwin (1971)
5. Ibid, p 331
6. P. Sundarampillay as cited by Kailasapathy in பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் p. 71 – 72
7. Vithiyanathan. S, Tamilar Caalpu, p. 40 – 41, Tamil Manram, Kandy. (1954).
8. வேலுப்பிள்ளை, ஆ., தமிழர் சமய வரலாறு, பாரதி புத்தகப் பண்ணை, 1985, p. 40.
9. ஞானசம்பந்தன், அ.ச., பெரியபுராணம் - ஓர் ஆய்வு (1999) p.129.
10. ஆனை மாமலையாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
11. Ibid p 46
12. சைவ வைணவக் கோயில் நிலங்களையும், மன்னர் ஆதரவுடன் சமணர் எடுத்திருந்தனர் என நாம் ஊகிக்க இடமுண்டு. அரசரது அங்கீகாரத்துடன் பழைய சைவ வைணவக் கோயில்கள், நிலங்கள், புதிதாகச் சமணர் தமதாக்கிக் கொண்ட நிலங்கள், உடைமைகள் தமதாகுமாயின், உழவுத் தொழிலும் அதனை அடி நிலையாகக் கொண்ட கிராமக் கைத்தொழில்களும் செழித்து வளரும் என்னும் பொருளாதார உண்மையை உணர்ந்தனர். நிலக் கிழார்கள் (வேளாளர்). எனவே நிலவுடைமைக்காரருக்கும் வணிக வர்க்கத்தினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. - கைலாசபதி. க, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், பக் 86.

to the ridicule of the village", " the Jains who eat standing and the theras who eat sitting" they who considercarrying peacock feather broom a virtue", "the Jains who catch fish in the marsh"[13]

But there are instances, though very few, in which Sampanthar, casting all prejudices makes a liberal statement:-

"Siva made the Jaina and Sakya religions"[14]

Saint Tirunavukkarasu, a convert to Jainism who returned to the fold late in life was not as vehement as Sampanthar in his attack. He met the hyper – ahimsa of the Jainas with his brand of bakti. Those devotees of the one whose tuft is adorned with the cascading Ganga – be they lepers or pulayars who skin cows and eat the meat – they shall be the gods we worship."[15]

Appar would condescend even to accommodate dissent:

"Even when bigots driven by jealousy found some other religion it is acceptable to our Lord."[16]

He goes further to challenge Hindu orthodoxy boldly:

"O, you wicked people who parrot scriptures, what will you do with your gotras and kulas?"[17]

This is a declamation which is certainly ahead of times and a plea for equality and social harmony.

The Vedic religion propagated by the Brahmins used for its religious and secular rituals Sanskrit a language not spoken by the masses. The Brahmins claimed Sanskrit to be the language of the gods. Mahavira and Buddha rejected this and chose to use Pali and Prakrit spoken by the common folk. According to Radhakrishnan, the Jainas used a language called Ardha - māgadhi[18] In other words, whereas the orthodox Brahminic religion shut out the masses, these religions approached the people through their languages.

Prof.A.Velupillai cites cave inscriptions in and around Madurai and Tirunelvely to prove the presence of Jaina monks in Tamilnādu and lauds them for their contribution to Tamil literature. The corpus of the eighteen ethical works is a standing monument for this. The influence of the Jains had been growing, he says, since the Sangam period and by the Pallava period they were quite powerful as is evident from Periyapuranam. In 470 A.D, a Jain called Vajranandhi, established the Dravida Sangam.

An interesting corollary to this is Tirugnānasampanthar's oft – reiterated loud claim, in many of his decads, that he was an accomplished Tamil poet[19] mouthing God's words[20] Is perhaps psychological. He himself wasa descendent of the Gauntynya line of Brahmins who had come to Tamilnādu from North India. So he had to prove that his love for Tamil was not second to that of any others, particularly the Jaina Scholars.

The Brahminic religion was varna (caste) – based. Only the Brahmins were permitted to learn the Vedas (Scriptures). They were more interested in receiving swarnadhanam, Kothanam, Kshethradhanam, Vasthradhanam etc.The Jains on the other hand were providing education and medical care to the people. Their schools (pallis) were open to all children. Unlike the Brahmins who were householders, the Jaina religious heads were ascetics who accepted only food from the laymen. Caste was no criterionfor admission into their orders.[21]

How was Tirugnānasampanthar able to counter the popularity the Jainas were earning through such services? He toured Tamilnādu visiting 220 temples, singing thevārams (devotional hymns) on each one of them. These hymns were set to music (paṇ) and attracted huge crowds. Each decad (pathikam) described the natural beauty of the village where the temple was situated. It also drew from the store of myths built around the temples. Whether he performed miracles or not,the very presence of a child – prodigy singing ecstatic devotional hymns would have mesmerized the crowd. The Jainas whose approach was purely ideogical could not match

---

13. "மாசடைந்த மேனியர்" 524, "குளித்துணா அமணர்" 1236, "உருகுசிந்தையிலார்" 2165, "குண்டர்களோடரைக் கூறையிலார்" 52, "ஊத்தை வாய்ச்சமண்" 1882, "பெரியவாகிய குடையும் கையேந்தி" 2462, "சோறு கொணர்கென்று கையிலிடவுண்டு" 2386, "பொன்னியல் சீவரத்தார்" 1150, "தலையெலாம் பறிக்கும் சமண்" 5810, "வேதவேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லி அமணொடு தேரர்..." 3956, "உடுக்கை இன்றியே நின்று ஊர் நகவே திரிவார்" 710, "நின்றுணும் சமணும் இருந்தும் தேரும்" 4129, "பீலியை இடுக்கி நாளும் பெரியதோர் தவமென்றெண்ணி" 4543, "கழிக்கரைப்படு மீன்கவர்வார் அமண்" 3307.

14. "...... ஈசன் அணைவில் சமண் சாக்கியம் ஆக்கியவாறே" – சம்பந்தர் :1860.

15. "அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கை வார் சடைக் கரந்தார்க் கன்பராயின்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"
– அப்பர் தேவாரம்: 7182

16. "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்..."
– அப்பர்: 4744

17. "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்..."
– அப்பர்: 4744

18. Radhakrishnan.S. ibid, p 290

19. "ஞாலமிக்க தண்தமிழால் ஞானசம்பந்தன் சொன்ன கோலமிக்க மாலை" 558, "நற்றமிழ்க்கின் துணை ஞானசம் பந்தன்" 830, "ஞானசம்பந்தன் ஞானத்தமிழ்" 1270,"நல்ல செந்தமிழ் வல்லவன் ஞானசம்பந்தன்" 2366, "கற்று முற்றினார் தொழும் கழுமலம் தருந்தமிழ்" 2538, "பழுதிலிறை எழுதுமொழி தமிழ் விரகன் வழிமொழிகள்" 3525.

20. "எனதுரை தனதுரையாக"

21. மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும் (1954) பக்.55 – 56

the euphoria that characterized the bakti movement led by Tirugnānasampanthar.

In its bid to elbow out the Buddhist and Jaina religionsin the south, the Vedic religion resorted to an ingenious strategy. They established relationships between Dravidian gods like Murugan, Kottavai, Sivan and Thirumaal and the Vedic gods. The result was the Rudra - Siva synthesis, Kali - Kottavai synthesisand the Muruga - Skanda synthesis. Thus the Saiva religion became a tributary of the Vedic river.[22] The new Hindu religion was thus armed to meet the non - vedic Jainism and Buddhism.

The last straw that broke the back of the Jainas was the defeat they suffered at Madurai in the hands of Tirugnānasampanthar followed by the impaling of the vanquished. Although scholars like T.P.Meenakshisundaram consider the episode an exaggeration, the paintings in the hall of the Pottamarai kulam and the enactment of scenes depecting the impaling of the Jainas at the annual festival provide irrefutable evidence of the persecution of Jainas by the Saivaites.[23]

22. "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க" – சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம் 1.

23. மயிலை சீனி.வேங்கடசாமி, சமணமும் தமிழும் (1954), பக் 68

## Conclusion

Although Kailasapthy considers the socio – economic factors that prevailed in Tamilnadu as the cause of the Saiva – Jaina conflict, the writer is of the view that there is more to it than what a Marxist interpretation could offer.

Ahimsa as opposed to Vedic ritual which included animal sacrifice, the stoicism of the Jains which ran counter to the material benefits the brahmins were craving for, the use of the languages of the common people in place of Sanskrit which was the language of the privileged class, the caste – oriented brahminicreligion that denied the masses access to the Hindu scriptures, educational and medical services offered by the Jaina monks which made them immensely popular were the other factors that need to be taken into account if we are to understand the background of the conflict.

The bakti movement led by Tirugnanasampanthar was able to reach out to the masses through devotional hymns dedicated to the various temples of Tamilnadu thus creating a sense of belonging and a sense of unity among the people.

The pendulum swung in favour of the Saivaites when the Pallava and Pandya kings, the patrons of Jainism were converted to Saivaism.

### ஒரு பல்லியால் முடியும்போது ஏன் நாம் செய்ய கூடாது ?

ஜப்பான் நாட்டை சேர்ந்த ஒருவர் தன்னுடைய வீட்டை புதுப்பிப்பதற்காக மரத்தாலான சுவற்றை பெயர்த்து எடுத்துட்டு இருந்தார். ஜப்பான் நாட்டில் பெரும்பாலும் வீடுகள் மரத்தாலேயே கட்டப்பட்டிருக்கும் இரண்டு கட்டைகளுக்கு இடையில் இடைவெளி விட்டு கட்டப்பட்டிருக்கும். வீட்டு சுவற்றை பெயர்த்து எடுக்கும்போது இரண்டு கட்டைகளுக்கு இடையில் ஒரு பல்லி சிக்கி இருப்பதைப் பார்த்தார். அது எப்படி சிக்கி இருக்கிறது என்று அந்தப் பல்லியை சுற்றி பார்த்தார். அவர் அப்போதுதான் கவனித்தார். வெளிப்பகுதியில் இருந்து ஆணி அடிக்கும்போது அந்த ஆணி பல்லியின் காலில் இறங்கி இருக்கிறதுன்னு. அவருக்கு ஆச்சரியமா இருந்தது. அந்த ஆணி அடித்து குறைந்தது மூன்று வருடம் ஆகி இருக்கும். எப்படி இந்தப் பல்லி மூன்று ஆண்டுகள் உயிருடன் இருந்தது. இதை நாம் கண்டு பிடித்து ஆக வேண்டும் என்று மேற்கொண்டு வேலை செய்யாமல் அந்தப் பல்லியை கண்காணித்துக் கொண்டு இருந்தார்.

கொஞ்ச நேரம் கழித்து இன்னொரு பல்லி அதன் அருகில் வருவதைக் கண்டார். அந்தப் பல்லி தன் வாயில் இருந்து உணவை எடுத்து சுவற்றில் சிக்கிக்கொண்டு இருந்த பல்லிக்கு ஊட்டுவதை பார்த்தார். அவருக்கு தூக்கி வாரிப்போட்டது. அதாவது மூன்று ஆண்டுகளாக இந்தப் பல்லி சுவற்றில் சிக்கி இருந்த தன் சக பல்லிக்கு உணவு அளித்து வந்திருக்கு. ஒரு பல்லி தன் சக பல்லிக்கு எந்தவித எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் மூன்று ஆண்டுகள் உணவளித்து வந்துள்ளது.

# திருமந்திரம் கூறும் கர்ப்பக்கிரியை

சித்தமருத்துவ கலாநிதி
சே. சிவசண்முகராஜா M.D(S) (India)
தலைவர் , சிரேஷ்டவிரிவுரையாளர்
சித்தமருத்துவப்பிரிவு, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

ஆய்வுச்சுருக்கம் - கருப்பையில் கரு உருவாகும் செயலுக்குக் கர்ப்பக்கிரியை அல்லது கருவுற்பத்தி அல்லது பிண்டோற்பத்தி என்று பெயர். கணவனும், மனைவியும் எந்தநாட்களில் உறவு கொள்வதன்மூலம் ஆணின் விந்துவும், பெண்ணின் முட்டையும் இணைந்து கருவுருவாகும் என்பது பற்றியும், அங்ஙனம் உருவாகின்ற கருவின் ஆண், பெண் தன்மை நிர்ணயமாவது பற்றியும், இரட்டைக்குழந்தைகள் உருவாவது பற்றியும் அங்கவீனமுற்ற குழந்தைகள் பிறப்பதற்கான காரணங்கள் பற்றியும், கருவில் உருவாகும் குழந்தையின் ஆயுள் பற்றியும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சித்தர்களுள் ஒருவரான திருமூலர் தமது திருமந்திரத்தில் கர்ப்பக்கியை என்னும் பகுதியில் மிகவும் நுட்பமாக எடுத்துக் கூறியுள்ளார். திருமூலரின் இக்கருத்துக்கள் பண்டைக்காலத்தில் இத்துறையில் சித்தமருத்துவ அறிவியலின் மேன்மைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. தற்கால நவீன மருத்துவ விஞ்ஞான நூல்களில் கூறப்பட்டுள்ள கருவுற்பத்தி பற்றிய பல கருத்துக்கள் திருமந்திரக் கருத்துக்களுடன் ஒத்துப்போவதைக் காணக் கூடியதாகவுள்ளன. அவை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

*திறவுச் சொற்கள் - கர்ப்பக்கிரியை, கருவுற்பத்தி, திருமந்திரம், சித்தமருத்துவம், நவீனமருத்துவம்*

அறிமுகம் - தமிழ் மூவாயிரம் என்று சிறப்பித்துக் கூறப்படும் திருமந்திரமானது காரணம், காமியம், வீரம், சிந்தம், வாதுளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம், வியாமளம் ஆகிய ஒன்பது ஆகமங்களின் சாராம்சத்தை ஒன்பது தந்திரங்களில் எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளதாக அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.[1] திருமந்திரத்தை அருளிச்செய்த திருமூலர் பதினெண்சித்தர் கணத்தில் ஒருவராகவும், மருத்துவச் சித்தர்களில் ஒருவராகவும் கருதப்படுகிறார். அவரியற்றிய திருமந் திரத்தில் உயிர்ப்பிணி, உடற்பிணி என்பவற்றை நீக்குதற்குரிய பல விடயங்கள் கூறப்பட்டுள்ளமை நோக்கற்குரியது.

கருப்பையில் கருஉருவாதல் முதலாக மனித உடலுக்கு அடிப்படையாக விளங்கும் தொண்ணூற்றாறு தத்துவங்கள், விந்துற்பனம், விந்துசயம், உயிர்பற்றிய கருத்துக்கள், ஆயுட்பரீட்சை, அட்டாங்கயோகம், ஆறாதாரங்கள், காயசித்தி, போன்ற பல விடயங்கள் ஆரோக்கிய வாழ்வுடன் தொடர்புடையன. அவை பற்றித் திருமந்திரத்தில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. முக்கியமாக இரண்டாந்தந்திரத்தில் கூறப்பட்டுள்ள கருவுற்பத்தி அல்லது கர்ப்பக்கிரியை என்னும் பகுதியானது இந்துக்களாற் பின்பற்றப்பட்டுவரும் நாற்பது சம்ஸ்காரங்களில் ஒன்றான கர்ப்பாதானம் என்பதற்கு மிடையில் மிகுந்த ஒற்றுமைகள் காணப்படுவதுடன் நவீன அறிவியற் கருத்துக்களுடனும் ஒத்துப்போகின்ற பான்மையையும் காணமுடிகிறது.

ஒரு குழந்தை கருவில் உருவாகும்போதும், கருப்பையில் வளரும்போதும் அங்கு சரியான சூழல் நிலவுதல் வேண்டும். அல்லாவிடின் பிறக்கும் குழந்தை அங்கபாங்கமுற்றதாகவும், ஆரோக்கியமற்றதாகவும் இருக்க வாய்ப்புண்டாகும். அதனை நன்குணர்ந்ததாலேயே திருமூலர் கருவுற்பத்தி என்னும் பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து நாற்பத்தொரு பாடல்களில் அது சம்பந்தமான பல விடயங்களை எடுத்துக் கூறியுள்ளார்[2] அது மட்டுமன்றி திருமூலராற் கூறப்பட்டுள்ள கர்ப்பக்கிரியை என்னும் இப்பகுதி நூற்றிருபது பாடல்களைக் கொண்ட கருப்பத்திருமந்திரம் என்னும் பெயரால் தனிநூலகவும் வழக்கிலிருந்தமை பற்றியும் அறியக் கிடக்கிறது[3].

ஆய்வின் நோக்கம் - திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ள கர்ப்பக்கிரியைபற்றி சித்தமருத்துவநூல்கள் மற்றும் தற்கால மருத்துவ விஞ்ஞான நூல்களுடன் ஒப்பு நோக்கி ஆராய்வதே இக்கட்டுரையின் பிரதான நோக்க மாகும். அதன்மூலம் பண்டைய சித்தர்கள் கருவுற்பத்தி தொடர்பாகக் கொண்டிருந்த விஞ்ஞானரீதியிலான அணுகுமுறை பற்றியும் அவை தற்கால வாழ்வியலுக்கு எவ்வளவு தூரம் பிரயோசனப்படத்தக்கனவாக அமைந்துள்ளன என்பது பற்றியும் எடுத்துக்காட்டல் மற்றொரு குறிக்கோளாகும்.

ஆய்வுமுறையியல் - இது ஒரு ஒப்பியல் இலக்கிய ஆய்வாகும். ஆய்வுக்குரிய கருவிகளாகத் திருமந்திரம் மற்றும் கருவுற்பத்தியுடன் தொடர்புடைய தமிழ், ஆங்கில நூல்கள்,அகராதிகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

கருவுற்பத்தி - கரு உருவாக வேண்டுமானால் முதலில் ஆணும் பெண்ணும் தாம்பத்திய உறவு கொள்ளுதல் வேண்டும். அதன் பயனாக ஆணின்

சுக்கிலம் அல்லது விந்துவானது பெண்ணின் யோனி அல்லது கருக்குழியுள் விடப்படுதல் வேண்டும்.அதனையே திருமூலர் "விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி...." (பாடல் 455) என்னும் பாடல் மூலம் எடுத்துக் கூறியுள்ளார். அங்ஙனம் விடப்பட்ட விந்துவானது பெண்ணின் முட்டையுடன் (இதனை நாதம், சுரோணிதம், சோணிதம் என்றும் அழைப்பர்) சேர்க்கையடைதல் வேண்டும். இந்நிகழ்வையே கருச்சேர்க்கை (fertilization) எனவழைப்பர்[4]. அதன் விளைவாக உருவாவதே கருவாகும். அதனையே திருமூலர், "ஏயங்கலந்த இருவர் தஞ்சாயத்துப் பாயுங் கருவும் உருவாமென..." (பாடல் 459 ) என்று எடுத்துக் கூறியுள்ளார்.

"*உறையான கருப்பையில் சுக்கிலம் பாய*
*உத்தமனே சுரோணிதந்தானுறைந்து கொள்ளும்*"

என்று திருமூலர் கூற்றை வலுப்படுத்துகிறது அகத்தியசாரம் என்னும் சித்தவைத்திய நூல்[5].

ஆனால் ஆண் பெண் சேர்க்கையும், விந்து கருப்பக்குழியுள் விடப்படுதலும் நிகழ்ந்தால் மட்டும் கருவுருவாகிவிடமாட்டாது. உரிய நேரத்தில் இவை நடைபெறவேண்டும்.அது பற்றி இந்து சம்ஸ்காரங்களில் கூறப்பட்டுள்ளவற்றை ஈண்டு கவனத்திற் கொள்வது பொருத்தமுடையது. இந்து சம்ஸ்காரங்கள் பொதுவாக நாற்பது வகைப்படும். அவற்றுள் முதலாவதாகக் கூறப்படுவது கர்ப்பாதானம் எனப்படும்[6,7]. "சரியான நேரம், ஆணின் சரீரபலம், பெண்ணின் சரீரபலம், ஆணின் மனதிலிருக்கும் எண்ணங்கள், பெண்ணின் மனதிலிருக்கும் எண்ணங்கள், கோள் சாத்திரப்படி அப்போதைய காலம், கருப்பையின் (கருவை) ஏற்றுக் கொள்ளும் சக்தி இவை அனைத்தையும் நிர்மாணிக்க உருவாக்கப்பட்ட சம்ஸ்காரம்தான் கர்ப்பாதானம் எனப்படும்"[8]. இரவு ஒன்பது மணிக்குமேல் பதினொருமணிக்குள்தான் அதற்கான முகூர்த்தம் வைக்கப்படும்.

"கருத்தரிப்பதற்குக்கூடச் சாஸ்திரம் சடங்குகள் தேவையா? ஏன்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் கர்ப்பாதானம் என்ற கிரியை தாம்பத்திய உறவை நெறிப்படுத்தி, முடிவில் மோட்சத்துக்கு வழிகாட்டுகிறது. 'மாதாபூர்வரூபம், பிதா உத்தரரூபம், ப்ரஜைஸந்தி: ப்ரஜனனம், ஸந்தானம்' என்று வேதம் கூறுகிறது. எனவே, நல்லநாளில் தாம்பத்திய உறவு கொண்டால் நற்புத் திரரைப் பெறலாம்" என்று ச. சோமாஸ்கந்தசர்மா அவர்கள் கர்ப்பாதானத்துக்கு விளக்கம் தந்துள்ளார்கள்[9]. இங்கு நல்லநாள் என்பது கருவுண்டாதற்குரிய நாளாகும். அது பற்றித் திருமூலர் விந்துசயம் என்னும் பகுதியில் மிகவும் நுட்பமாக எடுத்துக் கூறியுள்ளார்.

"*மாயாள் வசத்தே சென்றிவர் வேண்டில்*
*ஓயா இருபக்கத்துள் வளர் பக்கத்துள்*
*ஏயா வெண்ணாளின்ப மேற் பனிமூன்றிரண்*
*டாயா அபரத்துளாதி நாள் ஆறாமே" (பாடல் 1939)*

இதன் பொருளாவது பெண்ணுடன் சேரவேண்டுமாயின் மாறி, மாறி வருகின்றதான வளர்பிறை, தேய்பிறை என்னும் இரண்டு பக்கத்துள் வளர்பிறைப் பக்கத்துள் முன் எட்டுநாளும் தவிர்த்துப் பின் ஆறு நாளும், சேரல் வேண்டும். அங்ஙனமே, தேய்பிறைப் பக்கத்துள் முன் ஆறு நாட்களும் உறவு கொள்ள உகந்தனவாம்.[10]

பருவமடைந்த பெண்ணை 'ருதுமதி' என்று ஆயுள் வேத வைத்தியநூல்கள் எடுத்தியம்பியுள்ளன[11]. ருது என்றால் பருவம்: மதி என்றால் சந்திரன். அதாவது பருவமடைந்த அல்லது பூப்படைந்த பெண் (சந்திரனைப் போன்றவள் என்ற கருத்தில் ருதுமதி எனப்படுகிறாள். சந்திரனானது பிரதமையிலிருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து பூரணையில் முழுநிலாவாகின்றது. அக்காலம் பூர்வபக்கம் அல்லது வளர்பிறைக்காலம் எனப்படுகிறது. அவ்விதமே பௌர்ணமிக்கு மறுநாளிலிருந்து படிப்படியாகத் தேய்வடைந்து அமாவாசையன்று முற்றிலும் மறைந்துவிடுகிறது. அது அபரபக்கம் அல்லது தேய்பிறைக்காலம் எனப்படுகிறது.

பருவமடைந்த ஒரு பெண்ணின் மாதவிடாய்ச் சக்கரத்தைக் (menstrual cycle) கருதுமிடத்து மாதவிடாய் ஏற்பட்ட நாளிலிருந்து பதினான்காம் நாள்வரை கருப்பையானது கருவை ஏற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறாக வளர்ச்சியடைகின்றது. பதினான்காம் நாளில் சூலகத்திலிருந்து (ovary) முட்டைவெளியேற்றம் (ovulation) நடைபெறுகிறது. இப்பதினான்கு நாள்வரையான காலத்தையே திருமூலர் பூர்வபக்கம் என்று குறிப்பிட்டுள்ளார். இக்காலப்பகுதியுள் கருச்சேர்க்கை நடைபெறாவிட்டால் கருப்பையின் உட்சுவரானது படிப்படியாகச் சிதைவுற்று இருபத்தெட்டாம் நாளளவில் மாதவிடாயாக இரத்தத்துடன் வெளியேற்றப்படுகிறது. அக்காலத்தையே திருமூலர் அபரபக்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தற்கால மருத்துவநூல்கள் கூறும் மாதவிடாய்ச் சக்கர விளக்கத்துடன் ஒப்புநோக்கிப் பார்ப்போமானால் திருமூலர் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பே அது பற்றி மிகவும் நுட்பமாக எடுத்துக் கூறியுள்ளமை புலனாகும். தற்கால மருத்துவ விஞ்ஞானப்படி சாதாரணமாக மாதவிடாய்ச் சக்கரமானது இருபத்தெட்டு நாட்களைக் கொண்டதாகவும், மூன்று பகுதிகளாகவும் பிரித்து விளக்கப்படுகிறது[12]. (படம் -1)


1. அண்டம் தூண்டப்படும் காலம் (follicular phase) இது மாதவிடாய் ஏற்பட்ட பின்னரான 7 – 14 நாட்களாகும்.
2. முட்டை வெளியிடப்படுதல் (ovulation) இது 14ஆம் நாளாகும்
3. கருத்தரிப்பை ஒழுங்குபடுத்தும் காலம் (secretary phase or leuteal phase )

மாதவிடாய்க்காலமானது 4 – 6 நாட்கள்வரை நீடிக்கப்படலாம். அதன்பிறகு சூலகத்திலுள்ள (ovary) அண்டம் (primary follicle) எனப்படும் முட்டை முன்னோடிக்கல வளர்ச்சியைப் பெண்ணினப்பெருக்க ஓமோன்கள் (female sex hormones) தூண்டுகின்றன. அதே நேரத்தில்

இவ்வோமோன்கள் கருப்பையின் உள்வரிச்சவ்வையும் (endometrium) வளரச் செய்கின்றன. அத்துடன் கருக் குழல்கள் (fallopian tube), கருப்பைவாய் (cervix) என்ப வற்றின் உட்புறச் சவ்வுகளையும் வளரச் செய்கின்றன.

பதினான்காம் நாளில் முட்டையானது (ovum) சூலகத்திலிருந்து கருக்குழாயுள் வெளிவிடப்படுகின்றது. (ovulation). இதுவே மாதவிடாய்ச் சக்கரத்தின் நிறைமதி நாளாகும். ஆயினும் முட்டை வெளியீடானது பதினான்காம் நாளுக்குச் சற்று முன், பின்னாகவும் நடைபெறல் கூடும். அங்ஙனம் வெளியிடப்படும் முட்டையானது நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள்வரை தொழிற்படக் கூடிய நிலையிலிருக்கும். அதாவது, விந்துவுடன் சேர்ந்து கருவையுண்டுபண்ணக்கூடிய நிலையிலிருக்கும். எனவே, இக்காலப்பகுதியுள் ஆணின் விந்தானது இம்முட்டையுடன் இணைந்தால் கருச்சேர்க்கை நடைபெற்றுக் கருவுருவாகும். அங்ஙனம் உருவாகும் கருவைத் தாங்கி வளர்ச்சியடையச் செய்வதற்காகவே கருப்பையுள்வரிச்சவ்வு(பெண் ஓமோன்களின் செயற்பாடுகாரணமாக) தயாராகவிருக்கும். எனவேதான் குழந்தைப்பேற்றை விரும்பபவர்கள் பதினான்காம் நாளை மையமாகக் கொண்டு அதற்கு முன் பின்னாகவுள்ள நாட்களிலும் உறவு கொள்ளல் வேண்டும் என்று தற்கால மருத்துவமும் ஆலோசனை கூறுகின்றது. அதையே திருமூலரும் பூர்வபக்கத்துப் பின்னாறு நாட்களும், அபரபக்கத்து முன்னாறு நாட்களும் தாம்பத்திய உறவுக்கு உகந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

முட்டை விந்துச்சேர்க்கை நடைபெறாவிட்டால் முட்டையானது அழிந்துவிடுவதுடன் கருப்பை உள்வரிச் சவ்வும் (அதன் 2/3 பங்கு) அழிந்து மாதவிடாயாக இரத்தத்துடன் கலந்து வெளியாகிவிடும். மாதவிடாய் என்பது 'கரு ஏற்படாததால் கருப்பைவிடும் கண்ணீர்' என்று ஆனைமுகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளமையும்




படம் - 1

நோக்கத்தக்கது[13]. எனவே, சரியான நாள் அல்லது நல்ல நாள் என்பது முட்டை வெளியேற்றப்படுங்காலமாகிய பதினான்காம் நாளை மையப்படுத்தியே குறிப்பிடப்படுகிறது. அக்காலத்தில் சம்போகம் செய்தால் கருத்தரித்தல் நிகழும் என்பது உறுதியாம். அங்ஙனம் உருவான கருவானது கருப்பைச் சுவரிலே பதிந்து (implantation of the zygote) வளர்ச்சியடைய ஆரம்பிக்கும். அதனையே திருமூலர்,

*"ஏயங்கலந்த இருவர் தங்காயத்துப்*
*பாயுங்கருவும் உருவாமெனப் பல*
*காயங்கலந்தது காணப்பதிந்தபின்*
*மாயங்கலந்த மனோலயமானதே" (பாடல் 459)*

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும்,

*"உன்னிய கர்ப்பக் குழியாம் வெளியிலே*
*பன்னிய நாதம் பகர்ந்த பிருதுவி*
*வன்னியும் வாயுவுமாயுறுஞ் சுக்கிலம்*
*மன்னிய சமனாய் வளர்க்கு முதகமே"*
*(கர்ப்பத்திருமந்திரம் பாடல் 14 பக்.17)*

என்று பஞ்சபூத சம்பந்தமும் கருக்குழியில் கருவளர்தல் பற்றியும் கூறப்பட்டுள்ளதும் நோக்கற்குரியது. இப் பாடலுக்கான விளக்கத்தைத் துரைராசன் அவர்கள் கருவுற்பத்தியும் வளர்ச்சியும் என்ற நூலில் பின்வருமாறு எடுத்தியம்பியுள்ளார். "இங்கு கருவளர்வதற்குரிய இடமாகக் கருப்பை கூறப்பட்டுள்ளது. வெளி என்பது ஆகாயம். அதாவது ஆகாயம் என்பது சகல சீவராசி களுக்கும், பொருள்களுக்கும் இடமளிப்பதாகும். கருவளர் வதற்கு இடமளிப்பதால் கருப்பையானது விண்ணுக்கு ஒப்ப அழைக்கப்படுகிறது. அடுத்து, பிருதுவி அல்லது மண்ணானது சீவராசிகளைத் தோற்றுவிப்பதுடன் அவற்றிற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உணவையும் வழங்குகிறது. அவ்விதமே விந்துவுடன் சேர்க்கையுற்ற நாதமானது கருவாகி வளர்வதுடன் அதற்குத்தேவையான உணவையும் வழங்குவதால் பிருதுவி எனப்படுகிறது. வன்னியும், வாயுவுமாயுறுஞ் சுக்கிலம் என்பதால் விந்துவின் உஷ்ணத்தன்மையும், அசையுந்தன்மையும் எடுத்தியம்பப்படுகிறது."[14] கருவானது வளரும்போது நீர்த்தன்மையான அமினியோன் (amnion) என்னும் திரவத்துள் வளர்கிறது. அத்திரவமானது கருவுருவைச் சுயமாக வளர அனுமதிப்பதுடன், புறத் தாக்கங்கள், அதிர்ச்சி என்பவற்றிலிருந்தும் பாதுகாக்கிறது. இதனையே சமனாய் வளர்க்குமுதகமே என்று குறிப்பிட்டுள்ளார் போலும். உதகம் என்றால் நீர் என்று பொருள்[15]

அடுத்து, கரு, கருவுரு என்ற சொற்பதங்களுக்கான அர்த்தம் பற்றியும் ஈண்டு கவனத்திற்கொள்ளல் பொருத்தமுடையது. கரு என்பதில் க என்பது தமிழ் இலக்கமாகிய ஒன்றையும், ரு என்பது இலக்கம் ஐந்தையும் குறிக்கிறது. இங்கு ஒன்று என்பது ஆன்மா அல்லது உயிரையும் ஐந்து என்பது பஞ்சபூதங்களையும் குறிப்பதாகக் கொண்டு பஞ்பூதச்சேர்க்கையும், ஆன்மாவும்

இணைவதால் உருவாவதே கரு என்று அறிஞர் கூறுவர். இதனையே வேறொருவிதமாக ஆயுள்வேத வைத்திய நூலான சரகசம்கிதையும் எடுத்துக்கூறியுள்ளது[16]. கருவுரு(கரு + உரு) என்பதில் உரு என்பதில் உ என்பது தமிழ் இலக்கம் இரண்டைக் குறிப்பதால் உரு என்பது 25 ஐக் குறிப்பதாகக் கொண்டு கருவானது இருபத்தைந்து தத்துவங்களைக் கொண்டு உருவானதாக ஆன்றோர் கூறுவர். அதனையே திருமூலரும்,

*"ஆக்குகின்றான் முன்பிரிந்த இருபத்தஞ்*
*சாக்குகின்றானவனாதி எம்முயிர்*
*ஆக்குகின்றான் கர்ப்பக் கோளகையுள்ளிருந்*
*தாக்குகின்றான் அவன் ஆவதறிந்தே" (பாடல் 451)*

என்ற பாடல் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். அதாவது, முற்பிறவியில் பிரிந்துபோன இருபத்தைந்து தத்துவங்களும் சேர்ந்தே உயிரானது கருவுற்பத்தியின்போது உருவாக்கப் படுகிறது என்பது திருமூலரின் கருத்தாகும்.

கரு உருவாகும் முறை, அதில் தத்துவங்கள் அமையும் விதம் போன்றவற்றைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள திருமூலர் அக்கருவின் வளர்ச்சி, விருத்தி (growth and development) என்பன பற்றி அதிகம் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

*"என்பால் மிடைந்து நரம்பு வரிந்து கட்டிச்*
*செம்பால் இறைச்சி திருந்த மனை செய்து*
*இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்*
*நன்பால் ஒருவனை நாடுகின்றேனே" (பாடல் 461 )*

என்ற பாடல் மூலம் என்புகளால் பின்னி, நரம்புகளாகிய கயிற்றால் வரிந்து கட்டி, இரத்தத்தோடு கூடிய தசையால் திருத்தமாக வீட்டை(உடலை) அமைத்து, இன்பத்தோடு உயிர்நிற்றற்கு இடமாகியது[17] என்று உடலமைப்பைப்பற்றி மிகச்சுருக்கமான குறிப்பே கூறப்பட்டுள்ளது. ஆயினும் கருப்பத்திருமந்திரத்திலுள்ள பின்வரும் பாடல்கள் கருவுருவின் வளர்ச்சி பற்றிய சில தகவல்களைச் சுட்டி நிற்கிறன

*"உதகமுதிரமுறுங் கனல் வாயுவால்*
*சிதகுறுமங்கங்கள் செய்து முடித்திடும்*
*பதகுறு முரோமம் பகர்தசையத்தி*
*நிதகுறுமொன்பது வாயிலும் நீங்குமே" (பாடல் - 15)*

அதாவது, அப்புபூதத்திலிருந்து இரத்தமுண்டாவதுடன் அக்கினியினாலும், வாயுவாலும் கருவுருவானது பல அங்கங்களாகவும், உறுப்புக்களாகவும் பிரிக்கப்பட்டு வளர்ச்சியுறும். உரோமம், தசை, என்புகள் என்பன உருவாவதுடன், நவத்துவாரங்களும் உண்டாகும் என்பதாம்.

*"நீங்கிட நீங்கிட நிமிர்ந்து வளர்ந்தோங்கும்*
*ஓங்கிட வோங்கிட வுறுதியாம் வாயு*
*வாங்கிட வாங்கிட வன்னி தலைக் கொளும்*
*பாங்கிடப் பாங்கிடப் பத்தாகும் திங்களே" (பாடல் 16 )*

அங்கங்கள் தனித்தனியாக உண்டாக, உண்டாகப் பிண்டமானது நிமிர்ந்து வளர்ந்து உயரும். பிண்டம் விருத்தியாக, விருத்தியாக வாயுமுதலியவையும் பிராணவாயுவும் விருத்தியாகி, அதனிடத்திலுள்ள உ'ணமும் சிரசுக்கேறும். இங்ஙனம் சகல உறுப்புகளும் விருத்தியடையப் பத்து மாதங்களாகுமாம். இதிலிருந்து திருமூலர் மறைமுகமாக ஒரு கருத்தையும் வெளியிட் டுள்ளமை புலனாகிறது. அதாவது உடலுறுப்புக்கள் பூரணமாக வளர்ச்சியடைவதற்குப் பத்து மாதங்கள் தேவை என்பதிலிருந்து அதற்கு முன்னர் குழந்தை பிறந்தால் பூரண உருவத்துடன் இருக்காதென்பதே அதுவாகும். 'உருவம் வளர்ந்திடும் ஒண்டிங்கள் பத்தில்..." (பாடல் 485) என்ற திருமந்திரப்பாடலும் அதனை உறுதிப்படுத்துகிறது. தற்கால மருத்துவப்படியும் கருவி லுள்ள குழந்தை பூரணவளர்ச்சியடைந்து பிறப்பதற்கு முப்பத்தெட்டுவாரங்கள் வரை தேவைப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது 38-42 வாரங்களுக்கு இடை யில் பிறக்கும் குழந்தையையே நிறைமாதக்குழந்தை என்று தற்கால மருத்துவநூல்கள் எடுத்துக்கூறியுள்ளன[18].

சித்தமருத்துவநூல்களான அகத்தியர் வல்லாதி, அகத்தியர் வைத்தியசாரம், சதகநாடி, பரராசசேகரம் அங்காதிபாதம் போன்றவற்றில் கருவானது கருப்பையில் பத்துமாதமும் கருப்பையில் வளரும் முறைபற்றிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன[19]. திருமூலரால் இயற்றப் பட்டதாகக் கூறப்படும் கருப்பத்திருமந்திரம் நூற்றிருபது பாடல்கள் கொண்டதாக அதன் இரண்டாவது செய்யுளிற் கூறப்பட்டுள்ள போதிலும் கருவுற்பத்தி தொடர்பாக பதினேழு செய்யுட்களே அந்நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளன[20]. அவற்றுள்ளும் ஆறு பாடல்கள் திருமந்திரத்திலும் கூறப்பட்டவையாகவுள்ளன. எனவே, கருப்பத்திருமந்திரம் என்ற நூல் முழுமையாகக் கிடைக்குமிடத்துக் கருவுற்பத்தி பற்றிய தெளிவான விபரங்களைப் பெற்றுக் கொள்ளல் சாத்தியப்படலாம்.

அங்கக்குறைபாடுகள் - அங்கக்குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறப்பது பற்றியும் திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் கவனத்திற் கொள்ளப் படத்தக்கன. கர்ப்பகாலத்தில் ஏற்படக்கூடிய சில அசாதரணநிலைகளே அங்கக்குறைபாடுகளுக்குக் காரணம் என்பது திருமூலர் கருத்தாகவுள்ளது.

*"பாய்கின்ற வாயுகுறையின் குறளாகும்*
*பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்*
*பாய்கின்ற வாயு நடுப்படின் கூனாகும்*
*பாய்கின்ற வாயு மாதர்க்கில்லை பார்க்கிலே"*
*( பாடல் 480 )*

*"மாதா உதரம் மலமிகின் மந்தனாம்*
*மாதா உதரம் சலமிகின் மூங்கையாம்*
*மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை*
*மாதா உதரத்தில் வந்த குழவிக்கே" (பாடல் 481 )*

அதாவது, கருப்பையில் உருவாகும் குழந்தை குறளாக (dwarf), முடமாக (deformed), கூனாக (hunch back/ hyposis), மூளைவளர்ச்சி குன்றியதாக (mentally retarded), ஊமையாக (மூங்கை – dumb), குருடாக (blind)


பிறப்பதற்கான காரணங்கள் பற்றி இவ்விரு பாடல்களிலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பொதுவாக, கருவுற்ற பின்னர் தாய்க்கு ஏற்படக்கூடிய சிலநோய்கள், சில சத்துக்களின் குறைபாடு, தாயால் பயன்படுத்தப்படும் சில மருந்துகள் காரணமாகக் குழந்தைகள் அங்கவீனமாகப் (Congenital defects) பிறக்கநேரிடுவதாக நவீன மருத்துவநூல்கள் எடுத்துக்கூறுகின்றன[21,22]. திருமூலர் இங்கு எடுத்துக் கூறியுள்ள காரணங்கள் தெளிவுபடுத்தத்தக்கனவாக இல்லாத போதிலும் கருப்பையில் கருவளரும்போது ஏற்படக்கூடிய பாதிப்புக்களினாலேயே இத்தகைய குழந்தைகள் பிறக்கின்றன எண்ணக்கருவைக் கூறியிருப்பது வியத்தற்குரிய ஒரு விடயமாகும்.

ஆண், பெண் பேதம் - கருவில் உருவாகியுள்ள குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்று அறியும் ஆர்வம் தற்காலத்தில் மட்டுமன்றி, முற்காலத்திலும் இருந்துள்ளது. அது பற்றித் திருமூலரும் எடுத்துக் கூறியுள்ளார்.

*"ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்*
*பூணிரண்டொத்துப் பொருந்தில் அலியாகும்"*
*(பாடல் 478 )*

இதற்குப் பொருள் கூறுபவர்கள் சேர்க்கைக் காலத்தில் ஆணின்வேகம் அதிகமாயிருந்தால் ஆண்குழந்தை பிறக்கும் என்றும், பெண்ணின் வேகம் அதிகமாயிருந்தால் பெண் குழந்தை பிறக்கும் என்றும் கூறுவர். அதாவது. விந்து மிகுந்தால் ஆண்: நாதம் மிகுந்தால் பெண்: இரண்டும் சமனாக இருந்தால் அலி என்பது கருத்து. திருமூலர் திரிகாலமுமணர்ந்த ஒரு சித்தராவர். எனவே, அவர் கூற்று ஆழ்ந்த சிந்தனைக்குரியது. ஆண்மிகில் என்பது ஆண்தன்மை மிகுதல் என்றும், பெண்மிகில் என்பது பெண்தன்மை மிகுதல் என்றும் பொருள் கொள்ளத்தக்கது. தற்கால அறிவியலின்படி ஆண் அல்லது பெண் குழந்தை பிறப்பதற்கு ஆணின் விந்திலுள்ள மரபணுக்களே (chromosomes) காரணமாகக் கூறப்படுகிறது[23,24,25,26] சாதாரணமாக ஆணிலுள்ள விந்துவையுண்டாக்கும் மூலவுயிர்க்கலங்கள் ஒவ்வொன் றிலுமுள்ள மரபணுக் களின் தொகையை 44ஒல என்றும், பெண்ணிலுள்ள முட்டையை உண்டாக்கும் மூலவுயிர் கலங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள மூலவுயிர்க்கலங்களிலுள்ள மரபணுக்களின் தொகையை 44ஒஓ என்றும் குறிப் பிடப்படும். அவை ஒவ்வொன்றும் விந்து அல்லது முட்டையாக முதிர்ச்சியடையும்போது அவற்றிலுள்ள மரபணுக்கள் அரைவாசியாக்கப்படுகின்றன (அப்படி நிகழ்ந்தால்தான் விந்து முட்டைச்சேர்க்கைக்குப் பிறகு மரபணுக்களின் சமநிலை பேணப்பட முடியும்) அதாவது விந்துவில் 22ஒ (பெண்பாலொட்டிய விந்து) அல்லது 22ல (ஆண்பாலொட்டிய விந்து) என்ற மரபணுநிலையும், முட்டையில் 22ஒ இருக்கும். (படம் 2 பார்க்கவும்)

எனவே, 22ல உள்ள விந்து 22ஒ உள்ள முட்டையுடன் சேரும்போது 44ஒல என்ற மரபணுநிலை ஏற்பட்டு அது ஆண்குழந்தையாகவும், 22ஒ உள்ள



படம் 2

விந்து 22ஒ உள்ள முட்டையுடன் சேரும்போது 44ஒஓ என்ற மரபணுநிலை ஏற்பட்டு அது பெண்குழந்தையாகவும் உருவாகிவிடுகிறது. எனவே திருமூலர் குறிப்பிட்டுள்ள ஆண்மிகில் என்பது ஆண்தன்மைக்குரிய மரபணுவையும் பெண்மிகில் என்பதைப் பெண்தன்மைக்குரிய மரபணுவின் ஆற்றலாகவும் கொள்வதே பொருத்தமுடையது. இவ்விரு மரபணுக்களில் எதுவும் ஆற்றலற்றிருப்பின் உருவாகும் குழந்தை அலியாக (inter sex) இருக்கும் என்பதாம்.

இதைவிட இன்னொரு முறையிலும் ஆண், பெண் குழந்தைகளை நிர்ணயித்துக் கொள்வது பற்றித் திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.

*குழவியும் ஆணாம் வலத்ததுவாகில்*
*குழவியும் பெண்ணாம் இடத்ததுவாகில்*
*குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்*
*குழவியும் அலியாகும் கொண்டகால் ஒக்கிலே"*
*(பாடல் 482 )*

அதாவது ஆண், பெண் உறவின்போது அவர்களின் சுவாசமானது வலது நாசியூடாக நடைபெற்றால் (சூரியகலை) உருவாகும் குழந்தை ஆணாகவும், இடது நாசியூடாக நடைபெற்றால் (சந்திரகலை) பெண்ணாகவும், இருநாசியூடாகவும் ஒக்க நடைபெற்றால் (சுழுமுனை) அலியாகவும் பிறக்குமாம்.

அதுமட்டுமன்றி உருவான கருவானது அபானவாயு வினால் பிரிக்கப்பட்டால் இரட்டைக்குழந்தை பிறக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இரட்டைக் குழந்தையுண்டாகும் விதம் பற்றிய திருமந்திரக் கருத்தும் நன்கு ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். தற்கால மருத்துவ நூல்களின்படி இரட்டைக் குழந்தைகள் உண்டாவதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. உருவான கருவானது இரண்டாகப்பிரிந்து இருகழந்தைகளாக வளர்தல் (uniovular twins), இரண்டு வெவ்வேறு விந்துக்களும், முட்டைகளும் சேர்க்கையடைவதால் இருகழந்தைகள் உருவாதல் (biovular twins) என்பனவே அவையாகும்[27,28]. இங்கு திருமூலர் ஒரு கரு இரண்டாகப்பிரிந்து இரட்டைக் குழந்தையுண்டாவது பற்றியே குறிப்பிட்டுள்ளார்.

சுவாசம் நடைபெறும் முறைபற்றியும், உடல் ஆரோக்கியத்திற்கும் சுவாசத்திற்கும் இடையிலுள்ள தொடர்புகள் பற்றியும் ஞானசரநூல் எனவழைக்கப்படும்

சித்தர்நூலில் மிகவும் விரிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது. சரநூலின்படி ஒருவரின் சுவாசமானது இடது அல்லது வலது நாசித்துவாரத்தினூடாகவே சாதாரணமாக நடைபெறும். இடதுநாசிவழியாக நடைபெறும் சுவாசத்தை இடகலை அல்லது சந்திரகலை என்றும், வலது நாசியூடாக நடைபெறும் சுவாசத்தைப் பிங்கலை அல்லது சூரியகலை என்றும் அழைக்கப்படும். சிலவேளை இருநாசித்துவாரங்களூடாகவும் சுவாசம் நடைபெறலாம். அது சுழுமுனை எனவழைக்கப்படும்.

பொதுவாக இரண்டு மணித்தியாலத்துக்கு ஒரு நாசி வழி என்ற ஒழுங்கில் சுவாசமானது இரு நாசித்துவாரங் களூடாகவும் மாறி மாறி நடைபெறும். அது பற்றிய விபரங்கள் சரநூல்களில் கூறப்பட்டுள்ளன. அதுமட்டு மன்றிப் பயிற்சியின் மூலம் சுவாசத்துவாரங்களூடாக நடைபெறும் சுவாச ஒழுங்கையும் மாற்றியமைத்துக் கொள்ள முடியும். அவைபற்றி விரித்துரைத்தல் இக்கட்டுரையின் நோக்கமன்று.

திருமூலரின் முற்கூறிய பாடலின்படி இரண்டு விடயங்கள் கவனத்திற் கொள்ளத்தக்கன.முதலாவதாக ஆண், பெண் உறவின்போது இருவரின் சரவோட்டமும் வலமாக இருந்தால் ஆண்குழந்தை பிறக்கும்: இடமாக விருந்தால் பெண்குழந்தை பிறக்கும்: சுழுமுனையாக இருந்தால் நபும்சகமாகப் பிறக்கும்.

இரண்டாவதாக, சரப்பயிற்சியின் மூலம் தாம்பத்திய உறவின்போது சரவோட்டத்தைத் தேவைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வதன்மூலம் விரும்பிய குழந்தையைக் கருவில் உருவாக்கிக் கொள்ளமுடியும். தற்கால மருத்துவக்கண்டுபிடிப்புகளும், பரிசோதனை முறைகளும் (உதாரணமாக ultra Sonography, Amniocentasis போன்ற பரிசோதனைமுறைகள்) கருவில் குழந்தை உருவானதற்குப் பிறகே அதை ஆணா, பெண்ணா என்று நிச்சயிக்க உதவுகின்றன. ஆனால் திருமூலர் போன்ற சித்தர்கள் ஆண் அல்லது பெண்குழந்தையைக் கருவிலேயே உருவாக்குவதற்கான மார்க்கத்தைக் கூறியுள்ளனர். ஆனால், திருமந்திரம் கூறும் சரவோட்டம் போன்ற முறைகளைத் தற்காலத்தில் ஆராய்ச்சிகள் மூலம் உறுதிப்படுத்துவது மிகவும் சிக்கலான விடய மாகவே இருக்கும்.

அடுத்து, கருவில் உருவாகும் குழந்தையின் ஆயுள் பற்றியும் திருமந்திரத்தில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

*பாய்ந்தபின் அஞ்சோடில் ஆயுளும் நூறாகும்*
*பாய்ந்தபின் நாலோடில் பாரினில் எண்பதாம்*
*பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந்திவ்வகை*
*பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலுமாமே"*
*( பாடல் 479 )*

அதாவது, விந்து பாய்ந்தபின் (சேர்க்கைக்குப் பிறகு) சுவாசம் ஐந்துநாழிகைவரை ஒரேவிதமாக நடைபெற்றால் பிறக்கின்ற குழந்தையின் ஆயுள் நூறாம். நான்கு நாழிகை வரை அவ்விதமிருந்தால் ஆயள் எண்பதாம். இவ்விதம் சுவாச ஓட்டத்தைக் கொண்டு குழந்தையின் ஆயுளைப் பகுத்தறிய வேண்டும். ஆனால் அது சரநூல்வல்ல யோகிகளாலே முடியக்கூடிய ஒன்றாம்.

முடிவுரை- கருவுண்டாதல்,அதற்குரிய காலம், கருப்பையில் அது பதிக்கப்பட்டு விருத்தியடைதல், அங்கபங்கமுற்ற அல்லது ஊனமுற்ற குழந்தை பிறப் பதற்கான காரணங்கள், ஆண் பெண் பேதமறிதல், ஆயுள் பற்றியறிதல் போன்ற பல விடயங்கள் திருமந்திரத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றுட் சில விடயங்கள் தற்காலத்துக்குப் பொருத்தமற்றவை யாகவோ அல்லது தற்காலத்தவரால் விளங்கிக் கொள்ள முடியாதவையாகவோ இருந்தாலும், பல விடயங்கள் தற்காலத்திற்கும் ஏற்புடையனவாகவும், விஞ்ஞானரீதியாக விளங்கப்படுத்தத் தக்கனவாகவும் உள்ளன. எனவே, கருப்பக்கிரியை பற்றிய திருமந்திரக் கருத்துக்களை மேலும் விரிவாக ஆய்வு செய்தல் அவசியமாகும்.

**அடிக்குறிப்புகள்**


1. திருமந்திரமாலை எனப் பெயர் பெற்ற திருமந்திரம், (1968), ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீ வைகுண்டம், ப.27
2. மேற்படி, பக். 74–80
3. வேங்கட சுப்பிரமணியன், தா.ப., (1957), திருமந்திரம் வைத்தியப்பகுதி (கருப்பத்திருமந்திரம்) திருவாவடுதுறை ஆதீனம். ப.ii
4. Datta AK. (1995) Essential of Human Embryology , Current Books Internationals, Culcutta Pg.26
5. துரைராசன் கோ. கருவுற்பத்தியும் வளர்ச்சியும் , வேப்பேரி, சென்னை. ப.3
6. கமலா செல்வராஜ், (2005), (தொகுப்பு) மனஅமைதிக்கு உதவும் ஆன்மீகம், நர்மதா பதிப்பகம், தி.நகர், சென்னை. ப. 18
7. வைத்தியநாத தீட்சிதர் தர்மசாஸ்திரச் சுருக்கம், Heritage India Educational Trust, 6, Sanskrit College street, Channai 004.pg.05
8. கமலா செல்வராஜ், மு.கு.நூ, ப.20
9. சோமாஸ்கந்தசர்மா ச. (2001) வைதீக பூர்வப் பிரயோகம், நியந்த்ரி, நல்லூர், யாழ்ப்பாணம்.பக். 05
10. வேணுகோபால் பு.மு. (1986) சூல்மருத்துவம் , தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் ப,44
11. ஸ்ரீ ராமதேசிகன் எஸ்.என். (1985) அக்னிவேசரின் சரக சம்ஹிதை (முதற்பகுதி), இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், சென்னை 106.ப. 653
12. ஆனைமுகன் செ. (2003) மகப்பேறும் மகளிர் மருத்துவமும், பாமஸ்டன் வடக்கு மருத்துவமனை, நியூசிலாந்து. பக். 337
13. மேற்படி. ப.341. 14. துரைராசன் கோ., மு.கு.நூ, ப.15
15. கழகத்தமிழ் அகராதி (1980) திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 001.ப.155
16. ஸ்ரீ ராமதேசிகன் எஸ்.என். மு.கு.நூ, ப.653
17. வேணுகோபால் பு.மு. மு.கு.நூ, ப.48
18. Taber's Cyclopedic Medical Dictionary vol.1 (1998) Jaypee Brothers Medical Publishers (P)LTD, New Delhi 002, India.pg.761
19. துரைராசன் கோ. மு.கு.நூ, ப.04. 20. மேற்படி கருப்பத்திருமந்திரம்
21. ஆனைமுகன் செ. மு.கு.நூ, ப.205. 22. Viswanathan J. (1999) Achar's Text Book of Pediatrics , Orient Longman pp191-192.
23. ஆனைமுகன் செ. மு.கு.நூ, பக்.25-26. 24. இராஜராஜேஸ்வரி ஞா.,ஜெகதீசன் அ. (2003) குழந்தை நல மருத்துவம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். பக்.142. 25. Datta AK. Op.cit, pp. 10-14. 26. ஆனைமுகன், செ., மு.கு.நூ, பக்.150-151
27. Taber's Cyclopedic Medical Dictionary vol.11, (1999) Jaypee Brothers Medical Publishers (P)LTD, New Delhi 002, India. pg.2017.

# இலங்கையில் ஆரம்பக் கல்வி எதிர்பார்க்கும் மாற்றங்கள்

**Mr.K.Punniyamoorthy**
**Senior Lecturar**
**Batticaloa NCOE**

இலங்கையில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றபோதும் எதிர்பார்த்தளவு மாற்றங்கள் இடம்பெறுவதாகத் தெரிய வில்லை என்பது பல்வேறு தரப்பினரதும் குற்றச்சாட்டாகும் குறிப்பாக ஆரம்பக்கல்வியை எடுத்துக்கொண்டால் பெற்றோர்களின் எதிர்பார்ப்பிலும் ஆசிரியர்களது மனப்பாங்கிலும் மாற்றங்கள் ஏற்பட்டதாக அவதானிக்க முடியவில்லை.

இலங்கையில் முன்பாடசாலைகளில் ஆரம்பிக்கும் எண், எழுத்து, வாசிப்புச் செயன்முறை தொடர்சியாக மேலோங்கிச் செல்வதை அவதானிக்கின்றோம். முன் பாடசாலைப் பிள்ளைகளை ஆரம்பப் பாடசாலைகளுக்கு ஆயத்தம் செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக முன்பாடசாலை அனுபவங்கள் அடிக்கடி முறைசார் அனுபவங்களாக மாற்றப்படுகின்றன. இலங்கையில் இது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட ஒரு எண்ணக்கருவாகும். எண், எழுத்து, வாசிப்பு என்பவற்றைக் கற்பிப்பதே ஆரம்பப் பாடசாலைகளின் கடமையெனப் பெற்றோர்கள் கருதுவதால் பிள்ளைகளின் முழுமையான விருத்தியை முன்னேற்றுதல் அதன் பிரதான தொழிற்பாடு என்ற உண்மையை முற்றாக மறந்து விடுகின்றனர். இவை பிள்ளைகள் மீது பொருத்தமற்ற அழுத்தத்தைக் கொடுக்கின்றன.

முதன்மை நிலை 1 இல் வழிப்படுத்தப்பட்ட விளையாட்டுக்களுக்கே முதன்மை கொடுக்கப்படுதல் வேண்டும் என வலியுறுத்தப்படும்போதும் ஆசிரியர்களோ, பெற்றோர்களோ எண், எழுத்து, வாசிப்பிலிருந்து மீளுவதாகத் தெரியவில்லை.

ஆரம்ப வகுப்புகளுக்கான கற்றல், கற்பித்தல் செற்பாடுகள் ஒரு தொடராக நிலைத்திருக்கக் கூடியதாகப் படிமுறைப்படுத்தும் போது ஓர் அந்தத்தில் தமக்கு இயல்பான வேகத்தில் விருப்பமான ஒன்றைத் தனித் தனியாகப் பிள்ளைகள் கற்பதற்கான ஒரு சுதந்திர நிலையை இனங்காணலாம். மறு அந்தத்தில் ஒருவித கட்டமைப்பில் பாடங்களை முழு வகுப்பிற்கும் முன்வைக்கும் மாதிரியொன்றைக் காணலாம்.

முழு ஆரம்பக் கல்வி நிலையிலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் பிரதான இடத்தை வகிப்பது இரு அந்தங்களுக்கும் இடைப்பட்ட மத்திய பகுதியாகும் அச்செயற்பாடுகளில் இரு அந்தங்களினதும் பொருத்தமான இணைபு இருப்பதுடன் அவை மாணவர் மையமாகவும் இருத்தல் அவசியம். இங்கு பயன்படுத்தக்கூடிய கற்றல், கற்பித்தல், உத்திகளை மூன்று பிரதான பகுதிகளாக வகுக்கலாம்

★ திட்டமிடப்பட்ட விளையாட்டுக்கள்

★ செயற்பாடுகள்

★ எழுத்து வேலைகள்

முதன்மை நிலை 1 இல் திட்டமிடப்பட்ட விளையாட்டுக் களும், செயற்பாடுகளும் அதிக அளவிலும் எழுத்து வேலைகள் குறைந்த அளவிலும் இருத்தலில் கவனஞ் செலுத்துதல் வேண்டும். முதன்மை நிலை இரண்டில் மூன்று பகுதிகளும் சமமாக அமையும். முதன்மை நிலை மூன்றில் எழுத்து வேலைகளும், செயற்பாடுகளும் அதிக அளவிலும் திட்டமிடப்பட்ட விளையாட்டுக்கள் குறைந்த அளவிலும் அமையக்கூடியதாகச் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்,(பொதுக்கல்விச் சீர்திருத்தம்,1997)

சிறு வயதில் எண், எழுத்து, வாசிப்பு என்பவற்றைக் கற்பிப்பதால் ஆரம்பப் பாடசாலைகளில் தரம் 1 இல் கல்வி கற்கும் குழந்தைகள் பெரிதும் அவதியுறுகின்றனர். தரம் 1 இல் விளையாட்டின் மூலம் கற்பதற்கும், எதிர் காலக் கற்றலுக்கும், வாழ்க்கைக்கும் உரிய அத்திவாரத்தைக் கட்டியெழுப்புவதற்குமே முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும் ஆனால் நடைமுறையில் குழந்தைகள் எண்ணக்கருக்கள் பற்றிய சரியான விளக்கமின்றிப் பாடங்களை மனனம் செய்யும் புலமைசார் பயிற்சிக்கு இட்டுச் செல்லும் கடுந்துன்பத்திற்கே ஆளாகின்றனர். (ஆ.பி.ப.ப.வி பற்றிய தேசிய கொள்கை, 2004)

3 வயதில் முன்பாடசாலைக்குச் சேரும் குழந்தை 4, 5 வயதுகளிலும் அதே பாடத்திட்டத்தையே கற்கின்றது இதனால் முறைசார் பாடசாலைக்கு நுழையும்போது அக் குழந்தை ஒரு சலிப்புத் தன்மையுடனேயே நுழை கின்றது இது அக் குழந்தையின் வினையாற்றல்களைப் பாதிப்பதுடன் தரம் 1 ஆசிரியருக்கும் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது.

நடைமுறையில் ஆரம்பப் பாடசாலைகளுக்கிடை யிலான போட்டித் தன்மையும், தமது தரம் பேணப்படுதல்

வேண்டும் என்ற நோக்கமும் காணப்படுகின்றன. இதனால் பிள்ளையின் உள, உடல் வயது மட்டத்தைத் தாண்டிய கல்வி வழங்கப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. இவ்வாறான கல்வித் திணிப்பையே பெற்றோரும் வரவேற்பதை அவதானிக்க முடிகிறது.

ஆரம்பப் பாடசாலைகளில் எண், எழுத்து, வாசிப்பு, என்பவற்றைப் பழக்குவதற்கு முன்னர் குழந்தைகளைச் சிந்திக்கத் தூண்டுவதற்குரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் வேண்டும் இதுவே ஏனைய செயற்பாடு களுக்கு அடிப்படையாக அமையும் என Hans, G.Furth, (1970) குறிப்பிடுகிறார்.

தற்போதைய ஆரம்ப வகுப்புக் கலைத்திட்டத்தில் முதன்மைநிலை 1 இல் எண், எழுத்து, வாசிப்புக்குப் பதிலாக விளையாட்டுச் செயற்பாடுகளுக்கே முழுமையான முக்கியத்துவம் கொடுக்கப்படுதல் வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது மதிப்பீட்டு முறைமை முற்றாகத் தவிர்க்கப்படுதல் வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது இதற்கான பல்வேறு செயலமர்வுகள் தொடர்ச்சியாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளன ஆனால் மாற்றங்களைத்தான் காணமுடியவில்லை. பழமைகள் தொடர்கதையாகவே உள்ளன.

ஏன் இந்த நிலமையை மாற்ற முடியாமலுள்ளது? ஏன் இவர்களை மத்திய, மாகாணக் கல்வி அமைச்சுக்கள் சுற்றுநிருபங்களின் ஊடாகவோ, அல்லது தொடர்ச்சியான மேற்பார்வைகளின் ஊடாகவோ அல்லது விளக்கம் (Explanation) கோருவதன் ஊடாகவோ அல்லது தண்டனை வழங்குவதன் ஊடாகவோ மாற்றங்களைக் கொண்டு வர முடியாதா?

முதன்மைநிலை 1 ஆசிரியர்கள் சிலரிடம் ஏன் உங்களால் எண், எழுத்து, வாசிப்பிலிருந்து மீள முடியாமலுள்ளது? எனக் கேட்டபோது அவர்களது துலங்கல்கள் பின்வருமாறு இருந்தன.

1. பெற்றோர்களைத் தங்களால் சமாளிக்க முடியாமலுள்ளது.
2. தரம் 1 இலிருந்து எண், எழுத்து, வாசிப்பினைக் கற்பிக்காவிட்டால் பிள்ளையை ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்ப்படுத்த முடியாது.
3. ஒரு வகுப்பில் சராசரி 40 மாணவர்களுக்கு மேல் இருக்கின்றார்கள் என்னும்போது செயற்பாட்டு முறையில் எவ்வாறு கற்பிக்க முடியும்?

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களின் கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்கும்போது எம் மத்தியில் உதிக்கும் வினாக்களாவன

1. எத்தனை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், பெற்றோருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறார்கள்?
2. வாரத்துக்கு எத்தனை தடவை அவர்களைச் சந்திக்கின்றார்கள்?
3. தமது கற்பித்தல் தொடர்பில் பெற்றோரின் அபிப்பிராயங்களை எத்தனை பேர் பெற்றிருக்கின்றார்கள்?
4. கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் எத்தனை பேர் பெற்றோருடன் கலந்துரையாடிருக்கிறார்கள்?
5. பல கிராமியப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புக்களில் ஒன்று அல்லது இரண்டு மாணவர்கள் இருக்கும்போது ஏன் நகரப் பாடசாலைகள் மிக அதிகளவு மாணவர்களைச் சேர்க்கின்றன?

மேலும் ஆரம்ப வகுப்புக்களில் சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடம் முழுவதுமாகச் செயற்பாடு சார்ந்ததாகவே ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது ஆனால் இப் பாடத்தைக் கற்பிக்கும்போது ஆசிரியர் மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் செல்வதில்லை வகுப்பறைக்குள் வைத்து அதனை ஒரு வாசிப்புப் பாடமாகவும் எழுத்துப் பாடமுமாகவே நடாத்திச் செல்வதைப் பெருமளவுக்கு அவதானிக்க முடிகின்றது இப் பாடத்தில் அதிகளவு வீட்டு வேலைகள் வழங்குவதையும் காண முடிகின்றது

ஆரம்பப் பிள்ளைப் பருவத்தில் வீட்டுவேலைகளைப் பிள்ளைகள் விரும்பாத ஒரு சூழ்நிலை தோற்றம்பெறும். இதனை ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும் இப் பருவத்தில் பிள்ளைக்குத் தர்க்க ரீதியாகப் பாகுபடுத்திப் பார்க்கும் அறிவு இல்லாமலிருக்கும். காரண காரியங்களைக் கண்டறியும் ஆற்றல் இல்லாமல்போகும். ஒரே நேரத்தில் பல விடயங்களை ஒன்றிணைத்து நோக்கும் ஆற்றல் இல்லாமல் போகும். (அத்துகோரள, D.R, 1972).

Audrey Curtis NFER Nelson, 1986, Stolberg, Judith, Rothschild, Daniels, Ellen,R. (1998), ஆகியோர் சிறு வயதுப் பிள்ளைகளுக்கு விஞ்ஞானம், கணிதம், ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்குப் பிள்ளையும் குடும்பமும் தொடர்பான நிகழ்ச்சித்திட்டத்தைப் பயன்படுத்த முடியும் என்கின்றனர். அதன்படி பிள்ளை அனுபவங்களினூடாகவும் விருப்புக்களினூடாகவும் அயற் சூழலுடன் இடைத்தாக்கம் புரிவதினூடாகவும் இதனை மேற்கொள்ள முடியும். ஆசிரியர்கள் மாணவர்களின் வளர்ச்சியிலும், விருத்தியிலும் கவனம் செலுத்துவதினூடாகவும்,அவர்களது விருப்புக்கள், தேவைகள், பலம், பலவீனம், பாதுகாப்பு, அன்பான சூழலை உருவாக்கல் என்பவற்றினூடாகவும் இதனை மேற்கொள்ள முடியும். மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளில் இந் நிகழ்ச்சித்திட்டத்தினைப் படிப்படியாக மேற்கொண்டு வெற்றி கண்டுள்ளனர். இதற்கான ஆசிரிய கைந்நூலையும் தயாரித்துள்ளனர்.

கருப்பொருள்களைக் கற்பிக்கும்போது நிகழ்கால அனுபவங்களைப் பெறக்கூடிய வகையில் கற்பித்தல் வேண்டும். உதாரணமாக சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் "நாம் இலங்கையர்" என்ற கருப்பொருளைச் சுதந்திர தினம் அல்லது குடியரசு தினம் என்பன வரும் தினங்களில் நடைமுறைப்படுத்தும் வகையில் கற்பிக்கும் போது பிள்ளை அது தொடர்பான நேரடி அனுபவங்களைப்

பெற்றுக் கொள்ள முடியும், அதேபோல் புது வருட காலங்களில் "புத்தாண்டுக் காலம்" என்னும் கருப் பொருளையும் தேசிய வீரர்களின் நினைவு நாள்கள் வரும்போது "எமது பண்டைய தகவல்கள்" என்னும் கருப்பொருளையும் கற்பிக்க முடியும் இது தொடர்பில் ஆரம்பக் கல்வி ஆசிரியரிடம் வினவியபோது அவர்களது துலங்கல்கள் பின்வருமாறு இருந்தன.

1. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் வழங்கப் பட்டுள்ள ஒழுங்குப்படியே நாம் கற்பிக்கின்றோம்.
2. பொதுப் பரீட்சைகள் வலய மட்டத்தில் இடம்பெறும் போது பாடத்திட்ட ஒழுங்குப்படியே ஒவ்வொரு தவணையும் வினாப்பத்திரங்கள் தயாரிக்கப் படுகின்றன.
3. சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும் பாடத் திட்டம் ஒழுங்கு முறைப்படி கற்பிக்கப்பட்டுள்ளதா? என்பதையே பரீட்சிக்கின்றனர்.

**முன்வைக்கும் ஆலோசனைகள்**

1. ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் பிரதிபலித்தல் குறிப்பேடுகளை (Reflective Journal) வைத்திருக்கும் நடைமுறை கொண்டுவரப்படுதல் வேண்டும் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகளையும் வீடுகளில் இடம்பெறும் நிகழ்வுகளையும் பிள்ளை அதில் குறிப்பிடுதல் வேண்டும். அதில் அவர்களது பிரதிபலிப்புக்களை எழுதுதல் வேண்டும். அவற்றைப் பெற்றோர் பார்வையிட்டுக் குறிப்புக்கள் இடுதல் வேண்டும்.
2. ஆரம்ப வகுப்புகளில் ஒவ்வொரு மாணவனும் தனித்தனியே கவனிக்கப்படுதல் வேண்டும் அவனது பலம் பலவீனம் தனியாள் வேறுபாடுகள் ஆசிரியரால் கண்டறியப்படுவதுடன் அது தொடர்பில் பெற் றோருக்கும் அறிவூட்டப்படுதல் வேண்டும் இதற்காக ஆசிரியர் சில மணித் துளிகளை ஒதுக்குதல் வேண்டும்.
3. ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் பூரண சுதந்திரமுள்ள ஆசிரியர்களாகும் அவர்கள் பாடத்திட்டத்தைப் பொருத்தமாக நெகிழ்ச்சியுள்ள விதத்தில் மாற்றிக் கற்பிக்க உரித்துடையவர்களாவர்.
4. கணிப்பீடுகளுக்குக்கூடிய முக்கியத்துவம் கொடுக்கப் படுதல் வேண்டும் முதன்மை நிலை இரண்டு மற்றும் முதன்மை நிலை மூன்றில் இறுதித் தவணையில் ஆசிரியரே வினாப்பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும் இதில் வலயக் கல்விக் காரியாலயங்கள் வினாப்பத்திரங்கள் தயாரிக்க வேண்டிய அவசியமில்லை. அதேபோல் ஆசிரிய ஆலோசகர்களுக்குப் பாடத்திட்டத்தை மாற்றிக் கற்பித்தமை தொடர்பில் போதிய விளக்கமளிக்க முடியும்.
5. தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் ஓரிருவரே வெட்டுப் புள்ளிகளைப் பெறுகிறனர் அந்த ஓரிரு மாணவர்களுக்காக வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களினதும் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்துவதா? என்பதைச் சிந்தித்தல் வேண்டும்
6. மேலும் முதன்மை நிலை ஒன்றில் ஒவ்வொரு வகுப்பிலும் ஆசிரியருக்கு மேலதிகமாக ஒரு உதவியாளர் நியமிக்கப்படுதல் வேண்டும். குழந்தை இயற்கைக் கடன்களைக் கழிக்கும்போது அவர் களுக்கு அவர் உதவுதல் வேண்டும். இவர் சுகாதாரத் துறையினரால் பயிற்சி வழங்கப்பட்ட ஒருவராக இருத்தல் பொருத்தமானதாகும்.
7. மிகவும் சிறிய வயதிலிருந்து பிள்ளை புலனியக்கச் செயற்பாடுகளினூடாகச் சுற்றாடலை ஆய்வு செய்யும் என்பதனால் சுற்றாடலுடன் இசைவாக்க மடைவதற்கான செயற்பாடுகளில் பிள்ளையை அதிகளவு நேரம் ஈடுபடுத்துதல் வேண்டும். அப்போதுதான் முறைசார் பாடசாலைகளில் ஏற்படும் சவால்களுக்குப் பிள்ளையால் முகங்கொடுக்க முடியும் என காரியவசம், டி.எஸ்., (1995) குறிப் பிட்டுள்ளார்.
8. ஆரம்ப வகுப்புக் கலைத்திட்டங்களைத் தயாரிக்கும் போது பாட விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சுயசிந்தனை, குறியீடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல், சிந்தனை வெளிப்பாடு, போன்றவற்றுக்கே முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும் இதற்காக அனுபவங்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குதல், கதை கூறல், கேட்டல், இசையும் அசைவும், நாடகம், விளையாட்டும் அசைவியக்கச் செயற்பாடுகளும், சேகரித்தலும் வகைபிரித்தலும்,கணக்கிடுதல், அளத்தல், வரைதல், கட்டியெழுப்புதல், மாதிரிகளை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளைச் செயற் படுத்த முடியும் (Geva Blenkin & Marian Whitehead, 2002) இக்கருத்தை கலைத்திட்டத்தை உருவாக்கு பவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும் குறிப்பாக நடைமுறைத் தேவைகளும், நடைமுறை விடயங்களும் கலைத்திட்டத்தில் உள்ளீர்க்கப்படுதல் வேண்டும் உதாரணமாக சுற்றாடல் சார்ந்த செயற் பாடுகள் பாடத்தில் நிலைபேண் அபிவிருத்தியை உணர்த்துவதற்குப் பொருத்தமான விதத்தில் கருப்பொருட்கள் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்.

எனவே ஆரம்பநெறிக் கலைத்திட்டத்தைத் தயாரிப்பவர் களும் அதனை நடைமுறைப்படுத்துபவர்களும் வெறு மனே போதனைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நடைமுறைப் பிரயோகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் இன்றியமையாததாகும்.

# சமூக வாழ்விற்கு வழிபாட்டின் தேவை
# அப்பர் தேவாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

திருமதி.செல்வ அம்பிகை நந்தகுமரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனின் வாழ்வோடு இணைந்த ஒன்றாக வழிபாடு அமைகின்றது. தனி மனிதனைப் பண்படுத்தி சமூக வாழ்வுக்கான தயார்படுத்தலை வழிபாடு அளிக்கின்றது. அதாவது மனிதனை மனிதநேயமுடையவனாக மாற்றும் திறன் வழிபாட்டிற்குண்டு.

வழிபாட்டு முறைகளைப் பேணுகின்ற நிறுவனமாகக் கோவில்கள் அமைகின்றன. பல்வர் காலத்தில் பக்தி இயக்கமாகச் சமய நெறியாளர்கள் செயற்பட்ட போது கோவில்களிலே தேவாரங்களைப் பாடி வழிபாட்டு உணர்வைத்தூண்டிவிட்டனர். பரபரப்பான சூழ்நிலையில் இயந்திரகதியில் அலைந்து கொண்டிருக்கும் மனித வாழ்வை நிலைப்படுத்த வழிபாடு எவ்வாறெல்லாம் துணை செய்கின்றது என்பதை அப்பருடைய பாடல்கள் உணர்த்தியுள்ளன. அப்பருடைய தேவாரப்பாடல்கள் 4ஆம், 5ஆம் 6ஆம் திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன. சரியை நெறி நின்று 81 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து காட்டி மனிதனும் தன்னலமற்ற தொண்டினால் உய்ய முடியும் என்பதை உணர்த்தியவர் அப்பர்.

இவருடைய தேவாரங்களை அடிப்படையாகக் கொண்டு சமூக வாழ்விற்கு வழிபாட்டின் தேவை என்ற ஆய்வு நோக்கப்படுகின்றது. இந்த ஆய்வானது விவரண முறை என்னும் ஆய்வு நெறிமுறையைப் பின்பற்றுகின்றது. மனிதன் சமூகத்தில் மனித நேயத்துடன் வாழ்வதற்கான தயாரிப்படுத்தலை வழிபாடு எவ்வெவ் வழிகளில் எல்லாம் ஏற்படுத்திக் கொடுக்கின்றது என்பதை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வு அப்பருடைய தேவாரத் தொகுதிகளை ஆய்வு மூலங்களாகக் கொள் கின்றது. ஆய்வின் மூலம் இன்றைய நிலையில் வழிபாடும் தேவாரங்களும் மனித வாழ்வில் பெறும் பங்கு குறித்த கருத்தைப் பெறமுடியும். மேலும் அப்பருடை அனுபவப் பகிர்வுகள் தனிமனித வாழ்வை சமூக வாழ்வாக மாற்றுவதற்கும் வாழ்வியலைச் செம்மைப்படுத்துவதற்கும் வழிகாட்டியாக அமைவதை உணர்ந்து கொள்ளலாம்.

*திறவுச் சொற்கள்: அப்பர், வழிபாடு, சமூக வாழ்வு, தேவாரங்கள்*

**அறிமுகம்**

மனிதனுக்கு வழிபாடு இன்றியமை யாதது. வாழ்வியலோடு வழிபாடு இணைந்திருக்க வேண்டும். மனித வாழ்வின் துன்பங்களைக் களைவதற்கு வழிபாடு துணையாக நிற்கும். சமய நம்பிக்கையை வழிபாடு உறுதி பெறச்செய்யும். குழந்தைப் பருவத்திலே வழிபாடு பாவனை நிலையில் செய்யப்படுகின்றது. தாயுடன் கோவிலுக்குச் செல்லும் குழந்தை தாயின் வழிபாட்டு நிலைகளைத் தன் மனதில் பதிவு செய்து கொள்கின்றது. தானும் அதனைப் போல செய்ய முயற்சிக்கின்றது. குழந்தைப் பருவத்திலே செய்கின்ற பயிற்சியே பின்னாளில் நம்பிக்கை தரும் வாழ்வின் வழிகாட்டியாக அமைகின்றது. மனித னானவன் மனதின் மாசை அகற்றிப் பண்புடையவனாக வாழச் சமய வாழ்க்கை வழிகாட்டுகின்றது.

மனத்தையும் சடத்தையும் விலக்கினால் மீதியுள்ளவை அனைத்தும் வாழ்வு என்ற பகுதிக்குள் வரும். நாம் அறிந்தவை குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, உலக வாழ்வு ஆகும். குடும்பம் சமூகத்திலிருந்து ஓரளவு வேறுபடுவது. சமூக வாழ்வு உலக வாழ்வின் ஒரு பகுதி பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட வாழ்க்கையில் மனிதனானவன் பல வாழ்க்கைக் கோலங்களில் இணைகின்றான் இவ்வாறான வாழ்க்கைக் கோலங்களில் ஒவ்வொரு மனிதனும் வேறுபட்ட நடத்தைக் கோலங்கள் கொண்டவனாகக் காணப்படுகின்றான். இதற்கான காரணம் சமூகவயமாக்கம் ஆகும்.

சமூகம் என்பது தனிமனிதர்களின் தொகுப்பு. ஒவ்வொரு தனிமனித வாழ்வும் முறையாகச் சமூக மயப்படும் போது ஆரோக்கிய சமூகத்தை உருவாக்க ஏதுவாக அமைகின்றது. சமூக மொன்றில் ஒரு மனிதன் தானும் ஒரு அங்கத்தவனாக இணைந்து வாழ முயற்சி எடுக்கின்றான். ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முக்கிய விடயமாக சமூகவமாக்கல் காரணமாகின்றது. ஒரு மனிதனைச் சமூக மயமாக்கப் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அந்த வகையிலே சமயங்களின் பங்களிப்பும் முக்கயமான தொன்றாகும்.

உலகிலுள்ள பல்வேறு சமயங்களும் பல்வேறுபட்ட வழிபாட்டு நடைமுறைகளைக் கொண்டுள்ளன. ஆரம்ப காலம் முதல் இன்றுவரை வழிபாட்டு நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆரம்பகாலத்தில் மனிதன்

இயற்கையைப் பணிந்து வழிபாடு செய்தான். ஆனால் கால மாற்றத்தால் அவ்வழிபாடு மாற்றங்கண்டது. இறைவனுக்கு உருவம் கொடுத்து வழிபடும் வழிபாட்டு நடைமுறைகள் ஏற்பட்டன. கருத்து நிலையான சமயக்கோட்பாடுகள் தோன்றிய போது வழிபாட்டு நடைமுறைகள் தேவையற்றதாகக் கருதப்பட்டன. எனினும் இந்து சமயத்தில் வழிபாட்டு முறைகள் இன்னமும் நிலைத்து நிற்கின்றன. வழிபாடு செய்யும் முறைகள் பற்றிய மரபான கையளிப்பு ஒன்று இன்று வரை தொடர்ந்து வருகின்றது.

பல்லவர் காலத்தில் பக்தி நெறியாளர்கள் இயக்க மாகச் செயற்பட்ட போது தேவாரங்களைப் பாடி வழிபாடு பற்றிய உணர்வைத் தூண்டிவிட்டனர். வழிபாட்டில் இன்று "தேவாரம் பாடுதல்" ஒரு சடங்காக நடைபெறு கின்றது. ஆனால் மூவர் தேவாரங்களைப் படிக்கும் போது அவற்றின் இன்றியமையாமை நன்கு புலப் படுகின்றது. சைவ சமயத்தை மக்கள் வாழ்க்கைக்கு இட்டுச் செல்லுதல், கோயிலை சமுதாய மையமாகக் கொண்டு சமய வாழ்வியலைக் கட்டமைப்பது என்பவை பக்தி இயக்கத்தின் முக்கிய குறிக்கோள்களாக இருந்தன. தமிழகத்தின் பல்வேறு ஊர்களுக்கும் அவர்கள் சென்ற பயணங்கள் சைவத்தை மக்கள் வாழ்க்கைக்கு இட்டுச் செல்வதற்கான மனவெழுச்சியை உணர்த்துவனவாகும். பண்ணமைந்த பாடல்கள் மக்களை உணர்வு பூர்வமாக இணைத்தன. இந்த இணைப்பிலே கோயில்சார் சமூக வாழ்வியல் பற்றிய சிந்தனைகள் உருவாகின. சமூக வாழ்வுக்கான வழிபாட்டின் தேவையைத் தேவாரங்கள் சொல்லித்தந்தன.

**வழிபாடு: சொல்லும் பொருளும்**

"வழிபடு" என்பதிலிருந்து பிறந்தது வழிபாடு ஆகும். வழிபாடு என்ற சொல்லுக்குத் தமிழ் மொழியகராதி அப்பியாசம், ஆராதனை, தாழ்மை, வணக்கம், வழிபடல் என்னும் பொருள்களைத் தருகின்றது.[1] கழகத்தமிழ் அகராதி வழிபடல் என்ற சொல்லுக்கு பின்பற்றுதல், வணங்குதல் வழியிற் செல்லுகை, பூசனை வழக்கம் சமயக்கோட்பாடு எனப் பொருள் தருகின்றது.[2] ஆசாரக் கோவை, சிறுபஞ்சமூலம், சிலப்பதிகாரம் ஆகிய பழந்தமிழ் இலக்கியங்களில் வழிபாடு என்ற சொல் குறிப்பிடப்படுகின்றது. ஆசாரக்கோவை "தேவர் வழிபாடு" என்று குறிப்பிடுகின்றது.[3] சிறுபஞ்சமூலம் "தெய்வத்தை எஞ்ஞான்றும் தேற்றவழிபாடு செய்வதே பெண்டிர் சிறப்பு" எனக்கூறுகின்றது.[4] சிலப்பதிகாரம் கனாத்திறம் உரைத்தகாதை வழிபாடு பற்றிச் சற்று விளக்கமாகத் தருகின்றது.

*"ஆர்த்த கணவன் அகன்றனன்*
*போயெங்கும்*
*தீர்த்த துறைபடிவே னென்றவனைப்*
*பேர்த்திங்கண்*
*மீட்டுத் தருவா யெனவொன்றன் மேலிட்டுக்*
*கோட்ட வழிபாடு கொண்டிருப்பாள்"*[5]

தெய்வத்தை மகிழ்விப்பதற்காக மேற்கொள்ளப்படும் செயல்களும் பூசனை முறைகளும் வழிபாடு என்றும் இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும் வழிபாடு குறித்துப் பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப் படுகின்றன. இவற்றின் மூலம் உயர் நிலையான ஒன்றை உள்ளத்தால் நெருங்கவும் உணர முற்படவும் மேற்கொள்ளப்படும் வழிமுறையே வழிபாடு என்று தெளிவு பெறலாம்.

**தேவாரம்**

தேவாரம் என்றால் என்ன என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. மூவர் பாடிய பாடல்களைத் தேவாரம் என வழங்கும் வழக்கம் பிற்காலத்தில் தான் ஏற்பட்டுள்ளது. இரட்டைப் புலவர்கள் பாடிய ஏகம்பரநாதர் உலாவில் தான் "தேவாரம்" என்ற சொல் முதன் முதலில் வழங்கப்பட்டுள்ளது. மூவர் தேவாரங்களையும் தேவாரம் என்ற பெயரால் தெளிவாகக் குறிப்பிட்டு வழங்கியவர் நாவலரவர்கள். எனினும் சம்பந்தர் பாடல்களைத் திருக்கடைக்காப்பு என்றும் சுந்தரர் பாடல்களைத் திருப்பாட்டு என்றும் அப்பர் பாடல்களைத் தேவாரம் எனவும் வழங்குதல் பண்டை மரபாகவுள்ளது. மேலும் தேவாரம் என்னும் சொல்லுக்குப் பலவகையான விளங்கங்கள் உள்ளது.

தேவாரம் :

- ★ தேவனிடத்து வாரத்தை விளைவிப்பது. அதாவது சிவனிடம் அன்பை விளைவிப்பது.
- ★ சிவனுக்கு அன்பை விளைவிப்பது.
- ★ சிவனுக்கு ஆரம் போல அலங்கரிப்பது.
- ★ தெய்வத்தன்மை பொருந்திய மாலை
- ★ சிவனுக்கே உரிமையுடையது
- ★ தெய்வத்தன்மை பொருந்திய வாரமாயுள்ளது.

**அப்பர்**

அருளும் அன்பும் அறனும் பெற்று மனிதன் உய்வடையும் நெறிகளை வாழ்ந்து காட்டியவர்கள் சமயகுரவர்கள். சரியை நெறி நின்று 81 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து தன்னலமற்ற தொண்டினால் உயர்ந்தவர் அப்பர். தாம் சென்ற திருத்தலங்கள் தோறும் உழவாரத் தொண்டாற்றி "தொண்டுக்கு அப்பர்" என்ற சிறப்பையும் எய்தினார். இவருடைய தேவாரப் பதிகங்கள் அனுபவ முதிர்ச்சியால் பாடப்பட்டவை.

சமணம் சென்று மீளவும் சைவம் வந்த அப்பர் ஆர்வத்துடன் வழிபாட்டு மரபு பேணுகின்றார். நாடெங் கிலும் சென்று பிறநெறி சென்ற மக்களை மீண்டும் வழிபாட்டில் புலன் செலுத்தப் பணி செய்தார். அப்பரின் பாடல்கள் அடங்கன் முறையுள் நான்காம் ஐந்தாம் ஆறாம் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அப்பர் தன்னை தனி மனிதன் என்ற நிலையில் மட்டும் காட்டிக் கொள்ளாமல் "சமூகமனிதன்" என்ற பொதுநிலையில்

காட்டியுள்ளார். இவருடைய பாடல்கள் அனுபவப் பகிர்வுகளை வெளிப்படுத்துவன. இவை மனிதனை மேம்படுத்தும் நோக்குடையன. சமூக மனிதப் பண்புடைய அப்பரது பாடல்கள் இவரது ஆளுமைக் கூறின் முக்கிய அம்சமாகும்.

**இறைவன் கோலம்**

வழிபாட்டிற்கு இன்றியமையாதது இறைவனுடைய திருமேனி அழகு. இறைவனுடைய திருமேனி அழகினைத் தேவாரங்கள் காட்சி நிலையிற் காட்டுகின்றன. நாம் வணங்கும் இறைவனுடைய கோல அழகினை அகக்கண்ணிலே காணபதற்கு அப்பருடைய தேவாரங்கள் உதவுகின்றன. இறைவனுடைய முழு உருவத்திருமேனியையும் அனைவரும் எளிதில் விளங்கத்தக்க எளிய மொழியில் பாடியுள்ளார்.

*"குனித்த புருவமும் கொவ்வைச்*
*செவ்வாயிற் குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல் மேனியிற்*
*பால் வெண்ணீறும்*
*இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்*
*காணப்பெற்றால்*
*மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த*
*மாநிலத்தே"*[6]

என இறைவனது கோல அழகைக் காட்டுகின்றார்.

**இறைவன் அருட்சிறப்பு**

வழிபாட்டினால் இறைவனின் அருளைப் பெறலாம் என்பதைப் பக்தி நெறியாளர்கள் அனைவரும் குறிப்பிட்டுள்ளனர். இதனால் வழிபாட்டின் வழி நிற்பதன் மூலம் இறை அருளைப் பெற முடியும் என்பதைத் திடசங்கற்பத்துடன் தமது பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

*"மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்ற மென்னும்*
*வினையுளே வழிந்த முந்தி வேதனைக் கிடமா காதே*
*கனையுமா கடல் சூழ் நாகை மன்னுகா ரோணத் தானை*
*நினையுமா வல்லீ ராகில் உய்யலாம் நெஞ்சினீரே"*[7]

என அப்பர் இறையருளை உணர்த்தியுள்ளார். உலக வாழ்வின் துன்பங்களைக் கடப்பதற்குத் தவித்து நிற்கும் மனிதர்களுக்கு அப்பர் நல்லதொரு வழியைக் காட்டியுள்ளார்.

**மனித வாழ்வு**

சமய குரவர்களுள் வயதில் மூத்தவர் அப்பர். அவருடைய வாழ்க்கை அனுபவ முதிர்ச்சியுடையது. பிறப்பால் சைவராக இருந்த போதும் இடைப்பட்ட காலத்தில் சமண சமயத்தைத் தழுவி மீளவும் சைவம் சேர்ந்தவர். இதனால் இவருடைய அனுபவம் வேறுபட்டமைந்தது. அவரது முதுமை வாழ்க்கையில் அனுபவங்களைத் தந்தது. மனித வாழ்வியலின் தன்மைகளை நன்கு உணர்ந்தவராக இருந்தார்.

*"பொய்விரா மேனிதன்னைப் பொருளெனக்*
*காலம் போக்கி*
*மெய்விரா மனத்தனல்லேன் வேதியா*
*வேதநாவா*
*ஐவரா வலைக்கப்பட்ட வாக்கை கொண்*
*டயர்ந்துப் போனேன்*
*செய்வரா லுகளுஞ்செம்மைத்*
*திருச்சோற்றுத் துறையனாரே"*[8]

அப்பர் நிலையற்ற உலக வாழ்வுக்குள் நின்று கொண்டு ஒரு நிலையான பேரின்ப வாழ்க்கையை நாடும் ஆர்வத்தைக் கொண்டிருந்தார் என்பதை அவரது பதிகங்கள் உணர்த்துகின்றன. இவருடைய பாடல்களில் காணப்படும் முக்கிய உணர்வு நிலைகளில் ஒன்று 'உடல் வெறுப்பு' ஆகும். இவை வாழ்க்கை பற்றிய துன்பியல் நோக்கில் உருவானவையாகும். சமணம் சார்ந்திருந்த போது பெற்றிருந்த அனுபவங்கள் அவர் சைவராக மீண்ட பின்னரும் உணர்வுகளில் தொடர்ந்திருந்தன.

**கோவில் அமைப்பும் சூழலும்**

வழிபாட்டில் கோவில்கள் இன்றி யமையாத இடத்தினைப் பெற்றுள்ளன. ஊர்கள் தோறும் எழுந்தருளியிருக்கும் கோவில்களுக்குச் சென்று அங்கு வீற்றிக்கும் இறைவனை வழிபடும் நிலையானது இன்றும் நடைமுறையி லுள்ளது. இது 'தலயாத்திரை' என அழைக்கப்படுகின்றது. அப்பரின் முக்கிய செயற்பாடாக அமைந்தது ஊர்ப்பயணம். கோயில்கள் தோறும் சென்று இறையனுபவத்தை வேண்டுதல் என்பதோடு மட்டுமல்லாமல் சூழவுள்ள சமூகத்தவர்களும் இறைவனுபவம் எய்த வேண்டும் என்ற உயரிய நோக்கம் இவருக்கு இருந்தது. கோவில் என்ற மையத்தளத்தில் மக்களை இணைக்கும் வழிபாட்டு உத்தியாக இவரது ஊர்ப்பயணம் அமைந்தது. இவர் மேற்கொண்ட உழவாரப்பணி கோயிலைப் புனரமைத்து மக்கள் கூடும் இடங்களாகவும் வழிபாடு நிகழ்த்தும் இடங்களாகவும் சூழலைப் பேணவும் வழிவகுத்தன. அப்பர் ஊர்கள் தோறும் சென்று வழிபடும் போது கோவிலின் அமைப்பையும் சூழலையும் பற்றிப் பாடியுள்ளார். நிலத்தின் தன்மைகளும் அங்குள்ள இயற்கை வளங்களும் அப்பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

*"கண்டகங்காண் முண்டகங்காள் கைதைகா*
*ணெய்தல்காள்*
*பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப்*
*பழனத்தான்*
*வண்டுலாந் தடமூழ்கி மற்றவனென்*
*றளிர்வண்ணம்*
*கொண்டநா டனறிவான் குறிக்கொள்ளா*
*தொழிவானோ"*[9]

எனத் திருப்பழனக் கோவிலின் இயற்கைச் சூழல் பற்றியும் அங்குள்ள பெருமானைப் பற்றியும் அப்பர் விதந்து பாடியுள்ளார். மேலும் பழையாறை என்னும் இடத்திலே

சமணரால் மறைக்கப்பட்ட சிவன் கோயிலை மீட்டெடுக்க உண்ணா நோன்பு மேற்கொண்டவர். இத்தகைய துணிகரமான செயற்பாட்டினை மேற்கொண்டமை கோவில் களுக்கு அளித்த முக்கியத்துவத்தினையே காட்டுகின்றது.

**வழிபாட்டு நடைமுறைகள்** .

வழிபாட்டு நடைமுறைகள் பற்றிய செய்திகளைத் தேவாரம் பாடிய மூவரும் குறிப்பிட்டுள்ளனர். எனினும் அப்பர் சரியைத் தொண்டு பற்றித் தனது பாடல்களிற் சிறப்பாகவே கூறியுள்ளார். மனித வாழ்வியலின் துன்பங்களை வழிபாட்டால் விலக்கலாம் என்பதை அப்பர் அனுபவ பூர்வமாக உணர்ந்தவர். தான் உணர்ந்தவற்றைப் பிறர்க்கும் உணர்த்த விரும்பினார். ஒரு காலத்தில் பிறநெறி சார்ந்திருந்தமை அவரின் மனதில் துன்பத்தை ஏற்படுத்தியது. கோவில் வழிபாட்டில் அமைதியை நாடினார். அவரின் உழவாரப் பணி கோவிற் சூழலுடன் மனமொன்றிப் பணி செய்ய வைத்தது. கோவில் வழிபாட்டின் மூலம் புலனடக்கம் ஏற்படுவதை உணர்ந்தார். நிலை கொள்ளாது தவிர்க்கும் நெஞ்சத்தை வழிபாட்டால் நிலைநிறுத்துகின்றார். மனிதன் தான் வாழும் காலத்தில் வழிபாட்டு மரபு பேண வழி சொன்னார்.

*"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்*
*அலை புனல் சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லே"*[10]

என்று குறிப்பிடுகின்றார். தனது வழிபாட்டு முறையை மேல்வருமாறு கூறுகின்றார்.

*"சலம்பூ வொடு தூபம் மறந்தறியேன்*
*தமிழோடிசை பாடல் மறந்தறியேன்*
*நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்*
*உன்னாமம் என் நாவில் மறந்தறியேன் ..."*[11]

மனிதப் பிறவி மகத்துவமானது. மனிதன் வாழும் காலத்தில் பண்புடையவனாக வாழவேண்டும். மனித உடல் நிலையற்றது. எனினும் இறைவனை நினைக்கவும் வழிபடவும் இப்பிறவி வேண்டும். இப் பிறவியிலே ஐம்பொறி புலன்களால் இறைவனை வழிபடலாமென அப்பர் 'திருவங்கமாலை' யில்காட்டியுள்ளார்.

"தலையே நீ வணங்காய்"
"கண்காள் காண்மின்களோ"
"செவிகாள் கேண்மின் களோ"
"மூக்கே ந முரலாய்"
"வாயே வாழ்த்து கண்டாய்"
"நெஞ்சே நீ நினையாய்"
"கைகாள் கூப்பித் தொழீர்"
"யாக்கையாற் பயனென்ன"[12]

ஐம்பொறி புலன்களை ஒரு நிலைப்படுத்திய போது இயற்கையிலேயே இறைவனைக் காணும் அனுபவத்தை அப்பர் பெற்றுக் கொண்டார் "மாதர் பிறைக் கண்ணி யானை...." எனத் தொடங்கும் திருவையாற்றுப்பதிகம் இதற்குத் தக்க சான்றாகும். உடம்பு எவ்வாறு கோவிலாக மாறுகின்றது அதை எவ்வாறு கோவிலாக்கலாம் என்றும் அப்பர் குறிப்பிடுகின்றார்.

*"உடம்பெனும் மனைய கத்துள் உள்ளமே தகளி யாக*
*மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனுந் திரிம யக்கி*
*இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்*
*கடம்பமர் காளைத் தாதைக் கழலடி காண லாமே"13*

*"காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக*
*வாய்மையே தூய்மை யாக மனமணி யிலிங்க மாக*
*நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்*
*பூசனை யீச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே"*[14]

அப்பருடைய பாடல்கள் வழிபாட்டு நடைமுறைகளின் பயிற்சியையும் வளர்ச்சியையும் ஒருங்கு காட்டுவதாக அமைகின்றன.

**இன்றைய நிலையில் வழிபாடும் தேவாரங்களும்**

இன்று கோவில் வழிபாட்டு நடைமுறைகளில் தேவாரம் சிறப்பிழந்து வருகின்றது. தேவாரம் பாடுதல் என்பது உணர்வு பூர்வமானது என்பதல்லாமல் வெறும் சடங்காகப் பாடப்பட்டு வருகின்றது. தேவாரம் தமிழ் வேதம் எனப் பேற்றப்படுவதால் கோவில் விழாக் காலங்களிலே வேதத்துடன் தேவாரமும் ஓதப்பட்டு வருகின்றது. சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்னும் இலக்கணத்திற்குத் தேவாரம் இலக்கியமாக வுள்ளது. இறைவனுடைய பெருமைகளைத் தேவாரங்களே எடுத் துரைக்கின்றன. எனவே வழிபாட்டு நடைமுறைகளில் தேவாரம் பாடப்படவேண்டியது இன்றியமையாதது. இறைவனை அகத்திலும் புறத்திலும் வழிபடும் முறையைத் தேவாரங்களே காட்டுகின்றன. தேவார முதலிகளின் வாழ்க்கையில் ஏற்பட்ட முக்கிய அனுபவங்கள் பல தேவாரப் பாடல்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இறைவனது அருளிலே நம்பிக்கை வைத்தால் மனித வாழ்க்கை துன்ப மற்றிருக்கும் என்பதைத் தேவாரப் பாடல்கள் காட்டுகின்றன. மனித நிலையிலே ஏற்படும் துன்பங்களைப் போக்கத் தேவாரப் பாடல்கள் நல்ல மந்திர உச்சரிப்பாகப் பயன்படும்.

இன்று நாம் விஞ்ஞானத்தின் விந்தைகளைக்கண்டு வியந்து கொண்டிருக்கின்றோம். எதனையும் விஞ்ஞானத் தால் சாதித்துவிட முடியும் என்ற திண்ணம் தோன்றிவிட்டது. மனிதன் தன்னுடைய ஆற்றலை விட விஞ்ஞானக் கருவி களையே பெரிதும் நம்புபவனாகின்றான். இயற்கையில் கிடைக்காதவற்றை செயற்கையின் மூலம் உற்பத்தி செய்யலாம் என்ற நிலையில் விஞ்ஞானம் தோன்றிவிட்டது. விஞ்ஞான வளர்ச்சியினால் உலகம் முன்னேற்றத்தை நோக்கிச் சென்றாலும் மறுகரையில் அழிவினையும் எதிர்நோக்குகின்றது.

இயற்கையின் பேராற்றலை விஞ்ஞானத்தால் கட்டப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் தான் மனிதன் மாபெரும் சக்தியொன்று இப்பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருப்பதை உணர்கின்றான். தன்னுடைய பகுத் தறிவுக்கு அப்பாற்பட்டு ஒரு வரன் முறையில் பொருள்கள் இயங்குவதை உள்ளுணர்வால் கண்டு கொள்கின்றான். விஞ்ஞானக் கருவிகளின் பயன்பாடு வாழ்க்கையினை இலகுபடுத்த உதவும். ஆனால் வழிபாட்டு நடைமுறைகள் மனித மனங்களை நல்வழிப்படுத்தி மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டும். அறிவியலின் ஆதிக்கத்தினால் வழிபாட்டு நடைமுறைகளில் செயற்கை நிலை தோன்றியுள்ளது. இயற்கையோடு இணைந்திருந்த வாழ்வியல் பெருமளவு மாறிவிட்டது. கோயிலமைப்பு, வழிபாடு, அலங்காரம், விழாக்கள், படையல்கள் போன்றவற்றில் செயற்கைத் தன்மை தோன்றிவிட்டது. எனினும் மக்கள் வழிபாட்டில் கொண்டிருந்த நம்பிக்கை யானது இந்துசமயம் சனாதனதர்மமாக நிலைபெறக் காரணமாயிற்று.

**நிறைவு**

தமிழர்களுடைய பண்பாடு வழிபாட்டு நடைமுறைகளினூடாக வளர்த் தெடுக்கப்பட்டது. அதன் நிலைக்களனாக அமைவது கோவில்களாகும். தமிழர் களுடைய தனித்துவமான பண்பாடு தொடர்ந்து வளர்க்கப்பட வேண்டுமானால் கோவில்களில் வழிபாட்டு நடைமுறைகள் பேணப்பட வேண்டும். நமது வழிபாடும் தன்னலமற்ற பொது வழிபாடாக மாற வேண்டும். கூட்டு வழிபாடாகச் செயற்பட வேண்டும். கோவில்கள் மக்கள் எல்லோரும் சென்று வழிபடுகின்ற பொது வழிபாட்டிடங்கள். அங்கு தேவாரங்கள் இசையுடன் ஓதப்பட வேண்டும். தேவாரங்களின் பதிக அமைப்பும் கூட்டு வழிபாடு செய்வதற்கு ஏற்றதாகவுள்ளது. உலக வாழ்க்கையில் மனிதன் நிலை தவறிவிடாமல் இருக்கத் தேவாரங்கள் வழிகாட்டும். மனித உள்ளத்திலே பணிவையும் தொண்டு மனப்பாங்கையும் கொண்டு வருவதற்கு அப்பருடைய தேவாரங்கள் வழிசமைக்கின்றன. சரியை நெறி நின்று வாழ்ந்த அப்பர் தன்னைத் தனிமனிதனாக மட்டுமல்லாமல் சமூக மனிதனாகவே தனது தேவாரங்களினூடாகக் காட்டியுள்ளார். வழிபாட்டு முறைகள் கிரியை நிலையிலே பலவுள்ளன. தத்துவக்கருத்துக்கள் அனைவராலும் விளங்கிக் கொள்ளமுடியாதவை. ஆனால் அப்பர் காட்டும் சரியை நெறி நின்ற வழிபாடு அனைவராலும் பின்பற்றப்படக் கூடியவை. ஆழ்ந்த பொருளுடையவை யாழ்ப்பாணத்து சிவயோக சுவாமிகளின் உபதேசங்களைக் கொண்ட நற்சிந்தனை என்னும் நூல் சரியை வழிபாட்டின் சிறப்பினை மேல்வருமாறு காட்டுகின்றது.

*"சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு*
*கல்வியுண்டு*
*சிவதொண்டு செய்வார்க்குச் சீருண்டு*
*பேருண்டு*
*சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத்*
*தெளிவுண்டு*
*சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீ*
*நெறியில்"*[15]

மனிதனை வையத்து வாழ்வாங்கு வாழ வழிசமைப்பவை வழிபாட்டு நடை முறைகள். வழிபாட்டு நெறி நின்று உயர்ந்தவர் அப்பர் என்னும் அரிய மனிதர். அவருடைய அனுபவம் நிறைந்த தேவாரங்கள் மனிதர்களைச் சமூகவய மாக்குவதற்கும் நல்லதொரு சமூக வாழ்வினை நிறைவு செய்வதற்கும் வழிகாட்டுவனவாகவுள்ளன.

**அடிக்குறிப்புக்கள்**

1. மனோன்மணி, ச., தமிழர் - யப்பானியர் வழிபாட்டு நடைமுறைகள், பரமேஸ்வரம், கும்பாபிஷேக மலர், ப.20.
2. கழகத் தமிழ் அகராதி, ப. 825
3. ஆசாரக்கோவை. 10
4. சிறுபஞ்சமூலம் 10
5. சிலப்பதிகாரம், கனாத்திறமுரைத்த காதை 37 □ 40
6. திருநாவுக்கரசு நாயனார் தேவாரப் பதிகங்கள், கோயில், 783
7. மேற்படி, திருநாகைக்காரோணம், 688
8. மேற்படி, திருச்சோற்றுத்துறை, 404
9. மேற்படி, திருப்பழனம், 115
10. மேற்படி திருவாரூர், 727
11. மேற்படி, திருவதிகை வீரட்டானம், 06
12. மேற்படி, பொது, 82
13. மேற்படி, பொது, 729
14. மேற்படி, பொது, 739
15. சிவயோக சுவாமிகள், நற்சிந்தனை, 203.

**பயன்படுத்திய நூல்கள்**


1. ஆசாரக்கோவை, (1949), சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.
2. கழகத்தமிழ் அகராதி, (1999), கழகப்புலவர் தொகுப்பு, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
3. சிலப்பதிகாரம், (1960), உ.வே.சா பதிப்பு, சென்னை.
4. சிவயோக சுவாமிகள், (1779), நற்சிந்தனை, ஸ்ரீலங்கா அச்சகம் வெளியீடு.
5. சிறுபஞ்ச மூலம், (1909), மதறாஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை.
6. சுப்பிரமணியன், நா. (2002), நால்வர் வாழ்வும் வாக்கும், கலைஞன் பதிப்பகம்.
7. சுப்பிரமணிய பிள்ளை, ஜி., (1960), அப்பர் விருந்து, தமிழ் நிலையம் வெளியீடு.
8. தமிழ் லெக்சிக்கன், (1983), சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு.
9. திருநாவுக்கரசு நாயனார் தேவாரப் பதிகங்கள், (1958), தருமபுர ஆதீனம் வெளியீடு.
10. மனோன்மணி, ச., (2005), காலம் தந்த கைவிளக்கு, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 80 ஆவது பிறந்தநாள் சிறப்பு வெளியீடு.
11. .................. (1991), பரமேஸ்வரம், கும்பாபிஷேகமலர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

# உள்ளகப்பயிற்சி (Internship) மாணவ ஆசிரியர்களிடம் விருத்தியாக்கப்பட வேண்டிய மிருதுநிலைத் திறன்கள் பற்றிய சில குறிப்புக்கள்


க. சுவர்ணராஜா
உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி


**அறிமுகம்**

உலகமயமாக்கல் மாற்றங்களுடன் போட்டியிட்டு முன்னேறுவதற்கும், தகவல் மையப் பொருளாதாரத்தினை கட்டியெழுப்பவும், அதன் ஊடாக வலுவான நாட்டினைக் கட்டியெழுப்பதல், உயர் ஆற்றல்களை கொண்ட, அறிவுமிக்க பிரசைகளை உருவாக்க வேண்டியது கல்வியின் கடமையாக மாறியுள்ளது.

மனித மூலதனத்தினை நாட்டின் தொலைநோக்கிற்கு ஏற்ப கட்டியெழுப்பவும்,மனித சமூகத்தினை உயர் நிலைக்கு இட்டுச் செல்லவும், ஆற்றல் மிகு கற்றல் - கற்பித்தல் அவசியமாகும்.தரமற்ற மனித மூதனத்தின் ஊடாக புதுமைகளையும்,முன்னேற்ற நோக்கிலான சிந்தனைகளையும் உருவாக்கிவிட முடியாது. தரமான மனித மூலதனம் உருவாக்கப்படுவது தரமான கல்விச்செயன்முறை மூலமே ஆகும்.

நன்கு கவனமாக திட்டமிடப்பட்ட வடிவமைக்கப்பட்ட கல்வி முறைமையானது மனித மூலதனத்தை சிறப்பாக விருத்தி செய்வதற்கான அடிப்படையாக அமையும். ஆசிரியர் கல்வியை வழங்கும் நிறுவனங்கள்,சிறப்பான மூலதனத்தினை கட்டியெழுப்புவதில் பெரும் பங்களிப்பினை நல்க வேண்டியுள்ளது.அறிவு,திறன்,மனப்பாங்கு மற்றும் தேவைப்படும் அத்தியாவசிய ஆற்றல்களை ஆசிரியர் களுக்கு வழங்குவதன் ஊடாக நாடெங்கிலும் சிறப்பான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை உருவாக்கி அதன் ஊடாக புதிய நூற்றாண்டிற்கு தேவைப்படும் மனித மூலதனத்தினை உருவாக்க முடியும்.

சமூகத்தின் எதிர்பார்ப்பிற்கும் ஏற்ற ஆற்றல்மிகு மனிதர்களை கல்வி செயன்முறை உருவாக்குவதற்கு ஆற்றல் மிகு ஆசிரியர்களின் தேவைப்பாடு ஒரு மறுக்கமுடியாத நிபந்தனையாகும்.

ஆசிரியரின் கல்வியை வழங்கும் நிறுவனங்கள் காலத்திற்கு காலம் சமூகம் எதிர்பார்க்கும் திறன்களை ஆற்றல்களை,அறிவை வழங்கக்கூடிய ஆசிரியர்களை உருவாக்க வேண்டுமானால் ஆசிரியர் கல்வி நிறுவனங் கள் தமது கலைத்திட்டத்தின் சமூகம் எதிர்பார்க்கும் விடயங்களை பயிற்றுவித்தல் வேண்டும்.

ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் கலைத்திட்டச் சென்முறையானது அவ்வப்போது எழுகின்ற மாற்றங்களை உள்வாங்கி அதற்கேற்ப புதுப்புது ஆசிரியர்களுக்கு நிலைமாற்றம் செய்யும போதே சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கான கற்றல் - கற்பித்தல் சாத்திய மாகும்.

சுய ஆற்றல், சுயஊக்குவிப்பு, சுயமதிப்பு, சுய வெளிப்பாடு, சுயமதிப்பீடு என்ற வகையில் தற்போது சமூகமாற்றத்திற்கான ஒரு திறனாக மிருதுவான திறன்கள் பற்றி பேசப்படுகின்றது. இந்த மிருதுவான திறன்களை தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்றஉள்ளகப்பயில்வு மாணவ ஆசிரியர்களிடையே கட்டியெழுப்புதல் தொடர் பாகவே இக்கட்டுரை ஆராய்கின்றது.

கட்டுறுவுப்பயில்வு மாணவ ஆசிரியாகள் என்போர் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இரண்டு வருட கல்விசார் கோட்பாடுகளைக் கற்று இறுதிப் பரீட்சைக்கு தோற்றி ஒரு வருடம் பாடசாலைகளில் உள்ளகப்பயில்வை மேற்கொள்பவர்கள்

**கட்டுறுப்பயில்வுக்கான குறிக்கோள்களும் நோக்கங்களும்.**

கட்டுறுப்பயில்வுக்கான குறிக்கோள்களும் நோக்கங்களும். பின்வருமாறு அமைகின்றது.

- ★ பயிற்சிபெறும் ஆசிரியரின் கற்பித்தற் திறன்களை விருத்திசெய்தல்.
- ★ மாணாக்கர்களின் உடல் சார்ந்த,உளம் சார்ந்த மனவெழுச்சி சார்ந்த இயல்புகளை அறிந்து கொள்ளல்.
- ★ மாணாக்கர்களின் உளமட்டங்களுக்கமையக் கற்பித்தலை ஒழுங்குபடுத்தும் ஆற்றலைப் பெறுதல்.
- ★ மாணாக்கர்களின் வேறுபட்ட குணநலன்கள், தேவைகள், விருப்புக்கள், இரசனைகள் பற்றிய விளக்கத்தை மேலும் விருத்திசெய்துகொள்ளல்.
- ★ பாடஉள்ளடக்கம் தொடர்பான தேர்ச்சியை எய்துதல்.
- ★ கற்பித்தல் திறைமைகளுக்குப் பொருந்தும் வண்ணம் பல்வேறு கற்பித்தல் நுட்பமுறைகளைப் பிரயோ கிக்கும் ஆற்றலையும் கற்பித்தலுக்குகந்த பௌதீகச் சூழலைஅமைத்துக் கொள்ளும் ஆற்றலையும் பெறுதல்.

★ தேவைகளுக்கேற்பப் பொருத்தமான கற்பித்தல் உபகரணங்களைத் தெரிவுசெய்தல், தயாரித்தல் என்பன தொடர்பான ஆற்றலையும் அவற்றை பயன்படுத்தும் வல்லமையையும் பெறுதல்.

★ கற்பித்தல் நோக்கங்களைத் தீர்மானித்த பின்னர் பாடங்களை திட்டமிடும் ஆற்றலையும் செயற்படுத்தக் கூடிய பாடக்குறிப்புக்களை தயாரிக்கும் வல்லமையையும் விருத்தி செய்துகொள்ளல்.

★ கற்பித்தலின் போது ஆக்கத்திறனிலும் புதியன பிறப்பித்தலிலும் ஆர்வம் காட்டல்.

★ கற்பித்தலிலும் இடைவிடாது தொடர்ந்து கற்றிலிலும் ஆர்வம் காட்டுதல்.

★ மாணாக்கர்களை மதிப்பீடு செய்யும் பொழுது பயன்படுத்தப்டும் அளவுகோள்களை விருத்தி செய்துகொள்ளல்.

★ குறிக்கப்பட்ட நேரத்திலேயே கற்பித்தலில் ஈடுபட்டு அப் பணி தொடர்பான வேலை நெறிமுறைகளை பழகிக் கொள்ளல்.

★ பாடசாலையில் வெவ்வேறு வகுப்புக்களில் கற்பித்தல் தவிர ,காலைப் பாடசாலைக் கூட்டம், அன்றாட சமயவழிபாடுகள், பாடசாலை இறுதித் தினங்களில் இடம் பெறும் வகுப்புச் செயற்பாடுகள் போன்றவற்றில் விருப்பத்துடன் பங்குபற்றும் பண்பை வளர்த்துக் கொள்ளல்.

★ பாடசாலையில் ஒழுக்காறும் மாணக்கரிடையே குணப்பண்புகளும் இடம் பெறுவதற்கு உகந்த சமூகச் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குஉதவுதல்.

★ பாடசாலை முகாமை தொடர்பான வேலைகளில் பங்குபற்றல்

★ பெற்றோர், ஆசிரியர் தொடர்புகள்,மக்கள் சேவைகள் போன்றவற்றில் பங்குபற்றுதல்.

★ வெளித்தோற்றம், சுய நடத்தைப்பாங்கு என்பவற்றை ஆசிரியதர்மத்திற்கு உகந்தவிதத்தில் அமைத்துக் கொள்ளல்.

★ □ முதிர்ச்சி பெற்ற ஆளுமையை விருத்திசெய்து கொள்வதற்கு முயலுதல்.

★ சகல சமூக வகுப்புக்களைச் சேர்ந்தவர்களையும் பல்வேறு அறிவுமட்டங்களைக் கொண்ட மாணாக்கர் களையும் சமமாகக் கருதிமனிதத் தன்மையுடனும் கருணையுடனும் நடத்துவதுடன் அவர்களுடைய அடைவை உச்சமட்டத்திற்கு உயர்த்துவதற்கு முயலுதல்.

★ கல்விமுகாமையில் தனக்கென ஒதுக்கப்பட்ட கடமைக் கூறைவிளங்கிக் கொண்டுஅதில் ஈடுபடுதல். (தேசிய கல்வியியற் கல்லூரிகளின் கட்டுறுப்பயில்வுக்கான வழிகாட்டற் குறிப்புக்கள் GTZ)

**மிருதுவான திறன்கள்**

மிருதுவான திறன்கள் என்பது வாழ்நாள் கற்றல் தொடர்பான அக்கறை ,ஆர்வம் என்பவற்றை அதிகரித்தல் என்பதிலிருந்து உருவான ஒரு விடயமாகும். மிருதுவான திறன்கள் விருத்தியானது, சுய வாண்மைவிருத்தியுடன் தொடர்புடைய ஒரு விடயமாகும்.

கற்றல் ஊடாகவும் தொழில் பயிற்சி ஊடாகவும் மிருதுவான திறன்களை கட்டியெழுப்பி தனது வாழ் தொழிலில் இலகுவாக வெற்றி பெற முடியும்.

ஒருவரின் அறிகை, சமூக வாழ்க்கை, மனவெழுச்சி அறிவாற்றல் என்பவற்றுடன் மிருதுவான திறன்கள் கோட்பாடு கட்டியெழுப்பட்டுள்ளது.

தலைமைத்துவக் கோட்பாடுகளான கட்டுப்பாட்டு கோட்பாடு, சார்பு கோட்பாடு, இலக்கு கோட்பாடு எனபவற்றின் செல்வாக்கினைப் பெற்றதாக மிருதுவான திறன்கள் கோட்பாடு அமைகின்றது. இருந்த போதிலும் மிருதுவான திறன்கள் தொடர்பான ஆய்வுகள் மேலும் வளர்ச்சியடைய வேண்டியுள்ளது.

ஒருவர் ஒரு சமூகச்சூழலில் மற்றொருவருடன் அல்லது மற்றவர்களுடன் கட்டியெழுப்பும் தொடர்புகள் மற்றும் நடத்தைகள் எவ்வாறு அமைந்தால், அத் தொடர்பு அல்லது அந்நடத்தை வெற்றிகரமாக அமையும் என்பதை கூறுவதாக மிருதுவான திறன்கள் அமைகின்றன (Gibb, Stephen International Journal of Lifelong Education, v33 n4 p455-471 2014)

**வரைவிலக்கணம்**

மிருதுவான திறன்கள் என்பது ஒருவரின் மனவெழுச்சி அறிவாற்றலுடன் இணைந்ததாகும். ஒருவரின் அளுமை பண்புகள், சமூக ஆர்வங்கள், தொடர்பாடல்,மொழி, சொந்த பழக்கவழக்கங்கள், நட்புரிமையுடன் குறிக் கோளை அடைய துணை நிற்றல், மற்றவர்களுடான தொடர்புகளின் தளறாதிருக்கும் குணவியல்புகள் என்பவற்றை உள்ளடக்கியதாகும் Wikipedia defines soft skills

ஒருவரின் தொழில் அறநெறிகள், அவரின் மனப் பாங்கு, அவரின் தொடர்பாடல் திறன்கள், மனவெழுச்சி அறிவாற்றல், மற்றும் அவரது தனித்த பண்புகளைச் சுட்டிக்காட்டுவதாகும். MindTools defines soft skills

**வாழ் தொழில் வெற்றிக்கான கட்டங்கள்**

| **கடின திறன்கள்** (Hard Skills) | **மக்கள் திறன்கள்** (People skills) |
|---|---|
| கணிதம், கணக்கீடு, பௌதீகம்<br>உயிரியல், இராசயனவியல், புள்ளிவிபரவியல்<br>நிதியியல், நிகழ்ச்சியமைப்பு | தொடர்பாடல் திறன்கள், தலைமைத்துவ திறன்கள், அணியாக இயங்கும் திறன்கள், வலையமைப்புத் திறன்கள், விரும்பத்தகுதிறன்கள் |

| சுய முகாமைத்துவ திறன்கள் (Self Management skills) |
|---|
| விழிப்புணர்வு, மனவெழுச்சிக்கட்டுப்பாடு, தன்னம்பிக்கை பொறுமை, தாக்குப்பிடித்தல். |
| **வேலை அறநெறிகள்** (work Attitude) |
| நேர்மை, வகைக்கூறல், கற்றலுக்கான விருப்பம். சுந்தர்ப்பங்களை பயன்படுத்தல் |
| **வாண்மைத்துவம்.** (Professionalism) |
| பொருத்தமான தோற்றம், உரிய நேரத்திற்கு கருமமாற்றல், மதுபோதை தவிர்ப்பு, பணிவு |

**கடினமான திறன்களுக்கும் மிருதுவான திறன்களுக்குமிடையிலான வேறுபாடுகள்.**

கடினமான திறன்களுக்கும் மிருதுவான திறன்களுக்கு மிடையே மூன்று பிரதான வேறுபாடுகள் காணப்படுகின்றன்.

1. கடினமான திறன்கள் ஒருவரின் நுண்ணறிவோடு தொடர்புடையது.(இடது மூலையின் செயற்பாடுடன் தொடர்புடையது) மிருதுவான திறன்கள் மனவெழுச்சி அறிவாற்றலுடன் தொடர்புடையது. (வலது மூலையின் செயற்பாடுகளுடன் தொடர்புடையது.)

2. கடினமான திறன்கள் நிலையான விதிகளுடன் தொடர்புடையது அதாவது எழுத்தில் எழுதப்பட்டு பின்பற்ற வேண்டிய விதிகளை குறித்து நிற்பது. மிருதுவான திறன்கள் ஒரு நிறுவனத்தின கலாசாரம் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் போன்ற தன்மைகளுக்கு ஏற்ப மாற்றக்கூடிய விதிகளாகும்.

3. கடினமான திறன்கள் பாடசாலையில் கற்கப்படுகின்ற நூல்களுடாக, கற்கை நெறிகளுடாக கற்கப்படும் திறன்களாகும். ஆனால் அநேகமான மிருதுவான திறன்கள் பாடசாலைக்கு வெளியே வாழ்க்கைச் சம்பவங்களுடாகவும் வேலைச்சூழல் ஊடாகவும், முயன்று தவறுதல் ஊடாக மிருதுவான திறன்கள் கற்றுக் கொள்ளப்படுகின்றன.

**அறிவுக்கும் கடின திறன்கள் மிருதுவான திறன்கள் என்பற்றிற்குமான தொடர்புகள்**

| அறிவு | கடினத்திறன்கள் | மிருதுவான திறன்கள் |
|---|---|---|
| • முறையியல்.<br>• இலக்கணம்.<br>• அகராதித் தொகுப்பு.<br>• உச்சரிப்புக் கலை.<br>• கற்றல் பாணிகள்.<br>• கலைச் சொற்களை கற்பித்தல்.<br>• கற்பித்தலுக்கான கோட்பாடுகள்.<br>• அறிவை வடிவமைத்தல். | • அறிவுறுத்தல்களை வழங்குதல்.<br>• எண்ணக்கருவாக்கம்.<br>• பிழைகளைத் திருத்துதல்<br>• வகுப்பறை முகாமைத்துவம்.<br>• நடத்தை முகாமைத்துவம்.<br>• பாடத்தை திட்டமிடுதல்.<br>• தொழிநுட்பத்தைப் பயன்படுத்துதல்.<br>• ஆய்வு செய்யும் திறன்கள்.<br>• வளங்களை பொருத்தமாக பயன்படுத்துதல்.<br>• மாணவர்களை நெறிப்படுத்துதல். | • மாணவர்களுடன் இணைப்பினை ஏற்படுத்துதல்.<br>• மாணவர்களை ஊக்குவித்தல்.<br>• முன்வைத்தல்.<br>• மாணவருடன் ஒத்துணர்வுடன் பழகுதல்.<br>• உடல் மொழியைப் பயன்படுத்துதல்.<br>• சுயமதிப்பீட்டில் ஈடுபடல்.<br>• பிரதிபலிப்பில் ஈடுபடல்.<br>• வாண்மைத்துவம் தொடர்பான அக்கறை. |

| மிருதுவான திறன்கள் | அவசியமான திறன்கள் | மேலதிகமாக தேவையான திறன்கள் |
|---|---|---|
| தொடர்பாடல் திறன்கள் | • தாம் நினைப்பதை<br>• வாய்மொழி மூலம் அல்லது எழுத்துமூலம் நம்பிக்கையுடனும் வினைத்திறனாகவும் செம்மையாகவும் வெளிப்படுத்தும் ஆற்றல்.<br>• ஒன்றை உன்னிப்பாகவும் கருத்தூன்றியும் செவிமடுத்து துலங்கும் ஆற்றல்<br>• நம்பிக்கையுடனும் தெளிவாகவும் பார்வையாளருக்கு முன்வைக்கும் ஆற்றல். | • முன்வைப்புகள் போது தகவல் தொழில்நுட்ப சாதனங்களை பொருத்தமாக பயன்படுத்தும் ஆற்றல்<br>• பல்முக கலாசார சூழலில் கலந்துரையாடி முடிவெடுக்கும் ஆற்றல்<br>• தனியாள் மீது கவனமெடுத்து வேறுபட்ட கருத்துக்களை பகிரும் ஆற்றல்<br>• மற்றொருவரது தொடர்பாடல் பொருத்தப்பாட்டினை விளக்கும் ஆற்றல் |
| விமர்சனரீதியான சிந்தனை மற்றும் பிரச்சினை தீர்க்கும் திறன்கள் | • சிக்கலான நிலைமைகளில் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதனை பகுப்பாய்வு செய்து, நீதியான முறையில் மதிப்பிடும் ஆற்றல்<br>• பகுப்பாய்வு விரிவாக்கல், மற்றும் கலந்துரையாடல் மதிப்பீடுதல் போன்ற மிக்சிய ரீதியான சிந்தனை திறன்களை விருத்தியாகவும் விரிவாக்குவதற்குமான ஆற்றல்<br>• சிறந்த முடிவுகளை கண்டறியவும், மாற்றுதீர்வுகளை தேடியறியும் ஆற்றலும். | • தூர நோக்குடன் சிந்திக்கும் ஆற்றல்.<br>• ஏற்றுக் கொள்ளத்தக்க ஆதாரங்களுடன் ஒன்றை முடிவுறுத்தும் ஆற்றல்<br>• நிலைத்து நின்று ஒன்றை முழுதாக பொறுப்பேற்கும் ஆற்றல்.<br>• வேறுபட்ட வேலைச் சூழலை விளங்கிக்கொண்டு அதனோடு இணைந்து பணியாற்றும் ஆற்றல். |
| அணியாக செயற்படல் | • மற்றவர்களுடன் வினைத்திறனாக இடைத்தொடர்புகொள்ளவும் பரஸ்பர புரிந்துணர்வை கட்டி யெழுப்புவதற்குமான ஆற்றல்<br>• ஒரு அணியில் தலைவராகவோ அல்லது தொண்டராகவோ தனது வகிபாகத்தை நன்கு விளங்கிக்கொண்டு தரும் மாற்றும் ஆற்றல்<br>• மற்றவர்களின் மனப்பாங்கு நடத்தைகள் மற்றும் நம்பிக்கைகள் என்பவற்றைக் கண்டறிந்து அவற்றை கௌரவப்படுத்துவதற்குமான ஆற்றல் | • அணியில் செயற்பாடுகளை திட்டமிடவும் இணைப்பாக்கம் செய்யவும் பங்களிக்கும் ஆற்றல்<br>• குழு தீர்மானங்களுக்கு பொறுப்பேற்றல். |
| வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் தகவல் தொழில் நுட்ப திறன் | • பல்வேறுபட்ட மூலங்களிலிருந்து தகவல்களை கண்டறிதல் அவற்றைப் பயன்படுத்துதல், அவற்றை முகாமை செய்யும் ஆற்றல்<br>• புதிய எண்ணங்களை உருவாக்குதலும் தன்னியல்பான கற்றலும் | • விசாரிக்கும் மனதை விருத்தியாக்குவதற்கும் புதிய அறிவை உருவாக்குவதற்கான ஆற்றல் |
| முயற்சியாண்மைத் திறன்கள் | • கிடைக்கும் சந்தர்ப்பங்களில் கண்டறியும் ஆற்றல் | • புதிய நுட்பங்களை பிரேரிக்கும் ஆற்றல்<br>• எல்லா சந்தர்ப்பங்களில் விரிவாக்குதலும் புதிய நுட்பங்களை கண்டறிவதற்குமான ஆற்றல்<br>• அபாயக சந்தித்தலுக்கான நுட்பங்களை உருவாக்கும் ஆற்றல் |
| ஒழுக்கம், அறநெறிகள் மற்றும் வாண்மைத்துவம் | • பொருளாதார பிரச்சனைகள், சூழல் மற்றும் சமூக கலாசார அநுக்கள் என்பவற்றை வாண்மைத்துவம் ரீதியாக விளங்கிக் கொள்ளும் ஆற்றல்<br>• ஒழுக்க ரீதியில் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்யவும் அவற்றை தீர்க்கவும் தேவையான ஆற்றல் | • அறநெறி பண்பாங்கை வெளிப்படுத்தவும் அது தொடர்பாக சமுகத்துக்கு பொறுப்பு கூறுவதற்குமான ஆற்றல் |
| தலைமைத்துவ திறன்கள் | • தலைமைத்துவம் தொடர்பான அறிவு மற்றும் அடிப்படை கோட்பாடுகளை விளங்கிக் கொள்ளல்<br>• ஒரு செயற்றிட்டத்திற்கு தலைமை வகிக்கும் ஆற்றல் | • தலைவராகவும் தலைமைத்துவத்தை பின் பற்றுபவராகவும் தேவைக்கேற்ப மாறிக்கொள்ளும் ஆற்றல்<br>• வகுப்பறை முகாமைத்துவம்<br>• மற்றவர்களை மேற்பார்வை செய்யும் ஆற்றல் |

**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்கள் மாணவரின் கற்றல் தொடர்பாக மிருதுவான திறன்கள்**

1. மாணவர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப கலைத் திட்டத்தில் உள்ள அமசங்களை கற்கத்தூண்டுதல்.
2. கற்றலுக்கு வேண்டிய உண்மையான புதுமையான ஆர்வமூட்டக்கூடிய சூழலை ஒழுங்கமைத்துக் கொடுத்தல்.
3. சகல மாணவர்களும் கற்றலுக்கான உயர் இலக்குகளை கொண்டிருக்க ஊக்குவித்தல்.
4. மாணவர்கள் தனித்துவமான கற்றலை மேற்கொள்வதற்கான முன்மாதிரியாக திகழுதல்.
5. மாணவர்கள் தமக்கு பொருத்தமான கற்றல் பாணிகளை தெரிவு செய்து கற்பதற்கு வழிகாட்டுதல்.
6. மாணவர்களின் தனித்துவத்தை மதித்து கற்பித்தல்.
7. சிறப்பான தொடர்பாடலுக்கு முன்மாதிரியாக செயற்படல்.
8. மாணவர் முன்னிலையில் தெளிவாகவும் வினைத் திறனாகவும் உரையாடுதல்.
9. ஆசிரியரின் இலக்குகளை மாணவர்கள் அடைந்து கொள்ளக்கூடிய வகையில் மாணவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துதல்.

10. பொருத்தமான மொழி நடை, உச்சரிப்பு, குரல் ஏற்ற இறக்கம், தெளிவு, இலகுவான மொழி நடை என்பவற்றை பயன்படுத்தி மாணவர்களுக்கு விளக்குதல்.

11. உறுப்பெழுத்துக்களில் பொருத்தமான அளவில் மாணவர்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய அளவில் எழுதுதல்.

12. கற்பித்தலுக்காக மின்னஞ்சல், கணனியில் பொறித்தல், சொல்முறையாக்கம் ,மென்பொருட்களை பயன்படுத்தல், சமூக வலைதளங்களை பயன் படுத்துதல்.

13. கற்பித்தலுக்காக பொருத்தமாக பல்லூடகங்களை பயன்படுத்துதல்.

14. மாணவர்களை குழுவாக அணியாக இயக்குதல்.

15. வகுப்பறை முகாமைத்துவத்திற்கான பொறுப்புகளை சரியாக நிறைவேற்றுதல்.

16. மாணவர்களின் ஒழுக்கப்பிரச்சினைகளை ஒத்துணர் வுடன் நோக்குதல்.

17. நேரமுகாமைத்துவத்தை கடைப்பிடித்தல்.

18. முன்னுரிமை அடிப்படையில் பாடங்களை திட்டமிட்டு கற்பித்தல்.

19. ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் முடிவு திகதியை நிர்ணயித்து செயற்படல்.

20. மாணவரின் பங்குபற்றுதல்களுடன் இணைபாடவிதான செயற்பாடுகளை திட்டமிட்டு நிறைவேற்றுதல்.

21. கற்றல் கற்பித்தலின் போது நெகிழ்ச்சியாக தொழிற்படுதல்.

22. மாணவர்கள் சலிப்படையும், விரக்தி அடையும் சந்தர்ப்பங்களில் அவர்களை அதிலிருந்து மீட்டெடுத்தல்.

23. புதிய புதிய நுட்பங்களை கையான்டு கறபித்தல்

24. மாணவர்களிடையே மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக் கொணருதல்.

25. பிரச்சினையை இனங்காணுதலும் பிரச்சினைகளை தீர்தலும்.

26. முரண்பாடுகளை நேர் நிலையில் தீர்வு செய்தல்.

27. பக்கச்சார்பற்ற முறையில் நெறிப்படுத்தல்களை மேற்கொள்ளுதல்.

என்பனவாகும்.

## அரைநாண் கொடி அணிவது ஏன்?

உடலுக்கு நடுப் பகுதி இடுப்பு. மேலிருந்து கீழாக, கீழிருந்து மேலாக ஓடும் இரத்தம் இடுப்புக்கு வரும்போது சம நிலைக்கு கொண்டு வர இந்த அரை நாண் கொடி உதவுகிறது.

மகாபாரத்தில் திருதாஷ்திரன் தன் மகன் துரி யோதனன் போருக்கு போகுமுன் தலையிருந்து தொட்டு சீர்வாதம் செய்து, வழங்கி வரும் போது இடுப்புக்கு வந்தவுடன் துரியோதனன் கட்டியிருந்த அரைநாண்கொடியால் இடுப்பு க்கு கீழ் சீர்வாதம் வழங்க முடியவில்லை.

அரைஞாண் நாம் சின்ன வயதில் நம் பெற்றோர் வற்புறுத்தி இடுப்பில் கட்டிவிடும் ஒரு கருப்பு கயிறு. எதற்கு இதை நான் அணிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டால், திருஷ்டி படகூடாதுன்னு கட்டிவிடுறோம்னு சொல்லுவாங்க..உண்மையிலேயே இதுக்கு தான் இந்த கருப்பு கயிற்றை கட்டுகிறோமா?

நிச்சயமாக இல்லை அந்த அரைஞாண் கயிற்றின் ரகசியத்தை நம் முன்னோர்கள் கண்டுபிடித்த ஒரு மருத்துவ ரகசியமே அடங்கியுள்ளது அந்த ரகசியம்......

ஆண்கள் இடுப்பில் கட்டுகிற அரைஞாண்கயிறு ஒரு நோய் தடுப்பு முறை என்பது இன்று பலருக்குத் தெரியாது. ஆண்களுக்குப் பொதுவாக குடல் இறக்க நோய் வருவதுண்டு. அந்நோயைத் தடுக்கவே இடுப்பில் அரைஞாண் கயிறு முன்பெல்லாம் கட்டுகிற பழக்கம் தமிழர்களிடையே இருந்தது. பிறகு அக்கயிறு வெள்ளிக்கொடியாக மாறியது.

இன்றைக்கு அநாகரீகம் எனக் கருதி அரைஞாண்கயிறும் கட்டுவதும் குறைந்து விட்டது. உடல் பெருத்தலின் ஒரு அதிகபட்ச தீமை "குடல் இறக்க நோய்" ஆங்கிலத்தில் ஹெரணியா என்பார்கள். இது தொண்ணூறு சதவீதம் ஆண்களுக்குத் தான் வரும் என ஆய்வுக் குறிப்புகள் சொல்கின்றன.இதை தடுக்கத்தான் நம் முன்னோர்கள் இடுப்பில் அரைஞாண் கயிறு கட்ட அறிவுறுத்தினார்கள்.

இப்போது வெள்ளி,தங்கத்தில் அறுணாக் கொடி கட்டுகிறார்கள் தான். அது பகட்டுக்கு. சில விசயங்கள் நாகரீக மாற்றங்களுக்குட்பட்டு மாறிவிட்டாலும் இன்றும் கறுப்புக் கயிற்றில் முத்து மணிகள் சில கோர்த்து அறுணாக் கொடி கட்டத்தான் செய்கிறார்கள். நம் முன்னோர்கள் பாரம்பரியத்தை நம் பிள்ளைகளுக்கு ஆதாரத்தோடு கற்பிப்போம்.

# திருமந்திரம் புலப்படுத்தும் சமூக நல்லிணக்க, நல்லொழுக்க சிந்தனைகளும் சமகால சமுதாய போக்குகளும் ஓர் ஒப்பீட்டாய்வு

P. Poologanathan
(M.Phil. Reading, Department of philosophy, university of peradeniya)

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வுக் கட்டுரையானது திருமூலரால் அருளப்பட்ட மூவாயிரம் பாடல்களைக் கொண்ட பெரும் தொகுதியான திருமந்திரம் வலியுறுத்தும் சமூக நல்லிணக்க, நல்லொழுக்க சிந்தனைகளை இன்றைய சமுதாய போக்குகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதாக அமைகின்றது. இன்றைய 21ம் நூற்றாண்டானது பொருளாதாரம், கல்வி, தொழிநுட்பம், அரசியல் போன்ற துறைகளிலே முன்னேற்றம் கண்டிருப்பினும் சமூகங் களிடையே நல்லிணக்கத்தினையும் நல்லொழுக் கத்தையும் ஏற்படுத்துவதில் முன்னேற்றம் காணவில்லை யென்றே குறிப்பிட முடியும். மாறாக சமூகங்களிடையே பிரிவினைகளும் ஏற்றத்தாழ்வுகளும் பகைமைகளும் வன்முறைகளுமே அதிகரித்துச் செல்கின்றன. இதன் விளைவாக உலக நாடுகளுக்கிடையே கொடிய யுத்தம், செயற்கை அழிவுகள், பசி, பஞ்சம், பட்டினி போன்றன நிகழ்கின்றன. சமூகங்களிடையே நல்லிணக்க, நல்லொழுக்கங்களை நிலைநாட்டுவதற்காக உள் நாட்டிலும் சர்வதேச அளவிலும் பல அமைப்புக்கள் தோன்றியிருப்பினும் சமூகங்களிடையே நல்லிணக்கம் ஏற்படவில்லை என்பதனை இன்றைய உலகலாவிய போக்குகள் எமக்கு வெளிப்படுத்துகின்றன.இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலர் எனும் சித்தர் 3000 ஆண்டுகள் தியானத்தினூடாக அனுபவித்த விடயங்களை ஒன்று திரட்டி 3000 மந்திரங்களைக் கொண்ட திருமந்திரத்தை அருளிச் செய்தார்.திருமுறை களில் 10ம் திருமுறையாகவும் மூலமந்திரமாகவும் தமிழ் மூவாயிரமாகவும் போற்றப்படும் இது ஒன்பது தந்திரங் களாகப் பிரிக்கப்பட்டு வையத்தில் வாழ்வாங்கு வாழ் வதற்கு தேவையான இன்றைய ஒழுக்க நெறிகளை வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக சமூக, சமய ஒற்றுமை, கொல்லாமை, புலால் மறுத்தல், பிறர்மனைநயவாமை, செல்வம் நிலையாமை, வாழ்க்கை நிலையாமை, அறம் செய்வோர் திறம், அறம் செய்யார் திறம், அன்புடைமை, பொதுமகளீர் இழிவு, பற்றறுத்தலின் பெருமை, பொய்யுரைத்தலை தவிர்த்தல் போன்ற அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. திருமந்திரப் பாடல்களினூடாக வெளிப்படுத்தப்படும் நல்லிணக்க நல்லொழுக்க சிந்தனைகளை இன்றைய சமுதாய போக்குகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதற்காக பல திருமந்திர உரை நூல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப் பட்டும் சம கால செல்நெறியுடன் ஒப்பிட்டும் இக் கட்டுரை வடிவமைக்கப்படுகிறது.

திறவுச் சொற்கள் - நல்லொழுக்கம், நல்லிணக்கம், அறம், நிலையாமை, தந்திரங்கள்.

**ஆய்வு அறிமுகம்**

திருமுறைகள் பனிரெண்டாகும். இவை தோத்திரம், சாத்திரம், பிரபந்தம், புராணம் எனும் நான்கு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 1-9 வரையிலான திருமுறைகள் தோத்திர வகைக்குரியதாகவும், 10ம் திருமுறை சாத்திர வகைக்குரியதாகவும். 11ம் திருமுறை பிரபந்த வகைக்குரியதாகவும், 12ம் திருமுறை புராண வகைக்குரியதாகவும் வகுக்கப்பட்டுள்ளது. 10ம் திருமுறையாகவும், சாத்திர வகைக்குரியதாகவும், தமிழ் மூவாயிரம் என்றும் போற்றப்படுவதும் திருமூலரின் திருமந்திரமாகும். சுந்தரநாதர் எனும் இயற்பெயர் கொண்ட திருமூலர் பாண்டி நாட்டிலே கி.மு 6000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தாக குறிப்பிடப்படுகிறது. [1] பின்னா் அவர் திருவாவடுதுறையில் மூவாயிரமாண்டுகள் (3000) யோக நிஸ்டையில் ஆழ்ந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களை பாடி அதனை தனது மாணவர்கள் ஏழு பேருக்கு போதித்து அவர்களைக் கொண்டு தமிழ் நாட்டில் பல மடங்களை ஸ்தாபித்து சைவசித்தாந்த நுண்பொருள் உண்மைகளை உலகிற்கு பரப்பினார். திருமூலர் பாடிய திருமந்திரம் மூவாயிரம் பாடல்களே ஆகும். ஆயினும் தற் காலத்தில் பதிப்பிக்கப் பட்ட பல பிரதிகளில் 3047, 3081 என்றவாறாகவும் காணப்படுகிறது. உண்மையில் தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம் என்று மூலரே கூறுவதனால் திருமந்திரம் மூவாயிரம் பாடல்களாகவும் ஒன்பது தந்திரங்களாகவும் வருக்கப்பட்டிருப்பதை அறியலாம். [2]

திருமந்திரமே தமிழ் வேதாகம முழுமுதற் கரு நூலாகும். இதனை முதலாக கொண்டு இதன் விளக்கங் களாக அமைக்கப்பட்டதே பதினான்கு(14) சைவ சித்தாந்த நூல்களும், ஏனைய திருமுறைகளும் என்றால் அது மிகையாகாததொன்றாகும். இவ்வொரு நூலிகளி லேயே பல சைவப் பண்பாட்டுக் கூறுகளும், ஒழுக்க உண்மைகளும் புலப்படுகின்றன. அதாவது சமய

உண்மைகள், உலகில் ஒழுக்கங்கள், திருக்கோயில் வாழிபாடுகள், திருவுருவச் சிறப்புக்கள் மந்திர மாண்புகள், அடியார் பெருமை, குருபின் சிறப்பு, சிவபூசையின் இன்றியமையாமை என்பவற்றோடு சமூக ஒற்றுமை, நல்லொழுக்கம் என்பனவும் வெளிப்படுத்துகின்றது. [3]

இங்கு இவ்வாய்வானது திருமூலர் அன்றைய சமுதாயத்தில் காண விளைந்த நல்லொழுக்க, நல்லிணக்க சிந்தனைகளை இன்றைய சமுதாய போக்கு களுடன் ஒப்பிட்டு ஆராய முற்படுகிறது. திருமந்திரத்தின் முதல் தந்திர்மாக குறிப்பிடப்படும் 113-336 பாடல்களும் சமுதாய நல்லொழுக்க சிந்தனைகளையே பெரும்பாலும் வலியுறுத்துவதனைக் காணலாம். எடுத்துக்காட்டாக கொல்லாமை, புலால் மறுத்தல், பிறர்மனை நயவாமை, நிலையாமைக் கருத்துக்கள் (செல்வம், யாக்கை, இன்பம்), விலை மகளீர் இழிவு, பற்றற்ற வாழ்வு, அன்புடைமை, அறம் செய்வோர்திறம், அறம் செய்யான் திறம்இபொய்யாமைஇபாராளு மன்னனின் இயல்புகள் போன்ற விடயங்களும் மற்றும்சாதி மத பேதமின்றிய சமூக நல்லிணக்க சிந்தனைகளும் வெளிப்படுத்தப் படுவதனைக் கண்டு கொள்ளலாம்.[4]

## ஆய்வின் நோக்கம்

திருமந்திரப் பாடல்களினூடாக வெளிப்படுத்தப்படும் சமூக நல்லிணக்கஇ நல்லொழுக்க கருத்துக்களை இன்றைய சமுதாயத்தின் நடைமுறைப் போக்குகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது.

## ஆய்வின் வரையறை

மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமூலர் திருமந்திரம் 09தந்திரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது முதல் தந்திரமாக கொள்ளப்படுகின்ற 113-336 பாடல்களை அடிப்படையாக கொண்டுவரையறைக்குள் உட்படுத்தப்படுகின்றது. தேவையேற்படுமிடத்து ஏனைய ஒரு சில பாடல்களும் இவ்வாய்வின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்தப்படுகிறது.

## ஆய்வின் முறையியல்

இவ்வாய்வின் நோக்கத்தினை நேர்த்தியான வகை யில் அடைந்து கொள்வதற்காக பகுப்பாய்வுமுறை (Analytical Method), ஒப்பீட்டாய்வு முறை (Comparative method), விபரண முறை (Descriptivemethod) என்பன பயன்படுத்திப்படுகிறது. அத்துடன் இவ்வாய்வுக்கு வேண்டிய தரவுகள் யாவும் இரண்டாம் நிலை தரவு களாகவே அமைகின்றன. அதாவது உரை நூல்கள் மூலமாகவே பெறப்படுகிறது. உரைநூல்கள் என குறிப்பிடினும் திருமந்திரத்திற்கு உரைசெய்தோர் பலர் காணப்படினும் மிகச் சிறந்த உரையாசிரியர்களின் நூல்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளை மையமாகக் கொண்டு ஆய்வு வடிவமைக்கப்படுகிறது.

## ஆய்வு தொடர்பான விவாதங்களும் எடுத்துரைப்புக்களும்

திருமந்திர மாலையின் கண் அமையப்பெற்ற ஒன்பது தந்திரங்களும் முதல் நான்கு (04) தந்திரங்களும் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கினையும் கொண்டதனால் அவை வேதங்கள் எனவும், ஏனைய ஐந்து தந்திரங்களும் ஐந்தெழுத்தின் விரிவான ஆகமங்கள் என்றும் குறிப்பிடப்படுகிறது. வேதத்தைவிட அறம் இல்லை, வேத்தின் கண் ஓதற்தகும் எல்லா அறமும் உள என்பது ஆன்றோர் வாக்குஜ5ஸ

இனி திருமந்திர முதல் தந்திரத்தில் சொல்லப்படும் உலகியல் ஒழுக்கங்களில் கொல்லாமை எனும் உயர் அறநெறியினை நோக்குவோமாயின் உடலிலிருந்து உயிரை பிரிக்காமல் இருப்பதே கொல்லாமை எனும் அறமாகும். இவ்வறம் கீழைத்தேய மேலைத்தேய சிந்தனைகளில் அதிகம் போற்றப்பட்டதாகும்.இக் கொல்லாமை எனும் அறநெறியினை திருமூலர் பின்வருமாறு விளக்குகிறார்.

*"பற்றாய நற்குரு பூசைக்கும் பண்மலர்*
*மற்றோர் அணுக்களை கொல்லாமை ஒண் மலர்….."*

(மந்திரம் - 239)

இறைவனை அடைவதற்குரிய வாயில்களில் ஒன்று சிவ குருவினை பூசித்தல் ஆகும். இக்குருவினை பூசிப்பதற்குரிய மலர்களில் சிறப்பான மலர் கொல்லாமை எனும் நன் மலராகும். கொல்லாமையின் சிறப்பினை திருமூலர் மட்டுமின்றி சமணம்இ பௌத்தம் போன்ற நெறிகளும் உயர்வாக கருதுகின்றன. இன்றைய உலகலாவிய போக்குகளை நோக்கும் இந்நெறிகள் கற்பித்த விடயங் களுக்கு மாறாகவே இடம் பெறுகின்றது. தெருக்கள் தோறும் இறைச்சிக் கடைகளுமஇ தேசங்கள் தோறும் மனித உயிர்கள் அழிக்கப்படு வதனையும் கண்டாகக் காணலாம்.

கொல்லாமை எனும் அறத்தினை வலியுறுத்திய திருமூலர் தனது அடுத்தடுத்த மந்திரங்களில் அதற்கான தண்டனைகளையும் வெளிப்படுத்துகிறார்.

*"கொல்லிடு குத்து என்று கூறிய மாக்களை*
*வல்லடிக் காரர் வலிக் கயிற்றாற் கட்டி*
*செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை……."*

(மந்திரம் - 240)

அதாவது உயிர்களிடம் இரக்கமின்றி கொல் என்றும், குத்து என்றும் கூறும் விலங்குக் குணமுடைய மக்களை கால தூதுவர்கள் வலிய கயிற்றினால் கட்டி இழுத்துச் சென்று இறுதியில் பெரும் துன்பமாகிய நரகத்திலே சேர்த்திடுவர் என்று குறிப்பிடுகிறார்.

கொல்லாமையையும் அதற்கான தண்டனையையும் வற்புறுத்திய திருமூலர் கொல்தற்கு அடிப்படை புலால் உண்ணுதல் எனும் பெருந் தவறாகும். இதுவே கொல்லுதற்கு வழி சமைக்கும். எனவே புலாய் மறுத்தல் என்பது மூலர் கண்ட மற்றுமொரு அறமாகும். இவ்வருள்

நெறியை நாடினாலேயே இறையருள் கிட்டும் என்பது அவர் கருத்து.

*"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை*
*எல்லாரும் காண இயமன் தன் தூதுவர்*
*செல்லாகப் பற்றி தீவாய் நரகத்தில்*
*மல்லாக்கற் தள்ளி மறித்து வைப்பரே"*

(மந்திரம்-242)

புலாலை உண்ணும் இழிவான குணமுடையவரை இயமனின் தூதுவர்கள் பலரும் காணும் படியாக கறையான்கள் போல இறுகப் பற்றி இழுத்துக் கொண்டு போய் துன்பம் தரும் தீயிடமான நரகத்தில் மல்லாக்கத் தள்ளி அழுந்த வைத்து விடுவார்கள்.

இன்றைய துன்பம் நிறைந்த சமுதாய வாழ்வின் பல்வேறு குற்றச் செயல்களுக்கு அடிப்படையாக அமையுமோர் பெருங் குற்றம் பிறர்மனை நயதல் ஆகும். பிறர் மனைவியை விரும்புதலை ஓர் பெருங் குற்றமாக திருமூலர் கண்டார். இதனை

*"ஆத்த மனையாள் அகத்தே இருக்கவே*
*காத்த மனையாளைக் காளையர்*
*காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்ஈச்சம்*
*பழத்திற்கு இடருற்ற வாறே"*

(மந்திரம்-244)

என்று குறிப்பிடுகிறார்.

அன்பு கொண்ட தனக்குரிய மனைவியானவள் வீட்டில் இருக்க அவளிடம் ஆசை கொள்ளாமல் பிறரது மனைவியை விரும்பி அடைய நினைப்பது எதுபோலெனின், தனது வீட்டுத் தோட்டத்தில் காய்த்து முதிந்த பலாப் பழத்தை உண்ணாமல் முள்ளுடைய ஈச்சங் கொடியில் பழுத்த பழத்தை பறிக்கச் சென்று முள்ளினால் குத்தப் படுதல் போன்ற துன்பத்திற்குரியதாகும்.

சங்க காலம் தொட்டு இன்றுவரை தமிழர் சமுதாயத்தின் பெரும் துன்பமாகவிளங்கும் மற்றுமொரு அல்லொழுக்கம் விலை மகளீர் செயற்பாடாகும். அன்பு நலங்கெட்டு அழகு நலங் காட்டி ஆடவரைக் கவர்கின்ற பரத்தையரே பொது மகளீர் அல்லது விலை மகளீராவர். இவர்களது இயல்பினை குறிப்படும் பொழுது

*"இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாந்தர்*
*புயலுறும் புல்லின் புளர்ந்தவராயினும்*
*மயலுறும் வானவர் சாரஇ இரும் என்பார்..."*

(மந்திரம்-249)

பெண் யானையை ஒத்த விலை மகளீர்கள் உடலும் உயிரும் தளிர்த்து புணர்ந்தவராயினும் அவர் மனம் பொருளிலேயேநாட்டம் செல்லும். புதுப் பொருளுடையோரைக் காணுகின்ற போது அவரை எல்லா வகையிலும் உயர்ந்தவராக கொள்வர். பொருளற்றவரை விலகும் படியாக பேசியும் துன்புறுத்தியும் ஓட்டுவர்.

விலை மகளீரின் இயல்பினை குறிப்பிட்ட திருமூலர் அவளிடம் செல்லும். மனத்தினை விட்டொழிக்க வேண்டும் என்பதனையும் அடுத்து குறிப்பிடுகிறார்.

*"இலை நல வாயினும் எட்டி பழத்தால்*
*குலை நல வாங்கனி கொண்டுண லாகா*
*முலை நலங் கொண்டு முறுவல் செய்வார் மேல்...."*

(மந்திரம்-247)

எட்டி மரம் இலைகளாலும், காய் கனிகளாலும் மா மரத்தை போல் கவர்ச்சி தருமாயினும் அப்பழக்குலையின் பார்வையால் அதனை யாரும் பறித்து உண்ணமாட்டார்கள். அது உண்பதற்கு பொருத்தமற்றது. அது போலவே முலையழகு காட்டி புன்முறுவல் செய்து கவர நினைக்கும் பொது மகளீரை விரும்பாமல் ஆடவர் தனது கற்பை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்கிறார்.

இவ்வுலகியல் வாழ்க்கையில் பெண்களோடு கூடுவதால் அடைகின்ற இன்பம் ஒன்றுமில்லை. இக் கொள்கையை உணர்ந்தோர் மெய் ஞானிகள் மட்டுமே. உடலுக்கு பெண் தரும் இன்பம் கரும்பின்சாறு போல் இனிக்கலாம். ஆனால் அது உளத்திற்கு வேம்பின் காயைப் போல் கசப்பானது என்பதனை திருமூலர் குறிப்பிடுகிறார்.

விலை மகளீர் இழிவு,அவனது இயல்பு, அதிலிருந்து விடுபடுதல் போன்ற விடயங்களை குறிப்பிட்டு அன்றைய சமுகத்தினை திருமூலர் நன்நெறிப்படுத்த முனைந்தார். எனினும் இன்றைய சமுகத்தில் இவை யாவும் அரச மற்றும் நீதிசார் சட்டங்களினால் அங்கிகரிக்கப்பட்ட நவீன சமுதாயத்தின் கௌரவக் குறியீடுகளாக அமைகின்றன. இன்று பல நாடுகளில் விபச்சாரம் சட்ட ரீதியானதாக அங்கிகரிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் பல நாடுகள் அதனை அங்கிரிப்பதற்கு முயற்ச்சிக்கின்றன.

அடுத்து அறஞ்செய்தல் எனும் உயர்ந்த சமுதாய ஒழுக்க நெறியினை குறிப்பிடும் திருமூலர் அறம் செய்வோனின் திறம் மற்றும் அறம் செய்யாதோனின் திறம் போன்றவற்றையும் குறிப்பிடுகிறார். இதனை

*"யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலையா*
*வர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறையாவர்க்குமாம்*
*உண்ணும் போதொரு கைப்பிடி....."*

(மந்திரம்-109)

இறைவனுக்கு ஒரு பச்சிலையிட்டு வழிபாடு செய்கின்ற ஒழுக்கம் எல்லோருக்கும் வேண்டும். அதுபோன்று ஆவுக்கு ஒரு பிடி புல் இரையளித்தல் யாரும் செய்யக் கூடிய அறமாகும். உணவு உண்ணுகின்ற போது வருகின்றவர்களுக்கு ஒரு கைபிடி அளவேனும் உணவளித்தல் யாருக்குமுரிய அறப்பண்பாகும். அது போன்று பிறருடன் பேசுகின்ற போது மகிழுமாறு சொற்களை பேசுதலும் இனிய அறங்களின் ஒன்றாகும். இவ்வாறு செயற்தகு அறநெறிகளை ஒன்றன் பின் ஒன்றாக திருமூலர் குறிப்படுகிறார்.

நவீன சமுதாயத்தின் இயந்திர வாழ்க்கையை அன்றே புரிந்து கொண்ட திருமூலர் அதற்கேற்ற விதத்தில் இவ்மந்திரத்தினை வெளிப்படுத்தியுள்ளார். ஆலயங் களுக்கு சென்று வழிபடவோஇ ஆவுக்கு இரையளிக்கவோ,

வறியோர்களுக்கு உணவளிக்கவோ நேரமில்லாத மனிதர்கள் தாம் வேலை செய்யுமிடங்களில் மற்றயவருடன் இனிய சொற்களை பேசுதலும் உயர்ந்த அறமாக குறிப்பிடுகின்றார்.

சைவப் பண்பாட்டு அறநெறிகளில் ஒன்று விருந் தோம்பல். இதன் சிறப்பினை அடுத்து திருமூலர் குறிப்பிடுகின்றார். இதனை "அற்று நின்றார் உண்ணும் ஊணே அறறெண்ணும்..." எனும் பாடலில் மூலமாக விளக்குகின்றார். அடுத்து பொருளை ஈட்டி வைத்தும் அன்பும் இரக்கமும் கொண்டு அறப்பணி செய்யாதவரின் மனத்தின் இயல்பினை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"பரவப்படுவான் பரமனை ஏத்தார்*
*இரவபர்க்கு ஈதலை ஆயினும் ஈயார்*
*கரகத்தால் நீர் அட்டிக் காவை வளர்க்கார்நரகத்தே*
*நிற்றிரோ நல்நெஞ்சினீரே"*

(மந்திரம் - 121)

இறைவனை வழிபடாதவர்களும் தம்மிடம் வந்து கையேந்திய ஏழைகளுக்கு ஒரு காசைக் கூட ஈயாதவர் களும் வழிச் செல்வார்க்கு நிழல் தரும் மரஞ் செடி களுக்கு தண்ணீர் ஊற்றாதவர்களும் நரகத்தினில் துன்பத்தை அடைவார்கள். அற நெஞ்சங் கொண்டு மேற்படி காரியங்களை ஆற்றுவோமானால் நரகம் செல்ல வேண்டிய தேவை ஏற்படாது.இவ்

அறஞ்செய்யாதோரை நோய்கள் வாட்டி வதக்கும் என்பதனையும் திருமூலர் குறிப்பிடுகின்றார். இதனை,

*"இருமலும் சோகையும் ஈளையும்*
*வெப்புமதருமம் செய்யாதவர் தம்பால தாகும்...."*

(மந்திரம்-120)

அதாவது அறம் செய்யாத மாந்தரை இருமல், சோகை, ஈளை, காய்ச்சல் முதலிய நோய்கள் அண்டித்துன்புறுத்தும் என்பதனை குறிப்பிடுகிறார். இன்றைய சமுதாய அற நெறிகளில் ஒன்றாக போற்றப்படுவது கள்ளுண்ணாமை ஆகும். கள்ளுண்ணுலும், காமங் கொள்ளலும் கீழான பண்புகளாகும்.

*"காமமும் கள்ளும் கலதிகட்கே ஆகும்*
*மாமலமும் சமயத்துள் மயலுறும் ..."*

(மந்திரம்-313)

சிற்றின்ப ஆசைகளும் கள்ளுண்ணல் முதலிய தீய செயல்களும் ஒழுக்க மற்றவரிடமே உண்டு. ஆணவ மலம் நல்லவற்றை உணரவிடாமல் தடுப்பதைப் போன்று தீய பழக்கங்கள் இருக்கின்ற அறிவையும் கெட்டுப் போகச் செய்யும் என்பதனை குறிப்பிடுகிறார். மாறாக இன்றைய நவீன சமூகமோ போதைப் பொருளுக்குள்ளும் சிற்றின்ப ஆசைகளுக்குள்ளும் தன்னை முழுமையாக அடிமைப்படுத்திக் கொண்டு போலியாக மகிழ்வுறுகின்றது.

இன்றைய சமுதாயத்தில் ஏற்படுகின்ற கொடிய யுத்தம், வறுமை போன்ற அனைத்து செயற்கை அனர்த் தங்களுக்கும் காரணம் மானிடர்களிடையே காணப்படும் வேறுபாடாகும். இவ்வேறுபாடு இன, மத, சாதி எனும் அடிப்படையில் அமைகின்றது. இவ்வேறுபாட்டை களைந் தால் சமுதாயத்தில் உயர்வான சமுதாய நல்லிணக்கம் ஏற்படும். சமுதாய ஒற்றுமையை வெளிப்படுத்தும் திருமந்திரப் பாடலாக பின்வரும் பாடல் அமைகின்றது.

*"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்*
*நன்றே நினைமின் நமனில்லை நாணாமே...."*

(மந்திரம்-2066)

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களும் ஒரே தன்மையினை உடையதுவே அவற்றுக்குடையே எந்த குல பேதமும் இல்லை. அதே போன்று இவ்வுயிர் களையெல்லாம் படைத்த இறைவனும் ஒருவனே ஆவான். இங்கு எந்த மத பேதங்களும் இல்லை என்பதனை மேற்படி பாடல் தெளிவாக வலியுறுத்தி சமுதாய நல்லிணக்க சிந்தனைகளை சிறப்பாக வெளிப் படுத்துகிறது. பண்டைய நூல்கள் அனைத்தும் எடுத் துரைப்பது போன்று திருமூலரும் தனது தந்திரங்களிலே பாராளு மன்னனுக்குரிய அறிவு நலம், இரக்கப் பண்பு, ஆளுமைத்திறன் ஆகியவற்றையும் கூடாத குற்றச் செயல்களையும். எடுத்துரைக்கிறார்.

*"கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்*
*கல்லா அரசினில் காலன் மிக நல்லன்...."*

(மந்திரம்-95)

ஒரு நாட்டிலே கற்க வேண்டிய அறநெறிகளை கல்லாத அரசனை விட உயிர்களை இரக்கமின்றிப் பறித்துச் செல்லும் இயமன் எவ்வளவோ மேலானவன் என்பதனை இங்கு குறிப்பிடுகிறார். எனவே நாடாளு மன்னன் எல்லா அறநெறிகளையும் கற்றறிந்தவனாக காணப்பட வேண்டும். அவனாலேயே சரியான நீதியினை வழங்க முடியும். என்பது இங்கு குறிப்பிடப்படுகிறது. இது பிளேட்டோ கண்ட தத்துவஞானி அரசன் எனும் கருத்திற்கு ஒப்பானது.

*"நாள் தோறும் மன்னவன் நாட்டில்*
*தவநெறிநாள் தோறும் நாடி அவன் நெறி நாடானேல்*
*நாள் தோறும் நாடு கெட மூடப் நண்ணுமால்..."*

(மந்திரம்-96)

நாடாளு மன்னன் நாள் தவறாமல் நாட்டின் அறநெறிகளை ஆராய்ந்து மக்களை ஆட்சி செய்ய வேண்டும். அவ்வாறு மன்னவன் அறநெறியில் ஆட்சி புரியவில்லையானால் நாட்டில் மழை வளம் குன்றி நாடு வறுமையிலும் துன்பத்திலும் வாடி இருளில் மூழ்கும் என்பதனை குறிப் பிடுகிறார். இதனைவள்ளுவர்

*"நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்*
*நாடாறு நாடு கெடும்"* (குறள்-553)

எனக் குறிப்பிடுவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

**முடிவுரை**

தொகுத்து நோக்குவோமாயின் ஓர் நன்னெறி சமுகத்திற்கு வேண்டிய அனைத்துக் கருத்துக்களையும் திருமந்திரம் கொண்டிருப்பதனைக் காணலாம். கொல்லாமை முதற்

கொண்டு நாடாளு மன்னனுக்கு வேண்டிய அறநெறிகள் ஈறாக பல சமூக நல்லொழுக்க கருத்துக்களையும் சாதி, மத, பேதங்களுக்கு அப்பாலான சமூக நல்லிணக்க சிந்தனைகளையும் இற்றைக்கு கி.மு 6000 ஆண்டுகளுக்கு முன்பே திருமூலர் எடுத்துக் கூறியுள்ளார். இன்றைய நவீன சமூகமானது கல்வி, பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகளிலே முன்னேற்றம் கண்டிருப்பினும் சமூக நல்லிணக்கத்தையும், நல்லொழுக்கத்தினையும் நிலை நாட்டுவதில் குறித்த அளவேனும் திருமூலர் காண விளைந்த சமூகத்தை நோக்கி முன்னேறவில்லை என்றே கூற வேண்டும். ஏனெனில் இன்றைய உள்நாட்டு யுத்தங்களும், இனநெருக்கடிகளும், பட்டினிச்சாவு போதைப் பொருள் பாவனை, காமக்கழியாட்டங்கள் போன்ற செயற்பாடுகளே நாளுக்கு நாள் அதிகரித்துக் செல்கிறது. ஒழுக்க விழுமியங்களுக்கு நவீன சமுதாயத்தில் சிறிதளவும் இடமில்லை. எனவே திருமுறை களின் 10ம் திருமுறையான திருமந்திரம் குறிப்பிடும் நல்லிணக்க, நல்லொழுக்க சிந்தனைகளை சிறிதள வேனும் நாளாந்த வாழ்க்கையில் கைக்கொள்வதனூ டாக மூலர் காணவிளைந்த நல்லொழுக்க சமூகத்தை நோக்கி செல்லலாம் என்பது உறுதி.

**அடிக்குறிப்புக்கள்.**

[1] ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள், திருமந்திரம், செந்தமிழ்கல்லூரி, திருப்பனந்தாள், பக்- 12, (1951).

[2] மேற் கூறப்பட்டது, பக்- 23-24, (1951).

[3] இராமநாதப்பிள்ளை.பதிதிருமந்திரம் மூவாயிரம், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், திருநெல்வேலி, சென்னை, பக் 30-31, (1994).

[4] B.Nadarajan,Tirumular Tirumanthiram, ITES Publication, Madras, pp-8-24, (1979).

[5] 61ம் பாடல், திருமந்திரம்.

**உதவிய நூல்கள்**


1. Www.Shaivam.Org/ Siddhartha/ thm. htm!
2. மணிவாசகன், க.மு, திருமந்திரம் மூலமும் எளிய உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, (2009).
3. B.Nadarajan, Tirumanthiram-A Tamil scriptural classic, sri Ramakrishna Muth, Madras, (1991).
4. சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர், திருமூலர் திருமந்திரம், மௌனாச்சிரமம், கொழும்பு, (1994).

# பாடசாலை ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாப்பதில் இலங்கையின் கல்விச் சட்டங்கள் – ஒரு நோக்கு

திருமதி. தக்ஷ்ஷாயினி ராஜேந்திரன்
விரிவுரையாளர், கல்வி, பிள்ளை நலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

இருபதாம் நூற்றாண்டில் முதலிருபது வருடப்பகுதியில் கல்வி முறைமையை சீர்திருத்த எடுத்துக்கொண்ட முயற்சிகளானது ஆட்சியாளர்களின் நிருவாக சேவைக் கான தேவைகளை பூர்த்தி செய்வதையே பிரதானமான நோக்கமாகக் கொண்டிருந்தது. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுக் காலம் வரை சட்டம், மருத்துவம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வியை போதிப்பதற்கு ஏற்ற வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. பாடசாலை அதிகாரிகளினால் தெரிவு செய்யப்பட்ட சில மாணவர்களை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு தயார்செய்வதும், பெரிய பிரித்தானியா விலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு சென்று கற்க புலமைப்பரிசில் வழங்குவதுமே கல்வித்துறையில் வழங்கப்பட்ட வாய்ப்புக்களாகும். இவ்வாய்ப்புக்களை பெறத் தகுதி வாய்ந்த மாணவர்களை பாடசாலை அதிகாரிகளே தேர்ந்தெடுத்தனர். கல்வியை விரிவுபடுத் தவும், பல்துறைப்படுத்தவும் இக்காலப்பகுதியில் எடுக்கப் பட்ட முயற்சிகள் யாவும் நாட்டின் கலாசார தேவைகள், நிலைமைகள் ஆகியவற்றையும், குழந்தைகளின் தனியாள் வேறுபாடுகளையும், ஆற்றல்களையும் கருத்திற் கொள்ளப்படாது திட்டமிடப்பட்டவையாக இருந்தன.

இக்காலப்பகுதில் எம்நாட்டை ஆண்டு வந்த பிரித்தானியர்கள் இந்நாட்டின் கல்வி முறையில் பாட சாலைகளின் எண்ணிக்கையை அதிகரித்து பாடசாலைத் திட்டத்தை விரிவாக்கி இந்நாட்டில் கல்வி முறையை அவர்கள் விசாலப்படுத்தியபோதும் பிரித்தானியரால் நியாத்துவம் என்னும் கல்வியின் மூலத்தத்துவத்தை எய்த முடியவில்லை.

பிரித்தானியர் காலத்தில் கல்வியில் இரட்டைத் தன்மை காணப்பட்டது. உயர்ந்தோர் குழாமுக்கு உரிய வசதிகள் நிறைந்த ஆங்கிலக்கல்வி முறையும், பெரும்பாலான பிள்ளைகளுக்கு தேசிய மொழிகள் மூலமான வசதிகள் குறைந்த கல்வியும் அருகருகே இயங்கின. அத்துடன் நாட்டின் தென்மேல் பகுதியும், வடபகுதியும் கூடிய கல்வி வசதிகளைக் கொண்டிருந்தன. 1930 களில் அத்தகைய முரண்பட்ட கூறுகளைக்கொண்ட தேசியக் கல்வி மரபுரிமையே காணப்பட்டது.

1931 ஆம் ஆண்டு முதல் 1948 வரையுள்ள காலம் கல்வித்துறையில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்ட காலம் எனலாம். புத்துணர்ச்சி பெற்ற தேசிய உணர்ச்சியானது அக்காலத்தில் நிலவிய நாட்டின் அரசியல், சமூக பொருளாதார நிலையை மாற்றியமைக்க முற்பட்டது எனலாம். அத்துடன் இவ்வேகமானது நாட்டின் சமயம் சம்மந்தமாகவும், சமூகத்துறை சம்மந்தமாகவும் மாற்றம் செய்ய முற்பட்டது. அவ்வேளையில் மிக பரந்துபட்டதும் முற்றாக திருத்தியமைக்கப்பட்டதுமான நிலை கல்வித்துறையில் ஏற்பட்டது.

1931 ஆம் ஆண்டின் டொனமூர் யாப்பின்படி இலங்கைக்கு ஓரளவு பொறுப்புணர்ச்சி வழங்கப்பட்டது. புதியயாப்பின் கீழ் நிறுவப்பட்ட அரசாங்க சபையிலே சர்வஜன வாக்களித்தலின் அடிப்படையில் பிரதேசவாரியாக தேர்தல் தொகுதிகளிலிருந்து பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டார்கள். அரசாங்க சபையில் அமைக்கப்பட்ட ஏழு நிருவாக சபையின் தலைவர்களாக நாட்டின் அமைச்சர்கள் இருந்தனர். அரசாங்கத்தின் ஒரு சில திணைக்களங்கள் தவிர ஏனைய திணைக்களங்கள் இவ் அமைச்சர்களின் பொறுப்பில் விடப்பட்டன. அவ்வாறு பொறுப்பில் விடப்பட்டுள்ளவற்றில் கல்வித்துறையும் ஒன்றாக இருந்தது. கல்வித்துறைக்குப் பொறுப்பான கல்வி நிருவாகத் தலைவராக கல்வியமைச்சர் செயற் பட்டார். இதன்படி கல்வியமைச்சருக்கு கல்வியின் பொருட்டு கொள்கைகள், விதிமுறைகள் உருவாக்கவும், கட்டுப்படுத்தவும், வழிகாட்டவும் அதிகாரமளிக்கப் பட்டிருந்தது.

இவ்வதிகாரக் கையளிப்பின் பின்னர் நாட்டின் தேசிய நலன்களைக் கருத்திற்கொண்டு கல்வி முறையை வலுப்படுத்துவதற்காக பல்வேறு அபூர்வமான சட்டங்கள் உருவாக்கப்பட்டன.

பாடசாலை மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவது தொடர்பாக இல 1961/26 மற்றும் 1961.07.21 ஆம் திகதி கொண்ட சுற்றறிக்கை மற்றும் பாடசாலையின் ஒழுக்கத்தைப் பாதுகாப்பது தொடர்பாக வெளியிடப்பட்ட இல 2001/1 மற்றும் 2002.03.30 திகதி சுற்றறிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டு கல்வியமைச்சின் 2005/17 ஆம் இலக்க சுற்றறிக்கை அமுலில் உள்ளது. அச்சுற்றறிக்கையில் உள்ள விடயங்கள் வருமாறு,

மனிதாபிமானமற்ற முறையில் தண்டனைகளை வழங்காது பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களை பேணிவருவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன் பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோகச் செயற்பாடுகள் இடம்பெறாத சூழலை ஏற்படுத்தவும் பொறுப்பாக இருக்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. இந் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அர்பணிப்பு செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர்களுக்கு உடல் ரீதியான தட்டணைகள் வழங்குவதில் இருந்து தவிர்த்துக் கொள்ளவேண்டும். அதிபர் ஆசிரியர்களினால் மாணவர் களுக்கிடையே ஒழுக்கமாற்றங்களை ஏற்படுத்தும் சிந்தனையுடனும் நோக்குடனும் செயற்பட்டு உடல் ரீதியான தண்டனைகள் வழங்கக்கூடாது. இங்கு தண்டனை வழங்குவதன்றி விடயத்தை விளக்குதல், முன்மாதிரி மற்றும் சிறந்த அமைப்புக்கள் மூலம் உள்ளக ரீதியாக சுயஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்காக பயிற்சி யளிப்பதன் மூலம் நபர் ஒருவர் வாழ்வு பூராகவும் ஒழுக்கவிழுமியங்கள் கொண்ட நபராக வாழ தேவைப்படும் பயிற்சிகளை பெறுவதென்பதனை மறந்துவிடக்கூடாது.

இலங்கையினால் கையொப்பமிடப்பட்டு முன்மொழியப் பட்ட (1989) ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை 28(2) வாசகத்தின் மூலம் பாடசாலைகளில் ஒழுக்க நிருவாகம் மாணவர்களின் மானிடக் கௌரவத்திற்கு அமைவான முறையில் மேற்கொள்வதை பொறுப்புடன் செயற்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

உடல் ரீதியான தண்டனை வழங்கப்படுவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்திருப்பது பிள்ளைகளிடையே ஒழுக்கத்தை புகட்டும்போது வழங்கப்படும் தண்டனைகள் மூலம் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்கவில்லை என்றும் இதற்கு மாறாக பின்வரும் பாதக விளைவுகள் ஏற்படலாம்.

1. உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவன் மூலம் திருட்டு, தாக்குதல்கள் போன்ற சமூகத்திற்கெதிரான பழக்கங்கள் மாணவர்களுக்கிடையே ஏற்படும்.
2. சிறுவர் துஷ்பிரயோகத்திற்கான சந்தர்ப்பம் அதிகரிக் கின்றமை.
3. மாணவர்களுக்கிடையே ஆத்திரமடையும் பழக் கங்கள் அதிகரிக்கும்.
4. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லது அதிபர்களுக்கிடையே தொடர்பு துண்டிக்கப்படல்.
5. திருப்பியற்ற மானிட உணர்வுகள் பிள்ளைகளிடம் ஏற்படல்.
6. பிள்ளைகளினால் சிறந்த சிந்தனைகளைக் கட்டியெழுப்பும் போது பாதகமான முறையில் வற்புறுத்தல்கள் ஏற்படல். மேலும் உடல் ரீதியான தண்டனைகளை வழங்காது ஒழுக்கத்தை பாதுகாக்க முடியாத பட்சத்தில் அதன்மூலம் சித்தரித்துக் காட்டப்படுவது ஆசிரியரின் திறமையற்ற தன்மையே ஆகும்.

உடல்ரீதியான தண்டனைகளுக்கு பதிலாக கீழ்க் குறிப் பிடப்படும் மாற்று நடவடிக்கைகளை பின்பற்ற முடியும்.

1. பாடசாலையிலுள்ள மாணவர்கள் ஒழுக்க விழுமியத் திற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவிருக்கும் சந்தர்ப்பங்களை குறைப்பதற்காக பாடசாலை செயற்பாடு மற்றும் இணைப்பாடவிதான நடவடிக்கை களினை சிறந்த முறையில் ஒழுங்கு செய்தல்.
2. பாடசாலைகளின் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாக சகலருக்கும் விளக்கமூட்டல் மற்றும் சிறந்த செயற் பாடுகளை மேற்கொள்வதுடன் தவறான செயற்பாடு களுக்கு உதவாதிருத்தல் அல்லது அதனை அங்கிகரிக்காதிருத்தல்.
3. சிறந்த பழக்கங்களை ஏற்படுத்துவதற்கும் பாடசாலை களில் ஒழுக்கத்தை பேணுவதற்கும் ஒழுக்கவிழுமிய செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை விளக்கமூட்டல், முன்மாதிரியாக மேற்கொள்ளல் மற்றும் மாணவர் களுக்கு சரியான வழிமுறைகளை காண்பித்தல்.
4. மாணவர்கள் தவயிழைக்கும் வேளையில் அவரால் இழைக்கப்பட்ட தவறை விளக்கமூட்டல்.
5. மோசமான முறையில் ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளை மேற்கொண்ட வேளையிலும் உடல் மற்றும் உளரீதியான தண்டனைகளை வழங்குவதற்கு பதிலாக எச்சரிக்கை செய்தல் மற்றும் பெற்றோர் மற்றும் பாதுகாவலருக்கு அறிவித்தல்.
6. தவறிழைத்த மாணவன் அனுபவிக்கும் வரப்பிரசாதங் களை வரையறுத்தல் அல்லது இடைநிறுத்தல். உ-ம்: வகுப்புத் தலைவர், மாணவர்த் தலைவர் போன்ற பதவிகளை இல்லாமற் செய்தல்.
7. பாரிய ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளை மேற்கொண்ட வேளையில் பெற்றோருக்கு அறிவித்து இரண்டு வாரத்திற்கு அதிகரிக்காத வகுப்புத் தடை விதித்தல். மேற்கூறப்பட்ட 6 மற்றும் 7 கீழ் செயற் படும் போது அதிபரினால் பாடசாலை ஒழுக்க சபையை அழைத்து அதன் மூலம் மேற்கொள்ளப்படும் விசாரணைக்கு பின்னர் எடுக்கப்படும் தீர்மானத்தின் கீழ் மாத்திரம் அவ்வாறு செயற்பட வேண்டும்.
8. பாடசாலை ஒழுக்க சபையினால் மிக மோசமான ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக தீர்மானித்த வேளையில் அச்செயற் பாட்டின் தன்மை மற்றும் தீவிரத்தன்மைக்கமைய வலயக்கல்வி பணிப்பாளர் அல்லது மாகாணக்கல்விப் பணிப்பாளரின் முன் அங்கிகாரத்துடன் இரண்டு வாரத்திற்கு மேற்படாத காலத்திற்குள் வகுப்புத்தடை அல்லது பிள்ளை வேறொரு பாடசாலைக்கு கல்வி கற்ற ஆண்டிற்கே மாற்றம் செய்தல். மாணவர்கள்

தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்கும் போது அது தொடர்பாக ஆவணரீதியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் அவை கவனமாக கல்லூரியில் வைத்திருக்கவும் வேண்டும்.

மேலும் 7 மற்றும் 8 இன் செயற்பாடுகளின் போது அதிபரினால் இது தொடர்பாக சம்பவத்திரட்டில் குறிப்பொன்றும் பேண வேண்டும். மேற்கூறப்பட்டவாறு மாணவர்களது சிறந்த செயற்பாடுகளை ஏற்படுத்தும் நோக்கில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் கல்லூரியில் பிரதான கூட்டம் அல்லது அறிவித்தல் பலகையில் பாடசாலையினுள் பகிரங்கப்படுத்தப் பொறுப்பாக இருக்க வேண்டும்.

பாடசாலையில் ஒழுக்கத்தைப் பேணும் நோக்கிலாக இருந்தாலும் மாணவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டால் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு சட்ட நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும்.

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் III அத்தியாயம் II ஆவது வாசகம் மற்றும் XVI வது அத்தியாயம் 126 வது பிரிவிற்கமைய அடிப்படை உரிமை மீறும் வழக்குத்தாக்கல் செய்யமுடியும்.
2. 1995இல் 22 கொண்ட குற்றவியல் சட்டத்தின் மூலம் (மறுசீரமைக்கப்பட்ட) சட்டத்தின் 3 வது வாசகம் மற்றும் பிரதான சாசனத்தின் 308(அ) பிரிவின் கீழ் பிள்ளைகள் மோசமான முறையில் தண்டனைகளுக்கு உட்படுத்திய தவறின் கீழ் வழக்குத்தாக்கல் செய்ய முடியும்.
3. கல்வியமைச்சின் பொறுப்பாளரினால் நடாத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைகளில் உடல்ரீதியான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப் பட்டால் தாபன விதிக் கோவையின் II ஆவது பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

**சிறுவர் துஷ்பிரயோகம்**

சிறுபராயத்திற்கு பொருந்தாத பல்வேறுதரப்பட்ட முறையற்ற நடவடிக்கைகளுக்காக பிள்ளைகளை ஈடுபடுத்துவது சிறுவர் துஷ்பிரயோகமாக கருதமுடியும். இலங்கையில் பல ஆண்டு காலம் முதல் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்ததுள்ளதுடன் தற்போது பல்வேறுபட்ட முறையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் நாளுக்கு நாள் இடம்பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைக்குள் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுவது கவலைக்குரிய விடயமாகும். பாடசாலையில் பிள்ளையின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஏனையோர் மூலம் பிள்ளைகள் முறையற்ற ரீதியில் நடாத்தப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

சிறுவர் துஷ்பிரயோகத்தில் பாலியல் வற்புறுத்தலுக்கு மாணவன் அல்லது மாணவி உட்படுத்தப்படுவது பாரிய குற்றமாகும். இலங்கையின் 80 வது தசாப்த நடுப்பகுதில் சிறுவர் மற்றும் உடல் ரீதியான துஷ்பிரயோகம் குற்றமென்றும் 90 ஆம் தசாப்த ஆரம்பப் பகுதியில் சிறுவர் பாலியல் உறவு பாரிய தண்டனைக்குரிய குற்றமென்றும் இனங்காணப்பட்டது.

இதனால் பாடசாலைகளில் மாணவன் அல்லது மாணவிகள் ஏதாவதொரு முறையில் துஷ்பிரயோகத்திற்கு இலக்காவதை தடுப்பது அதிபரினதும் ஆசிரியரினதும் பொறுப்பாகும்.

பாடசாலையில் மாணவன் அல்லது மாணவி பாலியல் அல்லது வேறு முறையிலான துஷ்பிரயோகத் திற்கு உட்பட்டால் அது உண்மையானது என ஊர்ஜிதப் படுத்தப்படும் பட்சத்தில் பாரிய தண்டனைகளுக்கு இலக்காக வேண்டியேற்படும்.

பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் உட்பட பாடசாலைக்குள் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் தடை ஏற்படக்கூடியவாறு கல்லூரியில் கல்வி மற்றும் கல்வி சாரா பணியாளர் சபை அங்கத்தவர்களினால் ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளுக்கு மாணவர்களை தூண்ட ஒருபோதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது. மாணவர்கள் ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளுக்கு தூண்டுவது அவ்வாறவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் சமர்பிக்கப்படும் வேளையில் அக்குற்றம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டால் மாணவரை தூண்டப்பட்டது தொடர்பாக உரிய குழு அல்லது நபருக்கு தீவிர தண்டனை வழங்க முடியும்.

சிறுவர் இன்னல்கள் தொடர்பிலான சகல புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் மேற்பார்வை செய்தல் உட்பட விசேட அதிகாரங்கள் 1998 இல் 50 கொண்ட பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவப்பட்டுள்ளது. அவ்வதிகார சபையினால் தமது அதிகாரங்கள் அமுல்படுத்தும் போது மாகாணக்கல்விப் பணிப்பாளர் அல்லது வலயக்கல்விப் பணிப்பாளர் அல்லது பாடசாலை பொறுப்பாளரிடம் ஏதாவதொரு உதவி கேட்கப்படும் போது அதற்காகத் தேவைப்படும் உதவியை அவ்வதிகார சபைக்கு வழங்குதல் வேண்டும்.

# எதிர்கால மனிதவள அபிவிருத்தியை நோக்கி நேரான வகுப்பறை முகாமைத்துவமும் ஆசிரியரும்

கலாநிதி பா. தனபாலன்
உப பீடாதிபதி
யாழப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி

ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்தியை அந்நாட்டின் நிகழ்கால பாடசாலை வகுப்பறைகளே தீர்மானிக்கின்றன. வகுப்பறையானது நித்தம் பல்வேறு மாணவர் நடத்தைகள் நிறைந்து காணப்படும் ஓர் இடமாகும். ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபடும்போது உயிரோட்டமாகப் பங்கேற்கும் மாணவர்களும், பங்குபற்றாமல் புறழ்வான நடத்தைகளை மேற்கொள்பவர்களும் உண்டு.

பதட்டம், அசாதாரண சூழல் காரணமாக வெளிப்படும் வன்முறைகள் கட்புல - செவிப்புல இழப்புக்கள், உடல் உளக் குறைபாடுகள், விசேட தேவையுடைய நிலை, வறுமை ஆசிரியர், பெற்றோர் தொடர்பான காரணிகள் இவையாகவும் நேரான வகுப்பறை முகாமைத்துவ வினைத்திறன்களைக் குறைக்கின்றன.

வகுப்பறை வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைவதே வகுப்பறை முகாமைத்துவமாகும். வகுப்பறை வாழ்க்கை பூராகவும் நிலைத்துவிடும் ஓர் இடமாக விளங்குவதற்கான காரணம் எல்லோருக்கும் பிடித்தமான அதன் தன்மையே ஆகும். உலகின் பெரிய மகான்களாகத் திகழுந்தவர்கள் தம் பாடசாலைப் பராய வகுப்பறையினை மிகுந்த விருப்போடு நினைவு கூறுகிறார்கள் வகுப்பறை மீது தம் பக்தியை வெளியிடுகிறார்கள். அவர்களது உன்னத தன்மையை அவர்களுக்கு உரித்தாக்கியவர்கள் சிறந்த நேரான வகுப்பறை முகாமைத்துவத்தைப் பின்பற்றிய அவர்களது ஆசிரியர்களாலேயே ஆகும். இவ் ஆசிரியர்கள் நேரான வகுப்பறை முகாமைத்துவத்தைப் பிரயோகிக்க:

i. வகுப்பறையில் பயனுறுதிவாய்ந்த நேரான முகாமைத்துவ அம்சங்களைப் பிரயோகிக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

ii. உள நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளில் நடத்தை மாற்றங்கள் இருக்கலாம் என்பதை எற்றுக்கொள்ளவேண்டும்

iii. வகுப்பறையில் பிள்ளையின் விருப்பத்திற்கமைய நேரான நடத்தைமாற்றத்தைக் கொண்டுவரும் தேர்ச்சியைப் பெறல்

iv. கவர்ச்சிகரமான உயிர்ப்பான கற்றல்- கற்பித்தல் திறன்களைப் பிரயோகிக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல்

v. மாணவர்களின் நடத்தைப் பிரச்சினைகள் அவதானிக்கப்படும் போது உடல் - உள ரீதியான தண்டனை வழங்காது எவ்வாறு அவர்களைக் கையாளலாம் என்ற ஆற்றலைப் பெற்றிருத்தல் என்பவை நேரான வகுப்பறை முகாமைத்துவ அம்சங்களாகவுள்ளன.

**ஆசிரியர் ஆளுகை**

ஏனைய தொழில் வாண்மையாளர்கள் போலன்றி ஆசிரியர்கள் மாணவர்களுடன் பணிபுரிகின்றார்கள். மாணவர்களோ விரைவாகத் திருப்தியடையக் கூடிய வர்கள். வேறுபாடுகளுக்கு ஆளாகக் கூடியவர்கள். வெறுப்படையக் கூடியவர்கள் உணர்ச்சி வசப்படுபவர்கள். குறைந்த அனுபவம் உடையவர்கள். கல்வி எண்ணக் கருக்களை ஆட்படுத்திக் கொள்வதில் பல்வேறு மட்டங்களை உடையோர். அபிவிருத்தி அடையும் பருவங்களை வெவ்வேறு விதத்தில் கடக்கும் முதிர்ச்சியடையாத கட்டத்தவர். இவர்களை ஆளுகை செய்ய முன்கூட்டியே மேற்கொள்ளும் தீர்மானத்தோடு மாத்திரம் வகுப்பறையில் செயற்பட முடியாது. எனவே கற்பகவராகவும் உளவியலாளராகவும் ஆய்வாளராகவும் அவர் செயற்பட வேண்டும். அப்போதே ஆளுகை உள்ளவராகச் செயலாற்ற முடியும்.

நேரான வகுப்பறை முகாமைத்துவத்தில் ஆசிரிய ரானவர் வகுப்பறையில் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை ஆரம்பிக்கவுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அமைதியான மனதுடன் அதனை ஆரம்பிக்க வேண்டும் அதற்கு முன்னர் ஒரு வேளை எமது உள்ளத்திலிருந்த பயம், பதட்டம், கோபம், வெறுப்பு போன்ற எதிரான உணர்வுகளில் இருந்து விடுபட்டு சாந்தம் நிறைந்த மனதுடன் வகுப்பறையை ஆரம்பிக்க வேண்டும்.

**நேரான வகுப்பறையில் ஆசிரியர் வகிபங்குகள்**

- ஆசிரியர் சிந்தனை சொல், செயல் என்பவற்றில் கொள்கை மாறாதவராக இருக்கவேண்டும்
- மாணவர்களின் தனிப்பட்ட விருப்பங்கள் பிரச்சினை கள் பற்றிக் கதைப்பதற்கு பாடநேரத்திற்கு அப்பால் நேரம் ஒதுக்குதல்

- எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் நடந்து கொள்ளல்
- தற்செயலாக இடம்பெறும் தவறுகளுக்கு ஒரு போதும் தண்டனை வழங்காதிருத்தல்
- சரீர தண்டனை ஒரு போதும் வழங்காதிருத்தல்
- மாணவர்கள் திருந்தி நடப்பதற்கும் சந்தர்ப்பம் கொடுத்தல்
- ஆசிரியருடைய அறிவுறுத்தல்கள் எப்போதும் நேர்மையானதாக இருக்க வேண்டும்
- மாணவர்களின் ஆக்கத்திறன் முயற்சி என்பவற்றிற்குப் பாராட்டுதல்கள் வழங்க வேண்டும்
- அடிக்கடி மாணவர்களிடம் கேள்வி கேட்க வேண்டும் மாணவர்கள் விடையளிக்க முயலும்போது அதற்கு உதவுதல் நன்று.

இவ்வகையில் நேரான வகுப்பறை முகாமைத்துவத்தைப் பின்பற்றும் ஆசிரியர் திட்டமிடுபவராக, நண்பராக வளவாளராக, கணிப்பீட்டாளராக, தகவல் தருபவராக, உபகரண ஆக்குநராக, வழிகாட்டியாக, கற்க உதவுவராக, முன்மாதிரியாளராக, வளர்ப்புப் பெற்றோராக ஆசிரியர் மாணவர் உறவு நல்ல அன்பு நெறியூடாக மனிதவள உறவுகளை மேம்படுத்துகின்ற நல்லாசிரியர்களை, நல்லதிபர்களை மாணவர்கள் நேசிக்கிறார்கள். அந்த வகுப்பறை – பாடசாலைச் சூழலில் பொருத்தமான அமைதிச் சூழல் நிலவுகின்றது. அந்த அமைதிச் சூழலில் கல்விப்பணி சிறக்கின்றது.

★ அங்கு தண்டனைக்குத் தடி தேவையில்லை

★ உருட்டலும், மிரட்டலும் தேவையில்லை

★ உடலில் மனிதனாகத் தோன்றுபவனை உள்ளத்திலும் மனிதனாக மாற்றுவதே ஆசிரியர் வழங்கும் கல்வி:

★ மாணவன் இவ்வுலகைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு சுதந்திரம் அளிக்கப்படல் வேண்டும்

★ அதேநேரம் அவன் அவ்வாறு புரிந்து கொள்வதற்குச் சாதகமான சூழ்நிலையை வழங்கவேண்டும்

★ அங்கு சுய கட்டுப்பாடு இனம் தெரியாமல் இயங்கவேண்டும்

இவ்வாறு வகுப்பறைகளில் சுதந்திரமாகக் கற்றிட நேரான வகுப்பறை முகாமைத்துவ உத்திகள் வழிகாட்டு கின்றன. வினைத்திறனுள்ள ஆசிரியர் மாணவர்களுடன் நல்லுறவையும் தொடர்பாடலையும் உயிர்த்துடிப் பாக்குபவர். இவ்வுயிர்த் துடிப்பான உறவு இருவழிப் பாதையாக இருப்பதுடன் ஒத்துழைப்பும் சிறப்பாக இருக்கும் உயிரத்துடிப்புமிக்க கற்றல் செயற்பாடுகளை எப்போதும் ஊக்குவிப்பார். பின்னூட்டல்களை உடனுக்குடன் வழங்கித் தனது உயர்ந்த எதிர்பார்ப்பை வெளிப்படுத்துவார். மாணவர்களின் தனிப்பட்ட திறன்களுக்கும், வித்தியாசமான கற்றல் முறைகளுக்கும் மதிப்பளிப்பார் நல்ல ஆளுமையும் பொறுமையும் உள்ள ஆசிரியராக இருப்பார்.

இவ்வாறு இருக்க வேண்டிய ஆசிரியர்கள் இவ்வாறு இருக்க முடியாதுள்ளனர். பாடசாலை முகாமைத்துவக் குறைபாடுகள், பொருத்தமற்ற பயிற்சிப்பட்டறைகளும், செயலமர்களும் மேற்பார்வைக் குறைபாடுகளும், மாணவர்களுடன் பலமணி நேரமிருந்து செயலாற்ற முடியாத நிர்வாக வேலைகள், சுய கற்றல், சுய ஆற்றல் களைப் பின்பற்றாமை என்பன காரணங்களாகவுள்ளன.

**மாணவர்களின் பொருத்தமற்ற நடத்தைகள்**

ஒரு மாணவரது நடத்தை அவரது நாளாந்த வாழ்வைப் பாதிக்குமாயின் அவர் வகுப்பறை பாடசாலையுடன் இணைந்து முன்னேற தடையாக அமையுமாயின் மற்றவர்களின் உரிமைகள் மதிப்பை பாதிக்குமாயின் அது பொருத்தமற்ற நடத்தையாகும் மாணவர்களின் பொருத்தமற்ற நடத்தைகளுக்கு வீடு பாடசாலை, சமூகச் சூழல் காரணமாக அமையலாம். இப் பொருத்தமற்ற நடத்தைகள் தொடர்பாக இன்று பாடசாலைகளிலும் வகுப்பறைகளிலும் பல பிரச்சிகைள் தோன்றுகின்றன இவற்றைத் தீர்க் தண்டனை முறையைத் தவிர்த்து சரியான ஆலோசனை வழிகாட்டலை வழங்க வேண்டும். இதற்கு முதலில் ஆசிரியர் வகுப்றையில் நேரான வகுப்பறை முகாமைத்துவ விடயங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

★ மாணவர்களின் பொருத்தமற்ற நடத்தைகளை அவதானித்து அது தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடல்

★ மாணவர்கள் சொல்வதை உற்றுக் கேட்டல்

★ பொருத்தமற்ற நடததையுடைய மாணவர் மீது நிபந்தனையற்ற அக்கறையை வெளிப்படுத்தல்

★ ஒரு மாணவனை இன்னொரு மாணவருடன் ஒப்பிடாதிருத்தல்

★ ஒவ்வொரு மாணவரையும் கௌரவத்துடனும், மரியாதையுடனும் நடாத்துதல்

★ மாணவர் தம் கற்றல் இலக்கை அடைய ஆசிரியர் நம்பிக்கை ஊட்டல்

★ நல்ல புரிந்துணர்வு, தொடர்பாடல், உறுதி, பொறுமை ஆகிய பண்புகளை மாணவர் மீது பிரயோகித்தல்

சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விழுமியங்களான அன்பு, சமாதனம், சுதந்திரம், பாதுகாப்பு மரியாதை கொடுத்தல், சம உரிமை, நீதியும் நேர்மையும் ஆகியவற்றை வகுப்றையில் முழுமையாக ஆசிரியர் பிரயோகிக்க வேண்டும். சிறப்பான பின்னூட்டல்கள் நல்ல நோக்கமுள்ள விமர்சனங்கள் மாணவர்களின் பொருத்தமற்ற நடத்தைளை மாற்றும் இதற்கு ஆசிரியர்கள்

பெற்றோருடன் பொருத்தமமான உயிர்த்துடிப்பான உறவைப் பேணவேண்டும்.

★ வீட்டுத் தரிசிப்பு, வீட்டுக் குறிப்பு அனுப்புதல்

★ குடும்பத்தின் நன்மை தீமைகளில் பங்கு கொள்ளல்

★ பெற்றோர் பிள்ளைகள் வளர்ப்பில் கவனிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பான கலந்துரை யாடல்களை மேற்கொள்ளல்

★ பெற்றோருடன் சேர்ந்து சில பாடங்களை கள வேலைகளைத் திட்டமிடல், கற்பித்தலில் பெற் றோரின் உதவி பெறல் மாணவர்களின் விடுப்பு, வெறுப்புத் தொடர்பாகப் பெற்றோருடன் கலந் துரையாடல்.

என்ற வகையில் ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்தியைத் தீரமானிக்கும் உன்னதமான வகுப்பறைகள் மிகவும் முக்கியமானவை. இதில் ஆசிரியரிகளின் பங்கே முதன்மையானது. இப்பங்கை வலுவூட்டுபவர்களாக பாடசாலை அதிபர், கல்விப்பணிப்பாளர்கள், பெற்றோர்கள் சமூகத்தவர்கள் அரசாங்கம் திகழவேண்டும்.

## ஆலயங்களில் புதைந்துள்ள அறிவியல் உண்மைகள்

1. இந்தியாவில் லட்சக்கணக்கான கோவில்கள் உண்டு. ஆனால் அவையனைத்தும் வேத வழியில் கட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.
2. கோவில்கள் எங்கு பூமியின் காந்த அலை அடர்த்தியாக ஓடுகிறதோ அங்கு கட்டப்படவேண்டும். அது கிராமமாகவோ, நகரமாகவோ, மலை மீதோ எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். பூமியின் வட தென் துருவ காந்த அலை எங்கு அதிகமாக உள்ளதோ அங்குகட்டப்பட வேண்டும்.
3. முக்கியமான கடவுள் இருக்குமிடமான கர்ப்பகிரகம் (அ) மூலஸ்தானத்தில் இந்த அலைஅதிகமாக இருக்கும். சரியாகச் சொல்வதெனில் இந்த மூலஸ்தானத்தில் சிலை இடம்பெற்ற பிறகே கோவிலின் அமைப்பு கட்டப்படும். இந்த இடத்தில் தாமிரத் தகடுகள் வேதவரிகளைச் செதுக்கி புதைக்கப்படும்.
4. இவ்வாறு ஏன் செய்கிறார்கள் என்றால் காந்த அலைகளை அது சுற்றிலும் பரப்பவே. எனவே ஒருவர் தொடர்ந்து கோவிலுக்கு சென்று சிலையை வலப்புறமாக சுற்றி வந்தால் அவர் பூமியின் காந்த ஆற்றலைப் பெறுவார். அவரின் உடல் அந்த ஆற்றலை கிரகித்துக்கொள்ளும். இவ்வாற்றல் அவர் நலமுடன் வாழ வழி வகுக்கும். இது அறிவியல் பூர்வமான உண்மை.
5. மேலும் கர்ப்பக்கிரகம் மூன்று திசையிலும் மூடப்பட்டுள்ளதால் ஆற்றலை அதிகப்படுத்தும். மூலஸ்தானத்திலிருக்கும் விளக்கும் வெப்ப ஆற்றலை வெளிப்படுத்தும். மணியோசை பக்தர்களின் மனதினை அலைபாய விடாமல் ஒன்றியிருக்கச் செய்யும். இது மன அழுத்தினைக் குறைக்கும்.
6. மேலும் மணம் வீசும் மலர்கள் ஒருவிதமான நல்ல ஆராவை (Aura – ஒருவரைச் சுற்றியுள்ள மனித காந்த சக்தி) வெளிப்படுத்தும். கடவுளின் சிலைகளை கற்பூரம், துளசிமற்றும் பிற பொருள்களைச் சேர்த்து கழுவி அந்த நீரை தீர்த்தமாகத்தருவார்கள். அதில்மிக அதிகமான காந்த சக்தியுள்ளது.
7. அத்தீர்த்தத்தினை தாமிரப் பாத்திரத்திலிட்டுத்தருவார்கள். இது பற்சொத்தை மற்றும் சளி, இருமல் மற்றும் வாய் துர்நாற்றத்தினைப்போக்கவல்லது. இதன் மூலம் நமது முன்னோர்கள் பல நோய்களைக் குணப்படுத்தியுள்ளார்கள்
8. மேலும் தீபாரதனை காட்டும் போது மிக அதிகமான சக்தி வெளிப்படும் எனவேதான் ஆண்களை சட்டையில்லாமலும் பெண்களை அதிக அணிகலன்களோடும் கோவிலுக்குவரச் சொன்னார்கள்

# அனுபவ வழிக்கற்றல்
# (Learning from experience)

கலாநிதி த. கலாமணி

**கற்றல் என்றால் என்ன?**

கற்றல் என்பது மனித நடத்தையில் ஏற்படும் ஓப்பீட்டளவில் நிரந்தரமான மாற்றமாகும் என்பதே பொதுவாக மரபார்ந்த ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணமாகும். ஆனால் இது நடத்தை வாதிகளால் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணமே. உண்மையில் வெவ்றே உளவியல் சிந்தனா கூடங்களுக்கேற்ப கற்றல் என்பதற்கான வரைவிலக்கணமும் விளக்கமும் வேறுபடும். அறிகைவாத மானது கற்றலை ஓர் உள்ளார்ந்த உளச் செயற்பாடாகக் காண்கிறது. மானுடப்பண்புவாத மனிதரின் வலுவைப் பூர்த்தி செய்வதற்காக தனியாள்சார் செயற்பாடாக கற்றலை விளக்கமுற்படுகின்றது. ஆனால் சமூக அறிகை வாதமானது ஒரு சமூகச் சூழமைவில் பிறருடனான இடைவினையும் பிறரைப்பற்றிய உற்றுநோக்கலுமே கற்றல் ஆகும் என வரைவிலக்கணம் கூறுகின்றது. மொத்தத்தில் கற்றல் என்பது ஒரு செயன்முறையும் (Process) விளைவு (Product) ஆகும்.

கற்றல் செயன்முறையானது கற்றல் நிகழும்போது யாது நிகழ்கின்றது என்பதில் கவனத்தைக் குவிக்கின்றது. அதேவேளை கற்றல் செயன்முறைக்கான விளக்கங்கள் கற்றல் கொள்கைகள் எனப்படுகின்றன. வெவ்வேறு உளவியல் சிந்தனாகூடங்களுக்கேற்ப இந்த விளக்கங் களும் வியாக்கியானங்களும் வேறுபடலாம். என்பதால் கற்றல் கொள்கைகளும் வேறுபடுகின்றன.

- அறிதலுக்கான தேவை
- கற்போனின் சுய எண்ணக்கரு
- அனுபவத்தின் வகிபாகம்
- கற்பதற்கான தயார் நிலை
- கற்றலுக்கான திசைப்படுத்தல்
- ஊக்கல்

இந்த எடுகோள் குழந்தைகளின் கற்றலுக்கும் வளந் தோரின் கற்றலுக்கும் வெவ்வேறானவை ஆகும்

நீண்ட காலமாக குழந்தைகளின் கற்றலுக்கான கொள்கைகளைத்தான் வளந்தோருக்கான கற்றல் கொள்கைகளாகவும் பயன்படுத்தி வந்துள்ளோம் இவ்வகையில் Pedagogy என்ற ஆங்கிலப்பதம் பயன்படுத்தப் பட்டது. உண்மையில் இப்பதமானது குழந்தை என்பதைக் குறிக்கும் paid என்ற பதத்தினதும் வழிநடத்தல் என்பதைக் குறிக்கும் யபழபரள என்ற பதத்தினதும் சேர்க்கை ஆகும். அதாவது, பிள்ளைக்குக் கற்பிக்கின்ற ஒரு கலையும் விஞ்ஞானமுமே pedagogy என்பதாகும். அதேவேளை வளந்தோரின் தனித்துவமான இயல்புகள் பற்றி ஆய்வுகளிலிருந்து வளர்ந்தோர் கற்றலை விபரிப்பதற்கான anorogogy என்ற பதத்தை உருவாக்கிக் கொண்டனர். முனிதனைக் குறிக்கின் wandr என்ற பதத்தினதும் agogus என்ற பதத்தினதும் சேர்க்கையாக அமையும் andragogy வளர்ந்தோர் கற்றுக் கொள்வதற்கு உதவுகின்ற ஒரு கலையும் விஞ்ஞானமும் ஆகும்.

குழந்தைகளுக்கும் வளர்ந்தோர்களுக்குமான கற்றல் கொள்கைகளின் உருவாக்கத்திற்கான எடுகோள்கள் வெவ்வேறானவை என்ற வகையில் Pedagogy இலிருந்து யனெசயபழபல வேறுபட்டு நிற்பதை அறிந்து கொள்ள முடியும். குழந்தைக் கல்விக்கான மாதிரிகையிலே கற்போனின் அனுபவம் கற்றலுக்கான ஒரு வளமாக அவ்வளவு தூரம் கொள்ளப்படுவதில்லை. ஏனெனில் ஆசிரியரின் அனுபவம், பாடநூல் ஆசிரியரின் அனுபவம், கட்புல செவிப்புல சாதனங்களை உருவாக்குபவரின் அனுவபம் ஆகியனவே முக்கியமான அனுபவங்களாகும். எனவே கடத்தப்படும் நுட்பங்களே (transmitted techniques) கற்போனின் அனுபவங்களாகக் கொள்ளப்படுகின்றன. அதாவது குழந்தைகளுக்கான கற்றல் அனுபவங் களானவை பாடப் பொருள்சார்ந்த உள்ளடக்கத்தின் தர்க்க அடிப்படையிலும் ஒழுங்கிலும் வழங்கப்படல் வேண்டும்.

**அனுபவம்சார் கற்றல்**

1960களில், வளர்ந்தோருக்கான ஐரோப்பிய கல்வியி யலாளர்கள் யனசயபழபல என்ற பதத்தை உருவாக்கின ராயினும், நவீன வளந்தோர் கற்றலுக்கான கொள்கையின் ஆரம்ப கர்த்தாவாக மல்கம் நவுல்ஸ் (Malcolm Knowles) என்பவரே கொள்ளப்படுகின்றார். அவரின் கொள்கையின் பிரதான கோள்பாடுகளானவை பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியவை.

குழந்தை நிலையில் பிறரில் தங்கியிருக்கும் நிலை போல அல்லாமல் தம்மைத்தாமே திசைப்படுத்தி, தமது சொந்த வாழ்விற்காக தாம் மேற்கொள்ளும் தீர்மானங்

களுக்குத் தாமே பொறுப்பாளர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளும் வகையில் வளந்தோரின் சுய எண்ணக்கரு விருத்தியடைந்திருக்கும்.

அனுபவங்களின் திரட்டாக அமையும் அனுபவத் தோட்டமொன்றை ஒவ்வொருவரும் கொண்டுள்ளனர் இது அதிகரித்துக் கொண்டே செல்வதோடு, கற்றலுக்கான வளமாகவும் அமைகின்றது.

தொழில் செய்யும் இடத்திலும் வாழிடச் சூழலிலும் பெற்றோர் என்றவகையில் அமையும் ஒருவரின் சமூக வகிபங்குகளுடன் கற்றலுக்கான தயார்நிலை இணைந் துள்ளது.

கற்றலுக்கான திசைப்படுத்தலில் பாடமையம் குறைந்து செல்வதோடு பிரச்சினை மையம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

வளந்தோரைப் பொறுத்தவரை உள்ளார்ந்த ஊக்கலே முதன்மையானது இக்கோட்பாடுகளுள் மிகவும் முக்கியமானது, வளர்ந்தோர் செழிப்பான அனுபவங் களினதும் அறிவினதும் களஞ்சியமொன்றை ஏற்கனவே கொண்டிருப்பார்கள் என்பது தான். இந்த அனுபவங்கள் மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டு, புதிய கற்றலுக்கான அடுக்குகளாக பயன்படுத்தப்படுகின்றன.

வளர்ந்தோர் கற்றலில் அனுபவத்தின் வகிபாகம் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றது. குழந்தைகளைவிட வளர்ந்தோர் நிலையில் தனியாள் வேறுபாடுகள் அதிகம் காணப்படுகின்றன. இந்நிலையில் அனுபவம்சார் நுட்பங் களை வளர்ந்தோர் கல்வியில் அதிகம் பயன்படுத்த வேண்டியுள்ளது. வளர்ந்தோரிடையே அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள குழுக்கலந்துரையாடல், பிரச்சினை தீர்த்தல், தனியாள் ஆய்வு, ஆய்வுகூட முறைகள் போன்றவற்றை வளர்ந்தோர் கல்வியில் பயன்படுத்த வேண்டும். இதனூடாக சகபாடிக் கற்றலை (Peer Learning) ஊக்குவிக்கமுடியும்.

ஒவ்வொருவரிடத்தும் அனுபவத் தேட்டம் உள்ள போதும் அதன் காரணமாக கற்றல் நிச்சயமாக நிகழும் எனக் கூறமுடியாது. அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளவேண்டுமெனில் இந்த அனுபவங்களை கொள்கையோடு தொடர்புபடுத்துவதோடு அடுத்துவரும் ஒரு சந்தர்ப்பத்தில் எவ்வாறு மேலும் சிறப்பாகக் கற்றுக் கொள்ளலாம் என்பது குறித்த திட்டமிடலையும் மேற்கொள்ள வேண்டும். இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதோடு மீண்டும் மீண்டும் சிந்தனைத் தெறிப்புச் செயலை தொடரவேண்டும். இவ்வாறான வட்டச் செயன்முறையானது "அனுபவம் சார் கற்றல் வட்டம்" (Experiential Learning cycle) என அழைக்கப்படுகின்றது.

"அனுபவம் சார் கற்றல் வட்டம்" என்ற எண்ணக் கருவானது ஏற்கனவே பிரேரிக்கப்பட்டதெனினும் அது டேவிட் கொல்ப் (David Kolf) என்பவராலேயே நன்கு விருத்தி செய்யப்பட்டது. அனுபவம் சார் கற்றல் என்பதனை டூயி அவர்கள் பின்வருமாறு விளக்கிக் கூறியுள்ளார்.

"ஒரு செயலில் ஈடுபட்டுள்ள ஒருவர் அதனை மீள் நோக்குச் செய்து அல்லது பின் திரும்பி நோக்கி, அதனை மதிப்பீடு செய்து, அதிலே பயனுள்ளது எது அல்லது ஞாபகப்படுத்தவேண்டியது எது என்பதைத் தீர்மானித்து, இத்தகவலை வேறொரு செயல் நடவடிக்கையை ஆற்றுவதற்குப் பயன்படுத்தும் போது அனுபவம்சார் கற்றல் அல்லது அனுபவ வழிக் கற்றல் இடம்பெறுவதாகச் சொல்லப்படும்".

டேவிற் கொல்ப் விருத்தி செய்த அனுபவம்சார் கற்றல் வட்டமானது பின்வருமாறு அமையும். அனுபவம்சார் கற்றல் மாதிரிகையானது பல்வேறு திறந்த வினாக்களுக்கு விடைகாண்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்கி, ஒரு தனிச் செயல் நடவடிக்கையில் அல்லது குறுந்தொடர செயல் நடிவக்கையொன்றில் பல்வேறு திறன்களை ஒன்றிணைத்துச் செல்கின்றது இத்திறன்களுடன் வாழ்க் கைத்திறன்கள், செயல்திட்டத்திறன்கள், உள்ளடக்கம்சார் திறன்கள், விஞ்ஞான செயன்முறைத் திறன்கள், பிரயோகத் திறன்கள், தலைமைத்துவத் திறன்கள், சேவைக் கற்றல் திறன்கள் போன்றவை உள்ளடங்கும்.

**அனுபவவழிக் கற்றல் பற்றிய சில முன்மொழிவுகள்**

கற்றலினது அடித்தளமும் கற்றலுக்கான தூண்டியும் அனுபவமே ஆகும்.

கற்போர் தமது அனுபவங்களைச் செயலூக்கத்துடன் கட்டியெழுப்புகின்றனர். கற்றல் என்பது சமூகரீதியாகவும் கலாசார ரீதியாகவும் கட்டியெழுப்பப்படுவதாகும்.

கற்றல் என்பது ஒரு முழுமையான செயன்முறை யாகும்.

கற்றலானது அது இடம்பெறும் சமூக மனவெழுச்சிச் சூழமைவின் செவாக்குக்கு உட்பட்டதாகும்.

இதுவரை கூறியவற்றைச் சுருக்கமாக நோக்குமிடத்து, அனுபவ வழிக்கற்றல் அல்லது அனுபவம்சார் கற்றல் என்பதன் அடிப்படை அனுபவத்தை பரிசீலிப்பதன்மூலம் கற்றலைக் கட்டியெழுப்பலாம் என்பதாகும். வளர்ந்தோர் கல்விக்கான கல்வியாளர்கள் சிலர், கற்போர் தமது அவ்வனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்ளவும் ஊக்கமளிக்கும்வகையில் பல்வேறு கற்றல் - கற்பித்தல் நுட்பங்களின் வடிவங்களைப் பயன்படுத்தி அனுபவங் களைப் பெறுவதற்கான பயிற்சிகளை வழங்கி, அப் பயிற்சிகளை மீள்நோக்குவதன் மூலம் மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுக்கின்றார்கள்.

# பாத்தொன்பதாம் நூற்றாண்டு காலத் தமிழ் நாட்டில் தேவரடியார் சமூக மறுமலர்ச்சியில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியாரின் பங்கு

திருமதி. மேகலா சிவகுமாரன்
ஆசிரியர், மட்/வாகரை மகா வித்தியாலயம், வாகரை

**அறிமுகம்**

சீர்திருத்த சிந்தனைகள் சுடர்விட்டெழுந்த பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டு கால இந்திய சமுதாயத்திலே தேவதாசிகளது சமூக அந்தஸ்தானது படித்தவர்களாலும் ஏனைய சமயத்தவர்களாலும் விமர்சிக்கப்பட்ட பொழுது குறித்த சமூகத்தைப்பற்றிச் சிந்தித்துச் செயல்பட்டவரே முத்துலெட்சுமி ரெட்டியாராவார். இவர் இந்தியாவின் முதற்பெண் மருத்துவரும் சட்டமன்றத் தலைமைப் பொறுப்பினை ஏற்ற முதற்பெண்மணியுமாவார்.

**தேவரடியார் முறைமை**

தேவரடியார்களின் பிறப்புப் பற்றிய ஐதீகங்களை நோக்குமிடத்து, திருக்கோகர்ணம் இராமசுவாமி நட்டுவனார் எழுதிய பதினேழாம் நூற்றாண்டிற்குரிய உருத்திரகணிகா கௌத்துவம் எனும் நூல் சிவனின் திருவருட்பார்வையினால் தாருகாவனத்து ரிஷிபத்தினிகள் கருவுற்று அதனாற் பிறந்து கைவிடப்பட்ட குழந்தைகள் என்றும் அந்தக் குழந்தைகளுக்கு திருநந்திதேவர் நாட்டியத்தைக் கற்பித்து பஞ்சாட்சரமந்திரத்தைக் காதிலோதி அவர்களை உருத்திர கணிகைகளாக்கி நித்தியசுமங்கலிகளாக வாழவைத்தார் என்று இவர்களது பிறப்பிற்குத் தெய்வீகத்தன்மை கற்பித்து நிற்கின்றன.

மரபுவழி வருகின்ற பிறிதொரு ஐதீகமானது, ஊர்வசி நடனமாடுகின்றபோது ஜயந்தனின் மீது பார்வைபட்டு நாட்டியத்தில் தாளம தப்பியதால் அகத்தியரின் சாபத்தினால் பூலோகத்தில் பிறந்து, அவள் வழிவந்த சந்ததியினரே உருத்திரகணிகைகள் என்று தேவலோகத் தன்மை புகட்டுகின்றது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மாதவியை வானவன் மகள் என்று குறிப்பிடமிடத்து தேவலோகத்தவள் என்னும் அர்த்தம் தொனிக்கிறது.

சிவனது சக்திகளிடமிருந்து தோன்றியவர்கள் என்னும் மற்றுமோர் மரபுமுண்டு. அதாவது இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானாசக்தி எனும் சிவசக்திகள் மூவரின் நூபுரச் சத்தத்திலிருந்து தோன்றியவர்கள் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு தேவதாசிகளின் பிறப்புப் பற்றி பல ஐதீகங்கள் நிலவுகின்றன.

தேவரடியார் நன்கு கணிக்கப்படுபவள் என்பதால் கணிகை என்றும் நன்கு ஆடைகளை அணிந்து பல பாத்திரமேற்று நடிப்பவள் என்பதால் வேஷ்யா என்றும் பல பெயர்கள் கொண்டு சுட்டப்படுகின்றனர். சாசனங்களும் இலக்கியங்களும் உருத்திரகணிகையருக்குக் கற்பிக்கும் பெயர்களின் அர்த்தங்கள் மேல்வருமாறு

தத்தை – கோயிலுக்காகத் தன்னைத் தானே அர்ப் பணித்தவள்.

விகிர்தை – தன்னைத்தானே விற்றுக் கொண்டவள்.

பெத்தை – அதீத பற்றினால் கோயிலில் சேர்ந்து ஆடுபவள்.

உத்ருதை – யாராலோ கட்டாயப்படுத்தப்பட்டு அல்லது ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்டு கோயிலுக்கு உரிமையாக்கப்பட்டவள்.

உத்ருதை – மாதவி போன்று மன்னனால்அல்லது அதிகாரியால் அவளின் தகுதி கருதி தேர்ந்தெடுக்கப் பட்டவள்.

உருத்திரகணிகை – கோயில் நிபந்தம் அல்லது ஊதியம் பெற்று நடனமாடுபவள் எனப்பலவாறு நாட்டில் வழங்கி வருகின்ற பெயர்களுக்கு அர்த்தம் கண்டுள்ளனர்

ஆகமங்கள் முதல் இலக்கியங்கள் வரை தேவதாசிகளைப்பற்றியும் பரத்தையரைப்பற்றியும் நிறையவே பேசியுள்ளன. அந்தவகையில் ரௌரவாகமக் கருத்துப்படி தேவதாசியானவள் தூய்மை, அழகு, சாந்தம், இளமை, பேராசையற்றதன்மை என்பவற்றோடு சாமுத்திரிகாலட்சணம் பொருந்தியவளாகவும் வேத அத்தியாயனம் தெரிந்தவளாகவும் இருக்க வேண்டும். இங்கு நாட்டியக்காரி என்று மட்டும் வரையறுக்கப்படாமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்துசமயம் கூறுகின்ற தேவரடியாரும் இந்திய சமூகம் சுட்டுகின்ற பரத்தையரும் ஒருவரா, இருவேறானவரா என்று நிலவும் ஐயப்பாட்டினை எமது இலக்கியங்கள் வாயிலாக எடுத்து நோக்குவோமாயின் பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பாக அகத்துறை இலக்கியங்கள் பரத்தமை பற்றிக் குறிப்பிடுகையில் இற்பரத்தை, சேரிப்பரத்தை என இருவகைப்படுத்தி இயம்புகின்றன. பட்டினப்பாலை 'கொண்டிமகளிர்' கோயில் விளக்கேற்றியமை பற்றியும் திருக்குறள் வரைவின் மகளிர் பற்றியும் பேசுகின்றமை சுட்டுதற்குரியவை.

ஆடுவோரதும் பாடுவோரதும் வினைத்திறனைக் கூத்தராற்றுப்படையும் பொருநராற்றுப்படையும் கூறத் தொல்காப்பியம் வள்ளிக் கூத்து, களநிலைக்கூத்துப் பற்றியும் குறிப்பிடுகின்றது. மேலும் துடியிசைக்க திருப்பரங்குன்றிலாடிய ஆடல்மகளிர் பற்றி

*"துடியின் அடியெடுத்து தோழசைத்து தூக்கி*
*அடுநரா மகிழ்தட்ப ஆடுவாள்"* எனப் பரிபாடல் கூறுகின்றது.

சிலப்பதிகாரம் வேத்தியல், பொதுவியல் எனும் இருவகை நடனங்களையும் அறிமுகம் செய்கின்றது. வேத்தியலில் ஆடிய பெண்களை இராஜநர்த்தகி என்பதும் அவற்றிலே இசைபாடியவர்களை ஆஸ்தானவிதூஷி என்பதும் மரபு. இருவகை நடனத்தையும் ஒருவகை நடனமாதரே ஆடினர் என்பதற்கு மாதவி தக்க சான்று பகர்கிறாள். இந்நடனமரபுகள் போன்று நடனமாதருள் ராஜதாசி, தேவதாசி எனும் பிரிவு காணப்பட்டது. ராஜதாசி அரசசபையிலும் தேவதாசி ஆயத்திலும் நடனமாடினாள். பல்லவர் காலம் முதல் நாயக்கர் காலம் வரை இருவையினரும் கலப்புறாமல் தனித்தனி வழக்கங்கள், வழிமுறைகளுடன் கலைவளர்த்து வந்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஒரு பெண் 'பொட்டுக்கட்டுதல்', 'நித்தியசுமங்கலி சடங்கு' போன்ற சடங்குகளின் மூலம் தேவதாசியாகிறாள். கோயிலின் நாட்டியப் பெண்ணாகவும் தெய்வத்தின் முன்னால் இசைப்பாடல்களை இசைப்பவர்களாகவும் பூசைக்குத் தேவையான பணிகளைச் செய்பவளாகவும் இருந்துள்ளாள். பொட்டுக்கட்டுதல் என்பது ஒரு பெண்ணின் பத்து, பதினொரு வயதுகளில் செய்யப்பட்டது. அதாவது பூப்படைய முன்னர் செய்யப்படுவது சாஸ்திரமாக இருந்துள்ளது. ஒரு பெண் சாஸ்திரப்படி கன்னியாய் இருக்கவேண்டுமென்பதால் 14வயதுக்குள் இச்சடங்கு செய்வது வழக்கமாக இருந்தது.

தேவரடியாராவதற்கு 'சலங்கைப் பூசை' மற்றும் 'பொட்டுக்கட்டுதல்' முதலிய சம்பிரதாயங்கள் கைக் கொள்ளப்பட்டன. சலங்கைப் பூசை ஏழு வயதளவில் இடம்பெறும். இதற்காக நாள் குறிக்கப்பட்டு, பிரமுகர்கள் வரவழைக்கப்பட்டு விமரிசையாக இந்நிகழ்வு இடம்பெறும். ஆறுமரக்கால் நெல்லைக் கீழே பரப்பி நட்டுவனார் மந்திரம் சொல்ல அலங்கரிக்கப்பட்ட சிறுமியை நெல்லின் நடுவே நிறுத்தி உலக்கையை நட்டுவனாருடன் சேர்ந்து சிறுமியும் பிடித்துக்கொள்ள வேண்டும். அச்சிறுமியின் காலைப்பிடித்து நட்டுவனார் 'தை…தை…' என்று தரையில் தட்டுவார். இதுவே முதற்சம்பிரதாயச் சடங்காகும். இதனை 'கெஜ்ஜ பூஜா' என்றும் அழைப்பர். தேவரடியார் ஆவதற்குரிய முக்கிய நிகழ்வாக இடம்பெறும் சடங்கு பொட்டுக்கட்டுதலாகும். ஒரு பெண் முறைப்படி ஒரு கோயிலின் வாளுக்கோ, தெய்வத்திற்கோ திருமணம் செய்யப்படுவாள். அவள் கழுத்தில் அவள் சாதியைச் சேர்ந்த ஆண்மகன் ஒருவன் தாலிகட்டவான். இதுவே பொட்டுக்கட்டுதலாகும். கன்னட நாட்டிலே ஆண்பிள்ளை இல்லாத குடும்பத்தினர் தம் பெண்பிள்ளைகளுள் ஒருத்தியை கோயிலுக்கு அழைத்துச்சென்று கழுத்தில் தாலியும் கால்விரலில் மெட்டியும் அணிவித்துத் தெய்வத் திற்கு மணமுடித்துத் தம்பிள்ளையைப் பாசவியாக்கும் மரபு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**தேவதாசிகளது சமூக அந்தஸ்த்து.**

பல்லவர் காலம் முதல் தேவரடியார் சமுதாயத்தின் நன்மதிப்பைப் பெற்று விளங்கினர். உற்சவமூர்த்தி வீதியுலா முடித்து மீள இருப்பிடம் திரும்புமிடத்து கும்பஆராத்தி எனப்படும் புனிதவிளக்கை ஏந்திச் செல்வது, வெண்சாமரம் வீசுவது, கண்ணூறு கழித்தல் ஆகிய திருப்பணிகள் உருத்திரகணிகையராலே நிகழ்த்தப்பட்டன.

சமுதாய விழாக்களிலும் தேவதாசிகள் முதன்மைப் படுத்தப்பட்டனர். குறிப்பாக புதிய மன்னர்கள் முடிசூடுகின்ற போது தேவதாசி வீட்டுப்படிக்கட்டு மண்ணை எடுத்து மன்னனின் இடுப்பில் பூசி அவனைப் புனிதப்படுத்த வேண்டும் என்பது பௌராணிகமரபு. மேலும் பல்லவர் பாண்டியர் காலத்திற்குரிய தமிழ் நாட்டுக் கல்வெட்டு – தேவதாசி ஒருத்தியை மன்னனை முடிசூடும் பெருமாள் என அடைமொழியிட்டுச் சுட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

அன்றைய சமூகத்திலே தேவதாசியானவள் மங்களகர மானவளாகக் கருதப்பட்டு முதன்மைப்படுத்தப்பட்டாள். தேவதாசிகளிடம் திருமணத்திற்கான தாலியை அனுப்பி வைப்பர். அவர் அதற்கான பாசிமணிகளைச் சேர்ப்பதோடு தன் தாலியிலிருந்தும் சில மணிகளை எடுத்து அதனோடு சேர்ப்பாள். திருமண ஊர்வலத்தின் போது எல்லோருக்கும் முன்னே நடந்து செல்லும் சிறப்பு இவர்களுக்குரியதே. ஏனெனில் என்றும் கைம்மைப் பேறடையாத தாலிக்கு கெட்ட சகுணங்களால் ஏற்படும் தீமையினை மாற்றும் ஆற்றலுண்டு என நம்பப்படுகின்றது.

தேவதாசிகளும் சமூகத்தில் பெற்றிருந்த நன்மதிப்பிற்கு நாயன்மார் பாடல்களும் வரலாறுகளும் கூட சான்றுபகர்கின்றன. அப்பர் 'உரிமையில் தொழுவர் உருத்திரபல்கணத்தார்….' என்று குறிக்க, சம்பந்தர் '….வலம்வந்த மடவார்கள் நடமாட..' என்று பாடியுள்ளனர். இவ்வாறு அன்றைய சமுதாயம் திகழ்ந்துள்ளது. தூய்மையான வாழ்க்கை நெறியுடைய இவர்கள் மனம் விரும்பிய பக்தர்களை மணம் புரிந்து கொள்ளலாம். இவர்கள் வாழ்வியலில் ஈடுபட்டு வாழ்ந்தமைக்கு சுந்தரர் பரவையார் திருமணம் சிறந்த எடுத்துக்காட்டாகும். பெரியபுராணம் பரவையாரை

*"கதிர்மணி பிறந்ததென்ன உருத்திரகணிகையராம்*
*பதியிலார் குலத்தில் தோன்றிய பரவையார்…."*

எனச் சிறப்பிக்கின்றது.

மேலும் தேவரடியார்கள் பலர் கலைத்தேர்ச்சியல் மட்டுமின்றி கல்வி அறிவிலும் நற்பண்பிலும் சிறந்தவர் களாக விளங்கினர். கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு தனது இராமாயணத்தைத் திருவரங்கத்திலே அரங்கேற்றச் சென்ற போது கோயில் அதிகாரிகள் அவரிடம் மூன்று

பேரறிஞர்களிடமிருந்து சாற்றுகவி பெற்றுத் வருமாறு கூறினர். அவர்களுள் தேவரடியார் அஞ்சனாட்சியும் ஒருவராவார். தேவதாசிகள் சங்கத்தின் செயலாளராக இருந்த நாகரத்தினம்மா சமஸ்கிருத மகாநாட்டிற்கு தலைமை தாங்கினார். இவர்களோடு சிருங்கேசி சங்கரமடத்தைச் சேர்ந்த மடாதிபதியினால் உத்தரயஜ்ஞோபவீதம் என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்ற பெங்களூர் கமலா போன்ற பலர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்கள்.

சிவன் கோயில் ரிஷபத்தளியிலார் என்றும் பெருமாள் கோயில் ஸ்ரீ வைணவமாணிக்கம் என்றும் போற்றப்பட்ட தேவரடியார் ஒருவர் வயதுமுதிர்ந்து தன் கடமையினை நிறைவேற்ற முடியாதவளாகுமிடத்து அவள் தோடுகளைக் களற்ற கோயிலதிகாரிகளிடம் அனுமதி பெற்று அரச மாளிகையில் சடங்கு பூர்வமாகத் தோடுகளைக் களற்றி வைத்துவிட்டு திரும்பிபாராமல் சென்று தாய்க்கிழவியாக ஓய்வுற்றுவாழ்வாழ். அத்தோடு அவள் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதோடு ஊதியமும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தேவதாசிகளுக்கு வழங்கப்படுகின்ற இறுதி மரியாதையினூடாகவும் அவர்களது சமூக அந்தஸ்தைக் கண்டுகொள்ளமுடியும்.அதாவது மூலமூர்த்தியின் ஆடை கொண்டுவரப்பட்டு அவருடைய உடலின் மீது போர்த்தப்பட்டு உடல் தகனம் செய்யும் வரை பூசை இடம் பெறாததுடன் அவளது உடல் தாங்கிய வண்டி கோபுரவாசலின் முன் இரண்டு நிமிடங்கள் நின்று செல்லும் அத்தோடு உடலை எரியுட்ட எடுக்கப்படும் நெருப்பு கோயில் நெருப்பில் இருந்தே எடுக்கப்பட்டது என்பது அவர்களது சமூக அந்தஸ்தயே அடையாளப் படுத்துகின்றது.

தமிழகத்தை ஆட்சி செய்த விஜயநகரரும் மராட்டியரும் வேறு மாநிலத்தாத்தவர்களாயினும் கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு கலை வளர்தவர்கள் என்பது தெளிவு. எனினும் தொடர்ச்சியாக இடம்பெற்ற பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளின் வாயிலாகவும் காலப்போக்கில் தேவதாசி மரபானது நெறியற்ற வழியிற்செல்லலானது.

இஸ்லாமியரின் படையெடுப்பின்போது ஆலையங்கள் சூறையாடப்பட்டதோடு, மேலைத்தேசவர் காலத்தில் அவற்றுள் பல இடித்தழிக்கப்பட்டன. இந்நிலையில் ஆலையங்களை நம்பியிருந்த தேவரடியார்களின் நிலைமை கவனிப்பாரற்றுப்போயின இதற்குமுன்னர் சொத்துடமையோடும் செல்வச் செழிப்போடும் வாழ்ந்த தேவதாசிகள் ஆலயங்களைக்கட்டி மானியங்களை வழங்கியமைக்குச் சாசனங்கள் பல சான்றுபகர்கின்றன. இவ்வாறு செல்வச்செழிப்போடும் கலைத்தூய்யோடும் விளங்கிய இவர்கள் அந்நியராட்சியின் போது தமது வருவாய்களை இழந்ததோடு தம் வாழ்வாதாரத்திற்காக இராஜதாசி சமூகத்திற்கு உள்வாங்கப்பட்டனர். தெய்வத்திற்கு மனைவியாக அந்தஸ்த்து பெற்றிருந்த இவர்களின் வாழ்க்கை முறை நாளடைவில் பல மாற்றங்களுக்கு உள்ளாகி அவலநிலையை அடைந்தது. இத்தகைய வாழ்கை முறை முத்துலெட்சுமி ரெட்டியார் காலம் வரை தொடர்ந்தது.

**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியார்**

நாராயணசாமி சந்திரம்மாள் தம்பதியினருக்கு 30.07.1886 இல் மூத்த மகளாக பிறந்தார். நுண்ணறிவிலும், நினைவாற்றலிலும் சிறந்து விளங்கிய இவர் தந்தையின் தட்டிக்கொடுப்போடு மெற்றிக்குலேசன் தேர்வில் வெற்றி பெற்று மருத்துவக் கல்வியைத் தொடர்ந்து 1912இல் இந்தியாவிலேயே மருத்துவப்பட்டம் பெற்ற முதற் பெண்மணியானார்.

மேலைத்தேயச் சிந்தனைகள் வரைவேற்பைப் பெற்ற காலகட்டத்தில் இந்திய சமூகம் தேவதாசி முறை, பால்யவிவாகம், விதவை மறுமண எதிர்ப்பு எனும் அவலங்களால் பிணைப்புண்டு கிடந்தது. இச்சூழ்நிலை களைக் கண்டு வீறுகொண்டெழுந்தார். யதார்த்த வாழ்வில் பெண்ணியத்தை நடைமுறைப்படுத்தியவராக இருந்த முத்துலெட்சுமி அம்மையார் திருமணம் என்பது "பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்துவதற்கான சடங்கு என்றும், ஆணுக்கு பெண் அடிமையாகக்கூடாது ஒரு பெண் திருமணம் செய்துகொள்கின்றாள் என்றால் அவள் தன்னை ஜெயிக்க விட்டுவிட்டாள்" எனும் இறுக்கமான அர்த்தத்தைக் கொண்டிருந்தார். எனினும் பெற்றோரின் தூண்டுதலால் டாக்டர் சுந்தரரெட்டியைத் திருமணம் செய்து சிறப்பாக இல்லறத்தை மேற்கொண்டார்.

அக்கால சமூகத்தில் பல்வேறு இன்னல்கள் நிறைந்த வாழ்கையில் சிக்கித் தவிர்த்த தேவதாசிகளைக் கண்டு இம்முறைக்கெதிராகக் கிளர்ந்தொழுந்தார். இந்தியாவில் சட்டமன்ற தலைமைப் பெறுப்பையேற்ற முதற்பெண் மணியான இவர் தேவதாசி ஒழிப்பு முறைக்கான சட்டவரைபு ஒன்றினை 1929ஆம் ஆண்டு தாக்கல் செய்தார். இது பலத்த விவாதங்களுக்கு இடையில் நிறைவேறியது.

தேவதாசி முறை வென்லொக் முதல் இந்திய கவர் மென்டினாலும் மறுக்கப்பட்டமையினால் அம்மையாரால் முன்வைக்கப்பட்ட மசோதாவில் கவர்மென்மும் சிரத்தை காட்டியது. ஆயினும் மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டவிடத்து பழமைவாதிகளினால் விவாதங்கள் கிளப்பிவிடப்பட்டமையால் பலமுறை மசோதா தோற் கடிக்கப்பட்டது. தேவதாசி மசோதா குறித்து காங்கிரஸ் தலைவர் சத்திய மூர்த்தி பேசுமிடத்து 'தாசிகுலம் தோன்றியது நம்முடைய காலத்திலல்ல, நாமும் அக்குலத்தை தோற்றுவிக்கவில்லை என்றும் கூறி கோவில் பணிக்கென்று படைக்கப்பட்டவர்கள் அழிந்தால் கலைகளும் அழிந்துவிடும்.' என்றுஎதிர்த்தார். ஆனால் பழமைவாதிகள் பலரின் எதிர்பினை அம்மையார் 'எங்கள் சமூகத்தைச் சார்ந்த பெண்கள் கடவுளுக்குத் தேவதாசி களாகத் தொண்டு செய்வதனை நீண்ட காலமாகச் செய்துவிட்டோம். அப்படிப்பட்ட புனிதத் தொண்டினை

இனிமேல் சத்தியமூர்த்தி அய்யரின் வகுப்பைச்சேர்ந்த பெண்கள் செய்யட்டும்' என்று பேசினார்.

இவ்வாறான வாதிப்பிரதி வாதங்களின் மத்தியிலேயே தேவதாசி மசோதா நிறைவேற்றப்பட்டது என்பது குறிப் பிடத்தக்கது. இச்சீர்திருத்தக்கருத்திற்குப் பலமான ஆதரவு சீர்திருத்தக்காரர்களால் ஏற்பட்டது. ஆதரித்தவர் களுள் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையாருக்கு வரலாற்றில் சிறப்பான இடமுண்டு.

இசைவேளாளர் குலத்தில் பிறந்த இராமாமிர்தம் தேவதாசிகள் வாழ்ந்த புரையோடிய வாழிவினை முழுமையாக அறிந்திருந்தவர். இவர் சிறுவயதில் தேவதாசி ஒருவரால் தத்தெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டு. தத்துபிள்ளையென்பதால் பொட்டுக்கட்டும் சடங்கு மறுக்கப்பட்ட ஒருவர். இவர் தேவதாசிகளுக்கு விழிப் புணர்வு ஏற்படுத்துவதற்கென்று அவர்களை உறுப்பினர் களாகக் கொண்ட நாகபாசத்தார் சங்கத்தினை உருவாக்கி தன் பேச்சுத் திறமையினால் அவர்களில் பலரை மீட்டெடுத்தவர். இச்சங்கமே பின்னாளில் இசைவேளாளர் சங்கமாகி தேவதாசிகள் ஒழிப்பு மாநாடு, இசைவேளாளர் மாநாடு என்பவற்றை நடாத்தியது. ஆனால் அவருக்கு மேடையில் கூந்தல் அறுப்பும், குலத்தை அழிக்கப்பிறந்தவள் என்ற பட்டமும் அளிக்கப் பட்டது. சிர்திருத்தச் சிந்தனையோடு தேரடியார்களை விழிப்பூட்டி மீட்கும் நோக்கத்தோடு செயற்பட்ட முத்து லெட்சுமி அம்மையாருக்கு தேவரடியார் குலத்தில் தோன்றி அவர்களின் விடுதலைக்காக் குரல் கொடுத்த இராமாமிர்தம் அம்மையாரின் ஒத்துழைப்புக் கிடைத்தமை பக்கபலமாகியது.

**தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம்.**

இந்தியாவின் முதற்சட்டமன்றப் பெண் உறுப்பினரான முத்துலெட்சுமி ரெட்டியார் பார்லியவிவாக ஒழிப்புச்சட்டம், பலதாரமண தடைச்சட்டம் ஆகியவை சட்டமாக்கப்பட கடுமையாக போராடி வெற்றி பெற்றிருந்தார். இந்நிலையில் தேவதாசி ஒழிப்புச்சட்டம் நிறைவேறப் பெரு முயற்சி எடுத்தார். இவருக்கு முற்போக்காளர்களிடமிருந்து ஆதரவு கிடைத்தது. இவர் தன் வரலாற்று நூலில் தனது போராட்டங்கள் குறித்தும் தான் அதை எதிர் கொண்ட விதம் குறித்தும் குறிப்பிடுகின்றார்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலே நாட்டின் சில பாகங்களில் தெவதாசி ஒழிப்புத் தொடர்பாக சில சட்டங்கள் ஏலவே கொண்டுவரப்பட்டிருந்தன. எனினும் அவை முழுமையாக நடைமுறையில் இருக்கவில்லை அத்தோடு அவற்றிலுள்ள குறைகளைச் சாதகமாக்கி தேவரடியார் முறை தொடர்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அவை இந்திய குற்றவியல் சட்டத்தின் பிரிவுகள் 372, 373 மற்றும் மைசூர் சமஸ்தானச் சட்டம் என்பனவாகும். சர்வதேச மாநாடு ஒன்றில் தேதாசி முறை இழிவானது என கண்டனம் தொரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து இப்பிரச்சினை குறித்து அறிக்கை அனுப்பும் படி பல மாநில அரசுகளுக்கு உத்தரவு வழங்கப்பட்டது. இதற்காக மானக்ஜி தாதாபாய், மோதோல்கர், மாட்கே ஆகியோரைக் கொண்ட குழுவை பிரிட்டிஷ் நாடாளுமன்றம் நியமித்தது. இவர்கள் இப்பிரச்சினையை ஆராய்ந்து அறிக்கையினை அரசுக்கு பரிந்துரை செய்தனர். இதனை பிரதேச அமைப்புக்களின் கவனத்திற்கு உட்படுத்தி அதனடிப்படையில் 1931ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது. இம்மசோதா தேர்வுக்குழுவுக்கு அனுப்பப்பட்டபோதும் உலகப்போரினால் தடைப்பட்டு நின்றுவிட்டது.

மீண்டும் 1922இல் சர் ஹரி சிங் கௌர் என்பவரால் விவாதத்திற்கு எடுக்கப்பட்டு சட்டமன்றத்தால் இத் தீர்மானம் ஏற்கப்பட்டது. இத்தீர்மானத்தினால் சிறுமி களுக்கு பொட்டுக்கட்டுவதைத் தடை செய்யும் இந்திய குற்றவியல் பிரிவுகள் 372, 373 நிறைவேற்றப்பட்டது. ஆயினும் 12 வயதுக்குப்பதிலாக 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு பொட்டுக்கட்டி குற்றவியல் சட்டத்தில் இருந்து தப்பி வந்தனர். அடுத்து மைசூர் சமஸ்தானத்தில் 1909இல் தேவதாசிகள் தீவிரம் உணரப்பட்டு பெண்களை கோயிலில் விடும் சலங்கை பூசை தடைசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சட்டங்கள் இருந்த போதிலும் தேவரடியார் முறை சமூகத்தில் நிலவி வந்தது. இந்நிலையில் முத்துலெட்சுமி ரெட்டியார் இந்நிலமை அநீதியானதும் மனித உரிமை மீறல் என்றும் கருதி இம்முறையை ஒழிப்பதற்கான தீர்மானமொன்றை 1927 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் முன்மொழிந்தார். இத்தீர்மானம் வாக்கெடுப்பில் வெற்றி பெற்று நவம்பர் 4ஆம் திகதி சட்டமன்றின் மன் வந்தது. இதனை பழமைவாதிகள் எதிர்த்த போதிலும் கட்சிகளின் ஆதரவு கிடைத்தது. அதாவது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கே.ஆர். காரந்த், ஏ.பி. வெங்கடரமணய்யங்காரர், முத்துரங்க முதலியார், ஆஞ்சநேயலு, அமைச்சர்களான ஏ.பி.ஷெட்டி, சையது இப்ராகிம் எனப்பலரின் முழு ஆதரவு கிடைத்தது. அக்கால கட்டத்தில் சட்டஅமைச்சராக இருந்த சி.பி.இராமசாமி அய்யர் இத்தீர்மானத்தை முக்கியத்துவத்தைப் பாராட்டி ஆதரவு வழங்கினார். அத்தோடு அத்தீர்மானத்தை நிறைவேற்றுவதிலுள்ள சிக்கல்களையும் சுட்டிக்காட்டினார்.

மன்றத்தில் முன்மொழியப்பட்ட அத்தீர்மானம் மேல் வருமாறு: 'இளம் சிறுமிகள் அல்லது இளம் பெண்களை கோயிலுக்கு அர்பணிப்பதால், அவர்கள் நெறியற்ற வாழ்வுக்கு தள்ளப்படுவதால், இந்த பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்குமுகமாக அரசு ஒரு புதிய சட்டம் இயற்ற வேண்டும்: அவ்வாறு சட்டம் இயற்றி நடைமுறைப் படுத்துவதில் சில இடையூறுகள் இருப்பதாக அரசு கருதினால் அதற்கேற்ற தெளிவான சட்டம் இயற்றும்படி மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரைக்க வேண்டும்

என்று இந்த மன்றம் பரிந்துரைக்க வேண்டும் என்று இந்த மன்றம் பரிந்துரை அளிக்கிறது.'

இவ்வாறு சட்டமன்றத் தீர்மானம் முன்வைக்கப்பட்ட போதும் முத்துலெட்சுமி அம்மையார் அமைதியாக இருந்துவிடவில்லை அவருடைய குறிக்கோள் தேவதாசி ஒழிப்பை சட்டமாக்குவதாகவே இருந்தது. உள்ளூர் அரசும், மத்திய அரசும் கவனம் செலுத்தாமல் இருந்துவிடுமோ எனக் கருதி சட்டக்குழு உறுப்பினர்களின் உதவியுடன் தானே ஒரு சட்ட முன்வடிவைத் தயாரித்து அரசின் ஒப்புதலைப் பெற்று மாநில சட்டமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். ஒருவருடத்தின் பின் பயனள்ள பல்வேறு திருத்தங்களுடன் இந்த சட்ட மசோதா திருத்திகரமான முழுவடிவத்தினைப் பெற்றது. தேர்வுக்குழு விவாதத்தைத் தொடர்ந்து இறுதியாக 1929ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அம்மையாரின் கனவு நனவாக்கப்பட்டது. மதராஸ் நீதிமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் மேல்வருமாறு,

**1929 சென்னைச் சட்டம்** V

"எந்தக் கோயிலிலும் ஏதாவது ஒரு பணி ஆற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேவதாசிகள் அல்லது நடனப் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள இனளாம் நிலம், இந்த சட்டத்தின் மூலம் அவர்களுக்கே உரிமையாக்கப்படுகின்றது; இதன் மூலம் அவர்கள் இனிமேல் கோயில்களில் எதுவிதமான பணியும் மேற்கொள்ளவேண்டியதில்லை". மேலும் இச் சட்டம் 1947 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 31 ஆவது சட்டத்தின் மூலம் நிறைவடைந்து முழுமையாக நடைமுறைக்கு வந்தது.

சட்டம் நிறைவேறியதோடு நின்றுவிடாமல் இராமாமிர்தம் அம்மையார் தேவரடியார் சமூகப் பெண்கள் எலலோரும் கல்யாணம் செய்யவேண்டும் என்று அறிக்கை செய்தார். ஆயினும் எத்தனை ஆண்கள் இவர்களை மணம் முடிக்க முன்வந்தார்கள் என்பது கேள்விக்குறியாகும். சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அவர்கள் முகம் கொடுத்த பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டவேண்டியது அவசியமாகும். தேவதாசி ஒழிப்புச் சட்டத்தின்மூலம் தேவதாசிமுறை ஒழிக்கப்பட்டு அச்சமூகத்தை சார்ந்த சில பெண்களைக் காப்பகத்தில் சேர்க்க முயன்றபோது விடுதிக் காப்பாளர்கள் இடம்தர மறுத்து விட்டனர். ஆகவே அவர்களை முத்துலெட்சுமி அம்மையார் தம் வீட்டிலேயே தங்க வைத்தார். 1930ஆம் ஆண்டு அம்மையார் தனது இல்லத்திலேயே 'அவ்வை இல்லம்' ஆரம்பித்து அச்சகோதரிகளுக்கு வாழ்வளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்**


1. ஜீவசுந்தரி.பா, 2007, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். மாற்றுப்பதிப்பகம்.
2. மகேஸ்வரன், 2008, சோழகுலத்துக் கோயிலும் சமூகமும், குமரன் புத்தக இல்லம்.
3. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், 1987, தொகுதி 2, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.
4. Dr.S.Muthulakshmi Reddy, 1964 , Autobiography.
5. திருநாவுக்கரசு, 1999, திராவிட இயக்க வேர்கள்
6. இந்து கலைக் களஞ்சியம், தொகுதி 8.


**மோதிரம் அணிவது ஏன்?**

விரல்களில் மோதிர விரலில் அணியப்படும் மோதிரம், இருதய நோய், வயிற்றுக் கோளாறுகள் போன்ற வியாதிகளை நீக்குகிறது. ஆண் பெண் இன விருத்தி உறுப்புகளுக்கு சக்தி அளிக்கிறது. சுண்டு விரலில் மோதிரம் அணியக் கூடாது. இதனால் இதயசக்தி ஓட்டம் தடைபடும்.

## 2015ஆம் ஆண்டு
## நடைபெற்ற நவராத்திரி நிகழ்வுகளில் சில....



முன் அட்டைப்படம் - மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்